ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

கம்பநாட்டாழ்வாரருளிச்செய்தது.

ஆருவது

உயுத்தகாண்டம்.

பெங்களூர். பேஆபீசு-மயிடர்

ம-ா-ா-ஸ்ரீ- மெய்யூர்

சுப்பராயமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

திரிசிரபுரம்

தமிழ்த்தலைமைப்புலவராகிய

வி.கோவிந்தபிள்ளையவர்களால்

பலபிரதிகளைக்கொண் டாராய்ந்து

வழுஉக்களைக் களைந்து

புங்கத்தூர்

அருணாசலமுதலியார் குமாரர்

கந்தசாமிமுதலியாரால்

பால்குரிகி

குமாரையரவர்களது

கள்ணநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

உருத்திரோற்காரி௵ பங்குனிமீ

முதற்புத்தகம்.

ஸ்ரீராமஜயம்.

படல அட்டவணை.


படலஅட்டவணை-முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௩	௧௨	௨	யர்தான	யதான
௨0	௩௯	௧	கெட்ட	கேட்ட
௨௧	௪௪	,,	நான	நான
௨௩	௯0	௩	றுணா	றுணர்
,,	௯௨	௧	கண	கண்
,,	௯௫	௪	மவன	மவன்
௨௪	௭0	௨	மூழு	முழு
,,	,,	௩	மர்ல்	மால்
,,	௭௫	,,	பிறத்	புறத்
௨௫	௮௩	,,	வாயது	வாயன
௩௯	௯	,,	றுன்னி	றுண்ணி
௭0	௮௨	,,	குமணடை	குமண்டை
௭௨	௧௨	௨	கொணர்	கொணர்ந்
,,	௧௯	௩	பொற்றி	போற்றி
௭௩	௨௯	௪	கடலர்கி	கடலாகி
௭௪	௨௧	௧	வவ்வி	வல்வி
௮௭	௧0	௪	லென்றன்	லென்று
௮௧	௩௧	,,	றெற்றுர்	றேற்றுர்
௯0	௩௪	௩	குன்ற	கின்ற
௯௨	௧0	,,	கொடிய	கோடிய
௯௩	௧௪	௧	க்கி	கக்கி
,,	,,	௩	க்கரு	கக்கு
௯௪	௨௧	௪	மருத்துவன்	மருத்துவர்
௧௨௮	௧௭௧	,,	யசையற்றில	பலசையற்றில
௧௩0	௧௮௫	௨	வலியான்	வலியான்
௧௩௩	௨௧௪	௪	போய்யி	பொய்யி
௧௩௮	௭	௩	நீந்தி	நீந்திக்
௧௪௭	௯0	,,	கறுவுடை	கறிவுடை
,,	,,	௪	வெறிவிதுன்	வெறுவிதுன்
௧௭௮	௭	,,	வந்தான	வந்தான்
௧௮௩	௪௯	,,	மென்மேல	மேன்மேல்
௧௮௯	௮0	௨	தோளாய	தோளாய்
௧௮௭	௮௩	௩	மாயத்தாய்	மாய்த்தாய்
,,	௯0	,,	முனியாக்	முனியாத்
௧௯௨	௩௨	௩	அனிந்த	துணிந்த
,,	௩௫	௪	போதேன்று	போதென்று
௨0௪	௧௪௩	௨	யற்றமில்	யத்தமில்
௨௧௯	௨௫0	,,	லங்கனென்	லங்கதனென்
௨௪௭	—	௩	நய்வான்	நயவான்
௨௪௮	—	௧௩	சுடா	சுடர்

பிழைதிருத்தம்-முற்றிற்று.

ஹரிஓம்.



நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

௬-வது. யுத்தகாண்டம்.

முதலாவது—கடல்காண்படலம்.

நேரிசைவெண்பா.

தனியன்.

மகிழ்மாறனைவழுத்துவாயென்றுனக்கு
நெகிழ்மாறனைநினைக்குநேயம் - முகிழ்மா
முலைக்கமலையேற்றமொழிகாவியத்தால்
நிலைக்கமலைவேகவருணீ.

இது தடைதீர்ந்து இராமபத்தி எல்லாருக்குநிலைபெறஅருள்செய்யவேண்டுமென்று நூலாசிரியனைவணங்கி ஸ்ரீசடகோபனைப் பாடப்பெற்றவரென்கிற கவிச்சிறப்பும், ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவளேற்றஞ்சொல்லுகிறதென்கிற காவியச்சிறப்புஞ் சொல்லுகின்றது. மலைவேகவும் நேயநிலைக்கவும் நீ அருள்செய்வாயாக வென்று கூட்டுக.

காப்பு.

ஒன்றேயென்னினொன்றேயாம்பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேயென்னினன்றேயாமாமேயென்னினாமேயாம்
இன்றேயென்னினின்றேயாமிலதென்றுரைக்கினிலதேயாம்
நன்றேநம்பிகுடிவாழ்க்கைநமக்கிங்கென்னேபிழைப்பம்மா. (௧)

நூல்.

ஊழிதிரியுங்காலத்துமுலையாநிலையவுயர்கிரியும்
வாழிவற்றுமறிகடலுமண்ணும்வடபால்வான்றோயப்
பாழித்தெற்குள்ளனகிரியுநிலனுந்தாழப்பரந்தெழுந்த
ஏழுபத்தின்பெருவெள்ளமகரவெள்ளத்திருத்ததால். (௨)

பொங்கிப்பரந்தபெருஞ்சேனைபுறத்துமகத்தும்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்தகையாளைப்பிரிந்தபின்புதமக்கினமாங்
கொங்கிற்பொலிந்ததாமரையின்குழுவுந்துயில்வுற்றிதழ்குவிக்குங்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கண்ணுற்றான். (௩)

சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தான்மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன்வந்தானிவிவளர்வானென்றுகருதிவருந்தென்றல்
ஆயமலர்போனுரைத்தொகையுமுத்துஞ்சிந்திப்புடைசுருட்டிப்
பாயலுதறிப்படுப்பதேயொத்ததிரையின்பரப்பம்மா. (௪)

வழிக்குங்கண்ணீராழுவத்துவஞ்சியழுங்கவந்தடுத்த
பழிக்குங்காமன்பூங்கணைக்கும்பற்றாநின்றான்பொற்றோளைச்
சுழிக்குங்கொல்லனுலையிற்றுள்ளும்பொறியிற்சுடுமென்றே
கொழிக்குங்கடலினெடுந்திரைவாய்த்தென்றறூற்றுங்குறுந்திவலை. (௫)

மென்னற்கண்டதிருமேனியின்றுபிரிதாய்நிலைதளர்வான்
றன்னைக்கண்டுமிரங்காததனியேகதறுந்தடங்கடல்வாய்ப்
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்கள்ளுயிர்க்கும்
புன்னைக்குறும்பூநறுஞ்சுண்ணம்பூசாதொருகாற்போகாதே. (௬)

சிலைமேற்கொண்டதிருநெடுந்தோட்குவமைமலையுஞ்சிறிதேய்ப்ப
நிலைமேற்கொண்டுமெலிகின்றநெடியோன்றன்முன்படியேழும்
தலைமேற்கொண்டகற்பினுண்மணிவாயென்னத்தனித்தோன்றிக்
கொலைமேற்கொண்டாருயிர்குடிக்குங்கூற்றங்கொல்லோகொடிப்பவளம்.

ஆரமில்லைமயிலிருந்தகுழலென்றுமனஞ்செல்ல
வீரவில்லினெடுமோனம்வெல்லநாளுமெலிவானுக்
கீரமில்லாவிருதரோடென்னவுறவுண்டுனக்கேழை
மூரன்முறுவற்குறிகாட்டிமுத்தேயுலகைமுடிப்பாயோ. (௮)

இந்துவன்னநுதற்பேதையிருந்தாளிங்காவிடர்கொடியேன்
றந்தபாவைதவப்பாவைதனிமைதகவோவெனத்தளர்ந்து
சிந்துகின்றநறுந்தாளக்கண்ணீர்ததும்பித்திரைத்தெழுந்து
வந்துவள்ளன்மலர்த்தாளின்வீழ்வதேய்க்குமறிகடலே. (௯)

பள்ளியரவிற்பேருலகம்பசுங்கல்லாகப்பனிக்கற்றை
தள்ளுநறுமென்புனறெளிப்பத்தூநீர்க்குழவிமுறைசுற்றி
வெள்ளிவண்ணநுரைக்கலவைவெதும்புமண்ணாதிருமேனிக்
கள்ளியப்பத்திரைக்கரத்தாலணைப்பதேய்க்குமணியாழி. (௧௦)

கொங்கைக்குயிலைத்துயர்நீக்கியிமையோர்க்குற்றகுறைமுற்ற
வெங்கைச்சிலையன்றுணியினன்விடாதமுனிவின்மேற்செல்லுங்
கங்கைத்திருநாடுடையானைக்கண்டுநெஞ்சங்களிகூர
வங்கைத்திரைகளெடுத்தோடியார்த்ததொத்ததனியாழி. (௧௧)

இன்னதாயகருங்கடலையெய்தியிதனுக்கெழுமடங்கு
தன்னதாயநெடுமானத்துயரங்காதலிவைதமைப்ப
வென்னதாகுமேல்விளைவென்றிருந்தானிராமனிகலிலங்கைப்
பின்னதாயகாரியமுநிகழ்ந்தபொருளும்பேசுவாம். (௧௨)

கடல்காண்படலம்-முற்றிற்று.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

உ-வது—மந்திரப்படலம்.

பூவருமயனொடும்புகுந்துபொன்னகர்
மூவகையுலகினுமழகுமுற்றுற
வேவெனவியற்றினன்கணத்தினென்பராற்
றேவருமருள்கொளத்தெய்வத்தச்சனே. (௧)

பொன்னினுமணியினுமமைந்தபொற்புடை
நன்னகர்நோக்கினானகநோக்கினான்
முன்னையினழகுடைத்தென்றுமொய்கழன்
மன்னனுமுவந்துதன்முனிவுமாறினான். (௨)

முழுப்பெருந்தனிமுதலுலகின்முந்தையோ
னெழிற்குறிகாட்டிநின்றியற்றியீந்தனன்
பழிப்பருமுலகங்களெவையும்பன்முறை
யழித்தழித்தியற்றுவாற்கரிதுண்டாகுமோ. (௩)

திருநகர்முழுவதுந்திருந்தநோக்கிய
பொருகழலிராவணனயற்குப்பூசனை
வரன்முறையியற்றிநீவழிக்கொள்வாயென்று
னுரியனதச்சற்குமுதவியாணையான். (௪)

அவ்வழியாயிரமாயிரம்மவிர்
செவ்வழிச்செம்மணித்தூணஞ்சேர்த்திய
விவ்வெழின்மண்டபத்தரிகளேந்திய
வெவ்வழியாசனத்தினிதுமேவினான். (௫)

வரம்பறுசுற்றமுமந்திரத்தொழி
னிரம்பியமுதியருஞ்சேனைநீள்கடற்
றரம்பெறுதலைவருந்தழுவத்தோன்றினான்
அரம்பையர்கவரியோடாடுந்தாரினான். (௬)

முனிவருந்தேவருமற்றுமுற்றுளோ
ரெனைவருந்தவிர்கெனவேயவாணையான்
புனைகுழன்மகளிரோடினருர்ப்போக்கினான்
நினைவுறுகாரியநிகழ்த்தநெஞ்சினான். (எ)

பண்டிதர்பழையவர்கிழவர்பண்பினர்
தண்டலின்மந்திரத்தலைவர்சார்கெனக்
கொண்டிடவிருந்தனன்கொற்றவாணையான்
வண்டொடுகொலையும்வரவைமாற்றினான். (அ)

ஆன்றமைகேள்வியரொளிருமாண்டொழிற்
கேன்றவர்நண்பினரொளிரும்யாரையும்
வான்றுணைச்சுற்றத்துமக்கடம்பியர்
போன்றவரல்லதைப்புறத்துப்போக்கினான். (கூ)

இசைதொறுமிறுவினறுலகுசேரினும்
பிசைதொழின்மறவரைப்பிரிதென்பேசவ
விசையுறுபறவையும்விலங்கும்வெற்றவு
மசைதொழிலஞ்சினசித்திரத்தினே. (க0)

நாட்டியிங்கிதனின்மேற்றருவதென்னினி
மாட்டியோர்குரக்கினாலழிந்தமாநக
ராட்சியுமமைவுமென்னரசன்றெனுச்
சூட்டியின்கிழவரைநோக்கிச்சொல்லினான். (கக)

சுட்டதுகுரங்கெரிதுறையாடிடக்
கெட்டதுகொடிநகர்கிளையுநண்பரும்
பட்டனர்பரிபவம்பரந்ததெங்கணு
மிட்டதிவ்வரியணையிருந்ததென்னுடல். (கஉ)

ஊறுமின்றனைநிறைதிறமொண்ணக
ராறுமின்றிலதனலகினுநாவியும்
கூறுமங்கையர்நறுங்கூந்தலின்சுறு
நாறுகின்றதுநகர்திருந்தாமெலாம். (கங)

மற்றிலதாயினுமலைத்தவானர
மிற்றிலதாகியதென்னும்வார்த்தையும்
பெற்றிலம்பிறந்திலமென்னும்பேறலால்
முற்றுவதென்னினிப்பழியின்மூழ்கினோம். (கச)

என்றவனியம்பலுமெழுந்திறைஞ்சினான்
கன்றியகருங்கழற்சேனைகாவல
னென்றுளதுணர்த்துவனொருங்குகேளென
நின்றனனிகழ்த்திலன்புணர்ப்பினெஞ்சினான். (கரு)

வஞ்சனைமனிதரையியற்றிவாணுதற்
பஞ்சனமெல்லடிமயிலைப்பற்றுதல்
அஞ்சினர்தொழிலெனவறிவித்தேற்கது
தஞ்செனவுணர்கிலையுணருந்தன்மையோய். (௧௬)

கரன்முதல்வீரரைக்கொன்றகள்வரை
விரிகுழலுங்கைமூக்கரிந்தவீரரைப்
பரிபவஞ்செய்ஞ்ஞரைப்படுக்கலாதுநீ
அரசியலழிந்ததென்றயர்திபோலுமால். (௧௭)

தண்டமென்றொருபொருட்குரியதக்கரைக்
கண்டவர்ப்பொறுப்பரோவுலகங்காவலர்
வண்டமரலங்கலாய்வணங்கிவாழ்வரோ
விண்டவருறுவலியடக்கும்வெம்மையோர். (௧௮)

செற்றனரெதிரெழுந்தேவர்தானவர்
கொற்றமும்வீரமும்வலியுங்கூட்டற
முற்றிமூன்றுலகுநீமுதல்வனாயது
வெற்றியோபொறைகொலோவிளம்பவேண்டுமால். (௧௯)

விலங்கினருயிர்கெடவிலங்கிமீள்கிலா
திலங்கையினினிதிருந்தின்பந்துய்த்துமேற்
குலங்கெழுகாவலகுரங்கிற்றங்குமோ
வுலங்குநம்மேல்வரவொழிக்கற்பாலதோ. (௨௦)

தேவருமடங்கினரியக்கர்சிந்தினர்
தாவருந்தானவர்தருக்குந்தாழ்ந்தனர்
யாவருமிறைவவொன்றிறைஞ்சுமேன்மையர்
மூவருமடங்கினருனக்குமொய்ம்பினோய். (௨௧)

போயினகுரங்கினைத்தொடர்ந்துபோயவ
ணேயினருயிர்குடித்தெவ்வந்தீர்கிலம்
வாயினுமனத்தினும்வெறுத்துவாழ்தமே
லோயுநம்வலியெனவுணரக்கூறினான். (௨௨)

மற்றவன்பின்னுறமகோதரப்பெயர்க்
கற்றடந்தோளினானெரியுங்கண்ணினான்
முற்றுறநோக்கினன்முடிவுமன்னதாற்
கொற்றவகேளெனவினையகூறினான். (௨௩)

ஏற்றமென்பிறிதினியெவர்க்குமின்னுயிர்
மாற்றருமுறைமைசால்வலியின்மாண்பமை
கூற்றுவன்றன்னுயிர்கொள்ளுங்கூற்றெனத்
தோற்றுநின்னேவறன்றலையிற்சூடுமால். (௨௪)

வெள்ளியங்கிரியினைவிடையின்பாகனோ
டள்ளிவிண்டொடவெடுத்தார்த்தவாற்றலாய்
கள்ளியினிருந்துறைகுரங்கின்றோள்வலிக்
கெள்ளுதிபோலுநின்புயத்தையெம்மொடும். (உ௫)

மண்ணினும்வானினுமற்றுமுற்றுநின்
கண்ணினுநீங்கினர்யாவர்கண்டவர்
நண்ணரும்வலத்தினர்யாவர்நாயக
வெண்ணிலதிறந்தவரெண்ணலாவதோ. (உ௬)

இடுக்கிவணியம்புவதில்லையீண்டெனை
விடுக்குவையாமெனிற்குரங்கைவேரொடுந்
தொடுக்கருமனிதரையுயிருண்டுன்பகை
முடிக்குவன்யானெனமுடியக்கூறினான். (உ௭)

இச்சிரத்தவருரைத்திருக்குமெல்லையில்
வச்சிரத்தெயிற்றவன்வல்லகூறினான்
அச்சிரத்தைக்கொருபொருளன்றாயினும்
பச்சிரத்தம்பொழிபருதிக்கண்ணினான். (உ௮)

போயினமனிதரைக்குரங்கைப்பூமியிற்
றேயுநின்கைகளாற்றின்மியென்றெமை
யேயினையிருக்குவதன்றியென்னினி
யாயுமதெம்வயினயிர்ப்புண்டாங்கொலோ. (உ௯)

எவ்வுலகத்துநின்னேவல்கேட்கிலாத்
தெவ்வினையறுத்துனக்கடிமைசெய்தயான்
றவ்வினைபணியுளதாகத்தான்கொலோ
விவ்வினையென்வயினீகலாதென்றான். (௩௰)

நின்மினென்றவன்றனைவிலக்கிநீயிவை
யென்றுறுமெளியர்போலிருத்தியோவெனா
மன்முகனோக்கினன்வணங்கிவன்மையாற்
றுன்முகனென்பவனினையசொல்லினான். (௩௧)

திக்கயம்வலியிலதேவர்மெல்லியர்
முக்கணான்கயிலையுமுரணின்றாயது
மக்களுங்குரங்குமேவலியவாமெனி
னக்கடாவிராவணற்கமைந்தவாற்றலே. (௩௨)

பொலிவதுபொதுவறவெண்ணும்புன்றொழின்
மெலியவர்கடனமக்கிறுதிவேண்டுவார்
வலியினரொன்னலர்க்கொதுங்கிவாழ்துமோ
வொலிகழலொருவநம்முயிருக்கன்பினால். (௩௩)

கண்ணியமந்திரக்கருமங்காவல
மன்னியன்மனிதருங்குரங்குமற்றவு
முண்ணியவமைந்தனவுணவுக்குட்குமேற்
திண்ணியவரக்கரிற்றிரர்யாவரோ. (௩௪)

எரியுறமடுப்பதுமெதிர்ந்துளோர்படப்
பொருதொழில்யாவையும்புரிந்துபோவதும்
வருவதுகுரங்குநம்வாழ்க்கையூர்கடந்
தரிதுகொலிராக்கதற்காழிநீந்துதல். (௩௫)

வந்தனதிருக்கையுமாறும்வன்மையும்
வெந்தொழிற்றுணையின்விரியும்வீரமுஞ்
சிந்தையினுணர்பவர்யாவரோசில
ருய்ந்துதம்முயிர்கொடிவ்வுலகத்துள்ளுளார். (௩௬)

ஒல்வதுவினையினுமுறுதியோரினும்
வெல்வதுவிரும்பினும்வினையம்வேண்டினும்
செல்வதங்கவருழைச்சென்றுதீர்ந்தறக்
கொல்வதுகருமமென்றுணரக்கூறினான், (௩௭)

காவலன்கண்ணெதிரவனைக்கைகவித்
தியாவதுண்டிஙமக்கென்னச்சொல்லினான்
கோவமும்வன்மையுங்குரங்குக்கேயெனு
மாபெரும்பக்கனென்றொருவன்வன்மையான். (௩௮)

முந்தினர்முரணிலர்சிலவர்மொய்யமர்
நந்தினர்தம்மொடுநனிநயந்ததோ
வந்தொருகுரங்கிடுதீயின்வன்மையால்
வெந்ததோவிலங்கையோடரக்கர்வெம்மையும். (௩௯)

மானிடரோவுவர்குரங்குவந்திவ்வூர்
தானெரிமடுப்பதுநிருதர்தானையே
யானவரதுகுறித்தழுங்குவாரெனின்
மேனிகழ்வதற்கினிவிளம்பவேண்டுமோ. (௪0)

நின்றுநின்றிவைசிலவிளம்பநேர்கில
னன்றெனினரரொடுகுரங்கைநாமறக்
கொன்றுதின்றல்லதோவெண்ணங்கூடுமே:
வென்றனனிகல்குறித்தெரியுங்கண்ணினான். (௪௧)

திசாதிசைபோதுநாமரசன்செய்வினை
யுசாவினனுட்கினனொழிதும்வாழ்வென்றான்
பிசாசனென்றொருபெயர்பெற்றபெய்கழ
னிசாசரனுருப்புணர்நெருப்புநீர்மையான். (௪௨)

ஆரியன்றன்மைபெறாயினுய்வுறு
காரியமிதெனிற்கண்டவாற்றினாற்
சீரியர்மனிதரோசிறியம்யாமெனச்
சூரியன்பகைஞனென்றொருவன்சொல்லினான். (௪௩)

ஆழ்வினைநிலைமையுமாக்காற்றலுந்
தாழ்விலியிதனின்மேற்பகரத்தக்கதோ
சூழ்வினைமனிதராற்றோன்றிற்றுமென
வேழ்வியின்பகைஞனுமுலாத்துவெள்கினான். (௪௪)

தொகைநிறக்குரங்குடைமனிதர்ச்சொல்லிலென்
மிகைநிறக்குலிதன்பிறந்திற்செல்லினுந்
தகைநிறத்தன்னறன்சமைதனன்றெனாப்
புகைநிறக்கண்ணனும்புகன்றுபொங்கினான். (௪௫)

மற்றவன்பின்னுறமற்றையோர்களும்
இற்றிறவேநலமெண்ணமற்றிலென்
றற்றனவுற்றனசொல்லியோங்கினார்
புற்றுறையரவெனப்புழுங்குநெஞ்சினார். (௪௬)

வேறு.

வெம்பிகலராக்கனைவிலக்கிவினைதோரா
நம்பியிருக்கவெனநாயகனைமுன்னா
வெம்பியெனவிற்கிலைசெய்வலிதமென்னாக்
கும்பகருணப்பெயரினானிவைகுறித்தான். (௪௭)

நீயயன்முதற்குலமிதற்கொருவனின்றா
யாயிரமறைப்பொருளுணர்ந்தறிவமைந்தாய்
தீவினைநயப்புறுதல்செய்தனைதெரிந்தா
லேவினவுறத்தகையவித்துணையவேயோ. (௪௮)

ஓவியமமைந்தநகர்தீயுணவளித்தாய்
கோவியலழிந்ததெனவேறொருகுலத்தோன்
றேவியைநயந்துசிறைவைத்தசெயனன்றோ
பாவியருறும்பழியிதிற்பழியுமுண்டோ. (௪௯)

நன்னகரழிந்ததெனநாணினைநயத்தா
லன்னுயிரெனத்தகையதேவியர்களுன்மேன்
மன்னகைதரத்தரவொருத்தன்மனையுற்றாள்
பொன்னடிதொழத்தொழமறுத்தல்புகழ்போலாம். (௫௦)

என்றொருவனில்லுறைதவத்தியையிரங்காய்
வன்றொழிலினாய்மறைதுறந்துசிறைவைத்தாய்
அன்றொழிவதாயினுமரக்கர்புகழையா
புன்றொழிலினாலிசைபொறுத்தல்புலமைத்தோ. (௫௧)

ஆசில்பரதாரமவையஞ்சிறையடைப்போ
மாசில்புகழ்காதலுறுவோம்வளமைகூரப்
பேசுவதுவீரமிடைபேறுவதுகாமங்
கூசுவதுமானிடரைநன்றுநமகொற்றம். (௫௨)

சிட்டர்செயல்செய்திலைகுலச்சிறுமைசெய்தாய்
மட்டவிழ்மலர்க்குழலினாளையினிமன்னு
விட்டிடுதுமேலெளியம்யாதுமவர்வெல்லப்
பட்டிடுதுமேலதுவுநன்றுபழியன்றால். (௫௩)

மான்படர்வனத்தொருவனேசிலைவலத்தாற்
கான்படைபடுத்தவனைவென்றுகளைகட்டா
நிரம்பிடுவதன்றதுவுமின்றதிவிரம்பா
லூரம்படுவதேயிதனின்மேலுறுதியுண்டோ. (௫௪)

வென்றிடுவர்மானிடவரோடுமவர்தம்மே
னின்றிடைவிடாதநெறிசென்றுறநெருக்கித்
தின்றிடுதல்செய்கிலமெனிற்செறுநரோடு
மொன்றிடுவர்தேவருலகேழுமுடனென்றும். (௫௫)

ஊறுபடையூறுவதன்முன்னமொருநாளே
யேறுகடலேறிநரர்வானரரையெல்லாம்
வேறுபெயராதவகைவேரொடுமடங்க
நூறுவதுவேகருமமென்பதுநுவன்றான். (௫௬)

நன்றுரைசெய்தாய்குமரநானதுநினைந்தே
னொன்றுமினியாய்தல்பழுதொன்னலரையெல்லாங்
கொன்றுபெயர்வோநமகொடிப்படையையெல்லாம்
இன்றெழுதனன்றெனவிராவணனிசைத்தான். (௫௭)

என்றவனியம்பியிறுமெல்லையினில்வல்லே
சென்றுபடையோடுசிறுமானிடர்சினப்போர்
வென்றுபெயர்வாயரசநீகொலெனவீரம்
நன்றுபெரிதென்றுமகனக்கிவைநவின்றான். (௫௮)

ஈசனருள்செய்தனவுமேடவிழ்மலர்ப்பே
ராசனமுவந்தவனளித்தனவுமாய
பாசமுதல்வெம்படைசுமந்துபலர்நின்று
ரோசவுழல்வேனொருவன்யானுமுளனென்றான். (௫௯)

முற்றுமுதலாயுலகமூன்றுமெதிர்தோன்றிச்
செற்றமுதலோரொடுசெறுத்ததொர்திறத்தும்
வெற்றியுனதாகவிளையாதொழியினென்னைப்
பெற்றுமிலையானெதிபிறந்துமிலனென்றான் (௬௦)

ஞாங்குபடமேதினிருறைத்தலைபடைப்போ
ராங்குபடமானிடாலந்தலைபடைப்பே
ரிங்குபடர்சிதைபடவின்றிருவர்கின்றார்
ரெங்குவடெனக்கொணர்தல்காணுதினைத்தோய். (௯௧)

சொல்விடைசுழிக்கிலைசுருங்கியகுரங்கென்
கல்விடைகழித்தவருமிற்கடுமைகாணும்
வில்விடைகழித்தமிடல்வாளிவெருவித்தம்
பல்விடைவிழித்திரிவகண்டுபெயறுய்ப்பாய். (௯௨)

யானையிலர்தேர்புரவியாதுமிலரோவுந்
தானையிலர்நின்றதவமொன்றுமிலர்தாமோர்
கூனன்முருகின்சிறுகுரங்குகொடுவெல்வா
ரானவருமானிடர்நம்மாண்மையினிதன்றே. (௯௩)

நீரும்நிலனும்நெடியகாலும்நிமிர்வானும்
பேருமுலகியாவுமொருநாள்புடைபெயர்ந்தே
யாருமொழியாமைநரர்வானரர்களென்பார்
வேருமொழியாதவகைகொன்றலதுமீளேன். (௯௪)

என்றடியிறைஞ்சினனெழுந்துவிடையீமோ
வன்றெழுமிலெனுயெனவும்வாளெயிறுவாயிற்
றின்றனன்முனிந்தானனிதிவினையெல்லாம்
வென்றவரினன்றுணரும்வீடணன்விளம்பும். (௯௫)

வேறு.

ஞாலிருறுணங்கியவறிவுநோக்கினர்
போலுமாலுறுபொருளுணரும்பூட்சியோய்
காலமேல்வினைபொருளுணருங்கற்பிலாப்
பாலனியினையனபகரற்பாலையோ. (௯௬)

கருத்திலான்கண்ணிலானொருவன்கைக்கொடு
திருத்துவான்சித்திரமனையசெப்புவாய்
விருத்தமேதகையவர்வினையமந்திரத்
திருத்தியோவிளமையான்முறைமையெண்ணிலாய். (௯௭)

ஆயவர்முறைமையேதொடங்குந்தொன்மையோ
ராயவர்கிற்கமற்றவுணராதியாந்
தீயவாறத்திறற்றேவராயது
மாயமோவஞ்சமோவன்மையேகொலோ. (௯௮)

அறந்துறந்தமரனைவென்றவாண்டொழிற்
றிறந்தெரிந்திடிலதுதானுஞ்செய்தவம்
பிறந்திறம்பாவகையியற்றுநீர்மையான்
மறந்துறந்தவர்தரும்வரத்தின்வண்மையால். (௯௯)

மூவராவென்றுமூன்றுலகுமுற்றுறக்
காவலினின்றுதங்களிப்புக்கையிக
வேவருமுடிவெனவியந்ததல்லது
தேவராவென்றவர்யாவர்தீமையோர். (எ0)

வினைகளைவென்றுமேல்வீடுகண்டவர்
எனைவரொன்றியம்புகேனெவ்வர்நீர்க்கையால்
முனைவருமமருமுன்றும்பின்னரு
மனையவர்திறத்துளர்யாவராற்றினார். (எக)

பிள்ளைமைவிளம்பினைபேதைநீயென
வொள்ளியபுதல்வனையுரப்பியென்றனா
எள்ளலையாமெனிவியம்பலாற்றுவன்
றெள்ளியபொருளெனவரசற்செப்பினான். (எஉ)

எந்தைநீயாயுநீயெம்முனிதவம்
வந்தனைத்தெய்வநீமற்றுமுற்றுநீ
யிந்திரப்பெரும்பதமிழக்கின்றுயென
நொந்தனனுதலினுவல்வதாயினேன். (எ௩)

கற்றுறுமாட்சியென்கண்ணின்றுயினும்
உற்றுறுபொருடெரிந்துணர்தலோயினும்
சொற்றுறுசூழ்ச்சியின்றுணிவுசோரினு
முற்றுறக்கேட்டபின்முனிதிமொய்ம்பினோய். (எ௪)

கோன்கர்முழுவதுமினதுகொற்றமும்
சானகியெனும்பெயருலகின்றம்மனை
யானவள்கற்பினால்வெந்ததல்லதோர்
வானரஞ்சுட்டதென்றுணர்தன்மாட்சியோ. (எ௫)

எண்பொருட்டொன்றமின்றெவருமெண்ணினால்
விண்பொருட்டொன்றியவுயர்வுமீட்சியும்
பெண்பொருட்டன்றியும்பிறிதுண்டாமெனின்
மண்பொருட்டன்றியும்வரவும்வல்லவோ. (எ௬)

மீனுடைநெடுங்கடலிலங்கைவேந்தன்முன்
முனுடைநெடுந்தவந்தளர்ந்துசாய்வதோர்
மானுடமடந்தையாலென்னும்வாய்மொழி
தேனுடையலங்கலாயின்றுதீர்ந்ததோ. (எ௭)

ஏறியநெடுந்தவமிழைத்தவெல்லைநா
ளாறியபெருங்குணத்தறிவனுணையாற்
கூறியமனிதர்பாற்கொற்றங்கொள்ளலை
வேறினியவர்வயின்வென்றியாவதோ. (எ௮)

எயதுபிரிதுணர்ந்தியம்பவேண்டுமோ
நீயொருதனியுலகேழுநீறவாய்
ஆயிரந்தோளவற்காற்றறேற்றனை
மேயலையாமெனின்விளம்பவேண்டுமோ. (எக)

மேலுயர்கயிலையைவென்றமேலைநா
ளுலதோணந்திதானவின்றசாபத்தாற்
கூலவான்குரங்கினாற்குறுகுங்கோளது
வாலிபாற்கண்டனம்வரம்பிலாற்றலாய். (அ0)

நீயிடைக்குளித்தவத்தெய்வக்கற்பினாள்
வாயிடைமொழிந்தசொன்மறுக்கவல்லமோ
னோயுனக்கியாதெனநுவன்றனாளவ
ளாயவள்சீதைபண்டமுதிற்றோன்றினாள். (அக)

வேறு.

சம்பரப்பெயருடைத்தானவர்க்கிறைவனைத்தனுவலத்தால்
அம்பரத்தம்பர்புக்கமரிடைத்தலைதுமித்தமாருய்ய
உம்பருக்கிறைவனுக்கரசளித்துதவினனொருவனேமி
இம்பரிற்பணிசெயத்தயரதப்பெயரினனிசைவளர்த்தான். (அஉ)

மிடல்படைத்தொருவனுமமரர்கோன்விடையதாய்வெரிநின்மேலாய்
உடல்பதைத்தவுணராயினரெலாமடியவாளுருவினனும்
அடல்படைத்தவனியைப்பெருவளந்தருகவென்றருளினனும்
கடல்படைத்தவனெடுங்கங்கைதந்தவன்வழிக்கடவுண்மன்னன். (அ௩)

பொய்யுரைத்துலகினிற்சினவினர்குலமறப்பொருதுதனவே
னெய்யுரைத்துறையினிட்டறம்வளர்த்தொருவனுய்நெறியினின்றோன்
லமயுரைத்துலவுகண்மனைவிபால்வரமளித்தவைமறாதே
மெய்யுரைத்துயிர்கொடுத்தமரரும்பெறுகிலாவீடுபெற்றான். (அச)

அனையவன்சிறுவரொம்பெருமவன்பகைஞரானவரையம்மா
வினையொன்றுணர்தியேலிருவரும்மொருவருமெதிர்கிலாதார்
முனைவரும்மமரரும்முழுதுணர்ந்தவர்களுமுற்றுமற்றும்
நினைவருந்தகையர்நம்வினையினான்மனிதராயெளிதினின்றார். (அரு)

கோசிகப்பெயருடைக்குலமுனித்தலைவனக்குளிர்மலர்ப்பே
ராசனத்தவனொடெவ்வுலகமுந்தருவனென்றமையலுற்று
னீசனிற்பெறுபடைக்கலமிமைப்பளவினெவ்வுலகம்யாவும்
நாசமுற்றிடநடப்பனகொடுத்தவைபிடித்துடையர்நம்பர். (அசு)

எறுழ்வலிப்பொருவிறோளவுணரோடமரர்பண்டிகல்செய்காலத்
தறுதிறற்கலுழன்மீதொருவனின்றமர்செய்தானுடையவில்லுந்
தெறுசினத்தவர்கண்முப்புரநெருப்புறவுருத்தெய்தவம்புங்
குறுமுனிப்பெயரினனிறைதவத்திறைதரக்கொண்டுநின்றான். (அஎ)

நாவிளுவலகைசக்கிடுவதிக்களவிடற்குரியநாளு
மேவுதிவிடமுயிர்ப்பனவெயிற்பொழியெயிற்றனவவிர
ராவமாமரியபுற்றுறைவமுற்றறிவருக்கழிவுசெய்யும்
பாவகாரியருயிர்ப்பதமலாதினைபெறுபகழிநாகம். (அ)

பேருமோவொருவராலவர்களாலல்லதிற்பெரியவேனும்
நாருமுரியுமருநம்முடைச்சிலைகள்போனலியலாமோ
தாருவோவேறுவோதாணுவாயுலகினைத்தழுவிநிற்கும்
மேருவோமால்வரைக்குலமதோவல்லவோவில்லுமன்னே. (கூ)

உரமொருங்கியதுநீர்கடையும்வாலியதுமார்புலகைமூடு
மரமொருங்கியகராதியர்விராதனதுமால்வரைகள்மாலுஞ்
சிரமொருங்கினவினிச்செருவொருங்குளதெனிற்றேவரொன்பார்
பரமொருங்குவதலாற்பிறிதொருங்காததோர்பகையுமுண்டோ. (கo)

சொல்வரம்பெரியமாமுனிவரொன்பவர்கடந்துணையிலாதா
ரொல்வரம்பெரியதோளிருவரும்மமரரோடுலகம்யாவும்
வெல்வரொன்பதுதெரிந்தெண்ணினார்நிருதர்வேர்முதலும்வீயக்
கொல்வரொன்றுணர்தலாலவரைவந்தமைவதோரிசைவுகொண்டார். (கக)

அஞ்சுகின்றிலர்களாலிரவுநன்பகலுமிற்சொல்லவொல்கி
நெஞ்சுநின்றயருமிந்நிருதர்பேர்சனகியாநெடியர்தான
நஞ்சுதின்றவர்கடாநண்ணுவார்நரகமென்றெண்ணிநம்மை
யஞ்சுகின்றிலர்கணின்னருளலாற்சரணிலரவமரராயா. (கஉ)

புகன்மதித்துணர்கிலாமையினமக்கெளிமைசால்பொறுமைகூர
நகன்மதிக்கிலமறுப்பொலியவாளொளியிழந்துதயநண்ணும்
பகன்மதிக்குவமையாம்விபுதராமிரவுகால்பருவகாளி
னகன்மதிக்குவமையாயினதபோதனருளார்வதனமம்மா. (கந)

சிந்துமுந்துலகினுக்கிறுதிபுக்குருவொளித்துழறல்செய்யார்
இந்துவின்றிருமுகத்திறைவிநம்முறையுளாளென்றலோடு
மந்தகன்முதலினோரமரும்முனிவரும்பிறருமஞ்சார்
வந்துதம்முலகமும்வானமுங்கண்டுவந்தகல்வர்மன்னே. (கச)

சொலத்தகாத்துன்னிமித்தங்களெங்கணும்வரத்தொடர்வவொன்னார்
வெலத்தகாவமருமவுணருஞ்செருவில்விட்டனவிடாத
குலத்தகால்வயநெடுங்குதிரையுங்குஞ்சரக்குன்றுமொன்றும்
வலத்தகான்முந்துறத்தந்துநம்மனையிடைப்புகுதுமன்னே. (கரு)

வாயினும்பல்லினும்புனல்வறந்துலறினார்நிருதர்வைகும்
பேயினும்பெரிதுபேய்நரிகளும்புரிதரும்பிறவுமெண்ணிற்
கோயிலும்நகரமும்மடநலார்குழலுநங்குஞ்சியோடுந்
தீயின்வெந்திடுதலாலொருநிமித்தம்பெறுந்திறனுமுண்டோ. (கசு)

சிந்தமாறுகனைச்சிரமுருக்கியகரன்றிரிசிரத்தோன்
முந்தமாறுபிறன்வாலியேமுதலினோர்முடிவுகண்டா
லந்தமானிடவனோடாழிமாவலவனும்பிறருமையா
இந்தமானிடவராமிருவரோடென்னலாமொருவர்யாரே. (௯௭)

இன்னமொன்றுரைசெய்தாலினிதுகேளெம்பிரானிருவராய
வன்னவன்றன்னெடும்வானரத்தலைவராயனுகின்றார்
மன்னுகம்பகைஞராம்வாலுளோரவரொடும்மாறுகோடல்
கன்னமன்றிதுநமக்குறுதியென்றுணர்தலுங்கருமமன்றால். (௯௮)

வேறு.

இசையுஞ்செய்கையுமுயர்குலத்தியற்கையுமெஞ்ச
வசையுங்கீன்மையுமீக்கொளக்கிளையொடுமடியா
தசையில்கற்பினவ்வணங்கைவிட்டருளுதியிதன்மேல்
விசையமில்லெனச்சொல்லினனறிஞரின்மிக்கோன். (௯௯)

கேட்டவாண்டகைகாத்தொடுகாதலங்கிடைப்பப்
பூட்டிவாய்தொறும்பிறைக்குலம்வெண்ணிலாப்பொழிய
வாட்டடந்தவழாரமும்வயங்கொளிமார்புந்
தோட்டடங்களுங்குலுங்கநக்கிவையிவைசொன்னான். (௧௦௦)

இச்சைநல்லனவுறுதிகளிசைக்குவனென்றாய்
பிச்சர்சொல்லுவசொல்லினையென்பெருவிறலைக்
கொச்சைமானிடர்வெல்குவரென்பஃதுகுறித்த
தச்சமோவவர்க்கன்பினோயாவதோவையா. (௧௦௧)

ஈங்குமானிடப்பசுக்களுக்கிலைவரமென்றாய்
தீங்குசொல்லினேதிசைகளையுலகொடுஞ்செருக்காற்
றாங்குமானையைத்தள்ளியத்தழனிறத்தவனை
யோங்கறன்னெடுமெடுக்கவும்வரங்கொண்டதுளதோ. (௧௦௨)

மனக்கொடன்றியும்வறியனவழங்கினைவானோர்
சினக்கொடும்படைசெருக்களத்தென்னையென்செய்த
வெனக்குமிற்கமற்றென்னொடிங்கொருவயிற்றுதித்த
வனக்குமானிடர்வலியராந்தகைமையுமுளதோ. (௧௦௩)

சொல்லுமாற்றங்கடெரிந்திலைபன்முறைதோற்றும்
வெல்லுமாற்றலுமொருமுறைபொறுத்தனன்விண்ணைக்
கல்லுமாற்றலென்கிளையையுமென்னையுங்களத்திற்
கொல்லுமாற்றலருளரெனக்கோடலுங்கொண்டாய். (௧௦௪)

தேவரிற்பெற்றவரத்தினிற்பெருஞ்செருக்கென்னின்
மூவரிற்பெற்றமுடையவன்றன்னொடுமுழுதுங்
காவலிற்பெற்றதிகிரியோன்றன்னொடுங்கடந்த
தேவரிற்பெற்றவரத்தினாலியம்புதியினையோய். (௧௦௫)

நந்திசாபத்தினமையடுங்குரங்கெனினம்பால்
வந்தசாபங்களனைப்பலவவைசெய்தவலியென்
இந்திராதிகளவித்தவர்தேவர்நம்மிருதி
சிந்தியாதவர்யாரவைநம்மையென்செய்த. (க0சு)

அரங்கினுடுவாற்கன்புபூண்டுடைவரமறியே
விரங்கியானிற்பவென்வலியவன்வயினெய்த
வாரங்கொள்வாலிபாற்சேற்றனென் மற்றும்வேறுள்ள
குரங்கெலாமென்னைவெல்லுமென்றெங்ஙனங்கோடி. (க0எ)

நீலகண்டனுநேமியுநேர்நின்றுநேரி
னேனுமன்னவருடைவலியவன்வயினெய்துஞ்
சாலநல்வரமினைந்தவனெதிர்செலறவிர்ந்து
வாலிதன்னையுமனிதனுமறைந்துநின்றெய்தான். (க0அ)

ஊனவில்லிறுத்தோட்டைமாமரத்துளம்போட்டிக்
கூனிசூழ்ச்சியாலரசிழந்துயர்வனக்குறுகி
யானிழைத்திடவில்லிழந்தின்னுயிர்சுமக்கு
மானிடன்வலிநீயலாதாருளர்மதிப்பார். (க0கூ)

என்றுதன்னுரையிழித்துநீயுணர்விலியென்று
நன்றுபோதிநீயெழுகெனுமரக்கனைநணுகா
வொன்றுகேளினமுறுதியென்றன்பினனழியான்
றுன்றுதாரவன்பின்னருமினையனசொல்வான். (கக0)

தன்னின்முன்னியபொருளிலாவொருதனித்தலைவ
னன்னமானிடனாகிவந்தவதரித்தமைந்தான்
சொன்னநம்பொருட்டும்பர்தஞ்சூழ்ச்சியின்றுணிவா
லின்னலேகுதிபோலுமென்றடிதொழுதிரந்தான். (ககக)

அச்சொற்கேட்டவனழியானென்றனையாயிற்
கொச்சைத்துன்மதியெத்தனைபோரிடைக்குறைந்தா
னிச்சைக்கேற்றனயான்செய்தவித்தனைகால
முச்சற்றுன்கொலம்முழுமுதலோனெனமுனிந்தான். (ககஉ)

இந்திரன்றனையிருஞ்சிறையிட்டநாளிமையாத்
தந்திகோடிறத்தகர்ந்தநாட்டன்னையான்முன்னம்
வந்தபோர்தொறுந்துரந்தநாள்வானவருலகைச்
சிந்தவென்றநாட்சிறியன்கொனீசொன்னதேவன். (ககங)

சிவனுநான்முகத்தொருவனுந்தேவர்க்குந்தெரியா
வவனுமற்றுளவமரருமுடனுறைந்தடங்காப்
புவனமூன்றும்யானுண்டுளதாண்டவப்பொருவி
லுவனிலாமையிலோவலியொதுங்கியோவுனாயாய். (ககச)

ஆயிரம்பெருந்தோள்களுமத்துணைத்தலையு
மாயிரும்புவியுள்ளடியடக்குறும்வடிவுந்
தீயசாலவுஞ்செறிதெனநினைந்தகாந்தின்று
மேயுமாவிடவுருவுகொண்டனன்கொலாமொருவன். (௧௧௫)

பித்தருமெவிசருமாலுமென்பெயர்கேட்
டெய்த்தசிந்தையரோகுழியேகுழியெல்லாங்
கைத்தவேற்றிறுங்கடவியபுள்ளினுமுதகிற்
றைத்தவாளிகணின்றுளகுன்றின்வீழ்தடித்தின். (௧௧௬)

வெஞ்சினந்தருபோரிலென்றுடனெழவேண்டா
விஞ்சிமானகரிடமுடைத்தீண்டினிதிருத்தி
யஞ்சலஞ்சலென்றயலிருந்தவர்முகநோக்கி
நஞ்சில்வெய்யவன்கையெதிர்தருமெனநக்கான். (௧௧௭)

பின்றும்விடணனையநின்மலபெரியோன்
முன்னைநாளவன்முனிந்திடக்கிளையொடுமுடிந்தா
னின்னமுண்டொனியம்புவஇரணியனென்பான்
றன்னையுள்ளவாகேட்டியென்றுரைசெயச்சமைந்தான். (௧௧௮)

மந்திரப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௧௩௦.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௩-வது—இரணியன்வதைப்படலம்.

வேதங்கண்ணியபொருளெலாம்விரிஞ்சனேயீந்தான்
போதங்கண்ணியவரமவன்றரக்கொண்டுபோந்தான்
காதங்கண்ணுதன்மாலயன்கடைமுறைகாணுப்
பூதங்கண்ணியவலியெலாமொருதனிபொறுத்தான். (௧)

எற்றைநாளினுமுளனெனுமிறைவனுமயனுங்
கற்றையஞ்சடைக்கடவுளுங்காத்தளித்தழிக்கு
மொற்றையண்டத்தினளவிலேவிதன்புறத்தலவா
மற்றையண்டமுந்தன்பெயரோசொலவாழ்ந்தான். (௨)

பாழிவன்றடந்திசைசுமந்தோங்கியபணைக்கைப்
பூழிவன்கரியிரண்டிருகைகொடுபொருத்து
மாழங்காணுதற்கரியவாயகன்றபேராழி
யேழுந்தன்னிருதாளளவெனக்கடந்தேறும். (௩)

வண்டற்றெண்டிரையாற்றுநீர்சிலவென்றுமருவான்
கொண்டற்கொண்டநீர்குளிர்ப்பிலவென்றவைகுளியான்
பண்டைத்தெண்டிரைப்பரவைநீருவரொன்றுபடியா
னண்டத்தைப்பொதுத்தப்புறத்தப்பினுலாடும். (௪)

சார்விமானத்திற்சந்திரன்றவிப்பதஞ்சரிக்கும்
தேரின்மேனின்றுயிரவிதன்பெரும்பதஞ்செலுத்தும்
பேர்விலெண்டிசைக்காவலர்கருமமும்பிடிக்கு
மேருமால்வரையுச்சிமேலரசுவீற்றிருக்கும். (௫)

நிலனும்நீரும்வெங்கனலொடுகாலுமாய்நிமிர்ந்த
தலனுநீடியவவற்றினத்தலைவரைமாற்றி
யுலவுங்காற்றொடுகடவுளர்பிறருமாயுலகின்
வலியுஞ்செய்கையும்வருணன்றன்கருமமுமாற்றும். (௬)

தாமரைக்கண்ணன்றழற்கணன்பெயரவைதவிர
நாமந்தன்னதேயுலகங்கள்யாவையுநவிலத்
தூமவெங்கனலந்தணர்முதலினர்சொரிந்த
வோமவேள்வியினிறையவர்பேறெலாமுண்ணும். (௭)

காவல்காட்டுதெறுடைத்தலென்றித்தொழில்கடவ
மூவரும்மிவைமுடிக்கிலர்பிடிக்கிலர்முறைமை
யேவர்மற்றவர்யோகிகளுறுபதமிழந்தார்
தேவரும்மவன்றனலாதருச்சனைசெய்யார். (௮)

மரபின்மாபெரும்புறக்கடன்மஞ்சனமருவி
யரவினுட்டிடைமகளிரோடின்னமுதருந்திப்
பரவுமிந்திரன்பதியிடைப்பகற்பொழுதாற்றி
யிரவினோலக்கநான்முகனுலகத்துளிருக்கும். (௯)

பண்டுவானவர்தானவர்யாவரும்பற்றித்
தெண்டிரைக்கடல்கடைதரவலியதுதேடிக்
கொண்டமத்தினைக்கொற்றத்தன்குவவுத்தோடகமைந்த
தண்டெனக்கொளலுற்றதுநொய்தெனத்தவிர்ந்தான். (௧௦)

மண்டலந்தருகதிரவன்வந்துபோய்மறையு
மெண்டலந்தொடற்கரியனதடவரையாண்டும்
கண்டலம்பசும்பொன்னிறத்தவற்கிளங்காலை
குண்டலங்கண்மற்றென்னினிப்பெருவிறல்கூறின். (௧௧)

மருக்கொடாமரைநான்முகன்முதலியவானோர்
குருக்களோடுகற்றோதுவதவன்பெருங்கொற்றம்
சுருக்கநான்மறைதொன்றுதொட்டுநாடொறுந்தோன்று
திருக்குந்தெய்வமுமிரணியனேநமவென்னும். (௧௨)

மயருமன்னெடுஞ்சேவடிமண்ணிடைவைப்பி
னயரும்வாளெயிற்றாயிரம்பணந்தலையனந்த
னுயருமேலண்டமுகடுதன்முடியுறவுயரும்
பெயருமேனெடும்பூதங்களைந்தொடும்பெயரும். (௧௩)

பெண்ணிற்பேரொழிலாணினிலலியினிற்பிறிதி
னுண்ணின்றும்முயிருள்ளதினில்லதினுலவான்
கண்ணிற்காண்பனகருவியாதினுங்கழியான்
மண்ணிற்சாகிலன்வானிலுஞ்சாகிலன்வரத்தால். (௧௪)

தேவராயினரேவருந்திரிதருமியக்கர்
யாவராயினுமென்னவுமினைக்கவுமியன்ற
கோவைமாலயன்மானிடன்யாவருங்கொல்ல
வாவிதீர்கிலனாற்றலுந்தீர்கிலனனையான். (௧௫)

நீரிற்சாகிலனெருப்பினுஞ்சாகிலனிமிர்ந்த
மாருதத்தினுமண்ணின்மற்றெவற்றினுமாளா
னோருந்தேவருமுனிவரும்பிறர்களுமுரைப்பச்
சாருஞ்சாபமுமன்னவன்றனைச்சென்றுசாரா. (௧௬)

உள்ளிற்சாகிலன்புறத்தினுஞ்சாகிலனுலவாக்
கொள்ளைத்தெய்வவான்படைக்கலம்யாவையுங்கொல்லா
னள்ளிற்சாகிலன்பகலிடைச்சாகிலனமனார்
கொள்ளச்சாகிலனாரினியவனுயிர்கொள்வார். (௧௭)

பூதமைந்தொடும்பொருந்தியவுணர்வினிற்புணரும்
வேதநான்கினும்விளம்பியபொருள்களால்விளியான்
றாதைதன்னைத்தான்றவிக்கொலைசூழினுஞ்சாகா
வீரவன்விலையெவ்வுலகங்கட்குமிறைவன். (௧௮)

ஆயவன்றனக்கருமகனறிஞரினறிஞன்
றாயவொன்பவர்யாரினுமறையினுந்தூயா
னாயகன்றவினாவினல்லறத்துக்குநாதன்
றாயின்மன்னுயிர்க்கன்பினனுளனொருதக்கோன். (௧௯)

வாழியானவன்றனைக்கண்டுமனமுவந்தருகி
யாழியையவீயறிதியான்மறையெனவறைந்தா
னாழியுங்கடந்துயர்கின்றவாயுளானுலக
மேழுமேழும்வந்தடிதொழவரசுவீற்றிருந்தான். (௨௦)

என்றொரந்தணனெல்லையிலறிஞனையேவி
கன்றுநீயிவற்குதவுதிமறையெனநவின்றான்
சென்றுமற்றவன்றன்னொடுமொருசிறைசேர்ந்தா
னன்றுநான்மறைமுதலியவோதுவானமைந்தான். (௨௧)

ஓதப்புக்கவனுந்தைபேருரையெனலோடும்
போதத்தன்செவித்துளையிருகைகளாற்பொத்தி
மூதக்கோயினற்றவமன்றெனமொழியா
வேதத்துச்சியின்மெய்ப்பொருட்பெயரினைவிரித்தான், (௨௨)

ஓநமோநாராயணாயவென்றுரைத்துளமுருகித்
தானமைந்திருதடக்கையுந்தலையின்மேற்றாங்கிப்
பூநிறக்கண்கள்புனலுகமயிர்புறம்பொடிப்ப
ஞானநாயகனிருந்தனனந்தணனடுங்கி. (௨௩)

கெடுத்தொழிந்தனையென்னையுமுன்னையுங்கெடுவாய்
படுத்தொழிந்தனைபாவியத்தேவரும்பகர்தற்
கடுத்ததன்றியேயயலொன்றுபகரின்னறிவி
லெடுத்ததென்னிதுவென்செய்தவண்ணநீயென்றான். (௨௪)

என்னையுய்வித்தேனெந்தையையுய்வித்தேனினைய
வுன்னையுய்வித்திவ்வுலகையுமுய்விப்பானமைந்து
முன்னைவேதத்தின்முதற்பெயர்மொழிவதுமொழிந்தே
னென்னைகுற்றநானியம்பியதியம்புதியென்றான். (௨௫)

முந்தைவானவர்யாவர்க்குமுதல்வற்குமுதலோ
னுந்தைமற்றவன்றிருப்பெயருரைசெயற்குரிய
வந்தணாளனேயென்னினுமறிதியோவையா
விந்தவிப்பெயருரைத்தெனைக்கெடுத்திடலென்றான். (௨௬)

வேதபாரகனவ்வுரைசெப்பலும்விமல
னாதிநாயகன்பெயரன்றியான்பிறிதறியே
னோதவேண்டுவதில்லையென்னுணர்விற்கொன்றும்
போதியாததுமில்லையென்றிவையிவைபுகலும். (௨௭)

தொல்லைநான்மறையாவையுந்துணிபொருட்கெல்லா
மெல்லைகொண்டவனகம்புகுந்திடங்கொண்டதென்னு
ளில்லைவேறினிப்பெரும்பதம்யானறியாத
வல்லையேலினியோதுவிநீதியின்வழாத. (௨௮)

ஆரைச்சொல்லுவதந்தணருமறையறிந்தோ
ரோரச்சொல்லுவதெப்பொருளுமுபநிடதங்க
ளாரச்சொல்லுவதேவரும்முனிவருஞ்செப்பும்
பேரைச்சொல்லுவதல்லதுபிறிதுமொன்றுளதோ. (௨௯)

வேதத்தாலுநல்வேள்வியினாலுமெய்யுணர்ந்த
போதத்தாலுமப்புறத்துளவெப்பொருளாலும்
சாதிப்பார்பெறும்பெரும்பதந்தலைக்கொண்டுசமைந்தே
னோதிக்கேட்பனபரம்பொருளின்னமொன்றுளதோ. (௩௦)

காடுபற்றியுங்கனவரைபற்றியுங்கலைத்தோன்
மூடுபற்றியுமுண்டித்துநீட்டியுமுறையால்
வீடுபெற்றவர்பெற்றதின்விழுமிதென்றுரைக்கு
மாடுபெற்றனன்மற்றினியென்பெறவருந்தி. (௩௧)

செவிகளாற்பலகேட்கிலராயினுந்தேவர்க்
கவிகொளுன்மறையகப்பொருள்புறப்பொருளறிவார்
கவிகளாகுவார்காண்குவார்மெய்ப்பொருள்காலாற்
புவிகொளுயகற்கடியவர்க்கடிமையிற்புக்கார். (௩௨)

எனக்குநான்முகத்தொருவற்கும்யாரினுமுயர்ந்த
தனக்கும்வேறுளசராசரமனைத்திற்குந்தலைவன்
மனக்குவந்தனன்வந்தனன்யாவையுமறையோ
யுனக்குமின்னதினல்லதொன்றில்லெனவுரைத்தான். (௩௩)

மாற்றம்யாதொன்றுமுரைத்திலன்மறையவன்மறுகி
யேற்றமென்னெனக்கிறுதிவந்தெய்தியதென்று
ஆற்றமில்லவனோடினன்கனகனையுற்றான்
தோற்றவந்ததோர்கனவுகண்டனனெனச்சொன்னான். (௩௪)

எந்தைகேளெனக்கிம்மைக்குமறுமைக்குமியம்பச்
சிந்தையாலிறைநினைத்தற்குமடாதனசெப்பி
முந்தையேநினைந்தென்பொருண்முற்றுமென்றுரைத்தான்
மைந்தனோதிலன்வேதமென்றுரைத்தனன்வணங்கி. (௩௫)

அன்னகேட்டவனந்தணவந்தணர்க்கடாத
முன்னர்யாவருமொழிதருமுறைமையிற்படாத
நன்னதுள்ளுடையுணர்ச்சியாற்புதுவதுதந்த
தென்னசொல்லவனியம்பியதியம்புதியென்றான். (௩௬)

அரசனன்னவையுரைசெயமறையவனஞ்சிச்
சிரதலங்கரஞ்சேர்த்திடச்செவித்துளைசேர்ந்த
வுரகமன்னசொல்யாதுனக்குரைசெயினுரவோய்
நரகமெய்துவனுவம்வெந்துருமெனநவின்றான். (௩௭)

கொணர்கென்மைந்தனைவல்விரைந்தென்றனன்கொடியோ
னுணர்வினெஞ்சினனேவலாற்கடிதினிலோடிக்
கணவினெய்தினர்பணியெனத்தாதையைக்கண்டான்
றுணையிலான்றனைத்துணையெனவுடையவன்றொழுதான். (௩௮)

தொழுதமைந்தனைச்சுடர்மணிமார்பிடைச்சுண்ண
மெழுதவல்பிரோடியங்குறத்தழுவிமாடிருத்தி
முழுதுநோக்கிநீவேதியன்கேட்கிலன்முனியப்
பழுதுசொன்னசொலென்னதுபகருதியென்றான். (௩௯)

சுருதியாதியிற்றொடங்குறுமெல்லையிற்சொன்ன
வொருவன்யாவர்க்குநாயகன்திருப்பெயருணரக்
கருதக்கேட்டிடக்கட்டுரைத்திடார்க்கடல்கட்க
வுரியமற்றிதினல்லதொன்றில்லெனவுரைத்தான். (௪௦)

தேவர்செய்கையையன்னமுனாசெய்த்தீயோன்
றுவில்வேதியன்றக்கதேயுரையெனத்தக்கோ
னுவதாருகவன்றெனிலறிகுவமன்றே
யேவதவ்வுரையியம்புதியியம்புதியென்றான். (௪௧)

நாமம்யாவதுந்தருவதுமப்பதங்கடந்தாற்
சேமவீடுறச்செய்வதுஞ்செந்தழன்முகந்த
வோமவேள்வியினுறுபதமுய்ப்பதுமொருவ
னாமமன்னதுகேண்மோநாராயணாய. (௪௨)

மண்ணினின்றுமென்மலரயனுலகுறவாழு
மெண்ணில்பூதங்களிற்பனதிரிவனவிவற்றி
னுண்ணிறைந்துறைகரணத்தினாங்குளவுணர்வு
மெண்ணுமின்றதிவ்வெட்டெழுத்தேபிறிதில்லை. (௪௩)

முக்கட்டேவனுநான்முகத்தொருவனுமுதலா
மக்கட்காறுமிம்மந்திரமறந்தவர்மறந்தார்
புக்குக்காட்டுவதறிதிதுபொதுவுறக்காண்பா
ரொக்கநோக்கினரல்லவரதனிலையுணரார். (௪௪)

தோற்றமென்னுமத்தொல்வினைத்தொடுகடற்சுழியின்
றேற்றுநன்கலமருங்கலன்யாவர்க்குமினிய
மாற்றமங்கலமாதவவேதத்தின்வரம்பின்
றேற்றமெய்ப்பொருடெரிந்தமற்றிதனிலைசிறந்த. (௪௫)

உன்னுயிர்க்குமென்னுயிர்க்குமிவ்வுலகத்தினுள்ள
மன்னுயிர்க்குமீதுறுதியென்றுணர்வுறமதித்துச்
சொன்னவிப்பெயரொன்றனைநிருரிற்றூயான்
மின்னுயிர்க்கும்வேலிரணியன்றழலெழவிழித்தான். (௪௬)

இற்றைநாண்முதல்யானுளநாள்வரையிப்பேர்
சொற்றவாயையுங்கருதியமனத்தையுஞ்சுடுமென்
னெற்றையாணைமற்றியாருனக்கிப்பெயருரைத்தார்
கற்றதாரொடுசொல்லுதிவிரைந்தெனக்கனன்றான். (௪௭)

முனைவர்வானவர்முதலினர்மூன்றுலகத்து
மெனையருள்ளவர்யாவருமென்னிருகழலே
நினைவதேத்துவதெனபெயர்நினக்கிதுநேர
வனையரஞ்சுவர்மைந்தநீயாரிடையறிந்தாய். (௪௮)

மறங்கொள்வெஞ்செருமலைகுவான்பன்முறைவந்தான்
கறங்குவெஞ்சிறைக்கலுழன்றன்கடுமையிற்கழிந்தான்
பிறங்குதெண்டிரைப்பெருங்கடல்புக்கினம்பெயரா
துறங்குவான்பெயருறுதியென்றொருவனுக்குரைத்தார். (௪௯)

நூலையுன்மணலெண்ணிறுமெண்ணரும்பரப்பிற்
ளாவர்நன்னூலத்துள்ளவரவன்கொலைக்குறைந்தா
ராகிலுமத்லைதயெலியிருர்தோதிநூலதற்கு
விரவுநன்மையென்றுன்மதிவிளம்பெனவெகுண்டான். (௫௦)

வயிற்றினுன்றுலகேழினோடேழையும்வைக்கு
மயிர்ப்பிலாற்றலென்னண்ணலையெனமொன்றுபி
யெயிற்றினுலெரிந்தின்றுயிருண்டவனுமம்
பயிற்றவோவுனைப்பயந்தனானெனப்பகர்ந்தான். (௫௧)

ஒருவன்யாவர்க்குமெவற்றிற்குமுலகிற்குமுதல்வன்
றருதல்காத்தலைதவிர்த்தலென்றிவைசெயத்தக்கான்
கருமத்தாலன்றிக்காரணத்தாலுள்ளகாட்சி
திருவிலிமற்றிதெம்மறைப்பொருளெனத்தெரிந்தாய். (௫௨)

ஆதியந்தங்களதனின்மற்றில்லைபேருலகின்
வேதமெய்ஙனமங்ஙனமவைசொன்னவிதியாற்
கோதினல்வினைசெய்தவருயர்குவர்குறித்துத்
தீதுசெய்தவர்தாழ்குவரிதுமெய்மைதெரியில். (௫௩)

செய்தமாதவமுடைமையினரியயன்சிவனென்
றெய்தினர்பதமிழந்தனர்யான்றவமியற்றிப்
பொய்யிலுயகம்பூண்டலினினியிதுபுரித
னெய்யதாகுமென்குருமென்காவலிலுழைவார். (௫௪)

வேள்வியாகியபுண்ணியத்தவத்தொடும்விலக்கிக்
கேள்வியாவையுந்தவிர்த்தனனிவைகிளர்பகையைத்
தாழ்வியாதனசெய்யுமென்றனையவர்தம்பால்
வாழ்வியாதயலெவ்வலிபுறங்கொண்டுவாழ்வார். (௫௫)

பேதைப்பிள்ளைநீபிழைத்ததுபொறுத்தனன்பெயர்த்து
மேதில்வார்த்தைகளினையனவிளம்பலைமுனிவன்
யாதுசொல்லினனவையவையிதமெனவெண்ணி
யோதிபோதியென்றுரைத்தனனுலகெலாமுயர்ந்தோன். (௫௬)

வேறு.

உரையுளதுணர்த்தவதுணர்ந்துகோடியேல்
விரையுளவலங்கலாய்வேதவேள்வியின்
கரையுளதியாவருங்கற்றுங்கல்வியின்
பிரையுளதென்பதுமைந்தன்பேசினன். (௫௭)

வித்தின்றிவிளைவதொன்றில்லைவேந்தநின்
பித்தின்றியுணர்தியேலளவைப்பெய்தன
வைத்தொன்றுமொழியின்றியுணர்தற்பாற்றன
கைத்தொன்றுசெல்வியின்கனியிற்காண்டியால். (௫௮)

தன்றனேயுலகங்களெவையுந்தந்தவை
தன்றனேநின்றதானவற்றுட்டங்குவான்
பின்னிலன்முன்னிலனொருவன்பேரிலன்
றன்னிலையொருவராற்றுணியற்பாலதோ. (௫௯)

சித்தெனவருமறைச்சிரத்திற்றேறிய
தத்துவமவனதுதம்மைத்தாமுணர்
வித்தகாரிருவர்வேறுவேறுணர
பித்தருமுளர்சிலர்வீடுபெற்றிலார். (௬0)

அளவையானளப்பரிதறிவினப்புறத்
துளவையாயுபநிடதங்களோதுவ
ஔவியாற்பொருள்களாத்தெளக்குருதவன்
களவையாரறிகுவார்மெய்ம்மைகண்டிலார். (௬௧)

மூவகையுலகுமாய்க்குணங்கண்மூன்றுமா
யாவையுமெவையுமாயெண்ணில்வேறுபட்
டோவலினொருநிலையொருவன்செய்வினை
தேவருமுனிவருமுணரத்தேயுமோ. (௬௨)

சாங்கியம்யோகமென்றிரண்டுதன்மைய
வீங்கியபொருளெலாம்வேறுகாண்பன
வாங்கவையுணர்ந்தவர்க்கன்றியன்னவ
னோங்கியமேனிலையுணரற்பாலதோ. (௬௩)

கருமமுங்கருமத்தின்பயனுங்கண்ணிய
தருமுதற்றலைவனுந்தானுந்தானவ
னருமையும்பெருமையுமறிவரோலவ
ரிருமையென்றுணரசெயுங்கடனின்றேறுவார். (௬௪)

மந்திரமாதவமென்னுமாலைய
தந்துறுபயனிவைமுறையிற்சாற்றிய
நந்தலிறெய்வமாய்நல்குநான்மறை
யந்தமில்வேழ்விமாட்டவீற்பமாமவன. (௬௫)

முற்பயப்பயன்றருமுன்னினின்றவர்
பிற்பயப்பயன்றரும்பின்புபோலவன்
றற்பயன்றன்னெறிதருமமில்லையஃ
தற்புதமாயையாலறிகிலார்பலர், (௬௬)

ஒருவினையொருபயனன்றியுய்க்குமோ
இருவினையென்பவையிபற்றியிட்டவை
கருதினகருதினகாட்டுகின்றன
தருபரனருளினிற்சான்றுவேண்டுமோ. (௬௭)

ஓராவுதிகடைமுறைநவேழ்வியோம்புவோ
ராவவியமலனுக்களிப்பரோலது
சராசரமனைத்திலுஞ்சாருமென்பது
பாரவருமறைப்பொருள்பயனுமன்னதால். (௬௮)

பருதியினுட்பயன்பயந்ததன்னதின்
மிருதியின்மிருதிகளனைவயுமேலவாம்
வருதியின்வசத்தனவாவுபொக்கது
புருதியில்லாதவர்புலத்திற்றாகுமோ. (௬௯)

எழுத்தியலுளத்தினெண்ணிலாவகை
முழுத்தனிநான்முகன்முதலமற்றுயிர்
வழுத்தரும்பொருட்டதோரொளியின்லவருமர்ல்
விழுத்தனிப்பல்லிதழ்விளாயிலாமுகிழ். (௭௦)

கண்ணினுங்கரந்துளன்கண்டுகோட்டவா
னுண்ணிறைந்திடுமுணர்வாகியுண்மையான்
மண்ணிலும்வானிலுமற்றைமூன்றிலு
மெண்ணிறுநெடியவனொருவனெண்ணிலான். (௭௧)

சிந்தையிற்செய்கையிற்சொல்லிற்சேர்ந்துளன்
இந்தியந்தொறுமுளனுற்றதெண்ணிலன்
முந்தையோரெழுத்தெனவந்துமும்முறைச்
சந்தியும்பதமுமாய்த்தழைத்ததன்மையான். (௭௨)

காமமும்வெகுளியுமுதலகண்ணிய
தீமையும்வன்மையுந்தீர்க்குஞ்செய்கைய
னாமமும்வன்பிறவிகொடானெடுஞ்
சேமமும்பிறர்களாற்செப்பலாகுமோ. (௭௩)

காலமுங்கருவியுமிடனுமாய்க்கடைப்
பாலமைபயனுமாய்ப்பயன்றுய்ப்பானுமாய்ச்
சீலமுமவைதருதிருவுமாயுள
னாலமும்வித்துமொத்தடங்குமாண்மையான். (௭௪)

உள்ளுறவுணர்விளிதுணர்ந்தவோசையோர்
தெள்விளியாழிடைத்தெரியுஞ்செய்கைய
னுள்ளுளன்பிறத்துளனென்றுநண்ணலான்
றள்ளருமறைகளுமருளுந்தன்மையான். (௭௫)

ஓமெனுமோரெழுத்ததனினுள்ளுயி
ராமவனறிவினுக்கறிவுமாயினன்
னாமமுவுலகமுந்தழுவிச்சார்தலாற்
அமமுங்கனலம்போற்றொடர்ந்ததோற்றத்தான். (௭௬)

சாலையினருமலரொன்றக்கட்டிய
மாலையின்மலர்புரைசமயவாதியர்
நூலையின்றிருக்கலாற்சொல்லுவோர்க்கெலாம்
வேலையுந்திரையும்போல்வேறுபாடிலான். (௭௭)

இன்னதோர்தன்மையபனிகழ்வுற்றெய்திய
நன்னெடுஞ்செல்வமுநாளுநாமற
மன்னுயிரிழத்தியென்றிறைஞ்சிவாழ்த்தினேன்
சொன்னவனுமமென்றுணரச்சொல்லினான். (௭௮)

வேறு.

எதிரினின்றவனிவையுரைத்திடுதலுமெவ்வுலகமுமஞ்ச
முதிரும்வெங்கதமொழிகொண்டுமூண்டதுமுதுகடற்கடுவெய்ப்பக்
கதிரும்வானமுஞ்சுழன்றனநெடுநிலங்கம்பித்தனகண்கண்
ணுதிரங்கான்றனதோன்றினபுகைக்கொடியுமிழ்ந்ததுகொடுந்தீயே. (௭௯)

வேறுமென்னொடுதரும்பகைபிறிதினிவேண்டலன்வினையத்தா
னூறியென்னுளேயுதித்ததுகுறிப்பினியுணர்குவதுளதன்று
வீறிலென்பெரும்பகைஞனுக்கன்புசாலடியன்யானென்கின்றான்
கோறியொன்றனனென்றலும்பற்றினர்கூற்றினுங்கொலைவல்லார். (௮௦)

குன்றுபோன்மணிவாயிலின்பெரும்புறத்துய்த்தனர்மழுக்கூர்வா
ளொன்றுபோல்வனவாயிரமீதெடுத்தோச்சினருயிரோடு
தின்றுதீர்குதுமென்குனருருமெனத்தெழித்தனர்சினவேழக்
கன்றுபுல்லியகோளரிக்குழுவெனக்கனல்கின்றதறுகண்ணார். (௮௧)

தாயின்மன்னுயிர்க்கன்பினன்றன்னையத்தவமெனுந்தகவில்லோ
ரேயெனுந்துணைமாத்திரத்தெய்தனவெறிந்தனவெறிதோறுந்
தூயவன்றனைத்துணையெனவுடையவவ்வொருவனைத்துன்றூதார்
வாயின்வைதனவொத்தனவத்தனைமழுவொடுகொலைவாளும். (௮௨)

எறிந்தவெய்தனவெற்றினகுத்தினவீர்த்தனபடையாவு
முறிந்துநுண்பொடியாயினமுடிந்தனமுனிவிலான்முழுமேனி
சொறிந்ததன்மையுஞ்செய்திலவாயதுதூயவன்றுணிவொன்று
யறிந்தநாயகன்சேவடிமறந்திலனயர்த்திலனவனுமம். (௮௩)

உள்ளவான்பெரும்படைக்கலம்யாவையுமுதிர்ந்தனவரவோய்கின்
பிள்ளைமேனிக்கோரானிவந்திலதினிச்செயலென்கொல்பிறிதென்னக்
கள்ளவுள்ளத்தன்கட்டினன்கருவிகள்கதுமெனக்கனல்போற்றித்
தள்ளுமின்னெனவுரைத்தனன்யாவருமத்தொழிறலைநின்றார். (௮௪)

குழியிலிட்டனமடுக்கினர்குன்றெனக்குடந்தொறுங்கொணர்ந்தெண்ணெய்
இழுதுநெய்சொரிந்திட்டனர்நெருப்பெழுந்திட்டதுவிசும்பெட்ட
வழுதுநின்றவரயர்வுறவையனைப்பெய்தனரரியென்று
தொழுதுநின்றனனாயகன்றுளியிணைகுளிர்ந்ததுசுடுதீயே. (௮௫)

காலவெங்கனல்கதுவியகாலையிற்கற்புடையவள்சொற்ற
சீலநல்லுரைசேனமுடுத்தலிற்கிழியொடுநெய்தீற்றி
யாலமன்னவர்கரங்களால்வயக்கெரிமடுத்தலிலநுமன்றன்
கூலமாமெனவென்புறக்குளிர்ந்ததக்குருமணித்திருமேனி. (௮௬)

சுட்டதில்லெனின்றேன்றலைச்சுடர்க்கனற்சுழிபடாமுவந்து
விட்டபோதினுமென்னிலிச்செயத்தக்கதென்றனரிகல்வெய்யோர்
கட்டித்தீயையுங்கடுஞ்சிறையிடுமினக்கள்வனைக்கவர்ந்தன்ன
வெட்டிப்பாம்பையும்விடுமின்களென்றனனெரிகின்றதறுகண்ணன். (௮௭)

அனந்தனேமுதலாகியநாகங்களருளென்கோலெனவன்று
விளைந்தமாத்திரத்தெய்தினநொய்தினினெருப்புகுபகுவாயால்
வளைந்ததாமன்னமேனியினன்றன்மேல்வாளெயிறுறவூன்றிச்
சினந்தபீக்கொளக்கடித்தனவடித்திலன்றிருப்பெயர்மறவாதான், (௮௮)

பக்கநின்றவைபயத்திலிற்புயற்கறைப்பசும்புனல்பகுவாயிற்
கக்கவெஞ்சிறைக்கலுழனுநடுக்குறக்கவ்வியகாலத்துட்
செக்கர்மேகத்துச்சிறுபிறைநுழைந்தனசெய்கையவலிசிந்தி
யுக்கபற்குலமொழுகினவெயிற்றிரும்புரைதொறுமயிர்நாறி: (௮௯)

வேறு.

சூழ்ப்பற்றினசுற்றுமெயிற்றிற்
போழக்கிற்றிலவென்றுபுகன்றார்
வாழித்திக்கின்மயக்கின்மதந்தாழ்
வேழத்துக்கிடுமின்னெனவிட்டான். (௯௦)

பசையிற்றங்கலில்சிந்தையர்பல்லோர்
திசையிற்சென்றனர்செப்பினனென்னு
மிசையிற்றந்தவிந்திரனென்பான்
விசையிற்றின்பணிவெஞ்சினவேழம். (௯௧)

கையிற்கால்களின்மார்புகழுத்திற்
றெய்வப்பாசமுறப்பிணிசெய்தார்
மையற்காய்கரிமுன்னுறவைத்தார்
பொய்யற்றானுயிதோன்றுபுகன்றான். (௯௨)

எந்தாய்பண்டொரிடங்கர்விழுங்க
முந்தாய்நின்றமுதற்பொருளேயென்
றந்தாய்தந்தையினத்தவனேத
வந்தானென்றன்மனத்திலனென்றான். (௯௩)

என்றுமுன்னமிருங்களிறுந்தன்
பொன்றுரோடைபொருந்தவிலத்தி
னன்றுனைத்தொழுதஞ்சியகன்ற
தொன்றுரைத்திடமெய்தியுரைத்தார். (௯௪)

வல்வினைத்துயில்வானைமதித்தென்
னல்வினைத்தையழித்தனனன்றாற்
றொல்வினையொற்றையுரக்கரிதன்னைக்
கொல்வினொன்றனனெஞ்சுகொதிப்பான். (௯௫)

தன்னைக்கொல்லுனர்சாருதலோடும்
பொன்னைக்கொல்லுமொளிப்புகழ்பொய்யா
மன்னைக்கொல்லியவந்தனவாரா
மின்னைக்கொல்லும்வெயிற்றினெயிற்றால். (௯௬)

வீரத்திண்டிறன்மார்பினில்வெண்கோ
டாரக்குத்தியழுத்தியநாகம்
வாரத்தன்குலைவாழைமடற்கு
ஈரத்தண்டெனவிற்றனவெல்லாம். (௯௭)

வெண்கோடிற்றனமெய்யிலர்செய்யுங்
கண்கோடற்பொறியிற்கடிதேகி
யெண்கோடற்கரிதென்னவெகுண்டான்
றிண்கோடைக்கதிரிற்றெறுகண்ணான். (௯௮)

தள்ளத்தக்கில்பெருஞ்சயிலத்தோ
டெள்ளக்கட்டியெடுத்துவிசித்துக்
கள்ளத்திங்கிவனைக்கணைகாணு
வெள்ளத்துய்த்திடுவீரெனவிட்டான். (௯௯)

ஒட்டிக்கொல்லவுணர்ந்துவெகுண்டான்
விட்டிட்டானலனென்றுவிரைந்தார்
கட்டிக்கல்லொடுகால்விசையிற்போ
யிட்டிட்டார்கடலின்னடுவெந்தாய். (௧௦௦)

நடுவொக்குந்தனிநாயகனும்மம்
விடுகிற்கின்றிலனுதலின்வேலை
மடுவொத்தங்கதில்வங்கமுமன்றாய்க்
குடபத்தன்மையதாயதுகுன்றம். (௧௦௧)

மோதுற்றார்திரைவேலையின்மூழ்கான்
மீதுற்றார்சிலைமீதுகிடந்தா
னாதிப்பண்ணவனாயிரநாம
மோதுற்றன்மறையொல்லையுணர்ந்தான். (௧௦௨)

தலையிற்கொண்டதடக்கையினான்றன்
நிலையிற்றீர்வின்மனத்தினினைந்தான்
சிலையிற்றிண்புனலிற்சினையாலி
னிலையிற்பிள்ளையெனப்பொலிகின்றான். (௧௦௩)

வேறு. அடியாரடியேனெனுமார்வமலா
லொடியாவலியாளுண்டயேனுளதோ
கொடியாய்குறியாய்குணமேதுமிலாய்
செடியாயடியேனிலநேர்குறியோ. (௧0௪)

கள்ளந்திரிவாரவர்கைதவநீ
யுள்ளந்தெரியாதவனக்குளவோ
அள்ளும்பொறியின்னிலசோதனைதான்
வெள்ளந்தருமின்னமுதேவிதியோ. (௧0௫)

வருநான்முகனேமுதல்வானவர்கோன்
றிருநான்மறையின்னெறியேதிரிவார்
பெருநாடெரிநின்றிலர்பேதைமையே
யொருநாளுமெனயெங்ஙனமுன்றுவனோ. (௧0௬)

செய்யாதனவோவிலதீவினைதான்
பொய்யாதனவந்துபுணர்ந்திடுமால்
மெய்யேயுயிர்தீர்வதொர்மேல்வினைநீ
யையாவொருநாளுமயர்த்தனையோ. (௧0௭)

ஆயப்பெறுநன்னெறிதம்மறிவென்
றேயப்பெறுமீசர்களெண்ணிலரால்
நீயப்புறநிற்கநினைக்கிலர்நின்
மாயப்பொறிபுக்குமயங்குவரால். (௧0௮)

தாமேதனிநாயகராயெவையும்
போமேபொருளென்றபுராதனர்தாம்
யாமேபரமென்றனரென்றவர்க்
காமேபிறர்நின்னலதாருளரோ. (௧0௯)

ஆதிப்பரமாமெனிலன்றெனலா
மோதப்பெருநூல்களுலப்பிலவாற்
பேதிப்பனநீயவைபேர்கிலையால்
வேதப்பொருளேவினையாடுதியோ, (௧௧0)

அம்போருகனாரனாதியா
ரெம்போலியரெண்ணிடினென்பலவாங்
கொம்போடடைபூக்கனிகாயெனினும்
வம்போமரமொன்றெனும்வாசகமே. (௧௧௧)

மின்னிற்பிறிதாய்நிலையிற்றிரியா
தன்னிற்பிறிவாயினதானறமு
முன்னிற்பிறிதாயினவோவுலகம்
பொன்னிற்பிறிதாகியபொற்கலனே. (௧௧௨)

தாய்தந்தையெனுந்தகைவந்தனைதா
னீதந்தனைநீயுறுநெஞ்சினனாய்
நோய்தந்தவனேறவதிர்வுமெனு
வாய்தந்தனசொல்லிவணங்கினனால். (௧௧௨)

அத்தன்மையறிந்தவருந்திறலோ
னுய்த்துய்ம்மினென்முன்னெனவுய்த்தனராற்
பித்துண்டதுபேர்வுறுமாபெறுதுங்
கைத்துங்கடுநஞ்சினெனக்கனலா. (௧௧௩)

இட்டார்கடுவல்விடமெண்ணுடையான்
றொட்டாறுகரத்தொகைவன்கசையிற்
கட்டார்கடுமத்திகைகண்கொடியான்
விட்டானவன்மேலவர்வீசினரால். (௧௧௪)

வெய்யார்முடிவில்லவர்வீசியபோ
தய்யானெனும்வேலையினுள்ளுறைவோன்
கையாயிரமல்லகணக்கிலவென்
றெய்யாவுலகியாவையுமெண்ணினவால். (௧௧௫)

ஊனோடுயிர்வேறுபடாவுபயந்
தானேயுடையன்றனிமாயையினால்
யானேயுயிருண்பனெனக்கனலா
வானேழுநடுங்கிடவந்தனனால். (௧௧௬)

வந்தானைவணங்கியென்மன்னுயிர்தா
னெந்தாய்கொளவெண்ணினையேலிதுதா
னுந்தாரியதன்றுலகியாவுமுடன்
றந்தார்கொளநின்றதுதானெனலும். (௧௧௭)

வேறு.

ஏவரோயுலகந்தந்தாரொன்பெயரோத்திவாழு
மூவரோயல்லவாகின்முனிவரோமுழுதுந்தோற்ற
தேவரோபிறரோயாரோசெப்புதிதெரியவென்றுன்
கோவமுண்டெழுந்துகொல்லான்காட்டுமேற்காக்ஷிகொள்வான். (௧௧௮)

உலகுதந்தானும்பல்வேறுயிர்கடந்தானுமுள்ளுற்
றலைவிலாவுயிர்கடோறுமங்கங்கேயுறைகின்றானும்
மலரினில்வெறியுமெள்ளிலெண்ணெயுமற்றுங்கேளா
யலகிறுல்புகழும்பற்றிமுற்றியவரிகாணத்தா. (௧௧௯)

என்கணுனேக்கிக்காணவெங்கணுமுளன்காணெந்தை
யுன்கணனன்பிற்சொன்னவுறுதியென்றுன்றுங்கொள்ளாய்
நின்கணுனேக்கிக்காண்டற்கெளியனோநினக்குமூத்த
பொன்கணுவியுண்டபுண்டரீகக்கணனை. (௧௨௰)

மூன்றவன்குணங்கள்செய்கைமூன்றவனுருவமூன்று
மூன்றுகண்சுடர்கள்சோதிமூன்றுதன்னுலகமூன்று
தோன்றலுமிடையுமீறுந்தொடங்கியபொருள்கட்கெல்லாஞ்
சான்றவனிதுவேவேதமுடிவிதுசாதமென்றான். (௧௨௨)

என்றலுமவுணர்வேந்தனெயிற்றரும்பிலங்கநக்கான்
ஒன்றலில்பொருள்கட்கெல்லாமொருவன்புக்குறைவனென்றாய்
நன்றதுகண்டுபின்னர்நல்லவாசெய்துந்தானி
லின்றளவென்னிற்கள்வனிரப்புவனிலைமையென்றான். (௧௨௩)

சாணினுமுளனோர்தன்மையணுவினைச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகன்சொன்னான். (௧௨௪)

உம்பர்க்குமுனக்குமொத்திவ்வுலகெங்கும்பரந்துளானைக்
கம்பத்தின்வழியேகாணக்காட்டுதிகாட்டாயாகிற்
கும்பத்தின்கரியைக்கோண்மாக்கொன்றெனநின்னைக்கொன்றுன்
செம்பொத்தகுருதிதேக்கியுடலையுந்தின்பனென்றான். (௧௨௫)

என்னுயிர்நின்னாற்கோறற்கெளியதொன்றன்றியான்முன்
சொன்னவன்றொட்டதொட்டவிடந்தொறுந்தோன்றானாயின்
என்னுயிர்யானேமாய்ப்பன்பின்னும்வாழ்வுகப்பனென்னி
லன்னவற்கடியனல்லேனென்றனனறிவின்மிக்கான். (௧௨௬)

நகைசிறந்திலங்கப்பொங்கிநன்றுநன்றென்னநக்கு
விசைபிறந்துருமுவீழ்ந்ததென்னவோர்தூணின்வென்றி
யிசைசிறந்தமர்ந்தகையாலெற்றினனெற்றலோடுந்
திசைதிறந்தண்டங்கீறிச்சிரித்ததுசெங்கட்சீயம். (௧௨௭)

நாடிநான்றருவனென்றநல்லறிவாளனாலுந்
தேடிநான்முகனுங்காணாச்சேயவன்சிரித்தலோடு
மாடினானழுதான்பாடியாற்றினான்சிரத்திற்செங்கை
சூடினான்றொழுதானோடியுலகெலாந்துகைத்தான்றுள்ளி. (௧௨௮)

ஆரடாசிரித்தாய்சொன்னவரிகொலோவஞ்சிப்புக்க
நீரடாபோதாதென்றுநெடுந்தறிநேடினாயோ
போரடாபொருதியாயிற்புறப்படுபுறப்படென்றான்
போரடாநின்றதாளோடுலகெலாம்பெயரப்போவான். (௧௨௯)

பிளந்ததுதூணுமாங்கேபிறந்ததுசீயம்பின்னை
வளர்ந்ததுதிசைகளெட்டும்பகிரண்டமுதலமற்று
மளந்ததப்புறத்துச்செய்கையாரறிந்துரையகிற்பார்
கிளர்ந்ததுககனமுட்டைகிழிந்ததுமேலும். (௧௩௦)

மன்றலந்துளபமாலைமானிடமடங்கல்வானிற்
சென்றதுதெரிதரேற்றுஞ்சேவடிபடியிற்றீண்டி
நின்றதோர்பொழுதினண்டநெடுமுகட்டிருந்தமுன்னோ
னன்றவனுந்திவந்தானுமெனத்தோன்றினானால். (௧௩௧)

எத்தனைபோதுங்கையென்றியம்பினாலெண்ணற்கேற்ற
வித்தகருளரோயந்தத்தானவர்விரிந்தசேனை
பத்தநூறமைந்தகோடிவெள்ளத்தாற்பகுதிசெய்த
வத்தனைகடலுமாளத்தனித்தனியள்ளிக்கொண்ட. (௧௩௨)

ஆயிரங்கோடிவெள்ளத்தயிலெயிற்றவுணர்க்கங்கங்
கேயினவொருவர்க்கோரோர்திருமுகமிரட்டிபொற்றோள்
தீயெனக்கனலுஞ்செங்கண்சிரந்தொறுமூன்றுந்தெய்வ
வாயினிற்கடல்களேழுமலைகளுமற்றுமுற்றும். (௧௩௩)

முடங்குவாருளையவண்டமுழுவதுமுடிவினுண்ணுங்
கடங்கொள்வெங்காலச்செந்தீயதனைவந்தழிக்குங்கால
மடங்கலினுயிர்ப்புமற்றக்காற்றினைமாற்றுமானால்
அடங்கலும்பகுவாயாக்கையப்புறத்தகத்ததம்மா. (௧௩௪)

குயிற்றியவண்டங்குஞ்சையிட்டிலாமுட்டைமுட்டப்
பயிற்றியபருவமொத்தகாலத்துளமுதுபல்கும்
எயிற்றுவன்பகுவாயுள்புக்கிருக்குனரிருக்கையெய்தி
வயிற்றின்வந்தந்நாளிந்நாள்வாழுமன்னுயிர்கண்மன்னோ. (௧௩௫)

நன்மையிற்றொடர்ந்தார்க்குண்டோகேடுநான்முகத்தோனாதி
தொன்மையிற்றொடர்ந்தவாய்மையறத்தொடுந்தொடர்ந்திலோரை
யன்வயித்தோருந்தீயவவுணரல்லாரையந்நாட்
டன்வயிற்றகத்துவைத்துத்தந்ததச்சீயந்தாயில். (௧௩௬)

பேருடையவுணர்தம்மைப்பிறையெயிற்றடக்கும்பேராப்
பாரிடைத்தேய்க்குமீளப்பகிரண்டத்தடிக்கும்பற்றி
மேருவிற்புடைக்குமாளவிரல்களிற்பிசையும்வேலை
நீரிடைக்குமிழியூட்டுநெருப்பிடைச்சுரிக்கநீட்டும். (௧௩௭)

வகிர்ப்படுத்துாக்கும்பற்றிவாய்களைப்பிளக்கும்வன்றோல்
றுகிற்படுத்துரிக்குஞ்செந்தீக்கண்களைத்தோண்டுஞ்சுற்றிப்
பகிர்ப்படக்குடலைக்கொய்யும்பசையறப்பிசையும்பல்கா
லுகிர்ப்புரைபுக்கோர்தம்மையுகிர்களாலுறக்குமூன்றி. (௧௩௮)

யானையுந்தேருமாவும்யாவையுமுயிரிராம
னூனொடுதின்னும்பின்னையொலிதிரைப்பரவையேழு
மீனொடுகுடிக்குமேகத்துருமொடும்விழுங்கும்விண்ணிற்
றானொடுங்காதென்றஞ்சித்தருமமுஞ்சலித்ததம்மா. (௧௩௯)

ஆழிமால்வரையோடெற்றுஞ்சிலவரையண்டகோளச்
சூழிருஞ்சுவரிற்றேய்க்குஞ்சிலவரைச்சொன்னகுன்ற
மேழினோடெற்றிக்கொல்லுஞ்சிலவரையெட்டுத்திக்குந்
தாழிருட்பிழம்பிற்றேய்க்குஞ்சிலவரைத்தடக்கைதாங்கி. (௧௬௦)

மலைகளிற்புரண்டுவிழவள்ளுகிர்நுதியால்வாங்கித்
தலைகளைக்கிள்ளுமள்ளித்தழலெழப்பிசையுந்தக்க
கொலைகளிற்கொல்லும்வாங்கியுயிர்களைக்குடிக்கும்வான
நிலைகளிற்பாக்கவேலைநீர்களைநிரம்பத்தூர்க்கும். (௧௬௧)

முப்புரத்துலகத்தள்ளுமொழிவறமுற்றும்பற்றித்
தப்புதலின்றிக்கொன்றுதையலார்கருவுந்தள்ளி
யிப்புறத்தண்டத்தியாருமவுணரில்லாமையெய்தி
யப்புறத்தண்டந்தோறுந்தடவினசிலகையம்மா. (௧௬௨)

கனகனுமவனில்வந்தவானவர்களைகளுன
வனகனுமொழியப்பல்வேறவுணரானவரையெல்லா
நினைவதன்முன்னங்கொன்றுநின்றதந்நெடுங்கட்சீயம்
வனைகழலவனுமற்றமடங்கலின்வரவுநோக்கி. (௧௬௩)

வயிரவாளுறையின்வாங்கிவானகமறைக்கும்வட்டச்
செயிரறுகிடுகும்பற்றிவானவருள்ளந்தீய
வயிர்படர்வேலையேழுமலைகளுமஞ்சவார்த்தங்
குயிருடைமேருவென்னவாய்மடித்துருத்துநின்றான். (௧௬௪)

நின்றவன்றன்னைநோக்கிநிலையிதுகண்டுநீயு
மொன்றுமுன்னுள்ளத்தியாதுமுணர்ந்திலைபோலுமன்றே
வன்றொழிலாழிவேந்தைவணங்குதிவணங்கவேயுன்
புன்றொழில்பொறுக்குமென்றுலகெலாம்புகழநின்றான். (௧௬௫)

கேளிதுநீயுங்காணக்கிளர்ந்தகோளரியின்கேழில்
தோளொடுதாளுநீக்கிநின்னையுந்துணித்துப்பின்னென்
வாளினைத்தொழுவதல்லால்வணங்குதன்மகளிருடல்
நாளினுமுளவோவென்றுவண்டங்கணடுங்கநக்கான். (௧௬௬)

நகைசெயாவாயுங்கையும்வாளொடுநடந்ததாளும்
புகைசெயாநெடுந்தீப்பொங்கவுருத்தெதிர்பொருந்தப்புக்கான்
றொகைசெய்வார்க்கரியதோளாற்றுள்ளாற்சுற்றிச்சூழ்ந்தான்
மிகைசெய்வார்வினைகட்கெல்லாமேற்செயும்வினையம்வல்லான். (௧௬௭)

இருவரும்பொருந்தப்பற்றியெவ்வுலகுக்குமேலாய்
ஒருவருங்காணுவண்ணமுயர்ந்ததற்குவமைகூறில்
வெருவருதோற்றத்தஞ்சாவெஞ்சினவவுணன்மேரு
வருவனாயொத்தானண்ணலல்லவையெல்லாமொத்தான். (௧௬௮)

ஆர்ப்பொலிமுழக்கின்வெவ்வாய்வள்ளுகிர்ப்பாரமான்ற
வேற்றருங்கரத்திற்பல்வேறெறிதிரைப்பரப்பினூற்ற
பாற்கடல்பரந்துபொங்கிப்பங்கயத்தொருவனாட்டின்
மேற்சென்றதொத்தான்மாயன்கனகனுமேருவொத்தான். (கசகூ)

வாளொடுதோளுங்கையுமகுடமுமலரோன்வைத்த
நீளிருங்ககனமுட்டைநெடுஞ்சுவர்தேய்ப்பநேமி
கோளொடுந்திரிவதென்னக்குலமணிக்கொடும்பூண்மின்னத்
தாளிணையிரண்டும்பற்றிச்சுழற்றினன்றடக்கையொன்றால். (கரு0)

சுழற்றியகாலத்திற்றதூங்குகுண்டலங்கணீங்கிக்
கிழக்கொடுமேற்கினோடுவிழுந்தனகிடந்தவின்று
மழற்றருகதிரோன்றோன்றுமுதையத்தொடத்தமான
நிழற்றருங்காலைமாலைநெடுமணிச்சுடரினீத்தம். (கருக)

போன்றனவினையதன்மைபொருவியதினையவென்று
தான்றனியொருவன்றன்னையுரைசெயுந்தாத்திறனோ
வான்றருவள்ளல்வெள்ளைவள்ளுகிர்வயிரமார்பி
னூன்றறுமுதிரவெள்ளம்பரந்துளதுலகமெங்கும். (கருஉ)

ஆயவன்றன்னைமாயனந்தியினவன்பொற்கோயில்
வாயலின்மணிக்கவான்மேல்வயிரவாளுகிரின்வாயின்
மீயெழுகுருதியோங்கவெயில்விரிவயிரமார்பு
தீயெழப்பிளந்துநீக்கித்தேவர்களிடுக்கண்டீர்த்தான். (கருங)

முக்கணனெண்கணனுமுளரியாயிரக்கணனுந்
திக்கணுந்தேவரோடுமுனிவரும்பிறருந்தேடிப்
புக்காடரிகுருமற்றிரிகின்றார்புகுந்துமொய்த்தா
ரொக்கணற்காண்குமெந்தையுருவமென்றிரங்குகின்றார். (கருச)

நோக்கினார்நோக்கினார்முன்னோக்கலுமுகமுங்கையு
மாக்கையுந்தாளுமாகியெங்கணுந்தானேயாகி
வாக்கினான்மனத்தினான்மற்றறிவினாலளக்கவாரா
மேக்குயர்சீயந்தன்னைக்கண்டனர்வெருவுகின்றார். (கருரு)

பல்லொடுபல்லுக்கெல்லையாயிரக்காதப்பத்தி
சொல்லியவதனங்கோடிகோடிமேல்விளங்கித்தோன்ற
வெல்லையிலுருவற்றாகியிருந்ததையெதிரநோக்கி
யல்லியங்கமலத்தண்ணலவன்புகழ்விரிப்பதானான். (கருசு)

வேறு.

தன்னைப்படைத்ததுவுந்தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவேகாட்டும்பெரும்பெருமை
யுன்னைப்படைத்தாய்நீயென்றாலுயிர்ப்படைப்பா
னென்னைப்படைத்தாயெனுமிதுவுமேதாமோ. (கருஎ)

பல்லாயிரங்கோடியண்டம்பளிக்கடலு
ளில்லாதமொக்குளெனத்தோன்றுமாவின்றுமையே
யெல்லாவுருவமுமாய்நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தால்வரம்பின்மைவாராதோ. (௧௫௮)

பேராயொருபொருட்கேபல்வகையாற்பேர்த்தென்றூர்
தாராநிலைவைதனியைபிறரில்லை
யாரைப்படைக்கின்றதியாரையளிக்கின்ற
தியாரைத்துடைக்கின்றதையாவறியேமால். (௧௫௯)

நின்றானேயென்னிருமித்தாய்நியல்லா
தென்றானேயெப்பொருளும்யாவரையும்யானின்றேன்
பின்னிலேன்முன்னிலெனெந்தைபெருமானே
பொன்றானேதோன்றியதோர்பொற்கலனேபோல்கின்றேன். (௧௬0)

என்றுங்கியம்பியிமையாதவெண்கணரும்
வன்றுண்மழுவோரும்யாரும்வணங்கினரால்
நின்றிருமருங்குநேமிப்பெருமாறு
மொன்றுதசிற்றத்தையுள்ளேயொடுக்கினான். (௧௬௧)

எஞ்சவுலகனைத்துமிப்பொழுதேயென்றென்று
நெஞ்சநடுங்குநெடுந்தேவரைநோக்கி
யஞ்சன்மினென்றுவருள்சாரதுநோக்கினாற்
கஞ்சமலர்ப்பழிக்குங்கையபயங்காட்டினான். (௧௬௨)

பூவிற்றிருவையழகின்புனைகலத்தை
யாவர்க்குஞ்செல்வத்தைவீடென்றுமின்பத்தை
யாவித்துணையையமுதிற்பிறந்தாளைத்
தேவர்க்குந்தம்மோயையேவினார்பாற்செல்ல. (௧௬௩)

செந்தாமரைமலர்மேற்செம்மாந்துவீற்றிருக்கு
நந்தாவிளக்கைநறுந்தாளிளங்கொழுந்தை
மூந்தாவுலகுமுயிருமுறைமுறையே
யீந்தாளைநோக்கினான்றன்னொப்பொன்றில்லாதான். (௧௬௪)

நீதிலாவாகவுலகேன்றதெய்வத்தைக்
காதலானோக்கினான்கண்டமுனிக்கணங்க
ளோதினார்நேர்த்தியுயர்ந்தபரஞ்சுடரு
கோதலாய்கில்லாதவன்பனையேநோக்கினான். (௧௬௫)

உந்தையையுன்முன்கொன்றுடலைப்பிளந்தனையச்
சிந்தைதளராதறம்பிழையாச்செய்கையா
யந்தமில்லாவன்பென்மேல்வைத்தாயளியத்தா
யெந்தையினியிதற்குக்கைமாறியாதென்றான். (௧௬௬)

அயிராவிமைப்பிலேயோராயிரங்கூறிட்ட
செயிரிலொருபொழுதினுந்தையையான்சீறி
யுயிர்தேடுவான்போலுடலினையக்கண்டுஞ்
செயிர்சேராவுள்ளத்தாய்க்கென்னினியான்செய்கேன். (௧௬௭)

கொல்லேனினியுன்குலத்தோரைக்குற்றங்க
ளெல்லையிலாதனசெய்தாரேயென்றாலு
நல்லேனுனக்கென்றேனானுமனான்செய்வ
தெல்லையுளதேலியம்புதியாலென்றுரைத்தான். (௧௬௮)

முன்புபெறப்பெற்றபேறுமுடிவில்லைப்
பின்புபெறும்பேறுமுண்டோபெறுவேனே
லென்புபெறாதவிழிபிறவியெய்திடினு
மன்புபெறுகையரும்பேறெனக்கென்றான். (௧௬௯)

அன்னானைநோக்கியருள்சுரந்தநெஞ்சினனாய்
என்னானைவல்லனென்னமகிழ்ந்தபேரீசன்
முன்னானபூதங்கள்யாவையுமுற்றிடினும்
என்னாளுலவாய்நீயென்போலுளையென்றான். (௧௭௦)

மின்னைத்தொழுவளைத்ததன்னமிளிரொளியாய்
முன்னைத்தொழும்புனக்கேயாமன்றேமூவுலகு
மென்னைத்தொழுதேத்தியெய்தும்பயனெய்தி
யுன்னைத்தொழுதேத்தியுய்கவுலகெல்லாம். (௧௭௧)

ஏனவர்க்குவேண்டினெளிதன்றேவெற்கன்ப
ரானவர்க்கமெல்லாமுனக்கன்பராயினார்
தானவர்க்குவேந்தனீயென்னுந்தரத்தாயோ
வானவர்க்குநீயேயிறைவன்மறைவல்லோய். (௧௭௨)

நல்லறமுமெய்மையுநான்மறையுநல்லருளு
மெல்லையிலாஞானமுமீறிலாவெப்பொருளுந்
தொல்லைசாலெண்குணனுநின்சொற்றொழில்செய்க
நல்லவுருவொளியாய்நாளுவளர்கநீ. (௧௭௩)

என்றுவரமருளியெவ்வுலகுங்கைகூப்ப
முன்றின்முரசமுழங்கமுடிசூட்டி
நின்றவமரரனைவோருநேர்ந்திவனுக்
கொன்றுபெருமையுரிமைபுரிகென்றான். (௧௭௪)

தேமனுரிமைபுரியத்திசைமுகத்தோ
னேமமியற்றவுடையான்முடிசூட்டக்
கோமன்னவனாகிமூவுலகுங்கைக்கொண்டான்
நாமவருமறைநூலோதிகவியுயர்ந்தான். (௧௭௫)

ஈதாகுமுன்னிகழ்ந்ததெம்பெருமானென்றுணைய
யாதாருமாகவினையாநிகழ்த்தியேற்
றீதாய்வினைதனைவிதின்னுமெனச்செப்பினான்
மேதாவிகட்கெல்லாமேலாயமேன்மையான். (௧௭௬)

இரணியன்வதைப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௦௬.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௪-வது—விபீடணனடைக்கலப்படலம்.

கேட்டனனிருந்துமக்கேள்விதேர்விலாக்
கோட்டியசிந்தையானுறுதிகொண்டிலன்
மூட்டியதீயெனமுடுகிப்பொங்கினான்
ஊட்டரக்கூட்டியவனையவொண்கணான், (௧)

இரணியனென்பவனெம்மனோரினு
முரணியனவன்றனைமுருக்கிமுற்றினா
னரணியனென்றவற்கன்புபூண்டனை
மரணமென்றொருபொருண்மாற்றும்வன்மையோ. (௨)

ஆயவன்வளர்த்ததன்றுதையாகத்தை
மாயவன்பிளந்திடமகிழ்ந்தமைந்தனு
மேயுநம்பகைகளுக்கினியநண்புசெய்
நீயுமேமிகர்பிறிதற்குநேர்வரோ. (௩)

பாழிசாலிரணியன்புதல்வன்பண்பெனச்
சூழ்வினைமுற்றியானவர்க்குத்தோற்றபி
னேழைநீயென்பெருஞ்செல்வமெய்திப்பின்
வாழவோகருத்தறுவாரவற்றுகுமோ. (௪)

முன்புறவனையர்பானன்புமுற்றினை
வன்பகைமனிதரின்வைத்தவன்பினை
யென்புறவுருகுதியமுதியேத்துதி
புன்புகலவர்பிறிதலாக்கவேண்டுமோ. (௫)

நண்ணினமனிதரைநண்புபூண்டனை
யெண்ணினைசெய்வினையென்னைவெல்லுமா
றுன்னினைவாசின்மேலாசையூன்றினை
நின்னிதன்செயல்பிறர்செறுநர்வேண்டுமோ. (௬)

வேறு.

அன்றவானரம்வந்துநஞ்சோலையையழிக்கக்
கொன்றுதின்றிடுமின்னெனத்தூதரைக்கோறல்
வென்றியன்றெனவிலக்கினைமேல்வினைவெண்ணித்
தன்றுதாரவற்றனையெனக்கோடலேதுணிந்தாய். (௭)

வேறு. அஞ்சினையாதலினமர்க்குமாளலை
தஞ்சனமனிதர்பால்வைத்தசார்பினை
வஞ்சனைமனத்தினைபிறப்புமாற்றினை
நஞ்சினையுடன்கொடுவாழ்தனன்றரோ. (௮)

பழியினையுணர்ந்தியான்படுக்கிலேனுனை
யொழிசிலபுகலுதலொல்லைநீங்குதி
விழியெதிர்நிற்றியேல்விளிதியென்றன
னழிவினையெய்தவானறிவுநீங்கினான். (௯)

என்றலுமிளவலுமெழுந்துவானிடைச்
சென்றனன்றுணைவருந்தானுஞ்சென்றியா
நின்றனன்பின்னருநீதிசான்றன
வொன்றினபலபலவுறுதியோதினான். (௧௦)

வாழியாய்கேட்டியால்வாழ்வுகைம்மிக
ஊழிகாண்குறுவினதுயரையோர்கிலாய்
கீழ்மையோர்சொற்கொடுகெடுதனேர்தியோ
வாழ்மைதானறம்பிழைத்தவர்க்குமாகுமோ. (௧௧)

புத்திரர்குருக்கணின்பொருவில்கேண்மையர்
மித்திரரடைந்துளோர்மெலியர்வண்மையோர்
இத்துணைபேரையுமிராமன்வெஞ்சரஞ்
சித்திரவதைசெயக்கண்டுதீர்தியோ. (௧௨)

எத்துணைவகையினுமுறுதியெய்தின
வொத்தனவுணர்த்தினேனுணரகிற்றிலை
யத்தவென்பிழைபொறுத்தருளுவாயென
வுத்தமனந்நகரொழியப்போயினான். (௧௩)

அனலனுமனிலனுமான்சம்பாதியும்
வினையவர்நால்வரும்விரைவின்வந்தனர்
கனைகழற்காலினர்கருமச்சூட்சிய
ரினைவரும்வீடணனோடுமேயினார். (௧௪)

அரக்கனுமாங்கணோரமைச்சர்நால்வரும்
குரக்கினத்தவரொடுமனிதர்கொள்ளைநீர்க்
கரைக்கண்வந்திறுத்தனரொன்றகாலையிற்
பொருக்கெனவெழுதுமென்றெண்ணிப்போயினார். (௧௫)

அளக்கரைக்கடந்துமேலதிந்தநம்பியும்
விளக்கொளிபரத்தலிற்பாலின்வெண்கடல்
வளத்தடந்தாமரைமலர்ந்ததாமெனக்
களப்பெருந்தானையைக்கண்ணினோக்கினான். (௧௬)

ஊறுடையுடம்பினவுயிர்கள்யாவையு
மேனையவொருதலையிறத்தியென்னினால்
வானரம்பெரிதெனமறவில்சிந்தையான்
தானிறக்கடுபடைத்துணைவர்ச்சொல்லினான். (௧௭)

அறந்தலைநின்றவர்க்கன்புபூண்டனன்
மறந்துகன்புகழலால்வாழ்வுவேண்டிலேன்
பிறந்தவென்றுறுதிநீபிடிக்கலாயெனத்
துறந்தனவினிச்செயல்சொல்லுவீரென்றான். (௧௮)

மாட்சியினமைந்ததுவேறுமற்றிலைத்
தாட்சியிற்பொருடருந்தருமமூர்த்தியைக்
காட்சியேயினிக்கடனென்றுகல்விசால்
சூட்சியின்கிழவருந்துணிந்துசொல்லினார். (௧௯)

நல்லதுசொல்லினீர்நாமும்வேறினி
யல்லதுசெய்துமேலரக்காருது
மெல்லியில்பெருங்குணத்திராமன்றாளிணை
புல்லுதும்புல்லியிப்பிறவிபோக்குவேம். (௨௦)

முன்புறக்கண்டிலன்கேள்விமுன்பில
னன்புறக்காரணமறியகிற்றிலே
னென்புறக்குளிருநெஞ்சுருகுமேலவன்
புன்புலப்பிறவியின்பகைஞன்போலுமால். (௨௧)

ஆதியம்பரமனுக்கன்புநல்லற
நீதியின்வழாமையுமுயிர்க்குநேயமும்
வேதியாருளுநான்விரும்பிப்பெற்றது
போதுறுகிழவனைத்தவமுன்பூண்டநாள். (௨௨)

ஆயதுபயப்பதோரமைதியாயது
துயதுநினைந்ததுதொல்லையாவர்க்கு
நாயகன்மலர்க்கழனணுகிநம்மனத்
தேயதுமுடித்துமென்றினிதுமேயினார். (௨௩)

இருளுறவெய்துவதியல்பன்றுமெனப்
பொருளுறவுணர்ந்தவப்புலன்கொள்புந்தியார்
மருளுறுசூழலின்மறைந்துவைகின
ருருளுறுதேரவனுதயமெய்தினான். (௨௪)

அப்புறத்திராமனவ்வலங்குவேலையைக்
குப்புறக்கருதவான்குவலைநோக்கிதன்
றப்புறச்சிவந்தவாய்நினைந்துசோர்குவா
லிப்புறத்திருங்கரைமருங்கினெய்தினான். (௨௫)

கானலுங்கழிகளுமனலுங்கண்டலும்
பானலுங்குவளையும்பரந்தபுன்னையு
மேனிறையன்னமும்பெடையும்வேட்கைகூர்
பூநிறச்சோலையும்புரிந்துநோக்கினான். (௨௬)

தரளமும்பவளமுந்தரங்கமீட்டிய
திரண்மணிக்குப்பையுங்கனகதீரமு
மருளுமென்பொதும்பருமணலின்குன்றமும்
புரணைநீத்திரைகளும்புரிந்துநோக்கினான். (௨௭)

மின்னாருமணிவிரற்றேயவீழ்கணீர்
துன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்விலோ
டின்னலைகுளிச்சியரிழைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினான். (௨௮)

கூதிர்நுண்குறும்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேற்
பாதியஞ்சிறையிடைப்பெடையைப்பாடணைத்
தோதிமந்துயில்வகண்டுயிர்ப்புவீங்கினான். (௨௯)

அருந்துதற்கினியமீன்கொணாவன்பினாற்
பெருந்தடங்கொம்பிடைப்பிரிந்தசேவலை
வருந்திசைநோக்கியோர்மழலைவெண்குரு
கிருந்ததுகண்டுநின்றிரக்கமெய்தினான்.

ஒருதனிப்பேடைமேலுள்ளமோடலாற்
பெருவலிவயக்குருகிரண்டும்போர்கில
திருகுவெஞ்சினத்தனதறுகட்டியன
பொருவனகண்டுதன்புருவங்கோட்டினான். (௩௧)

உண்ணிறையூடலிற்சீற்றவோதிமங்
கண்ணுறுகலவியால்வெல்லக்கண்டவன்
தண்ணிறப்பவளவாயிதழைத்தற்பொதி
வெண்ணிறமுத்தினைதூக்கிவிம்மினான். (௩௨)

இத்திறமெய்தியகாலையெய்துறும்
வித்தகர்சொற்களான்மெலிவுநீங்கினு
னுத்தமனிராமனுமுணர்வுதோன்றிய
பித்தரினொருவகைபெயர்ந்துபோயினான். (௩௩)

உறைவிடமெய்தினனொருங்குகேள்வியின்
றுறையறிதுணைவரோடிருந்தசூழலின்
முறைபடுதானையின்மருங்குமுற்றினன்
அறைகழல்வீடணனயிர்ப்பில்சிந்தையான். (௩௪)

மற்றொருபொருளுளதென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக்கூயதோருரை

உற்றதுசெவித்தலத்துறையவொல்லெலா
நற்றவனனைவருமுகநயந்துநோக்குறு. (௩௫)

எற்றையேயிராகவசரணமென்றசொற்
றற்றவனிவனவரோசாற்றுதியின்னென
வற்றனருற்றுழிவயக்குசேனையின்
முற்றினர்க்குற்றதைமொழிகுவாமரோ. (௩௬)

முற்றியகுருசிலமுமற்குதானையி
னுற்றனர்விருதர்வந்தென்னவொன்றிறு
வெற்றுயிர்பற்றுதிரொதிதிரொன்றிடை
சுற்றினருருமெனத்தொழிக்குஞ்சொல்லினர். (௩௭)

தந்தததருமமேகொணர்ந்ததாவிவன்
வெந்தொழிற்றிவினையயர்த்தமென்மையான்
வந்தனனிலங்கையர்மன்னனுறுஞ்
நிந்தனைமுடிந்தனவென்றுஞ்செய்கையார். (௩௮)

இருபதுகரந்தலையீரைந்தென்றுமத்
திருவிலிக்கன்னைவிளைந்தவோவென்பார்
பொருதொழிலெம்மொடும்பொருதிபோவென்பா
ரொருவரினொருவர்சென்றுறுக்கியூன்றுவார். (௩௯)

பற்றினர்சிறையிடைவைத்துப்பாருடைக்
கொற்றவர்க்குணர்த்துதுமென்றுகூறுவா
ரெற்றுவதன்றியேயிவனைக்கண்டிலை
நிற்றலென்பிறிதெனநெருக்கிநேர்குவார். (௪௦)

இமைப்பதன்முன்விசும்பெழுந்துபோயபி
னமைப்பதென்பிறிதிவராக்கலாலரோ
சமைப்பதுசொலவலாக்குகதியாவதோ
குமைப்பதுநலமெனமுடுகிக்கூறினர். (௪௧)

இயைந்தனவியைந்தனவினையகூறலு
மயிந்தனுந்துமிந்தனுமென்னுமாண்பினு
ரயிர்த்திராவிறைத்தவனுனையேயலால்
நயந்தெரிகாவலரிருவர்நண்ணினார். (௪௨)

விலக்கினர்படைஞரைவேதநீதியா
விலக்கணநோக்கியவியல்பரெய்தினார்
சலக்குறியிலனெனவருகுசார்ந்தனர்
புலக்குறியறநெறிபொருந்தநோக்கினார். (௪௩)

யாரிவனெய்தியகருமம்யாவது
போரதுபுரிதிரோபுறத்தொண்ணமோ.
சார்புறவின்றநீர்சமைந்தவாறெலாஞ்
சோர்விலீர்மெய்ம்முறைசொல்லுவீரென்றான். (௪௪)

பகலவன்வழிமுதற்பாரிநாயகன்
புலவன்கழலடைந்துய்யப்போந்தனன்
றகவுறுசிந்தையன்றருமநீதியன்
மகன்மகன்மைந்தனுன்முதற்குவாய்மையால். (௪௪)

அறவிலேவழாமையுமாதிமூர்த்திபால்
நிறைவருநேயமுநின்றவாய்மையு
மறையவர்க்கன்புமென்றினையமாமல
ரிறையவன்றரநெடுந்தவத்தினெய்தினான். (௪௫)

சுடுதியைத்துகிலிடைப்பொதிந்தநன்மதி
இடுதியேசிறையிடையிறைவன்றேவியை
விடுதியேலுய்குதிவிடாதுவேட்டியேற்
படுதியென்றுறுதிகள்பலவும்பன்னினான். (௪௬)

மறந்தருசிந்தையன்மதியினீங்கினான்
பிறந்தனைபின்பதிற்பிழைத்திபோகுதி
யிறந்தனைநிற்றியேலென்னவின்னவன்
றுறந்தனனெனவிரித்தனலன்சொல்லினான். (௪௭)

மயிந்தனுமவ்வுரைமனத்துவைத்துநீ
இயைந்ததுநாயகற்கியம்புவேனெனாப்
பெயர்ந்தனன்றம்பியும்பெயர்வில்சேனையு
மயர்ந்திடல்காவலென்றமைவதாக்கியே. (௪௮)

தருமமுஞானமுந்தவமும்வேலியாய்
மருவரும்பெருமையும்பொறையும்வாயிலாய்க்
கருணையங்கோயிலுளிருந்தகண்ணனை
யருணெறியெய்திச்சென்றடிவணங்கினான். (௪௯)

உண்டுரையுணர்த்துவதூழியாயெனப்
புண்டரீகத்தடம்புரைகட்புங்கவன்
மண்டலச்சடைமுடிதுளக்கிவாய்மையாய்க்
கண்டதுங்கேட்டதுங்கழறுவாயென்றான். (௫௦)

விளைவினையறிந்திலம்வீடணன்பெயர்
நளிமலையாக்கையனல்வரோடுடன்
களவியல்வஞ்சனையிலங்கைகாவலற்
கிளவனஞ்சேனையினடுவணெய்தினான். (௫௧)

கொல்லுமின்பற்றுமினென்னுங்கொள்கையாற்
பல்பெருந்தானைசென்றடர்க்கப்பார்த்தியா
நில்லுமினென்றுநீயாவனுங்கிலே
சொல்லுமினென்னவோர்துணைவன்சொல்லினான். (௫௨)

முரண்புகுநிலின்முடித்தமுன்னவன்
காண்புறுமுலேழுக்காண்பதோ
ராண்பிறிதில்லெனவருளின்வேலையைச்
சாண்புகுந்தனனெனமுன்னஞ்சாற்றினான். (௫௩)

ஆயவன்றருமமுமாதிமூர்த்திபால்
மேயதோர்சிந்தையுமெய்யும்வேதியர்
நாயகன்றாநெடுந்தவத்தினண்ணினன்
ஆயவனென்பதோர்பொருளுஞ்சொல்லினான். (௫௪)

கற்புடைத்தேவியைவிடாதகாத்தியே
லெற்புடைக்குன்றமாமிலங்கையேழின்
பொற்புடைமுடித்தலைபுரணுமென்றொரு
நற்பொருளுணர்த்தினனென்றுகாட்டினான். (௫௫)

ஏந்தொழிலிராவணனினையசொன்னதீ
சாந்தொழிற்குரியையென்சார்புநிற்றியே
லாந்தினைப்பொழுதினிலகதியாமெனப்
போந்தனனென்றனன்புகுந்ததீதென்றான். (௫௬)

அப்பொழுதிராமனுமருகினண்பனா
மிப்பொருள்கேட்டனீரியம்புவீரிவன்
கைப்புகற்பாலனோகழியற்பாலனோ
வொப்புறநோக்கிநும்முணர்வினாலென்றான். (௫௭)

தடமலர்க்கண்ணனைத்தடக்கைகூப்பிநின்
றிடனிதுகாலமீதென்னவெண்ணுவான்
கடனறிகாவலன்கழறினானரோ
சுடர்நெடுமணிமுடிச்சுக்கிரீவனே. (௫௮)

நனிமுதல்வேதங்களாலுநாமநூல்
மனுமுதல்யாவையும்வரம்புகண்டநீ
யினையனகேட்கவோவெம்மனோர்களை
வினவியகாரணம்விதிக்குமேலுளாய். (௫௯)

ஆயினும்விளம்புவனருளினாழியா
யேயினதாதலினறிவிற்கேற்றன
தூயவென்றெண்ணினுந்துணிவென்றெண்ணினு
மேயதுகேட்டியால்விளைவுநோக்குவாய். (௬0)

வெம்முனைவினைதலினன்றவேறொரு
சம்மையாருயிர்கொளத்துணிதலாலன்று
தம்முனைத்துறந்ததுதருமநீதியோ
செம்மையிலரக்கரில்யாவர்சீரியோர். (௬௧)

தகையுறுதம்முனைத்தாயைத்தந்தையை
மிகையுறுகுரவனையுலகின்வேந்தனைப்
பகையுறவருதலுந்துறந்தபண்பிது
நகையுறலன்றியுநயக்கற்பாலதோ. (௬௨)

வேண்டுழியினையனவிளம்பிவெம்முனை
பூண்டுழியஞ்சிவெஞ்செருவிற்புக்குடன்
மாண்டுழியன்றிநம்மருங்குவந்தவ
னுண்டொழிலுலகினுக்காணியாமன்றே. (௬௩)

மிகைப்புலந்தருமமேவேட்டபோதவர்
தகைப்புலன்றுறந்துபோய்ச்சார்தலன்றியே
நகைப்புலம்பொதுவுறநடந்தநாயகன்
பகைப்புலஞ்சார்தலோபழியினீங்குமோ. (௬௪)

வார்க்குறுவனைகழற்றம்முன்வாழ்ந்தநாட்
சேர்க்குறவாயிடைச்செறுநர்சீறிய
போர்க்குறவன்றியேபுகுந்தபோதிவ
னூர்க்குறவாகுவனருளினூழியாய். (௬௫)

ஒட்டியகனகமாறுருவமாகிய
சிட்டனுமருமகனிழைத்ததீவினை
கிட்டியபோதினிற்றவமுங்கேள்வியும்
விட்டதுகண்டுநாம்விடாதுவேட்டுமோ. (௬௬)

கூற்றுவன்றன்னொடிவ்வுலகங்கூடிவந்
தேற்றனவென்னினும்வெல்லவேற்றுள
மாற்றவன்றம்பிநம்மருங்குவந்திவண்
டோற்றுமோவன்னவன்றுணைவனாகுமோ. (௬௭)

அரக்கனையாசறக்கொன்றுநல்லறம்
புரக்கவந்தனமெனும்பெருமைபூண்டநா
மிரக்கமிலவனையேதுணைக்கொண்டேறலாற்
சுருக்கமுண்டவர்வலிக்கென்றுதோன்றுமால். (௬௮)

விண்டுழியொருநிலைநிற்பர்மெய்ம்முகங்
கண்டுழியொருநிலைநிற்பர்கைப்பொருள்
கொண்டுழியொருநிலைநிற்பர்கூழுட
னுண்டுழியொருநிலைநிற்பருற்றவர். (௬௯)

வஞ்சனையயற்றிடவந்தவாறலாற்
றஞ்செனநம்வயிற்சார்ந்துளானல
னஞ்செனக்கொடியனேநயந்துகோடியா
லஞ்சனவண்ணவென்றறியக்கூறினான். (௭௦)

அன்னவன்பின்றுறவலகில்கேள்வியாற்
றன்னிகர்பிறிதிலாத்தகையசாம்பனை
யென்னையுன்கருத்தெனவிறைவினாயினான்
சொன்முறைநெறிதெரிந்தவனுஞ்சொல்லுவான். (எக)

அறிஞரோயாயினுமரியதெவ்வரைச்
செறிஞரோயாமெனிற்கெடுதறிண்ணமாம்
நெறிதனைநோக்கினுநிருதர்நிற்பதோர்
குறிநெறியுளதெனவுலகங்கொள்ளுமோ. (எஉ)

வெற்றியுந்தருகுவர்வினையம்வேண்டுவர்
முற்றுவருறுகுறைமுடிப்பர்முன்பினு
மற்றுறுநெடும்பகையுடையரல்லரேற்
றெற்றினத்தவரொடுஞ்செறிதல்சீரிதோ. (எந)

வேதமும்வேள்வியுமயக்கிவேதியர்க்
கேதமுமிமையவர்க்கிடருமீட்டிய
பாதகர்நம்வயிற்படர்வராமெனிற்
றீதிலராயவர்க்கன்புசெய்வரோ. (எச)

கைப்புகுந்தருசரணருளிக்காத்துமேற்
பொய்க்கொடுவஞ்சனைபுணர்த்தபோதினு
மெய்க்கொளவிளியினும்விடுதுமென்னினு
நீக்குறுநெடும்பழியறமுஞ்சேருமால், (எரு)

மேனவில்வினைவருவிளம்பவேண்டுமோ
கானகத்திறைவியோடுறையுங்காலையின்
மானெனவந்தவன்வரவைமானுமிவ்
வேனையன்வரவுமென்றினையகூறினான். (எசு)

பால்வருபனுவலின்றுணிவுபற்றிய
சால்பெருங்கேள்வியின்றுனைநாயக
விலனைநின்கருத்தியம்புநீயென
மேலவன்விளம்பலும்விளம்பமேயினான். (எஎ)

பகைவரைத்துணையெனப்பற்றற்பாலவாம்
வகையுளவன்னவைவரம்பில்கேள்வியாய்
தொகையுறக்கூறுவன்குரங்கின்சொல்லென
நகையுறத்தக்கனநயந்துகோடியால். (எஅ)

தங்குலக்கிளைஞரைத்தருக்கும்போரிடைப்
பொங்குநர்க்கொன்றவர்க்கெளியர்போந்தவர்
மங்கையர்திறத்தினில்வயிர்த்தசிந்தையர்
செங்கலில்பெரும்பொருளிழந்துசீறினோர். (எகூ)

பேரபிமானங்களுற்றபெற்றியோர்
போரிடைப்புறங்கொடுத்தஞ்சிப்போந்தவர்
நேர்வருதாயத்தாயிரப்பினேர்பிறர்
சீரியர்களைமுடியச்செற்றுளோர். (அ0)

அடுத்தநாட்டரசியல்புடையவாணையாற்
படுத்தவர்பட்டவர்பகைஞரோடொரு
மடக்கொடிபயந்தவர்மைந்தராயினு
முடற்கொளத்தகையர்நம்முழைவந்தோன்றினுல், (அக)

தாமவர்க்கெளிவருந்தகைமையாலர்
நாமுறவல்லவர்நம்மைநண்ணினர்
தோமுறநீங்குதறுணிவராதலின்
யாமிவன்வரவிவற்றென்னென்றுன்றுவாம். (அஉ)

காலமேநோக்கினுங்கற்றநூல்களின்
மூலமேநோக்கினுமுனிந்துபோந்தவன்
சீலமேநோக்கியாந்தெளிந்துதேறுதற்
கேலுமேயென்றெடுத்தினையகூறினன். (அங)

மறறுளமந்திரிக்கிழவர்வாய்மையாற்
குற்றமில்கேள்வியரன்புகூர்ந்தவர்
பற்றுதல்பழுதெனப்பழுதுறுவொரு
பெற்றியினுணர்வினர்முடியப்பேசினர் (அச)

உறுபொருள்யாவருமொன்றக்கூறினர்
செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதியென்றுநேரிலா
வறிவனைநோக்கினனறிவின்மேலுளான். (அரு)

இணங்கினரறிவிலரொனினுமெண்ணுங்காற்
கணங்கொள்கைநும்மனோர்கடன்மைகாணென
வணங்கியசென்னியன்மறைத்தவாயின
னுணங்கியகேள்வியானுவல்வதாயினன். (அசு)

எத்தனையுளர்தெரிந்தெண்ணவேய்ந்தவர்
அத்தனைவருமொருபொருளையன்றென
வுத்தமரதுதெரிந்துணரவோதினர்
வித்தகவினிச்சிலவிளம்பவேண்டுமோ. (அஎ)

தூயவர்துணிதிறனன்றுதூயதே
யாயினுமொருபொருளுரைப்பவூழியாய்
தீயனென்றிவனையானயிர்த்தல்செய்கிலேன்
மேயினசிலபொருள்விளம்பவேண்டுமால். (அஅ)

கொல்லுமிவனையென்றரக்கன்கூறிய
வெல்லையிற்றாதையையெறிதலென்பது
புல்லிதுபழியொடும்புணரும்போர்த்தொழில்
வெல்லலம்பின்னையென்றிடைவிலக்கினான். (௯)

மாதரைக்கோறலுமறத்துநீங்கிய
வாதரைக்கோறலுமழிவுசெய்யினுந்
தூதரைக்கோறலுந்தூய்தன்றாமென
வேதுவிற்சிறந்தனவெடுத்துக்காட்டினான். (௧௦)

எல்லியினுளிவனிரணமாளிகை
செல்லியபோதினுந்திரிந்தபோதினு
நல்லனநிமித்தங்கணவிநயந்துள
வல்லதுமுண்டெனாநிந்ததாழியாய். (௧௧)

சிந்தனைநறவமுநெறியிலான்களும்
தந்தனகண்டிலேன்றருமதானமும்
வந்தனைநீதியும்பிறவுமாண்பமைந்
தந்தனரில்லெனப்பொலிந்ததாமரோ. (௧௨)

அன்னவன்றன்மகளலரின்மேலயன்
சொன்னதோர்சாபமுண்டென்னைத்துன்மதி
நன்னுதநீண்டுமேனானுகுங்கூற்றென
வென்னுடையிறைவிக்குமினிதுகூறினாள். (௧௩)

வண்டொளாலங்கலாய்வஞ்சர்வான்முகங்
கண்டதோர்பொழுதினிற்றெரியுங்கைதவ
முண்டெனிலஃதவர்க்கொளிக்கவொண்ணுமோ
விண்டவர்பலபகன்மருவிவீழ்வரோ. (௧௪)

உள்ளத்தினுள்ளதையுரையின்முந்துற
மெள்ளத்தம்முகங்களேவிளம்புமாதலாற்
கள்ளத்தின்வினையெலாங்கருத்திலாவிருட்
பள்ளத்தினன்றியேவெளியிற்பல்குமோ. (௧௫)

வாலிவின்பெறவரசிளையவன்பெறக்
கோலியவரிசிலைவலியுங்கொற்றமும்
சீலமுமுணர்ந்துநிற்சேர்ந்துதெள்ளிதின்
மேலரசெய்துவான்விரும்பிமேயினான், (௧௬)

செறிகழலரக்கர்தமரசுசீரியோர்
நெறியலதாதலினிலக்கலாமையு
மெறிகடலுலகெலாமிளவற்கீந்ததோர்
பிறிவருங்கருணையுமெய்யும்பேணினான். (௧௭)

காலமன்றிவன்வருகாலமென்றது
வாலிதன்றுறுபகைவலியதெய்திய
தேனுமிங்கிவர்க்கினியிறுதியென்றலான்
மூலமென்றுணைவரைப்பிரிவுமுற்றினான். (கூஅ)

தீத்தொழிலரக்கர்தமாயச்செய்வினை
வாய்த்துளரன்னவையுணருமாண்பினாற்
காய்த்தவரவர்களைக்கையுற்றார்நமக்
கேற்றதோருறுதியுமெளிதினெய்துமால். (கூகூ)

தெளிவுறலரிதிவர்மனத்தின்றீமையும்
விளிவகைசெய்குவவொன்னவேண்டுத
லொளியுறவுயர்ந்தவரொப்பவெண்ணிலா
வெளியவர்திறத்திவையெண்ணலேயுமோ. (க00)

வேறு.

பெற்றுடையபெருவரமும்பிறந்துடையவஞ்சனையும்பிறவுமுன்னை
விற்றொடையின்விடுகணையால்வெந்தொழியுமெனக்கருதிமேற்சொல்லோடு
முற்றுடையமனவலியுமுக்கமிகுபெருந்தொழிலுமுணர்ந்துநோக்கின்
மற்றுடையார்தாமுளரோவாளரக்கனன்றியேதவத்தின்வாய்த்தார். (க0க)

தேவர்க்குந்தானவர்க்குந்திசைமுகனேமுதலாயதேவதேவர்
மூவர்க்குமுடிப்பரியகாரியத்தைமுற்றுவிப்பான்மூண்டுநின்றான்
ஆவத்தின்வந்தபயமென்றானையயிர்த்தகலவிடுதுமென்றாற்
கூவத்தின்சிறுபுனலைக்கடலயிர்த்ததொவ்வாதோகொற்றவேந்தே. (க0உ)

பகைப்புலத்தோர்துணையல்லரொன்றிவரைப்பற்றேமேலறிஞர்பார்க்கி
னகைப்புலத்ததாமன்றேநற்றாயமுளதாயபற்றான்மிக்க
தகைப்புலத்தோர்தந்தையர்கடம்பியர்கடமையரிவர்தாமேயன்றே
மிகைப்புலத்துவிளைகின்றதொருபொருளைக்காதலிக்கின்விளிஞராவார்.

ஆதலாலிவன்வரவுநல்வரவேயெனவுணர்ந்தேனடியேனுன்றன்
வேதநூலெனத்தகையதிருவுளத்தின்குறிப்பறியேனென்றுவிட்டான்
காதனான்முகனானுங்கணிப்பரியகலையனைத்துங்கதிரோன்முன்சென்
றோதினானேதநீர்கடந்துபகைகடந்துலகையுய்யக்கொண்டான். (க0ச)

வேறு.

மாருதியமிர்தவார்த்தைசெவிமடுத்தினிதுமாந்திப்
பேரறிவாளாநன்றுநன்றெனப்பிறரைநோக்கிச்
சீரிதுமேலிவ்வார்த்தைதெளிவுறத்தெரிமினென்னா
வாரியனுரைப்பதானானனைவருமதனைக்கேட்டார். (க0ரு)

கருத்துறநோக்கிப்போந்தகாலமுநன்றுகாத
லருத்தியுமரசின்மேற்றேயறிவினுக்கவதியில்லை
பெருத்துயரறத்தினாலும்பிழைப்பிலனென்னும்பெற்றி
திருத்தியதாகுமன்றேநம்வயிற்சேர்ந்தசெய்கை. (க0சு)

மற்றினியுரைப்பதில்லைமாருதிவடித்துச்சொன்ன
பெற்றியேபெற்றியன்னதன்றெனிற்பிறிதொன்றானும்
வெற்றியேபெறுகதோற்கவீகவியாறுவாழ்க
பற்றுதலன்றியுண்டோவடைக்கலம்பகர்கின்றானை. (௧௦௭)

இன்றுவந்தானென்றுண்டோவெந்தையையாயைமுன்னங்
கொன்றவன்றானென்றுண்டோவடைக்கலங்கூறுகின்றான்
றன்றிவர்தன்புசெய்யுந்துணைவனுமவனேபின்னைப்
பின்றுமென்றாலுநம்பாற்புகழன்றிப்பிறிதுண்டாமோ. (௧௦௮)

பிறந்தநாட்டொடங்கியாருந்துலைபுக்கபெரியோன்பெற்றி
மறந்தனாருண்டோவென்னைச்சரணெனவாழ்கின்றானைத்
துறந்தநாட்கின்றுவந்துதன்னிறன்றுட்சியாலே
இறந்தநாளன்றோவென்றுமிருந்தநாளாவதென்றான். (௧௦௯)

இடைந்தவர்க்கபயம்யாமென்றிரந்தவர்க்கெதிர்நீர்வேலை
கடைந்தவர்க்காகியாலமுண்டவற்கண்டிலீரோ
வுடைந்தவர்க்குதவானாகிலுள்ளதொன்றீயானாகி
லடைந்தவர்க்கருளானாகிலறமென்னாமாண்மையென்னாம். (௧௧௦)

மன்னுயிரெல்லாந்தானேவருவித்துவளர்க்குமாயன்
றன்னனவுலகமெல்லாந்தருமமுமெவையுந்தானே
யென்னினுமடைந்தார்தம்மையேமுறவினிறோம்பிப்
பின்னும்விடலிக்குமென்றாலென்னினிப்பிறிதுபேசில். (௧௧௧)

நஞ்சினைமிடற்றுவைத்தநகைமழுவாளனானுந்
தஞ்செனமுன்னந்தானேதாதைபாற்கொடுத்துச்சாத
லஞ்சினனபயமென்றவந்தணற்காகியந்நாள்
வெஞ்சினக்கூற்றைவென்றமேன்மையின்மேன்மையுண்டோ. (௧௧௨)

சரணெனக்கியார்கொலென்றுசானகியழுதுசாம்ப
வாரணக்காவன்வஞ்சியஞ்சலென்றருளினெய்தி
முராலுடைக்கொடியோன்கொல்லமொய்யமர்முடித்துத்தெய்வ
மரணமென்றுணைதபெற்றதென்வயின்வழக்கன்றாமோ. (௧௧௩)

உய்யலிற்கபயமென்றானுயிரைத்தன்னுயிரினோம்பாக்
கையனுமொருவன்செய்தவுதவியிற்கருத்திலோனு
மையறநெறியினோக்கிமாமறைநெறியினின்ற
மெய்யினைப்பொய்யென்றானுமீள்கிலாநரகில்வீழ்வார். (௧௧௪)

சீதையைக்குறித்ததேயோதேவனாத்திமைசெய்த
பேதையைக்கொல்வனென்றுபேணியவிரதப்பெற்றி
வேதியரபயமென்றார்க்கன்றுநான்விரித்துச்சொன்ன
காதையைக்குறித்துநின்றவவ்வுரைகடக்கலாமோ. (௧௧௫)

பேடையைப்பிடித்தத்தன்னைப்பிடிக்கவந்தடைந்தபேதை
வேடனுக்குதவிசெய்துவிறகிடைவெந்திமூட்டிப்
பாடுறுபசியைநோக்கித்தன்னுடல்கொடுத்தபைம்புள்
வீடுபெற்றுயர்ந்தவார்த்தைவேதத்தின்விழுமிதன்றோ. (௧௧௬)

போதகமொன்றுகன்றியிடங்கர்மாப்பொருதபோரி
லாதியம்பரனேநானுன்னபயமென்றழைத்தவந்நாள்
வேதமுமுடிவுகாணுமெய்ப்பொருள்வெளிவந்தெய்தி
மாதுயர்துடைத்தவார்த்தைமறப்பரோமறப்பிலாதார். (௧௧௭)

காரியமாகவன்றேயாகுககருணையோர்க்குச்
சீரியதன்மைநோக்கினிதனின்மேற்சிறந்ததுண்டோ
பூரியரோயுந்தம்மைப்புகல்புகுந்தோர்க்குப்பொன்றூ
வாருயிர்கொடுத்துக்காத்தற்கெண்ணிலாவரசர்க்கென்றும். (௧௧௮)

ஆதலாலபயமென்றபொழுதிலேயபயதான
மீதலேகடன்மைநீருமியம்புவதென்மேல்வைத்த
காதலாலினிவேறெண்ணக்கடவதோகதிரோன்மைந்த
கோதிலாதவனைநீயேயென்வயிற்கொணர்தியென்றான். (௧௧௯)

ஐயுறவெல்லாநீங்குமளவையுளரியின்மைந்தன்
றெய்வநாயகனை துள்ளந்தேறியவளவேதேறிக்
கைபுகற்கமைவதானுன்கடிதினிற்கொணர்வனென்ன
மெய்யினுக்குறையுளானவொருவன்பால்விரைவிற்சென்றான். (௧௨0)

வருகின்றகவியின்வேந்தைமயிர்தனுக்கிளவல்காட்டித்
தருகென்றானதனுலுன்னையெதிர்கொளவருக்கன்றந்த
விருகுன்றமனையதோளானெய்தினனென்றலோடுந்
திரிகின்றவுள்ளத்தானுமனமகிழ்ந்தவன்முன்சென்றான். (௧௨௧)

தொல்லருங்காலமெல்லாம்பழகினுந்தூயரல்லார்
புல்லலருள்ளந்தூயர்பொருந்தவொதிர்ந்தபோதே
யொல்லைவந்துணர்வுமொன்றவிருவருமொருநாளுற்ற
வெல்லியும்பகலும்போலத்தழுவினரொழுவிற்றுளார். (௧௨௨)

தழுவினர்நின்றகாலைத்தாமரைக்கண்ணன்றங்கண்
முழுமுதற்குலத்திற்கேற்றமுறைமையாலுவகைமுற்ற
வழுவலிலபயமுன்பால்வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியால்விரைவினென்னுக்கதிரவன்சிறுவன்சொன்னான். (௧௨௩)

சிங்கவேறனையான்சொன்னவாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்தினன்றன்கண்மழைத்தாரைகான்ற
வங்கமுமனமதென்னக்குளிர்ந்திடவகத்தைமிக்குப்
பொங்கியவுவகையென்னப்பொடித்தனவுரோமப்புள்ளி. (௧௨௪)

அறவிழுறவுபூண்டவயவர்தலைவனென்னை
புறவெனக்கருதிமீளாவடைக்கலமுதவினானே
மறவினைநீக்கலில்லாமாயமுமாயவாழ்க்கைப்
பிறவியும்பெயர்த்தேன்பின்னைரினைப்பிழைப்பதானேன். (௧௨௫)

பஞ்செனச்சிவக்குமென்காற்றேவியைப்பிரித்தபாவி
வஞ்சனுக்கிளையவென்னைவருகவென்றருளினானே
தஞ்செனக்கருதினானேதாழ்சடைக்கடவுளுண்ட
நஞ்செனத்தகையேனன்றோநாயகனருளாநாயேன். (௧௨௬)

மருளுறுமனத்தினனென்வாய்மொழிமறுத்தான்வானத்
தருளுறுதேரினுமிலங்கைமீதோடுமன்றே
தெருளுறுசிந்தைவந்ததேற்றமீதாகிற்செய்யும்
அருளிதுபார்க்கிற்கெட்டேன்பிழைப்பரோவரக்கரம்மா. (௧௨௭)

நீர்வருமின்னநம்மைச்செய்யினுஞ்செய்யசிந்தைப்
பேரருளாளர்தந்தஞ்செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரையிறுந்தித்தன்னைக்கனலெழக்கலக்கக்கண்டு
மார்கலியமாருய்யவமிர்துபண்டளித்ததன்றே. (௧௨௮)

திருத்தியவுணர்வுமிக்கசெங்கதிர்ச்செல்வன்செம்ம
லொருத்தரினலனுந்தீங்குந்தேரினுமுயிரினோம்புங்
கருத்தினனன்றேதன்னைக்கழலடைந்தோனைக்காணு
மருத்தியனமலன்றுழாதேகுதியநீருவென்றான். (௧௨௯)

மொய்தவழ்கிரிகண்மற்றும்பலவுடன்முடுகிச்செல்ல
மைதவழ்கிரியுமேருக்குன்றமும்வருவதென்னச்
செய்தவம்பயந்தவீரர்திண்மராமேழுந்தீய
வெய்தவனிருந்தசூழலிருவருமெய்தச்சென்றார். (௧௩௦)

மாற்கடஞ்சூழ்ந்தவைப்பினங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுடுத்தபாரினாயகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கைவடவரைபாங்குநிற்கக்
கார்க்கடல்கமலம்பூத்ததெனப்பொலிவானைக்கண்டான். (௧௩௧)

அள்ளிமீதலைகைவீசுமரிக்குலச்சேனாப்பண்
டெள்ளுதண்டிரையிற்றுகிப்பிதிதொருதிறனுஞ்சார
வெள்ளியகடலின்மேனாள்விண்ணவர்தொழுதவேண்டப்
பள்ளிநீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினானை (௧௩௨)

கோணுதற்கமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதற்கினியமுத்தின்பொலிமணல்பரந்தவைப்பிற்
காணுதற்கினியகீளவெண்மையிற்கருமைகாட்டி
வாணுதற்சீதைகண்ணின்மணியெனவயங்குவானை. (௧௩௩)

படர்மழைசுமந்தகாலைப்பகர்வருமமரர்கோமா
னடர்சிலைதுறந்ததென்னவாரந்தீர்மார்பினானைக்
கடல்கடைமத்திற்பாம்புகழற்றியதென்னக்காசின்
சுடரொளிவலயநீத்தசுந்தரத்தோளினானை. (௧௩௪)

கற்றைவெண்ணிலவுநீக்கிக்கருணையாலமிர்தங்கான்று
முற்றுறுகலையிற்றூயமுழுமதிமுகத்தினானைப்
பெற்றவனளித்தமௌலியிளையவன்பெறத்தான்பெற்ற
சிற்றவைபணித்தமௌலிபொலிகின்றசென்னியானை. (௧௩௫)

வீரனைநோக்கியங்கமென்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிச்செங்கணஞ்சனமலையிற்றாகக்
கார்முகில்கமலம்பூத்ததன்றிவன்கண்ணன்கொல்லா
மாரருள்சுரக்குநீதியறிறங்கரிதோவென்றான். (௧௩௬)

மிம்மினியொளியின்மாயும்பிறவியைவேரின்வாங்கச்
செம்மணிமகுடநீக்கித்திருவடிபுனைந்தசெல்வன்
றம்முனோர்கமலத்தண்ணலுறைதையார்சரணந்தாழ
வெம்முனோனக்குச்செய்தவுதவியென்றேம்பலுற்றான். (௧௩௭)

பெருந்தவமியற்றினோர்க்கும்பேர்வரும்பிறவிநோய்க்கு
மருந்தனநின்றான்றனேவடிக்கணைதொடுத்துக்கொல்வா
னிருந்தனனின்றதென்னுமியம்புவதெல்லைதீர்ந்த
வருந்தவமுடையரம்மாவரக்கரொன்றகத்துட்கொண்டான். (௧௩௮)

கரங்கண்மீச்சுமந்துசெல்லுங்கதிர்மணிமுடியன்கல்லு
மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளல்
இரங்கினனோக்குந்தோறுமிருநிலத்திறைஞ்சுகின்றான்
வரங்களின்வாரியன்னதாளிணைவந்துவீழ்ந்தான். (௧௩௯)

அழிந்ததுபிறவியென்னுமகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணின்மார்புறவணங்கினானைப்
பொழிந்ததோர்கருணைதன்னாற்புல்லினனென்னநோக்கி
யெழுந்தினிதிருத்தியென்னுமலர்க்கையாலிருக்கையீந்தான். (௧௪௦)

ஆழியானவனைநோக்கியருள்சுரந்துவகைதூண்ட
வேழினோடேழாய்நின்றவுலகுமென்பெயருமெந்நாள்
வாழுநாளன்றுகாறும்வாளெயிற்றரக்கர்வைகுந்
தாழ்கடலிலங்கைச்செல்வநின்னதேதந்தேனென்றான் (௧௪௧)

தீர்த்தனதருளைநோக்கிச்செய்ததோர்சிறப்புப்பெற்றான்
கூர்த்தநல்லறத்தைநோக்கிக்குறித்ததோயாதுகொல்லோ
வார்த்தையஃதுரைத்தலோடுந்தனித்தனிவாழ்ந்தோமென்ன
வார்த்தனவுலகினுள்ளசராசரமெவையுமம்மா. (௧௪௨)

உஞ்சனடியனேனென்றும்முறைவணங்கிநின்ற
வஞ்சனமேனியானையமுகனுமருளிநோக்கித்
தஞ்சமற்றனைவரானதவதிலாப்புகழான்றன்னைத்
அஞ்சலினயனத்தையாருட்டுதிமகுடமென்றான். (௧௬௩)

வினைவினையறியுமெய்ம்மைவீடணனென்றும்வியா
வளவறுபெருமைச்செல்வமளித்தனையாகினைய
ளவியலரக்கன்பின்னேதோன்றியகடன்மைதீர
வினையவன்கவித்தமௌலியென்னையுங்கவித்தியென்றான். (௧௬௪)

குகனொடுமைவரானோமுன்புபின்குன்றுசூழ்வான்
மகனொடுமறுவரானோமெம்முழையன்பின்வந்த
வகனமர்காதலையாநின்னொடுமெழுவரானோம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை. (௧௬௫)

நடுவிலிப்பகர்வதென்னேநாயகநாயினேனை
யுடனுதித்தவர்களோடுமொருவனென்றுரையாநின்று
யடிமையிற்சிறந்தேனென்றுவயிர்ப்பொடுமச்சநீங்கித்
தொடுகழற்செம்பொன்மௌலிசென்னியிற்சூட்டிக்கொண்டான். (௧௬௬)

திருவடிமுடியிற்சூட்டிச்செங்கதிருச்சிசேர்ந்த
வருவரையென்னநின்றவரக்கர்தம்மரசைநோக்கி
யிருவருமின்பமுற்றாரியாவருமின்பமுற்றார்
பொருவருமமரர்வாழ்த்திப்பூமழைபொழிவதானார். (௧௬௭)

ஆர்த்தனபரவையேழுமார்த்தனமேகமார்த்த
வார்ப்பொலிபுணருந்தெய்வமங்கலமுரசஞ்சங்கம்
ஆர்த்தனகனகமாரிசொரிந்தனநறுமென்சுண்ணம்
போர்த்ததுவானத்தன்றங்கெழுந்ததுதுழனிப்பொம்மல். (௧௬௮)

மொழிந்தசொல்லமிர்தமன்னுடிறத்தினின்முறைமைநீங்கி
யிழிந்தவென்மரபுமிப்போதுயர்ந்தவென்றிடரிற்றீர்ந்தான்
செழுந்தனிமலரோன்பின்னையிராவணன்றீமைச்செல்வ
மழிந்ததென்றறனுந்தன்வாயாவலங்கொட்டிற்றன்றே. (௧௬௯)

இன்னதோர்காலமாகவிராமனுமிலங்கைவேந்தன்
றன்னெடுஞ்செல்வந்தானேபெற்றமைபலருங்கேட்பப்
பன்னெடுந்தானைசூழப்பகலவன்சேயுநீயு
மன்னெடுங்குமாபாடிவீட்டினைவலஞ்செய்கென்றான். (௧௭௦)

அந்தமில்குணத்தினானையடியினைமுடியினோடுஞ்
சந்தனவிமானமேற்றிவானரத்தலைவர்தாங்கி
யிந்திரற்குரியசெல்வமெய்தினனிவனென்றெங்கு
மந்தரத்தடந்தோள்வீரர்வலஞ்செய்தார்தானைவைப்பை. (௧௭௧)

தேடுவார்தேடநின்றசேவடிதானுந்தேடி
நாடுவானன்றுகண்டநான்முகன்கழீஇயநன்னீ
ராடுவார்பாவமஞ்சுசீங்கிமேலமரராவார்
சூடுவாரொய்துந்தன்மைசொல்லுவார்யாவர்சொல்லீர். (சரு௨)

இற்றைநாளளவும்யாருமிருடிகளிமையோர்ஞான
முற்றினூன்புனைண்டார்வேல்விகண்முடித்துநின்றூர்
மற்றுமாதவருமெல்லாம்வாளெயிற்றிலங்கைவேந்தன்
பெற்றதார்பெற்றூரொன்றுவியந்தனர்பெரியோரெல்லாம். (சருஅ)

விபீடணனடைக்கலப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சருகக.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ரு-வது—இலங்கைகேள்விப்படலம்.

வந்தடிவணங்கியநிருதர்மன்னவற்
கந்தமிலாததோருறையுளவ்வழி
தந்தனன்விடுத்தபினிரவிதன்கதிர்
சிந்தினவெய்யவென்றெண்ணித்தீர்ந்தனன். (க)

சந்திவந்தனைத்தொழின்முடித்துத்தன்னூளே
புந்திநொந்திராமனுமுயிர்ப்பப்பூங்கணை
சிந்திவந்திறுத்தனன்மதனன்றீதிறத்
தந்திவந்திறுத்ததுகறுத்ததண்டமே. (௨)

மாத்தடந்திசைதொறுமறைந்தவல்லிருள்
கோத்ததுகருங்கடல்கொள்ளைகொண்டென
நீத்தநீர்ப்பொய்கையினிறைந்தநாண்மலர்
பூத்தனமீன்குலம்பொலிந்ததண்டமே. (௩)

சில்லியல்கோதையையினைந்துதேம்பிய
வில்லியைத்திருமனம்வெதுப்பும்வேட்கையா
லெல்லியைக்காண்டலுமலர்ந்தவீட்டினால்
மல்லிகைக்கானமும்வானமொத்ததே. (௪)

ஒன்றுமுட்கறுப்பினேடொளியின்வாளுரீஇத்
தன்றனிமுகத்தினலென்னைத்தாழ்ந்தற
வென்றவடுணைவனையின்றுவெல்குவே
னென்றதுபோலவந்தெழுந்ததிந்துவே. (ரு)

கண்ணனைவருத்துவான்கரந்துபோகினும்
பெண்ணிறமுண்டெனிற்பிடிப்பனென்ன
வுண்ணிறைநெடுங்கடலுலகமெங்கணும்
வெண்ணிறநிலவெனும்வலையைவீசினன், (சு)

புடைக்கைவன்றிரையெடுத்தார்க்கும்போர்க்கட
லடைக்கருந்தன்னிறமொளித்துக்கொண்டவ
னடைக்கலந்தானெனையறிவின்றுணையாத்
திடைக்கவந்தானெனக்கிளர்ந்ததொத்ததே. (௭)

மேலுகத்தொருதியான்முதிர்ந்தமெய்யெலாந்
தோலுருத்தாலெனவரவத்தொல்கடல்
வாலுகத்தாலிடைப்பரந்தவைப்பெலாம்
பாலுருத்தாலெனநிலவுபாய்ந்ததால். (௮)

மன்றல்வாய்மல்லிகையெயிறுவண்டினங்
கன்றியவிடத்ததுநறவின்கண்ணது
குன்றின்வாய்முழையினிற்குலாயகொட்பது
தென்றலென்றொருபுலியுயிர்த்துச்சென்றதால். (௯)

கரத்தொடும்பாழிமாக்கடல்கடைந்துளான்
உரத்தொடுங்காலிடையுருவவோங்கிய
மரத்தொடுந்தொளைத்தவன்மார்பின்மன்மதன்
சரத்தொடும்பாய்ந்தனநிலவின்றாரைவாள். (௧௦)

உடலினைநோக்குமின்னுயிரைநோக்குமா
விடரினைநோக்குமற்றியாதுநோக்கலன்
கடலினைநோக்குமக்கள்வன்வைகுறுந்
திடரினைநோக்குந்தன்சிலையைநோக்குமால். (௧௧)

பணிபழுத்தமைந்தபூணல்குற்பண்பினால்
பிணிபழுத்தமைந்ததோர்பித்தினுள்ளத்தா
னணிபழுத்தமைந்தமுத்தரும்புசெம்மணி
மணிபழுத்தமைந்தவாய்மறக்கவல்லனோ (௧௨)

ஐயதோளவையினருக்கன்மைந்தனீ
தேய்வதென்காரியமிரப்புஞ்சிந்தையாய்
மேயவன்றன்னொடுமெண்ணிமேலினித்
ஆயதுநினைக்கிலையென்னச்சொல்லினான். (௧௩)

அவ்வழியுணர்வுவந்தயர்வுநீங்கினன்
செவ்வழியறிஞனைக்கொணர்திசென்றென
விவ்வழிவருதியென்றியம்பவெய்தினான்
வெவ்வழிவிலங்கினனெறியைமேவினான். (௧௪)

மருக்கிளர்தாமரைவாசநாண்மலர்
நெருக்கிடுதடமெனவிருந்தநீதியான்
றிருக்கிளர்தாமரைபணிந்தசெம்மலை
யிருக்கவீண்டெழுந்தெனவிருந்தகாலையில். (௧௫)

ஆர்கலியிலங்கையினரணுமவ்வழி
வார்கெழுகணைகழலரக்கன்வன்மையும்
தார்கெழுதானையினளவுந்தன்மையும்
நீர்கெழுதன்மையாய்நிகழ்த்துவாயென்றான். (கசு)

எழுதலுமிருத்தியென்றிராமனேயினான்
முழுதுணர்புலவனைமுளரிக்கண்ணினான்
பழுதறவினவியபொருளைப்பண்புறத்
தொழுதுயர்கையினன்றெரியச்சொல்லினான். (கஎ)

நிலையுடைவடவரைகுலையநேர்த்தனன்
றலையெனவிளங்கியதமனியப்பெரு
மலையினைமும்முடிவாங்கியோங்குநீ
ரலைகடலிட்டனனனுமன்றாதையே. (கஅ)

ஏழுநூறியோசனையகலமிட்டகீ
ழாழுநூறியோசனையாழிமால்வரை
வாழியாயுலகினைவளைந்தவண்ணமே
சூழுமாமதிலதுசுடர்க்குமேலதால். (ககூ)

மருங்குடைவினையமும்பொறியின்மாட்சியு
மிருங்கடியரணமும்பிறவுமெண்ணினால்
சுருங்கிடுமெனைப்பலசொல்லிற்சுற்றிய
கருங்கடலகழதுநீருங்கண்டிரால். (உ0)

வடதிசைவயங்கொளிவாயில்வைகுவோ
ரிடையிலவொண்ணிருகோடியென்பராற்
கடையுகமுடிவினிற்காலனென்பதென்
விடைவருபாகனைப்பொருவுமேன்மையோர். (உக)

மேற்றிசைவாயிலின்வைகும்வெய்யவர்க்
கேற்றமுமுளவவர்க்கிரண்டுகோடியாற்
கூற்றையுங்கட்பொறிகுறுகக்காண்பரோ
ஊற்றுறுகுருதியோடுயிருமுண்குவார். (உஉ)

தென்றிசைவாயிலின்வைகுந்தீயவர்
என்றவொண்ணிருகோடியென்பராற்
குன்றுறழ்நெடியவர்கொடுமைகூறியென்
வன்றிறல்யமனையுமாசுமாற்றுவார். (உங)

கீட்டிசைவாயிலின்வைகுங்கீழவ
ரீட்டமுமெண்ணிருகோடியென்பரால்
கோட்டிருந்திசைநிலைக்கும்பகுன்றையும்
தாட்டுணைபிடித்தகன்றரையிலெற்றுவார். (உச)

விண்ணிடைவிழித்தனர்நிற்கும்வெய்யவ
ரொண்ணிருகோடியினிரட்டியென்பரான்

மன்னிடைவானவர்வருவரொன்றவர்
கன்னிலர்களாயிலர்காத்தபோயினர். (௨௫)

பிறங்கியவொடுமதிற்பின்னுமுன்னரு
முறக்கலருண்பதமுலவையாதலாற்
கறங்கெனத்திரிபவர்களைக்குவேண்டுமே
மறைந்தனராயிருநூறுகோடியால். (௨௬)

இப்படிமதிலொருமூன்றுவேறினி
யெர்ப்பரும்பெருமையுமுரைக்கவேண்டுமோ
மெய்ப்பெருந்திருநகர்காக்கும்வெய்யவர்
முப்பதுகோடியின்மும்மைமுற்றினார். (௨௭)

றெப்பவன்செய்திடச்செல்வமெய்தினு
றப்பெரும்பகைஞர்களளவிலாற்றல
ருறப்பெரும்பகைவரிறுதவுமுண்மைய
திறப்பிலுரொண்ணிருநூறுகோடியே. (௨௮)

விடமலவிழியெனும்வெருளிக்கண்ணினர்
கடனலவிமைத்தலுமென்னுங்காவலர்
வடவரைபுரைபவன்கோயில்வாயிலி
னிடம்வலம்வருபவரொண்ணெண்கோடியால். (௨௯)

பேயனென்பலயிதற்றிப்போர்த்தவன்
மாயிருஞாலத்தவைத்தமாப்படை
தேயினுநாளெலாந்தேய்க்கவேண்டுவ
தாயிரவெள்ளமென்றறிவனூழியாய். (௩0)

அன்றியுமவனகன்கோயில்வாய்மனை
முன்றிலின்வைகுவார்முறைறமைகூறிடி
னென்றியவுலகையுமெடுக்குமுற்றத்தார்
குன்றிரும்வலியவர்கோடிகோடியால். (௩௧)

தேர்பதினுயிரம்பதமஞ்செம்முகக்
கார்வரையவற்றிருக்கிரட்டிகால்வயத்
தார்பரியவற்றிருக்கிரட்டியொட்டகந்
தார்வருபுரவியிலிரட்டிசாலுமே. (௩௨)

இலங்கையினரணிதுபடையினெண்ணிது
வலங்கையில்வாள்சிவன்கொடுக்கவாங்கிய
வலங்கலந்தோளவன்றுணைவரந்தமில்
பெலங்களும்வரங்களுந்தவத்திற்பெற்றுளார். (௩௩)

வேறு. அம்பியீட்டமுயிரதமும்புரவியுந்தொடர்ந்த
வம்பொன்மாப்படையையிருகோடிகொண்டமைந்தான்
செம்பொனுட்டுளசித்தனைச்சிறையிடைவைத்தான்
கும்பனென்றுளனூழிவெங்கதிரினுங்கொடியான். (௩௪)

உகம்பல்காலமுந்தவஞ்செய்துபெருவரமுடையான்
சுகம்பல்போரலால்வேறிலன்பொருபடைத்தொகையான்
நகம்பலென்றிவையில்லதோர்நரசிங்கமனையான்
அகம்பனென்றுளனலைகடல்குடிக்கவும்வல்லான். (௩௪)

பொருப்பைமீதிடும்புரவியும்பூட்கையுந்தேரு
முருப்பவிற்படையொன்பதுகோடியுமுடையான்
செருப்பெய்வானிடைச்சினக்கடாய்கடாய்வந்துசெறுந்த
நெருப்பைவென்றவனிகும்பனென்றுளனொருநெடியோன். (௩௫)

பேயையாளியையானையைக்கழுதையைப்பிணித்த
வாயதேர்ப்படையையிருகோடிகொண்டமைந்தான்
றாயையாயினுஞ்சலித்திடில்வஞ்சனைதவிரா
மாயையானுளன்மகோதரனென்றொருமறவோன். (௩௬)

குன்றின்வாழ்பவர்கோடிநாலைந்திருக்கிறைவ
னின்றுளார்பின்னைநாளையிலாரெனவெயிற்றுற்
றின்றுளானெடும்பன்முறைதேவரைச்செருவின்
வென்றுளானுளன்வேள்வியின்பகைஞனோர்வெய்யோன். (௩௭)

மண்ணுளாரையும்வானிலுள்ளாரையும்வருத்தா
லுண்ணுநாளொருநாளினென்றொளிர்படைத்தானை
எண்ணிலிருகோடியனெரியஞ்சவிழிக்கும்
கண்ணினானுளன்சூரியன்பகையென்றோர்கழலான். (௩௮)

தேவருந்தக்கமுனிவருந்திசைமுகன்முதலா
மூவரும்பக்கநோக்கியேமொழிதரமுனிவான்
றாவரும்பக்கமெண்ணிருகோடியின்றலைவன்
மாபெரும்பக்கனென்றுளன்குன்றினும்வலியான். (௩௯)

உச்சிரத்தெரிகதிரெனவுருத்தெரிமுகத்த
னச்சிரப்படைநாலிருகோடிக்குநாதன்
முச்சிரத்தயிற்றலைவற்கும்வெலற்கருமொய்ம்பன்
வச்சிரத்தெயிற்றவனுளன்கூற்றுவன்மாற்றான். (௪௦)

அசஞ்சலப்படையையிருகோடியனமரின்
வசஞ்செயாதவர்தானன்றிப்பிறரிலாவலியா
னிசைந்தவெஞ்சமத்தியக்கரைவேரொடுமுன்னாட்
பிசைந்துபோந்தவன்பிசாசனென்றுளனொருபித்தன். (௪௧)

சில்லிமாப்பெருந்தேரொடுங்கரிபரிசிறந்த
வில்லின்மாப்படையேழிருகோடிக்கும்வேந்தன்
கல்லுவான்படிகலக்குவான்கடலொடுங்காந்திச்
சொல்லுமாற்றலன்றுன்முகனென்றறந்துறந்தோன். (௪௨)

இலங்கைநாட்டனன்வெரிகெடற்றிவிடையுறையு
மலங்கல்வேற்படையையிருகோடிக்குமரசன்
வலங்கொள்வாட்டொழில்விஞ்சையர்பெரும்புகழ்மறைத்த
விலங்குநாட்டவனென்றுளன்வெயிலுகவிழிப்பான். (சங)

போரின்மத்தனும்பொருவயமத்தனும்புலவர்
நேரின்மத்தன்னபெருமையர்நெடும்படைத்தலைவ
ராருமத்தனைவலியுடையாரிலையமரிற்
பெருமத்தனேயுலகமும்வானமும்பெரியோய். (சச)

நாமநாட்டியசவமெனிருளென்றமொருவ
னீமநாட்டிடையிடாமற்றன்னெயிற்றிடையிடுவான்
கூமநாட்டியகொடிப்படைபதுமத்தின்றலைவன்
தூமநாட்டவனென்றுளன்றேவரைத்துரந்தான். (சரு)

இன்னதன்மையரெத்தனையாயிரரெங்கே
னன்னவன்பெருந்துணைவராயமர்த்தொழிற்கமைந்தார்
சொன்னசொன்னவர்படைத்துணையிரட்டியின்றொகையான்
பின்னையென்னுவான்பிரகத்தனென்றொருபித்தன். (சசு)

சேனைகாவலிவிந்திரன்சிந்துராச்சென்னி
யானைகால்குலைந்தாழியோரேழும்விட்டகல
வேலைவானவரிருக்கைவிட்டிரியலுற்றலையச்
சோலைமாரியிற்சுடுகணைபலமுறைதுரந்தான். (சஎ)

தம்பிமுற்பகற்சந்திரர்நால்வரிற்றயங்கும்
கும்பமாக்கரிக்கோடிருகைகளால்வாங்கி
செம்பொன்மால்வரைமதம்பட்டதாமெனத்திரிந்தான்
கும்பகன்னனென்றுளன்பண்டுதேவரைக்குமைத்தான். (சஅ)

கோளிரண்டையுங்கொடுஞ்சிறைவைத்தவக்குமரன்
மூளும்வெஞ்சினத்திந்திரசித்தெனமொழிவர்
ஆளுமிந்திரற்கன்னவன்பிணித்ததற்பின்னைத்
தாளுமார்பினுந்தோளினுமுளவினந்தழும்பு. (சகூ)

தன்னையுந்தெறுந்தருமமென்றிறைமனந்தாழான்
முன்னவன்றரப்பெற்றதோர்முழுவலிச்சிலையன்
அன்னவன்றனக்கிளையவனப்பெயரொழித்தான்
பின்னொரிந்திரனிலாமையிற்பேரதிகாயன். (ருo)

தேவராந்தகனராந்தகன்றிரிசிராவென்று
மூவராந்தகைமுதல்வராந்தலைவருமுனையிற்
போவராந்தகையழிவராமெனத்தவிபொருவா
ராவராந்தகையிராவணற்கரும்பெறற்புதல்வர். (ருக)

இனையதன்மையர்வலியிஃதிராவணனென்று
மனையவன்றிறம்யானறியளவெல்லாமறைவன்
றனையனான்முகன்றகைமகன்சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வரமுக்கணான்வரத்தொடுமுயர்ந்தான். (௫௨)

எள்ளிலம்பெரும்பூதமும்யானையுஞ்சூழப்
புள்ளிமானுரியாடையனுமையொடும்புணர்ந்த
வெள்ளியம்பெருந்தடங்கிரிவேரொடும்வாங்கி
யள்ளிவிண்டொடவெடுத்தனனுலகெலாமனுங்க. (௫௩)

ஆன்றவெண்டிசையுலகெலாஞ்சுமக்கின்றயானை
யூன்றுகோடிறத்திரள்புயத்தழுத்தியவொண்மை
தோன்றுமென்னவேறுறுக்கமுற்றிரிவனதொகுதி
மூன்றுகோடியின்மேலொருமுப்பத்துமூவர். (௫௪)

குலங்களோடுந்தங்குலமணிமுடியொடுங்குறைய
வலங்கல்வாள்கொடுகாலகேயரைக்கொன்றதற்பின்
இலங்கைவேந்தனென்றுரைத்தலுமிடியுண்டவரவிற்
கலங்குமாலினந்தானவர்தேவியர்கருப்பம். (௫௫)

குரண்டமாடுநீரளகையினொளித்துறைகுபேரன்
திரண்டமாடுந்தன்றிருவொடுநிதியமுமிழந்து
புரண்டுமான்றிரள்புலிகண்டதாமெனப்போனான்
இரண்டுமானமுமிலங்கைமாநகரமுமிழந்து. (௫௬)

புண்ணுஞ்செய்ததுமுறுகென்பபுறங்கொடுத்தோடி
யுண்ணுஞ்செய்கையிற்றசமுகக்கூற்றந்தன்னுயிர்மே
லெண்ணுஞ்செய்கையதெனக்கொடுநாடொறுந்தன்னு
ளெண்ணுஞ்செய்கையனந்தகன்றன்பதமிழந்தான். (௫௭)

இருணன்காசறவெழுகதிரவனிற்கவென்று
மருணன்கண்களுங்கண்டிலாவிலங்கைபண்டமரிற்
பருணன்றன்பெரும்பாசமும்பறிப்புண்டுபயத்தால்
வருணனுய்ந்தனன்மகரநீர்வெள்ளத்துமறைந்து. (௫௮)

என்றுலப்புறச்சொல்லுகேனிராவணனென்னுங்
குன்றுலப்பினுமுலப்பிலாத்தோளினான்கொற்ற
மின்றுலப்பினுநாளையேயுலப்பினுஞ்சிலநாட்
சென்றுலப்பினுமினக்கன்றிப்பிறர்க்கென்றுந்திரான். (௫௯)

ஈடுபட்டவொண்ணிலர்தோரணத்தெழுவாற்
பாடுபட்டவர்படுகடன்மணலினும்பலராற்
சூடுபட்டதுகொடிநகரடுபுலிதுரந்த
வாடுபட்டதேபட்டனாறுமனுலரக்கர். (௬௦)

காய்ந்தவக்கணைத்தாக்கரமுடனுருகறைத்தோ
வீந்தவெக்கரினிறைந்தளகருங்கடனெருப்பின்
வாய்ந்தவக்கனைவரிசிலைமலையொடும்வாங்கித்
தேய்ந்தவக்குழம்புலர்ந்திலவிலங்கையிற்றெருவும். (௬௧)

சேனைக்காவலரோரைவருளர்பண்டுதேவர்
வானைக்காவலுமானமுமாற்றியமறவர்
தானைக்கார்வருங்கடலொடுந்தமரொடுந்தவிர
யானைக்காற்பட்டசெல்லெனவொல்லையினவிந்தார். (௬௨)

எங்குலத்தவனொண்பதினாயிரவிறைவர்
சிங்காப்பெருங்கிரியன்னதோற்றத்தர்கிளர்ந்தார்
வெங்காத்திறமழுவினுமெழுவினும்விலங்கிச்
சங்காற்கழிமுப்புரத்தவனெச்சலமர்ந்தார். (௬௩)

வெம்புமாக்கடற்சேனைகொண்டெதிர்பொரவெகுண்டோ
னம்புமாயிரத்தாயிரமிவன்புயத்தழுத்தி
யும்பர்வானகத்தொருதனிராமனைச்சென்றுற்றான்
சம்புமாலியும்வில்லினாற்சுருக்குண்டுதலைவ. (௬௪)

சொன்னமாமதிலிலங்கையின்பரப்பிதுறைகத்துச்
சின்னமானவர்கணக்கினையாவரோதெரிப்பார்
இன்னமாருளர்வீரர்மற்றிவன்சுடவெரிந்த
வன்னமாநகரவிந்ததக்குருதியாலகன்று. (௬௫)

விலங்கல்வெந்தவாவெழினிவிளம்புவதெவனோ
அலங்கன்மாலையுஞ்சாந்தமுமன்றுதானணிந்த
கலன்களோடுமெச்சாத்தியதுகிலொடுகதிர்வாள்
இலங்கைவேந்தனுமேழுநாள்விசும்பிடையிருந்தான். (௬௬)

நொதுமற்றிண்டிறலரக்கரிலங்கையைநவன்றே
னதுமற்றவ்வழியரணமும்பெருமையுமறைந்தே
விதுமற்றெய்தியதிராவணனென்பவனேவப்
பதுமத்தண்ணலேபண்டுபோலந்நகர்படைத்தான். (௬௭)

காந்துமாலையிற்கரன்முதல்வீரருங்கவியின்
வேந்துமென்றிவர்வீந்தவாகேட்டன்றுவிலங்கல்
நீந்தவாகண்டுமரக்கரைச்செருவிடைமுருக்கிப்
போந்தவாகண்டோமினிக்குப்புகுந்ததுபுகழோய். (௬௮)

கேள்கொண்மேவியான்கிளர்த்தியபொருளெலாங்கேட்டான்
வாள்கொணோக்கியைப்பாக்கியம்பழுத்தனமயிலை
நாள்கள்சாலவுநீக்கலினலங்கெடமெலிந்த
தோள்கள்வீங்கித்தன்றூதனைப்பார்த்திவைசொன்னான். (௬௯)

கூட்டினார்படைபாகத்தின்மேற்படக்கொன்று
மூட்டினாயெரியூர்முற்றுமினியங்கொன்றுண்டோ
கேட்டவாற்றினாற்கிளிமொழிச்சீதையைக்கிடைத்து
மீட்டிலாததென்விற்றொழில்காட்டக்கொல்வீர. (எ0)

நின்செய்தோள்வலிநிரம்பியவிலங்கையைநேர்ந்தோம்
பின்செய்தோஞ்சிலவவையினிப்பிறொன்றுபெறுமே
பொன்செய்தோளினாய்போர்ப்பெரும்படையொடும்புக்கோ
மென்செய்தோமென்றுபெரும்புகழெய்துவானிருந்தோம். (எக)

என்னதாக்கியவலியொடவ்விராவணன்வலியும்
உன்னதாக்கினைபாக்கியமுருக்கொண்டதொப்பாய்
முன்னதாக்கியமுவுலகாக்கியமுதலோன்
பின்னதாக்கியபதமுனக்களித்தனன்பெற்றாய். (எஉ)

என்றுகூறலுமெழுந்திருமிலனுறவிறைஞ்சி
யொன்றும்பேசலனாணினன்வணங்கியவுரவோ
னன்றவானரத்தலைவருமரசுமங்நெடியோன்
வென்றிகேட்டலும்வீடுபெற்றாரெனவியந்தார். (எ௩)

இலங்கைகேள்விப்படலம்-முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - ௫௩க.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௬-வது—வருணனைவழிவேண்டுபடலம்.

தொடக்குமென்னிலிவ்வுலகொருமுன்றையுந்தோளா
லடக்கும்வண்ணமுமழித்தலுமொருபொருளன்றாற்
கிடக்கும்வண்ணவெங்கடலினைக்கிளர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமெண்ணுதியென்னுநூல்கற்றாய். (க)

கரந்துநின்றநின்றன்மையையதுசெலக்கருதும்
பரந்ததுன்திருக்குலமுதற்றலைவராற்பரிவாய்
வரந்தரும்மிந்தமாக்கடல்படைசெலவழிவே
றிரந்துவேண்டுதியெறிதிரைப்பரவையையென்றான். (உ)

நன்றிலங்கையர்நாயகன்மொழியெனநயந்தா
னென்றுதன்பெருந்துணைவரும்புடைசெலவுரவோன்
சென்றுவேலையைச்சேர்தலும்விசும்பிடைச்சிவந்த
குன்றின்மேனின்றுகுதித்தனபகலவன்குதிரை. (௩)

கொழுங்கதிர்ப்பகைக்கோளிருணீங்கியகொள்கை
செழுஞ்சுடர்ப்பனிக்கலையெலாநிரம்பியதிங்கள்
புழுங்குவெஞ்சினத்தஞ்சனப்பொறிவரியரவம்
விழுங்கிநீங்கியதொத்ததுவேலைசூழ்ஞாலம். (௪)

தருணமங்கையைமீட்பதோர்நெறிதருகென்னும்
பொருணயந்துநன்னூனெறியடுக்கியபுல்லிற்
கருணையங்கடறுயின்றனன்கருங்கடனோக்கி
வருணமந்திரமெண்ணினன்விதிமுறைவணங்கி. (௫)

ஊழிசென்றதன்றிருவுருப்பொருந்தவும்பொறைதீர்
வாழிவெங்கதிர்மணிமுகம்வருடவும்வளர்ந்தா
னாழிசென்றனவொப்பனவொருபகலவையோ
ரேழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன். (௬)

ஊற்றமிக்கொண்டவேலையானுண்டிலையென்று
மாற்றமிகவும்பெற்றிலனுமெனுமனத்தா
லேற்றமிக்கொண்டபுனலிடையெரிமுளைத்தென்னச்
சீற்றமிக்கொண்டுசிவந்தனதாமரைச்செங்கண். (௭)

மாண்டவில்லிழந்தயருநான்வழிதனைவணங்கி
வேண்டவில்லையென்றெளித்ததாமெனமனம்வெதும்பி
நீண்டவில்லுடைநெடுங்கணையுயிர்ப்பொடுநெடுநாண்
பூண்டவில்லெனக்குனித்தனகொழுங்கடைப்புருவம். (௮)

ஒன்றும்வேண்டலராயினுமொருவர்பாலொருவர்
சென்றுவேண்டுவரேலவர்சிறுமையிற்றீரா
நின்றுவேண்டியநெறிகடனெறிதனைமறுத்தா
னன்றுநன்றெனநகையொடும்புகையுகநக்கான். (௯)

பாரநீங்கியசிலையினனிராவணன்பறிக்கத்
தாரநீங்கியதன்மையனுதலிற்றகைசால்
வீரநீங்கியமனிதனென்றிகழ்ச்சிமேல்விளைய
வீரநீங்கியதெறிகடலாமெனவிசைத்தான். (௧௦)

புரந்துகோடலும்புகழொடுகோடலும்பொருது
ஆர்ந்துகோடலுமென்றிவைதொன்மையிற்றொடர்ந்த
ஈர்ந்துகோடலுமியற்கையுந்தருமமுமெஞ்சக்
கரந்துகோடலேநன்றினிநின்றதென்கழறி. (௧௧)

கானிடைப்புகுந்திருங்கனிகாயொடுநுகர்ந்த
ஊனுடைப்பொறையுடம்பினனென்றுகொண்டுணர்ந்த
மீனுடைக்கடற்பெருமையும்வில்லொடுநின்ற
மானிடச்சிறுதன்மையுங்காண்பரால்வானோர். (௧௨)

ஏதமஞ்சினானிரந்ததேயெளிதெனவிகழ்ந்த
வேதமஞ்சிறேடிரண்டும்வெந்தொருபொடியாகப்
பூதமஞ்சும்வந்தஞ்சலித்துயிர்கொண்டுபொருமப்
பாதமஞ்சலர்செஞ்செவேபடர்வபொன்பனைகளுர். (௧௩)

மறுமைகண்டமெய்ஞ்ஞானியர்ஞாலத்தவரினும்
வெறுமைகண்டபின்யாவரும்யானெனவிரும்பார்
குறுமைகண்டவர்கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர்பெருமைகண்டல்லதுதேறார். (௧௪)

இறுதியென்பதொன்றிழிதாலூழியிற்சினவும்
பருதிமண்டிலமெனப்பொலிமுகத்தினன்பலகாற்
றருதிவில்லெறுமளவையிற்றம்பியும்வெம்பிக்
குருதிவெங்கனலுமிழ்கின்றகண்ணினன்கொடுத்தான். (௧௫)

வாங்கிவெஞ்சிலைவாளியின்மற்றொருவேலை
வீங்குதோள்வலம்வீக்கினன்கோதையைவிரலாற்
றுங்கினாணினைத்தாக்கினன்றுக்கியதமரம்
ஓங்குமுக்கணன்றேவியைத்திர்த்தனதுடல். (௧௬)

மாரியின்பெருந்துளியினும்வரம்பிலவடித்த
சீரிதென்றிவையெவற்றினுஞ்சீரியதெரிந்து
பாரியங்கிரும்புனலெலாமுடிவினிற்பருகுஞ்
சூரியன்கதிரனையனசுடுசரந்துரந்தான். (௧௭)

பெரியமால்வரையேழினும்பெருவலிபெற்று
வரிகொள்வெஞ்சிலைவளர்பிறையாமெனவாங்கித்
திரிவநிற்பனயாவையுமுடிவினிற்றீக்கும்
எரியின்மும்மடிகொடியனசுடுசரமெய்தான். (௧௮)

மீனுநாகமும்விண்டொடுமலைகளும்விறகா
யேனைநிற்பனயாவையுமேலெரியெய்தப்
பேனநீர்நெடுநெய்யெனப்பெய்கணைநெருப்பாற்
கூனையங்கியின்குண்டமொத்ததுகடற்குட்டம். (௧௯)

பாழிவன்னெடுங்கொடுஞ்சிலைவழங்கியபகழி
யேழுவேலையுமெரியொடுபுகைமடுத்தேகி
யூழிவெங்கனற்கொழுந்துகளுருத்தெழுந்தோடி
யாழிமால்வரைக்கப்புறத்திருளையுமவித்த. (௨௦)

மருமதாரையினெரியுண்டமகரங்கண்மயங்கிச்
செருமவானிடைக்கற்பகமரங்களுந்தீய
நிருமியாவிட்டநெடுங்கணைபாய்தலினெருப்போ
டுருமுவீழ்ந்தெனச்சென்றனகடற்றுளியும்பர். (௨௧)

கூடும்வெம்பொறிக்கொடுங்கனறொடர்ந்தனகொளுத்த
வோடுமேகங்கள்பொரிந்திடையுதிர்ந்தனவும்பர்
ஆடுமங்கையர்கருங்குழல்வெளுத்தனவளக்கர்
கோடுதீந்தெழக்கொழும்புகைப்பிழம்புமீக்கொள்ள. (௨௨)

கிளர்ந்தசெஞ்சரநிறந்தொறும்பதிதலுமெய்த்தோ
ருமிழ்ந்தலர்ந்தனமகரங்களுலப்பிலவுருவத்
துமிந்தவண்டமும்பலபடத்துரந்தனதொடர்ந்து
திமிங்கலங்களுந்திமிங்கலகிலங்களுஞ்சிதறி. (௨௩)

நீறுமீச்செலநெருப்பெழப்பொருப்பெலாமெரிய
நூறுமாயிரகோடியுங்கடுங்கணைநுழைய
மாறுதிற்படவளறுபட்டழுந்தியவளக்கர்
சேறுநின்றெழக்காந்தினசேடன்றன்சிரங்கள். (௨௪)

மொய்த்தமீன்குலமுதலறமுருங்கினமொழியிற்
பொய்த்தசான்றவன்குலமெனப்பொருகணையெரிய
வுய்த்தகூம்புடைநெடுங்கலமோடுவகடுப்பத்
தொத்தவம்பொடுந்திரிந்தனசாலமீன்சாலம். (௨௫)

சிந்தியோடியகுருதிவெங்கனல்களேசெறிய
வந்திவானகங்கடுத்ததவ்வளப்பருமளக்கர்
பந்திபந்திகளாய்நெடுங்கடுங்கணைபட
வெந்துநிந்தனகரிந்தனபொரிந்தனசிலமீன். (௨௬)

வையநாயகன்வடிக்கணைகுடித்திடவற்றி
யையரீருடைத்தாய்மருங்கருங்கனன்மண்டக்
கைகலந்தெரிகருங்கடல்காரகல்கடுப்ப
வெய்யநெய்யிடைவேவனவொத்தனசிலமீன். (௨௭)

குணிப்பருங்கொடும்பகழிகள்குருதிவாய்மடுப்பக்
கணிப்பரும்புனல்கடையுறக்குடித்தலிற்காந்து
மணிப்பருந்தடங்குப்பைகண்மறிகடல்வெந்து
தணிப்பருந்தழல்சொரிந்தனபோன்றனதயங்கி. (௨௮)

எங்கும்வெள்ளிடைமடுத்தலின்விழுதுடையினமீன்
சங்கமுங்கறிகிழங்கெனவிடையிடைதழுவி
யங்கம்வெந்துபேரளற்றிடையடுக்கியகிடந்த
பொங்குநன்னெடும்புனலறப்பொரித்தனபோன்ற. (௨௯)

அதிரும்வெங்கணையொன்றையொன்றடர்ந்தெரியுய்ப்ப
வெதிரின்வன்னெடுங்கானெனவெந்தனமீனம்
பொதுவின்மன்னுயிர்க்குலங்களுந்துணிந்தனபொழிந்த
வுதிரமுங்கடற்றிரைகளும்பொருவனவொருபால். (௩௦)

அண்ணல்வெங்கணையறுத்திடத்தெறித்தெழுந்தளக்கர்
பண்ணைவெம்புனல்படப்படநெருப்பொடும்பற்றி
மண்ணில்வேருறப்பற்றியநெடுமரமற்று
மெண்ணைதோய்ந்தனவெரிந்தனகிரிக்குலமெல்லாம். (௩௧)

தெய்வநாயகன்றெரிகணைதிசைமுகத்தொருவன்
வைவிதாமெனப்பிழைப்பிலமனத்திலுங்கடுக
வெய்யவன்னெருப்பிடையிடைபொதித்தெழவெறிநீர்ப்
பொய்கைதாமரைபூத்தெனப்பொலிந்தனபுணரி. (௩௨)

செப்பின்மேலவர்சிறிதுமதசிறப்பாத
றப்புமேயதுகண்டனமுவரியிற்றணியா
வுப்புவேலையென்றுலகுறுபெரும்பழிநீங்கி
யப்புவேலையாய்நின்றதுகுறைந்ததோவளக்கர். (௩௩)

தாரையுண்டபேரண்டங்களடங்கவுந்தானே
வாரியுண்டருள்செய்தவற்கிதுவொருவலியோ
பாரையுண்பதுபடர்புனலப்பெரும்பரவை
நீரையுண்பதுநெருப்பெனுமப்பொருணிறுத்தான். (௩௪)

வேறு.

மங்கலம்பொருந்தியதவத்துமாதவர்
கங்குலும்பகலுமக்கடலுள்வைகுவா
ரங்கம்வெந்திலரவனடிகளெண்ணலாற்
பொங்குவெங்கனலெனும்புனலிற்போயினார். (௩௫)

தென்றிசைகுடதிசைமுதலதிக்கெலாந்
துன்றியபெரும்புகைப்படலஞ்சுற்றலாற்
கன்றியநிறத்தனகதிரவன்பரி
நின்றனசென்றிலநெறியினீங்கின. (௩௬)

பிறிந்தவர்க்குறுபொருளுணரும்பெற்றியார்
அறிந்திருந்தறிந்திலரனையராமெனச்
செறிந்ததம்பெடைகளைத்தேடித்தீக்கொள
மறிந்தனகரிந்தனவானப்புள்ளெலாம். (௩௭)

கமையறுகருங்கடல்கனலிகைபாரந்
தமைவனவொத்தபோதறையவேண்டுமோ
சுமையுறுபெரும்புகைப்படலஞ்சுற்றலா
லிமையவரிமைத்தனர்வியர்ப்புமெய்தினார். (௩௮)

பூச்செலாதவணடைபோல்கிலாமையா
லேச்செலாமெய்தியவன்னம்யாவையுந்
தீச்செலாநெறிபிறிதின்மையாற்றிசை
மீச்செலாபுனலவன்புகழின்வீந்ததால். (௩௯)

பம்புறுநெடுங்கடற்பறவையாவையு
மும்பரிற்செல்லலுற்றுருகிவீழ்ந்தன
வம்பரமம்பரத்தேகலாற்றல
விம்பரிலுதிர்ந்தனவெரியுமெய்யன. (௪௦)

பட்டனபடப்படப்படார்புட்குலம்
கட்டுவெந்தெரிக்குலப்படலஞ்சுற்றலா
விட்டுதியதிலைவிரியல்போவன
முட்டையென்றெடுத்தனகடுத்தமுத்தெலாம். (௩௧)

வள்ளலைப்பாவிகாண்மனிதனென்றுகொண்
டெள்ளலுற்றனறைந்தனமெண்ணிலாமென
வெள்ளிவெண்பற்களைக்கிழித்துவிண்ணுறத்
துள்ளலுற்றிரிந்தனசுறாக்குழுந்தில. (௩௨)

தாமெடுந்தீமைகளுடையதன்மையார்
மாமெடுங்கடலிடைமறைந்துவைகுவார்
தூமெடுங்குருதிவேலவுணர்துஞ்சினர்
மீமெடுங்கிரியெனமிதந்துவீங்கினர். (௩௩)

தகம்பிடைவிரிந்தனவென்றுந்தாமைய
பகம்பொனின்விமானங்களுருகிப்பாய்ந்தன
வகம்பறவறந்தனவானவாறெலாம்
விசும்பிடைவிளங்கியமீனும்வெந்ததால். (௩௪)

செறிவுறுசெம்மையதீயையோம்புவ
நெறியுறுசெலவினதவத்தினீண்டன
வுறுசினமுறப்பலவுருவுகொண்டன
குறுமுனியெனக்கடல்குடித்தகூர்ங்கணை. (௩௫)

மோதலங்களைகடன்முழங்கத்தீயினுற்
பூதலங்காவொடுமெரிந்தபொன்மதில்
வேதலுமிலங்கையுமீளப்போயின
தூதன்வந்தானெனத்துணுக்கங்கொண்டதால். (௩௬)

அருக்கனிலொளிவிடுமாடகக்கிரி
யுருக்கெனவுருகினவுதிரந்தோய்ந்தன
முருக்கெனச்செவந்தனமுரியவெந்தன
கரிக்குலவகிர்த்தனபவளக்காடெலாம். (௩௭)

பெருடைக்கிரியெனப்பெருத்தமீன்களு
மோரிடத்துயிர்தரித்தொதுங்ககிற்றில
நீரிடைப்புகுஞ்சிலநெருப்புநன்றெனுப்
பாரிடைக்குதித்தனபதைக்குமெய்யன. (௩௮)

கருள்கடற்றிரைகளைத்தொலையவுண்டன
பருகிடப்புனலிலபகழிபாரிட
மருள்கொளப்படர்வனகாகர்வைப்பையு
மிருள்கெடச்சென்றுளவிரவிபோல்வன. (௩௯)

கரும்புறக்கடல்களோடுலகங்காய்ச்சிய
விரும்புறச்செல்வனவிழிவகிழுற
வரும்புறத்தண்டத்தையுருவியப்புறம்
பெரும்புறக்கடலையுந்தொடர்ந்துபின்செல்வ. (௫௦)

இடதிறந்துருமணித்திரள்கள்சேணில
முடதிறந்துதிரம்வந்துருவபோன்றன
கடதிறந்தெங்கணும்வற்றவக்கடல்
குடதிறந்தனவெனக்கிடந்தகோளரா. (௫௧)

ஆழியிற்புனலறமணிகளட்டிய
பேழையிற்பொலிந்தனபரவைபேறுறப்
பூழையிற்பொருகணையுருவப்புக்கன
முழையிற்பொலிந்தனமுரலும்வெள்வளை. (௫௨)

நின்றுநூறாயிரம்பகழிநீட்டலாற்
குன்றுநூறாயிரங்கோடியாயின
சென்றுதேய்வுறுவரோபுலவர்சீறினு
மொன்றுநூறாயினவுவரிமுத்தெலாம். (௫௩)

சூடுபெற்றையனேதொலைக்குமன்னுயிர்
வீடுபெற்றனவிடையிடைந்தவேணுவின்
காடுபெற்றியபெருங்கனலிகைபரந்
தோடியுற்றதுநெருப்புவரிநீரெலாம். (௫௪)

காலவான்கடுங்கணைசுற்றுங்கவ்வலா
னீலவான்றுகிலினைநீக்கிப்பூநிறக்
கோலவான் களிநெடுங்கூறைசுற்றினாள்
போலமாநிலமகள்பொலிந்துதோன்றினாள். (௫௫)

சற்றவர்கற்றவருணர்வுகாண்கிலாக்
கொற்றவன்படைக்கலங்குடித்தவேலைவிட்
டுற்றுயிர்படைத்தெழுந்தோடலுற்றதால்
மற்றொருகடல்புகவடவைத்தீயரோ. (௫௬)

வாழியருலகினைவளைத்துவானுறச்
சூழிரும்பெருஞ்சுடர்ப்பிழம்புதோன்றலா
லூழியினுலகெலாமுண்ணவோங்கிய
வாழியிற்பொலிந்ததவ்வாழியன்னநாள். (௫௭)

ஏனையவொண்ணவேறுலகினிண்டினா
ரானவர்செய்தனவறையவேண்டுமோ
மேனிமிர்ந்தெழுகனல்வெதுப்பமீதுபோய்
வானவர்மலரயனுலகின்வைகினார். (௫௮)

இடுக்கினியியம்புவதென்னையிவ்வழி
முடுக்குவன்வருணனையென்னமூண்டெழு
தடுக்கரும்வெகுளியான்சதுமுகன்படை
தொடுத்தனனமரருந்துணுக்கமெய்தினர். (௫௯)

மழைக்குலங்கதறினவருணன்வாயுலர்ந்
தழைத்தனனுலகமுமடைத்தவாறெலாம்
இழைத்தனநெடுந்திசையாதும்யாரினிப்
பிழைப்பிலவென்பதோர்பெரும்பயத்தினால். (௬௦)

வேறு.

அண்டமூலத்துக்கப்பாலாழியுங்கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கைசெப்பியென்றேவன்சென்னி
பண்டைநாளிருந்தகங்கைநங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகையிருந்தநீருங்குளுகுளுகொதித்தவன்றே. (௬௧)

இரக்கம்வந்தெதிர்ந்தகாலத்துலகெலாமீன்றுமீளக்
கரக்குநாயகனைத்தானுமுணர்ந்திலன்சீற்றங்கண்டும்
வரக்கருநாறுதாழ்ந்தவருணனின்மாறுகொண்டா
ரரக்கரோயல்லவொன்றுவதிருமலக்கணுற்றார். (௬௨)

உற்றொருதனியேதானேதன்கணேயுலகமெல்லாம்
பெற்றவன்முனியப்புக்கானடுவினிப்பிழைப்பதெங்கே
குற்றமொன்றிலாதோர்மேலுங்கோள்வரக்குறுகுமென்று
மற்றையபூதமெல்லாம்வருணனைவைதமாதோ. (௬௩)

எழுசுடர்ப்படலையோடுமிரும்புகையெழும்பியெங்கும்
வழிதெரிவறிவிலாதநோக்கினன்வருணனென்பா
லழுதழிகண்ணனன்பாலுருகியநெஞ்சனஞ்சித்
தொழுதெழுகையனாய்நிற்றோன்றினன்வழுத்துஞ்சொல்லான். (௬௪)

நீயெனைநினைந்ததன்மைநெடுங்கடன்முடிவின்றே
றுயினேனறிந்திலேனென்றண்ணலுக்கயிர்ப்புநீங்கக்
காயெரிப்படலைசூழ்ந்தகருங்கடற்றரங்கத்தூடே
தீயிடைநடப்பான்போலச்செறிபுனற்கிறைவன்சென்றான். (௬௫)

வந்தனனென்பமன்னோமறிகடற்கிறைவன்வாயிற்
சிந்தியமொழியன்றீந்தசென்னியன்றிகைத்தநெஞ்சன்
வெந்தழிந்துருகுமெய்யன்விழுப்புகைப்படலம்விம்ம
வந்தரினலமந்தஞ்சித்துயருழந்தலக்கணுற்றான். (௬௬)

நலையறுமுலகிற்கெல்லாநாயகநீயேசிறிற்
கலைவயின்சரணமல்லாற்பிறிதொன்றுகண்டதுண்டோ
இலையுனக்கரியவோதானெனக்கெனவலிவேறுண்டோ
வலையநின்னவயமென்றுஉடுத்தடுத்தாற்றுகின்றான். (௬௭)

ஆழிநீயனலுநீயேயல்லவையெல்லாநீயே
யூழிநீபுலனுநீயேயவற்றுறையுயிருநீயே
வாழியாயடியேனின்னைமறப்பனோவயங்குசெந்தீச்
சூழுறவுலைந்துபோனேன்காத்தருள்சுருதிமூர்த்தி. (சுஅ)

காட்டுவாயுலகங்காட்டிக்காத்தவைகடையிற்செந்தீ
யூட்டுவாயுண்பாய்நீயேயுனக்குமொன்றுதுண்டோ
நீட்டுவான்பகழியொன்றாலுலகங்களனைவயுந்தீய
வீட்டுவாய்வினையினேயேற்கித்தனைவேணுமோதான். (சுகூ)

சண்டவான்கிரணவாளாற்றயங்கிருட்காடுசாய்க்கு
மண்டலத்துறையுஞ்சோதிவள்ளலேமறையின்வாழ்வே
பண்டைநான்முகனேயாதிச்சராசரத்துள்ளபள்ளப்
புண்டரீகத்துவைக்கும்புராதனுபோற்றிபோற்றி. (எ௦)

கள்ளமாயுலகங்கொள்ளுங்கருணையான்மறையிற்கூறும்
எள்ளலாகாதமூலத்தியாதுக்குமுதலாயுள்ள
வள்ளலேகாத்தியென்றமாகரிவருத்தந்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும்புராதனுபோற்றிபோற்றி. (எக)

அன்னைநீயத்தனீயேயல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயேபேறுநீயிகழ்வுநீயே
யென்னைநீயிகழ்ந்ததென்றதெங்ஙனேயீசனுய
வுன்னைநீயுணராய்நாயேனெங்ஙனமுணர்வேனுன்னை. (எஉ)

பாயிருள்சீக்குந்தெய்வப்பருதியைப்பழிக்குமாலை
மாயிருங்கரத்தான்மண்மேலடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற்பொறுப்பதுபெரியோர்செய்கை
யாயிரநாமத்தையாசரணமென்றடியில்வீழ்ந்தான். (எங)

பருப்பதம்வேவதென்னப்படரொளிபடராநின்ற
வுருப்பெறக்காட்டிநின்றநாஞனக்கபயமென்ன
வருப்பறப்பிறந்தகோபமாறினனுருவாற்ற
னெருப்புறப்பொங்கும்வெம்பானிருற்றதன்னநீரான். (எச)

ஆறினனஞ்சலுன்பாலளித்தனனபயமன்பால்
ஈறிலாவணக்கஞ்செய்தியானிரந்திடவெய்திடாதே
சீறுமாகண்டுவந்ததிறத்தினைத்தெரிவதாகக்
கூறுநீயறியவென்றான்வருணனுந்தொழுதுகூறும். (எரு)

பார்த்தனிற்பொறையின்மிக்கபத்தினிக்குற்றபண்பு
வார்த்தையினறிந்ததல்லாற்றேவர்பால்வந்திலேனாற்
றீர்த்தநின்னுணையேழாஞ்செறிதிரைக்கடலின்மீனின்
போர்த்தொழில்விலக்கப்போனேனறிந்திலேன்புகுந்ததொன்றும். (எசு)

என்றுயிரிரங்கியையனித்திறநிற்கவிர்ந்தப்
பொன்றலிற்பகழிக்கப்பாலிலக்கமென்புகறியென்ன
நன்றெனவருணன்றானுமுலகமுநலிவுதீர்ந்தான்
குன்றெனவுயர்ந்ததோளாய்கூறுவேனென்றுகூறும். (௭௭)

மன்னவமருகாந்தாரமென்பதோர்தீவின்வாழ்வா
ரன்னவர்சதகோடிக்குமேலுளாரவுணராயோர்
இன்னவேயுலகமெல்லாந்தீந்தனவெனக்குந்தீயார்
மின்றுமிழ்கணையைவெய்யோர்மேற்செலவிடுதியென்றான். (௭௮)

நேடிநூறெறிந்துளோர்க்குமுணர்விற்குமிரனின்றான்
கோடிநூறுயதீயவவுணர்க்குலங்களோடும்
ஓடிநூறென்றுவிட்டானேரிமையொடுங்காமுன்னம்
பாடிநூறுகநூறிமீண்டதப்பகழித்தெய்வம். (௭௯)

ஆய்வினையுடையராகியறம்பிழையாதார்க்கெல்லாம்
ஏய்வனநலனேயன்றியிடரிவந்தடைவதுண்டோ
மாய்வினையியற்றிமுற்றும்வருணன்மேல்வந்தசீற்றம்
தீவினையுடையார்மாட்டேதீங்கினைச்செய்ததன்றே. (௮0)

பாபமேயியற்றினாப்பனெனுங்காதமோடித்
தாபமேபெருகும்வண்ணமெரியெழச்சுட்டதன்றே
தீபமேயனையஞானத்திருமறைமுனிவன்செப்பும்
சாபமேயொத்ததம்புதருமமேவலியதம்மா. (௮௧)

மொழியுனக்கபயமென்றாயாதலான்முனிவுதீர்ந்தேன்
பழியெனக்காகுமென்றுபாதகர்பரவையென்னும்
குழியினைக்கருதிச்செய்தருமடையைக்குறித்துநீங்க
வழியினைத்தருதியென்றான்வருணனைநோக்கிவள்ளல். (௮௨)

ஆழமுமகலந்தானுமளப்பரிதெனக்குமைய
வேழவையடுக்கிநின்றவுலகுக்குமெல்லையில்லை
வாழியாய்வற்றிநீங்கில்வரம்பிலகாலமெல்லாம்
தாழுமின்சேனையுள்ளந்தளர்வுறுந்தவத்தின்மிக்காய். (௮௩)

கல்லெனவலித்துநிற்பிற்கணக்கிலவுயிர்களெல்லாம்
ஒல்லையினுலந்துவீயுமிட்டதொன்றொழுகாவண்ணம்
எல்லையில்காலமெல்லாமேந்துவனெளிதினெந்தாய்
செல்லுதிசேதுவென்றொன்றியற்றியென்சிரத்தின்மேலாய். (௮௪)

நன்றிதுபுரிதுமென்றேநளிகடற்பெருமைநம்பா
நின்றிதுதிருமென்னிலெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேதுகுயிற்றுதியொன்றுகூறிச்
சென்றனனிருக்கைநோக்கிவருணனுமருளிற்சென்றான். (௮௫)

வருணனைவழிவேண்டுபடலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௯௧௬.
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௭-வது—சேதுபந்தனப்படலம்.

அளவறுமறிஞரோடரக்கர்கோமகற்
கிளவலுமினிதுடனிருக்கவெண்ணினான்
வினைவனசெய்வனமுடிக்கவேண்டுவா
னளன்வருகென்றனன்கவிக்குநாயகன். (௧)

வந்தனன்வானரத்தச்சன்மன்னநின்
சிந்தனையென்னெனச்செறிதிரைக்கடற்
பந்தனைசெய்குதல்பணிநமக்கென
நிந்தனையிலாதவன்செய்யநேர்ந்தனன். (௨)

காரியங்கடலினையடைத்துக்கட்டலே
சூரியன்காதலேசொல்லியென்பல
மேருவுமனுவுமோர்வேறுருவகை
ஏருறவியற்றுவன்கொணர்கவென்றனன். (௩)

இளவலுமிறைவனுமிலங்கைவேந்தனும்
அளவறுநங்குலத்தரசுமல்லவர்
வளைதருங்கருங்கடலடைக்கவம்மெனத்
தளமலிசேனையைச்சாம்பன்சாற்றினான். (௪)

கருவலாகாதங்கள்கணக்கிலாதன
இருகையிற்றோள்களிற்சென்னியேந்தின
ஒருகடலடைக்கமற்றொழிந்தவேலைகள்
வருவனவாமெனவந்தவானரம். (௫)

பேர்த்தனமலைசிலபேர்க்கப்பேர்க்கநின்
றீர்த்தனசிலசிலசென்னியேந்தின
தூர்த்தனசிலசிலதூர்க்கத்தூர்க்கநின்
றார்த்தனசிலசிலவாடிப்பாடின. (௬)

காலிடையொருமலையுருட்டிக்கைகளின்
மேலுடைமலையினைவாங்கிவிண்டொடுஞ்
சூலிடைமழைமுகில்சூழ்ந்துசுற்றிய
வாலிடையொருமலையீர்த்துவந்தவால் (௭)

முடுக்கினன்றருகெனமூன்றுகோடியர்
எடுக்கினுமம்மலையொருகையேந்தியிட்
டடுக்கினன்றன்வலிகாட்டியாழியை
நடுக்கினனள்ளெனுநவையினீங்கினான். (௮)

மஞ்சினிற்றிகழ்தருமலையைமாக்குரங்
கெஞ்சுறக்கடித்தெடுத்தெறியவேநளன்
விஞ்சையிற்றாங்கினன்சடையன்வெண்ணெயிற்
றஞ்சமென்றோர்களைத்தாங்குந்தன்மைபோல். (௯)

சயக்கலிப்பெரும்படைத்தலைவர்தாள்களால்
முயற்கறைமதிதவழ்முன்றிற்குன்றுக
ளயக்கலின்முனிற்குலமலறியோடின
வியக்கருமகளிருமிரியல்போயினார். (௧௦)

வேருடைநெடுங்கிரிதலைவர்வீசின
வோரிடத்தொன்றின்மேலொன்றுசென்றுக
கீரிடையியிர்பொறிபிறக்கநீண்டவி
தாருடைநெருப்பெனவருணனஞ்சினான். (௧௧)

ஆவிறக்கண்ணனென்றொருவனங்கையாற்
காவிறமலைகொணர்ந்தெறியக்கார்க்கட
றாயிறமுத்தினந்திவலையோடும்போய்
வானிறைமீனெனமாறுகொண்டவே. (௧௨)

நின்றாத்தடவரையெறியச்சேணிடை
முந்துறத்தெறித்தெழுமுத்தந்தொத்தலால்
அந்தரத்தெழுமுகிலாடையாவகன்
பந்தரொத்தறநெடும்பருதிவானமே. (௧௩)

வேறுவினெடுவரைவிசமீமிசை
சேறுறுதிவலையானனைந்தசெந்துகில்
பூணுறமல்குலிற்பொருந்திப்போதலா
னாணினர்வானவர்நாட்டுநங்கைமார். (௧௪)

தேனிவர்தடவரைத்திரைக்கருங்கட
லொலியிர்தாவிடைகுவியத்தன்னாநீர்
மேனியிர்திவலைமீச்சென்றுமீண்டலால்
வானவர்நாட்டினுமழைபொழிந்தவால். (௧௫)

வேறு.

மையுறுமலைகளோடுமறிகடல்வந்துவீழ்ந்த
வெய்யவாய்மகரம்பற்றவெருவினவிளைப்பமேனாட்
பொய்கையினிடங்கர்கவ்வப்புராதனாபொற்றியென்று
கையெடுத்தழைத்தயானைபோன்றனகளிநல்யானை. (௧௬)

அசம்புபாய்தேனும்பூவுமாரமுமகிலுமற்றும்
விசும்பெலாமுலவுந்தெய்வவேரியின்மிடைந்துவிம்மத்
தசம்பெலாம்வாசமூட்டிச்சார்த்தியதண்ணீரொன்னப்
பசும்புலானாறும்வேலைபரிமளங்கமழ்ந்ததன்றே. (௧௭)

தேமுதற்கனியுங்காயுந்தேவிரேனோர்தெய்வப்
பூமுதலாயவெல்லாமீன்கொளப்பொலிந்ததன்றே
மாமுதற்றருவோடொக்கும்வானுயர்மானக்குன்றம்
தாமுதலோடுங்கெட்டாலொழிவரோவண்மைதக்கோர். (௧௮)

மன்னுறச்சேற்றுட்புக்குச்சுரிக்கின்றமாலைக்குன்றம்
கன்னிறைபோதுங்காயுங்கனிகளும்பிறவுங்கவ்வி
யெண்ணிறைமீன்களெல்லாம்வறியவமொன்னமேன்மேல்
உண்ணிறைசெல்வால்காதொளிக்கின்றவுலோபரொத்த. (௧௯)

கறங்கெனத்திரியும்வேகக்கவிக்குலங்கறவவாங்கிப்
பிறங்கிருங்கடலிற்பெய்தபோதத்தும்பெரியபாந்தண்
மறங்கிளர்மானயானைவயிற்றினவாகவாய்சோர்ந்
துறங்கினகேடுற்றுலுமுணர்வரோவுணர்விலாதார். (௨௦)

இழையெனத்தகையமின்னினெயிற்றினமுழக்கமெய்தப்
புழையுடைத்தடக்கையொன்றோடொன்றிடைபொருந்தச்சுற்றிக்
கழையுடைக்குன்றின்முன்றிலுருமொடுகலந்தகால
மழையெனப்பொருதவேலைமகரமுமத்தமாவும். (௨௧)

பொன்றினசிறியவாயபுண்ணியம்புரிந்தோர்போலக்
குன்றுகள்குரக்குவீரர்குவித்தனர்நெருப்புக்கோப்ப
வொன்றின்மேலொன்றுவீழவுதைத்தெழுந்தும்பர்நாட்டிச்
சென்றுமேலிடம்பெறாதுதிரிந்தனசிகரச்சில்லி. (௨௨)

கூருடையெயிற்றுக்கோண்மாச்சுறவினமெதிர்ந்துகொல்லப்
போருடையரியும்வெய்யபுலிகளும்யாளிப்போத்தும்
நீரிடைத்தோற்றவன்றேதந்நிலைநீங்கிற்றென்றால்
ஆரிடைத்தோலார்தங்களறிவிடைநோக்கினம்மா. (௨௩)

ஒள்ளியவுணர்வுகூடவுதவலொனினுமொன்றே
வள்ளியராயோர்செல்வமன்னுயிர்க்குதவுமன்றே
துள்ளினகுதித்தமானத்தும்பர்தங்குவட்டிற்றூங்குங்
கள்ளினைநிறையமாந்திக்கவியெனக்களித்தமீன்கள். (௨௪)

முசெரிபிறக்கமீக்கொண்டிறக்கியமுடிக்கந்தன்னுற்
கோசொரிநறவமென்னத்தண்புனலுகுக்குங்குன்றின்
வேய்சொரிமுத்துக்கம்மாவிருந்துசெய்திருந்தவீண்ட
வாய்சொரியிப்பியோடும்வலம்புரியுமிழ்ந்தமுத்தம். (௨௫)

வேறு.

விண்டலந்தொடுமால்வரைவேரொடுங்
கொண்டலங்கொளவீரர்குவித்தலாற்
றிண்டலங்கடலானதுநீர்செல
மண்டலங்கடலர்கிமறைந்தவே. (௨௬)

ஐயன்வேண்டினதுவிதுவாமன்றே
வெய்யசீயமும்யாளியும்வேங்கையு
மொய்கொள்குன்றின்முதலினமொய்த்தலா
னெய்தல்வேலிகுறிஞ்சிநிகர்த்தவால். (௨௭)

யாறுறுதனவில்லையென்னவே
நீறுறுதனவெள்ளிதுசெய்யுமே
மாறுறுதநிரைக்கடல்வாழ்தரு
மீறுறுதனவில்லைவிலங்கரோ. (உஅ)

வவ்விலங்குவளர்த்தவர்மாட்டருள்
செல்விலங்கலில்சிந்தையிற்றிருமோ
விவ்விலங்கல்விடோமிலியென்பபோ
லெவ்விலங்கும்வந்தெய்தினவேலையே. (உகூ)

கனிதருங்கெடிங்காய்தருநாடொறு
மிளிதருந்தவநோய்தினியற்றலாற்
பனிதருங்கிரிதம்மனம்பற்றறு
முனிவரும்முனியார்முடிவுன்றுவார். (௩0)

புலையின்வாட்கையரக்கர்பொருப்புளார்
தலையின்மெல்வைத்தகையினர்சாற்றுவார்
மலையிலேமற்றுமாநினிவாழ்வதோர்
நிலையிலோமென்றிலங்கைநெருக்குவார். (௩க)

முழுக்கரீற்புகாமுழுகிச்செலாக்
குழுக்களோடணைகோளரியாளிக
ளிழுக்கில்பேரணையின்னிருபக்கமும்
ஒழுக்கின்மாலைவகுத்தனவொத்தவால். (௩உ)

பளிக்குமால்வரைமுந்துபடுத்தன
ஞெளிக்குமாழிகிடந்தனவோர்கிலா
வெளிக்குமால்வரைவேண்டுமெனக்கொணர்ந்
தளிக்கும்வானரவீரரநேகரால். (௩௩)

பாரிளுண்முறுகுர்நெடும்பாம்பட
மூரிவானரம்வாங்கியமொய்ம்மலை
வேரிளுமெனவெம்முழையின்றுழை
சோருநாகநிலறுறத்தூங்குமால். (௩௪)

அருணச்செம்மணிக்குன்றயலேசில
விருணற்குன்றமடுக்கினவேய்ந்தன
கருணைக்கொண்டல்வதியன்கழுத்தென
வருணற்கேந்தவருணசரத்தையே. (௩ரு)

ஏய்ந்ததம்முடம்பிட்டவுயிர்க்கிட
மாய்ந்துகொள்ளுமதிஞரிளுழ்கடற்
பாய்ந்தபண்டுறையும்மலைப்பாந்தள்கள்
போந்தமாமலையின்முழைபுக்கதே. (௩௬)

சேதுவின்பெருமைக்கிணைசெப்பவோ
ரோதவேண்டுமென்றென்னுவதென்கொலோ
தூதனிட்டமலையின்றுவலையால்
மீதுவிட்டுலருற்றதுமீன்களும். (௩எ)

நீலனிட்டநெடுவரைநீணில
மூலமுட்டலின்மொய்புனல்கைமிகுங்
கூலமிட்டியவார்கலிகோத்ததால்
ஓலமிட்டெழுந்தோடியுலகெலாம். (௩அ)

மயிந்தனிட்டநெடுவரைவானுற
வுயர்ந்துமுட்டிவிழவெழுந்தோதநீர்
தியந்தமுட்டத்திசைநிலையானையும்
பெயர்ந்துவிட்டவையாவும்பிளிறுவ. (௩௯)

இலக்குவன்சரமாயினுமென்றெதிர்
விலக்கினும்விலங்காதவிலங்கலால்
அலக்கணெய்தியயிர்த்தெழவாழியைக்
கலக்கினுன்மகன்மீளக்கலக்கினுன், (௪0)

மருத்தின்மைந்தன்மணிநெடுந்தோளெனப்
பெருத்தகுன்றங்கரடிப்பெரும்படை
விருத்தனிட்டவிசையினின்வீசிய
திருத்தம்வானவர்சென்னியிற்சென்றவால். (௪௧)

குமுதனிட்டகுலவரைகூத்தரிற்
திமிர்தமிட்டுத்திரியுந்திரைக்கடற்
றுமிர்தமூர்புகவானவர்துள்ளினர்
அமிர்தமின்னமெழுமெனுமாசையால். (௪௨)

கனசினத்துருமிற்கடுங்கார்வரை
பனசனிட்டனயாவும்பரிக்கிலா
மனசினத்தவனந்தனவாழ்விகந்
தனசினத்தொழின்மேற்கொள்வதாயினுன், (௪௩)

எண்ணினெண்கினமிட்டகிரிக்குலம்
உண்ணவுண்ணச்சென்றுன்றினேடொன்றுறச்
சுண்ணமுண்பொடியாகித்தொலைந்தன
புண்ணியம்பொருந்தாதமுயற்சிபோல். (௪௪)

ஆரவாயிரயோசனையாழமுந்
தீரநீண்டுபரந்ததிமிங்கலம்
பாரமால்வரையேறப்பதைத்துடல்
பேரவேகுன்றும்வேலையும்பேர்ந்தவால். (௪௫)

குலைகொளக்குறிநோக்கியகொள்கையான்
சிலைகளொக்கமுறிந்துச்செறிந்தகோர்
மலைகளொக்கவடுக்கிமணற்படத்
தலைகளொக்கத்தடவுந்தடக்கையால். (௪௬)

தழுவியாயிரகோடியர்தாங்கிய
குழுவின்வானரர்தந்தகிரிக்குலம்
எழுவினீள்கரத்தேற்றிடவிற்றிடை
வழுவிவீழ்வனகால்களின்வாங்குவான், (௪௭)

மலைசுமந்துவருவனவானரம்
நிலையினின்றனசெல்லநிலம்பெரு
வலைநெடுங்கடலன்றியுமாண்டுதந்
தலையின்மேலொருசேதுவுந்தந்தபோல். (௪௮)

பருத்தமால்வரையேந்தியபல்படை
நிரைத்தலிற்சிலசெல்லநிலம்பெருக்
கரத்தினேந்தியகார்வரைகண்ணகன்
சிரத்தின்மேற்கொண்டுநீந்தினசென்றவால். (௪௯)

ஆய்ந்துநீளமரிதுசுமந்தன
வோய்ந்தகால்கள்பசியினுலர்ந்தன
வேந்துமால்வரைவைத்தவற்றீண்டுதேன்
மாந்திமாந்திமறந்துதுயின்றவால். (௫0)

போதல்செய்குநரும்புகுவார்களு
மாதிரந்தொறும்வானரவீரர்கள்
சேதுவெத்துணைசென்றதென்றார்சிலர்
பாதிசென்றதெனப்பகர்ந்தார்சிலர். (௫௧)

குறைவில்குங்குமமுங்குளைத்தேன்களும்
நிறைமலர்க்குலமுந்நிறைந்தெங்கணும்
அறைதொறுங்கிரிதூக்கினதோய்தலால்
நறைநெடுங்கடலொத்தனநாமநீர். (௫௨)

நெடும்பன்மால்வரைதூர்த்துநெருக்கவுந்
துடும்பவ்வேலைதுளங்கியதில்லையா
லிடும்பையெத்தனையும்படுத்தெய்தினும்
குடும்பந்தாங்குங்குடிப்பிறந்தாரினே. (௫௩)

கொழுந்துடைப்பவளக்கொடியின்குலம்
அழுந்தவுய்த்தவடுக்கறகர்ந்தயல்
விழுந்தபன்மணியின்னொளிமீமிசை
எழுந்தவெங்கணுமிந்திரவில்லினே. (௫௪)

பழுமரம்பறிக்கப்பறவைக்குலம்
தழுவின்றொருவன்றனிதாங்குவான்
விழுநலும்புகல்வேறிடமின்மையால்
அழுதரற்றுங்கிளையெனவானவால். (ருரு)

தாவலோவலமென்றறுதாங்கிய
மாவெலாங்கடல்வீழ்தலும்வண்டெலாங்
காவலாளர்விழக்கலைகண்ணிலா
வேவலாளரினெங்குந்திரிந்தவால். (ருசு)

தொக்கடங்கலவோடுந்துவலைகள்
மிக்கடங்கலும்போவனமீன்குலம்
அக்கருங்கடறூரவயற்கடற்
புக்கடங்கிடப்போவனபோன்றவே. (ருஎ)

மூசுவண்டினமும்மதயானையி
னோசைகொண்டனபோற்றொடர்ந்தாடின
வோசையொண்கடற்குன்றொடவைபுக
வேசைமங்கையராமெனமீண்டவே. (ருஅ)

நிலமரங்கியவேரொடுநேர்பறித்
தலமருந்துயரெய்தியவாயினும்
வலமரங்களைவிட்டிலமாசிலாக்
குலமடந்தையரொன்னக்கொடிகளே. (ருகூ)

அப்புறக்கடறூயதுவலையா
லப்புறக்கடலுஞ்சுவையற்றன
வெப்புறத்துருமேறுங்குளிர்ந்தன
வுப்புறைத்தனமேகமுகுத்தநீர். (சுo)

முதிர்நெடுங்கிரிவீழமுழங்குநீ
ரெதிரெழுந்துநிரந்தரமெய்தலால்
மதியவன்கதிரிற்குளிர்வாய்ந்தன
கதிரவன்கனல்வெங்கதிர்க்கற்றையே. (சுக)

நன்கொடித்துநறுங்கிரிசிந்திய
பொன்கொடித்துவலைப்பொதிந்தோடுவ
வன்கொடிப்பவளங்கள்வயங்கலால்
மின்பொடித்ததுபோன்றனவிண்ணெலாம். (சுஉ)

ஓடுமோட்டறுமொன்றின்முன்னொன்றுபோய்க்
காடுநாடுமரங்களுங்கற்களு
நாடுநாட்டுநெளிர்கடனுட்டிலோர்
பூடுமோட்டலிலாயபொருப்பரோ. (சுங)

வரைப்பரப்பும்வனப்பரப்பும்மூவர்த்
தரைப்பரப்புவதென்னத்தனித்தனி
புரைப்பரப்புமுறுகிரியொண்கவிக்
கரைப்பரப்புக்கடற்பரப்பானதால். (௬௪)

உற்றதாலனையோங்கலிலங்கையை
முற்றமூன்றுபகலிடைமுற்றவும்
பெற்றவார்ப்புவிசும்பிளந்ததால்
மற்றிவானம்பிறிதொருவான்கொலோ. (௬௫)

நாடுகின்றதென்வேறொன்றுநாயகன்
றேடுசேர்குழலாடியர்நீக்குவா
றேடுமென்முதுகிட்டெனவோங்கிய
சேடனென்னப்பொலிந்ததுசேதுவே. (௬௬)

மெய்யினீட்டத்திலங்கையர்மென்மகள்
பொய்யினீட்டியதீமைபொறுக்கலா
தையனீட்டியசேனைகண்டன்பினாற்
கையைநீட்டியதன்மையுங்காட்டுமால். (௬௭)

கானயாறுபாய்ந்தகருங்கடல்
ஞானநாயகன்சேனைநடத்தலா
லேனையாறினியாமலதாரென
வானயாறிம்பர்வந்ததுமானுமால். (௬௮)

கற்கிடந்தொளிர்காசினங்காந்தலால்
மற்கடங்கள்வருத்தவயங்கலை
யெற்கடந்தவிருளிடையிந்திரன்
விற்கிடந்தனவென்னவிளங்குமால். (௬௯)

ஆனபேரணையன்பினமைத்தனர்
ஞானவாழ்க்கைக்கவிக்குலநாதனு
மானவேலையிலங்கையர்மன்னனு
மேனையோருமிராமனையெய்தினர். (௭௦)

எய்தியோசனையீண்டொருநூறிவை
யையிரண்டினகலமமைந்திடச்
செய்ததாலணையென்றதுசெப்பினர்
வையநாதன்சரணம்வணங்கியே. (௭௧)

சேதுபந்தனப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௬௮௭.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஆண்டகையுமன்பினொடுகாதலயிர்தூற
நீண்டகையினானளனைநெஞ்சினொடுபுல்லி
யீண்டவெழுகென்றனனிழைத்தபடியெல்லாங்
காண்டலதன்மேனெடியகாதன்முதிர்கின்றான். (௧)

பண்டையுறையுட்கெதிர்படைக்கடலின்வைகுங்
கொண்டலெனவந்தவனையக்குறுகிநின்றான்
அண்டமுதல்வன்னொருதனுவிய்னையாளைக்
கண்டனனெனப்பெரியகாதன்முதிர்கின்றான். (௨)

நின்றுநெடிதுன்னியநினைக்கடனிரம்பக்
குன்றுகொடடைத்தனைகுயிற்றியதொர்கொள்கை
யன்றுலகுதந்தமுதலந்தணனமைத்தான்
என்றபொழுதின்கணுமிதென்றியலுமென்றான். (௩)

ஊழிமுதனாயகன்வியப்பினொடுவந்தா
னூழ்முறைசெய்யுமளவேயினியதொன்றோ
வாழியினிலங்கைபெரிதத்திசையதாமே
லேழுகடலுங்கடிதடைப்பனிவனென்றான். (௪)

என்றுநளனைக்கருணையிற்றழுவியன்பா
யன்றுவருணன்னுதவுமாரமுமளித்துத்
துன்றுகதிர்பொற்கலனுமற்றுளதொகுத்தே
வென்றியினியென்றுபடையோடுடன்விரைந்தான். (௫)

நெற்றியினரக்கர்பதிசெல்லநிறைநன்னூல்
கற்றுணருமாருதிகடைக்குழைவரத்தன்
வெற்றிபுணர்தம்பியொருபின்புசெலவீரப்
பொற்றிரள்புயக்கருநிறக்களிறுபோனான். (௬)

இருங்கவிகொள்சேனைமணியாரமிடறத்தன்
மருங்குவளர்தண்டலைவயங்குதிரைமான
வொருங்குநனிபோயினவுயர்ந்தகரையூடே
கருங்கடல்புகப்பெருகுகாவிரிகடப்ப (௭)

ஓதியகுறிஞ்சிமுதலாயநிலமுள்ள
கோதிலவருந்துவனகொள்ளையின்முகந்தற்
றியாதுமொழியாவகைசுமந்துகடலெய்தப்
போதலுறுமன்னபடைபொன்னியெனலான. (௮)

ஆயதுநெருங்கவடியிட்டடியிடாமற்
றேயுநெறிமாடுதிரையூடுவிசைசெல்லப்
போயசிலபொங்குதொறுபொங்குதொறுபூசற்
பாய்புரவியிற்படர்வபோலினிதுபாய்வ. (௯)

மெய்யிடைநெருக்கவிசையுற்றவயல்வீழும்
பொய்யிடமிலாதபுனலிற்புகலிலாத
வுய்யிடமளிக்குமருளாளர்முறையுய்த்தார்
ஐயினிடைசென்றுகரைகண்டகவியில்லை. (௧௦)

இழைத்தனையவெங்கதிரின்வெஞ்சுடரிராமன்
மழைத்தமுகிலன்னமணிமேனிவருடாமற்
றழைத்தநிழலுற்றகுளிர்சந்தனமுயர்ந்த
வழைத்தவையெடுத்தருகுசென்றனரநேகர். (௧௧)

ஓமநெறிவாணர்மறைவாய்மையொருதானே
யாமரசர்மைந்தர்திருமேனியலசாமே
பூமாலிருந்தவைபொருந்துவபொருத்திச்
சாமரையின்வீசினர்படைத்தலைவர்தாமே. (௧௨)

மருங்கடைவளர்ந்தமுலைமங்கைமணமுன்று
வருங்கடகமங்கையினில்வள்ளலிளைநின்று
நெருங்கடலுயர்ந்தபடர்தானையொடுமோதத்
திருங்கடல்கடந்துகரையேறினனிராமன். (௧௩)

பெருந்தவமுயன்றமரர்பேணியதவத்தால்
மருந்தனையதம்பியொடும்வன்றுணைவரோடும்
அருந்ததியும்வந்தனைசெயஞ்சொலிளவஞ்சி
யிருந்தநகரின்புறனொர்குன்றிடையிருந்தார். (௧௪)

வேறு.

நிலைநெடிதுநோக்கிநேமியோன்விளையநீரம்
பால்வருசேனைக்கெல்லாமிழைத்தியாற்பாடியென்றுக்
கால்வளைவணங்கிப்போனான்கல்லினாற்கடலைக்கட்டி
நாலைவழிசெய்தானுக்கங்கிலைநொய்திற்சொன்னான். (௧௫)

பொன்னினுமணியினாலுநான்முகன்புனைந்தபொற்பி
னன்னலமாகவாங்கோன்முகச்சதுரநாட்டி
இன்னவொன்றெனாதவண்ணமிறைவற்கும்பிறர்க்குமெல்லாம்
நன்னகர்நொய்திற்செய்தான்றுதையுநாளுட்கொண்டான். (௧௬)

வில்லினார்க்கிருக்கைசெய்யும்விருப்பினாற்பொருப்பின்வீங்கும்
கல்லினாற்கல்லையொக்கக்கடாவினான்கழைகளான
செல்லினாலலைக்குங்காலுமிரப்பினான்றருப்பையென்னும்
புல்லினார்ந்தொடுத்துவாசப்பூவினான்மேய்ந்துபோனான். (௧௭)

வாயினுமனத்தினானும்வாழ்த்திமன்னுயிர்கட்கெல்லாந்
தாயினுமன்பினானைத்தானுறவணங்கித்தத்தம்
மனையிருக்கைநோக்கியெண்டிசைமருங்கும்யாரும்
போயினர்பன்னசாலையிராமனுநொய்திற்புக்கான். (௧௮)

பப்புரோயவீரர்பருவரைகடலிற்பாய்ச்சத்
அப்புரோயனுயசுடர்களுங்கறுக்கவங்கிட்
டுப்புரோகத்துட்டோய்ந்தவொளிநிறம்விளங்கவப்பா
லப்புரோடுவான்போலருக்கனுமத்தஞ்சேர்ந்தான். (௧௯)

மாலுறுகுடகவானின்வயங்கியவந்துதோன்றும்
பாலுறுபசுவெண்டிங்கள்பங்கயநயனத்தண்ணல்
மேலுறுபகழிவாங்கிவெருண்டனன்விரைவின்வந்த
காலுறவளைத்தகாமன்வில்லெனக்காட்டிற்றன்றே. (௨௦)

நாற்றிதழ்க்கமலந்தந்தநுண்ணறுஞ்சுண்ணமுண்ணத்
தீற்றிமென்பனிநீர்தோய்ந்தசீகரத்தென்றலென்னுங்
காற்றினுமாலையானகனலினுங்காமவாளிக்
கூற்றினும்வெம்மைகாட்டிக்கொதித்ததக்குளிர்வெண்டிங்கள். (௨௧)

செயிர்ப்பினுமழகுசெய்யுந்திருமுகத்தணங்கைத்தீர்ந்து
துயிற்சுவைமறந்தான்றோளிற்றுய்நிலாத்தழுவுந்தோற்ற
மயிற்குலம்பிரிந்ததென்னமாகதமலைமேன்மெள்ள
வுயிர்ப்புடைவெள்ளைப்பிள்ளைவாளராவூர்வபோன்ற. (௨௨)

மன்னெடுநகரமாடேவருதலால்வயிரச்செங்கைப்
பொன்னெடுந்திரடோளையன்மெய்யுறப்புழுங்கிநைந்தான்
பன்னெடுங்காதத்தேயுஞ்சுடவல்லபவளச்செவ்வா
யன்னெடுங்கருங்கட்டையையணுகினுற்றணிவதுண்டோ. (௨௩)

இற்றதுகாலமாகவிலங்கையர்வேந்தனேவ
ஒற்றர்வந்தளவுநோக்கிக்குறாங்கெனவுழல்கின்றாரைப்
பற்றினனென்பமன்றோபண்டுதான்பலநாட்செய்த
நற்றவப்பயன்றந்துய்ப்பமுந்துறப்போந்தநம்பி. (௨௪)

பேர்வுறுகவியின்சேனைப்பெருங்கடல்வெள்ளந்தன்னுள்
ஓர்வுறுமனத்தனாகியொற்றரையுணர்ந்துகொண்டான்
சேர்வுறுபாலின்வேலைச்சிறுதுளிதெரித்தவேறு
நீரினைவேறுசெய்யுமன்னத்தினரனானான். (௨௫)

பெருமையுஞ்சிறுமைதானுமுற்றுறுபெற்றியாற்ற
வருமையினகன்றுநீண்டவிஞ்சையுளடங்கித்தாமும்
உருவமுந்தெரியாவண்ணமொளித்தனருறையுமாயத்
திருவனையொருங்குகாணும்யோகியுமென்னலானான். (௨௬)

கூட்டியவிரற்றிண்கையாற்குரங்குகளிரங்கக்குத்தி
மீட்டொருவினைசெய்யாமன்மாணையின்கொடியால்வீக்கிப்
பூட்டியகையர்வாயாற்குருதியேபொழிகின்றாரைக்
காட்டினன்கள்வரென்னாக்கருணையங்கடலுங்கண்டான். (௨௭)

பாம்பிறைப்பள்ளிவள்ளல்பகைஞனென்றுணரான்பல்லோர்
தோம்பிழைசெய்தகொல்லோகுரங்கெனவிரங்கிநோக்கித்
தாம்பிழைசெய்தாரேனுந்தஞ்சமென்றடைந்தோர்தம்மை
நாம்பிழைசெய்யலாமோகவியனீர்விடுதிரென்றான். (௨௮)

அகனுறப்பொலிந்தவள்ளல்கருணையாலருதகண்ணன்
நகிறைகாவின்வைகுநம்பினத்தவருமல்லர்
தகிறைவில்லாவுள்ளத்திராவணன்றந்தவொற்றர்
சுகனிவனவனுஞ்சாரனென்பதுந்தெரியச்சொன்னான். (௨௯)

கல்விக்கண்மிக்கோன்சொல்லக்கருமனகிருதக்கள்வர்
வல்வித்தைவீரமற்றிவ்வானரர்வலியைநோக்கி
வெல்விக்கையரிதென்றெண்ணிவினையத்தாலெம்மையெல்லாய்
கொல்விக்கவந்தான்மெய்ம்மைகுறால்குறாங்கொள்கவென்றார். (௩௦)

கள்ளரோசாண்டியென்றுமந்திரக்கருத்துட்கொண்டான்
றெள்ளியதெரிக்குந்தெய்வர்தீர்வினைசேர்தலோடும்
அள்ளியிளிரதந்தோய்ந்துதொன்னிறங்கரிந்துவேறாய்
வெள்ளியோடிருந்தசெம்புமாமெனவேறுபட்டார். (௩௧)

மின்குலாமெயிற்றராவெருவியவெற்பினின்ற
வன்கணார்தம்மைநோக்கிமணிநகைமுறுவலோன்றப்
புன்கணார்புன்மைநீக்கும்புரவலன்போந்ததன்மை
யென்கொலாந்தெரியவெல்லாமியம்புதிரஞ்சலென்றான். (௩௨)

தாய்தெரிந்துலகுகாத்ததவத்தியைத்தன்னைக்கொல்லும்
நோய்தெரிந்துணரான்றேடிக்கொண்டனனுவலவென்று
வாய்தெரிந்துணராவண்ணங்கழறுவார்வணங்கிமாய
வேய்தெரிந்துணராக்கவந்தோம்வினையினுல்வீரவென்றார். (௩௩)

எல்லையிலிலங்கைச்செல்வமினையவற்கீந்ததன்மை
சொல்லுதிர்மகரவேலைகவிக்குலவீரர்ஆர்த்த
கல்லினிற்கடந்தவாறுங்கழறுதிர்காலந்தாழ்த்த
வில்லினர்வந்தாரொன்றும்விளம்புதிர்விளம்பலாதீர். (௩௪)

கொத்துறுதலையான்வைகுங்குறும்புடையிலங்கைக்குன்றம்
தத்துறுதடநீர்வேலைதவிரொருசிறையிற்குத
லொத்துறவுணர்ந்திலாமையுயிரொடுமுறவினோடும்
இத்துணையிருந்ததென்றுந்தன்மையுமியம்புவீரால். (௩௫)

சண்டங்கொள்வேகமாகத்தனிவிடையுவணந்தாய்குன்
துண்டங்கொள்பிறையான்மௌலித்துளவினோடுந்தொல்லை
யண்டகளவையுந்தாக்கிக்காப்பினுமறமிலாதான்
கண்டங்கள்பலவுங்காணக்காண்பதுங்கழறுவீரால். (௩௬)

தீட்டுறுமழுவாள்வீரன்றாதையைச்செற்றார்சுற்ற
மாட்டியவண்மையென்னவருக்கமுமற்றமுற்றும்
வீட்டியென்றாதைக்காகமெய்ப்பலிவிசும்புளோருக்
கூட்டுவனுயிர்கொண்டென்னும்வார்த்தையுமுணர்த்துவீரால். (௩௭)

தாழ்விலாத்தவத்தோர்தையறனியொருசிறையிற்றாகச்
சூழ்விலாவஞ்சஞ்சூழ்ந்ததன்னைத்தன்சுற்றத்தோடும்
வாழ்வெலாந்தம்பிகொள்ளவயங்கெரிநரகமென்னு
மீள்விலாச்சிறையின்வைப்பேனென்பதும்விளம்புவீரால் (௩௮)

நோக்கினிர்தானையெங்குநுழைந்தீரினிவேறொன்று
மாக்குவதில்லையாயினஞ்சலென்றஃதுண்டன்றே
வாக்கினின்மனத்திற்கையின்மற்றினிவலியாவண்ணம்
போக்குமின்விரைவினென்றானுய்ந்தனமென்றுபோனார். (௩௯)

வேறு.

அரவமாக்கடலஞ்சியவச்சமு
முரவுநல்லணையோட்டியவூற்றமும்
வரவுநோக்கியிலங்கையர்மன்னவ
னிரவினெண்ணிடம்வேறிருந்தானரோ. (௪௦)

வார்குலாமுலைமாதருமைந்தரும்
ஆருநீங்கவறிஞரோடேகின்றான்
சேர்கவென்னிலலாவன்றுதென்றலுஞ்
சார்கிலாநெடுமந்திரச்சாலையே. (௪௧)

உணர்வினெஞ்சினருமருளாப்பொருள்
புணருங்கேள்வியரல்லர்பொறியிலர்
கொணருங்கூனர்குறளர்கொழுஞ்சுடர்
துணருநல்விளக்கேந்தினர்சுற்றினார். (௪௨)

நணியர்வந்துமனிதர்நமக்கினித்
துணியுங்காரியம்யாதெனச்சொல்லினான்
பணியுந்தானவராதியர்பன்முடி
மணியினால்விளங்கும்மணித்தாளினான். (௪௩)

காலவெங்கனல்போலுங்கணைகளால்
வேலைவெந்துநடுங்கிவெயிற்புனை
மாலைகொண்டுவணங்கினவாறெலாம்
சூலமென்னவென்னெஞ்சைத்தொளைக்குமால். (௪௪)

கிழிபடக்கடல்கீண்டதுமாண்டது
மொழிபடைத்தவலியெனமூண்டதோர்
பழிபடைத்தபெரும்பயத்தன்னவன்
வழிகொடுத்ததென்னுள்ளம்வருந்துமால். (௪௫)

படைத்தமால்வரையாவும்பறித்தவேர்
தொடைத்தவானரவீரர்தந்தோள்களைப்
புடைத்தவாறும்புணரியைப்போக்கற
வடைத்தவாறுமென்றுள்ளத்தடைத்ததால். (சசு)

கார்த்தவெஞ்சினவீரர்கணக்கிலார்
தார்த்தமாற்றலுக்கேற்றதாத்தர
வேர்த்தவெற்பையொருவன்விரல்களால்
ஏந்தியிட்டதென்றுள்ளத்தினிட்டதால். (சஎ)

சுட்டவாகண்டுந்தொன்னகர்வேலையைத்
தட்டவாகண்டுந்தாவற்றதெவ்வரைக்
கட்டவாகண்டுங்கண்ணெதிரேவந்து
விட்டவாகண்டுமேலென்னவேண்டுமோ. (சஅ)

என்றுதாயைப்பயந்தோளியம்பலுந்
நின்றவாயைவிழிவழிநீயுக
நன்றுநன்றுநம்மந்திரான்றெனு
வென்றும்வாழ்த்தியிளவலோடேகென்றான். (சகூ)

ஈனமேகொலிதமெனவெண்ணுரு
மோனமாயிருந்தனன்மூத்திரு
ஞானகாலையடியினிறைஞ்சிய
சேனைநாதனினையனசெப்பினான். (ருo)

கன்மையிற்கர்வேலைகடந்தவத்
இன்மையொன்றுமலாத்திசைக்காவல
ஒண்மரும்பியவற்கேவல்செய்கின்றவவ்
வுண்மையொன்றுமுணர்ந்திலைபோலென்றான். (ருக)

கூசிவானரங்குன்றுகொடுகடல்
வீசினுமொரும்வீரம்விளம்புவா
பூசிவேரொடுமோங்கலையோங்கிய
ஈசனோடுமெடுத்ததுமில்லையோ. (ருஉ)

அதுகொடென்சிலவாரமர்மேலினி
மதிகெடுந்தகையோர்வந்துநாமுறை
பதிபுகுந்தனர்தம்மைப்படுப்பதோர்
விதிகொடுந்தவிளைந்ததுதானென்றான். (ருங)

முற்றுமுடியகஞ்சுகன்முட்டிய
வெற்றனற்பொறிக்கண்ணினன்வேத்திரம்
பற்றுமங்கையினன்படிசாரின்
செற்றார்வந்தனனென்னவுணர்த்தினான். (ருச)

மனக்கண்வந்தவன்பாதம்வணங்கினார்
பனைக்கைவன்குரங்கின்படர்சேனையை
நினைக்குந்தோறுந்திடுக்கிடுநெஞ்சினார்
கனைக்குந்தோறுமுதிரங்கள்கக்குவார். (௫௫)

வெள்ளவாரிவிரிவோடவ்வீடணன்
றள்ளவாரிநிலைமையுந்தாபத
ருள்ளவாறுமுறைமையினென்றுனுயிர்
கொள்ளவாய்வெருவுங்கொடுங்கூற்றனன். (௫௬)

அடியமநெடுஞ்சேனையையாலசயால்
முடியநோக்கலுற்றேமுறுவேலையின்
படியைநோக்கியபாரம்படர்குற்ற
கடியவேகக்கலுழனிற்கண்டிலம். (௫௭)

றுவலயாமவர்வேண்டியநோக்கதோ
கவலைவேலையெனுங்கரைகண்டிலா
தவலமெய்தியடைத்துழியார்த்தெழும்
துவலையேவந்துசொல்லியதில்லையோ. (௫௮)

எல்லைநோக்கவுமெய்தலதாமெனுஞ்
சொல்லைநோக்கியமானிடன்றோளெனும்
கல்லைநோக்கிக்கணைகளைநோக்கித்தன்
வில்லைநோக்கவும்வெந்ததுவேலையே. (௫௯)

தாருலாமணிமார்பநின்றம்பியே
தேருலாவுகதிருந்திரிந்துதன்
பேருலாவுமளவினும்பெற்றன
வீருலாவுமிலங்கைநெடுந்திரு. (௬0)

சேதுபந்தனஞ்செய்தனனென்றதிப்
போதுவந்தபுதுவலியோவொரு
ஆதுவந்தவன்றோள்வலிசொல்லிய
வேதுவந்தமிலாதவிருக்கையே. (௬௧)

மருந்துதேவரருந்தியமாலைவாய்
இருந்ததானவர்தம்மையியைந்துமுன்
பெருந்திண்மாயற்குணர்த்தியபெற்றியிற்
றெரிந்துகாட்டினனும்பிசினத்தினன். (௬௨)

பற்றிவானரவீரர்பணைக்கையால்
எற்றியெங்களையேநெடுந்தோளுறச்
சுற்றியீர்த்தலைத்துச்சுடர்போலொளி
வெற்றிவீரரிற்காட்டிவிளம்பினன். (௬௩)

சாங்கனிங்வெற்றிப்பல்டோராணுடை
வாங்கல்லிக்குவனென்றனன்மற்றெமைக்
குராங்கலாமைதெரிந்துமக்கொற்றவ
னிரக்கவுய்ந்தனமீநெங்களொற்றென்றார். (௬௪)

மற்றும்யாவையும்வாய்மையும்வானவல்
சொற்றயாவையுஞ்சோர்வின்றிச்சொல்லினார்
குற்றம்யாவையுங்கோளொடுநீங்குக
விற்றைநாண்முதலாயுவுண்டாகென்றார். (௬௫)

ஒற்றுக்கேள்விப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௭௫௨.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

௬ - வது—இலங்கைகாண்படலம்.

வைதெனக்கொல்லும்வித்தைமானிடர்மகரநீரை
நொய்தினினடைத்துமானத்தானையானுவன்றாம்மு
ரெய்தினரென்றபோதின்வேறினியெண்ணவேண்டும்
செய்திறனுண்டோவென்னச்சேனைக்காவாளன்செப்பும். (௧)

விட்டனமாதையென்றபோதினும்வெருவிவேந்தன்
பட்டதென்றிகழ்வர்வின்றோர்பற்றியும்பகையைத்தீர
வொட்டலாம்போரினென்றொட்டினுமும்பியொட்டான்
கிட்டியபோதுசெய்வதென்னினிக்கிளத்தல்வேண்டும். (௨)

ஆண்டுசென்றரிகளோடுமனிதரையமரிற்கொன்று
மீண்டுநம்மிருக்கைசேர்துமென்பதுமேற்கொண்டேமே
லீண்டுவந்திறுத்தாரொன்றுமீதலாதுறுதியுண்டோ
வேண்டியதெய்தப்பெற்றால்வெற்றியின்விழுமிதன்றோ. (௩)

ஆயிரவெள்ளமானவரக்கர்தந்தானையைய
தேயினுமுழிநாறவேண்டுமாற்சிறுமையென்றோ
நாயினஞ்சீயங்கண்டதாமெனநடப்பதல்லால்
நீயுருத்தெழுந்தபோதுகுரங்கெதிர்நிற்பதுண்டோ. (௪)

வந்தவர்தானையோடுமறிந்துமாக்கடலில்வீழ்ந்து
சிந்தினரிரிந்துபோகச்சேனையும்யானுஞ்சென்று
வெந்தொழில்புரியுமாறுகாணுதிவிடையீகென்ன
இந்திரன்முதுகுகண்டவிராவணற்கேயச்சொன்னான். (௫)

மதிநெறியறிவுசான்றமாலியவானவ்வாய்மை
பொதுநெறியில்லையதாகப்புணர்த்துதல்புலமையென்று
விதிநெறியில்லையதாகவிளம்புகின்றோருமீண்டு
செறுநெறியில்லையின்றோவென்பதுந்தெரியச்சொல்லும். (௬)

பூசற்குமுயன்றுநம்பாற்பொருதிரைப்புணரிவேலைத்
தேசத்துக்கிறைவனான தசரதன்சிறுவன்றன்னை
மாசற்றசோதிவெள்ளத்துச்சியின்வாம்பிற்றோன்று
மீசற்குமீசன்வந்தானென்பதோர்வார்த்தையிட்டார். (௭)

அன்னவற்கிளவறன்னையருமறைப்பாமென்றேதும்.
நன்னிலைநின்றுதீர்ந்தாகவையிலாவுயிர்கடோறும்
தொன்னிலைபிரிந்தானென்னப்பலவகைநின்றதுயோ
னென்றுமிதேவருங்கேட்கவிம்புவரோதியாதோ. (௮)

அவ்வமர்க்கமைந்தவில்லுங்குலவரையவற்றினுன்ற
வெவ்வலிவேறுவாங்கிவிரிஞ்சனேவிதித்தமேனாட்
செவ்வழிநாணுஞ்சேடன்றெரிகணையாகச்சேர்த்திக்
கவ்வயில்காலநேமிக்கணக்கையுங்கடந்ததென்பார். (௯)

வாலிமாமகன்வந்தானைவானவர்க்கிறைவனென்றார்
நீலனையுலகமுண்ணுநெருப்பினுக்கரசனென்றார்
காலனையொக்குந்தூதன்காற்றெனுங்கடவுளென்றார்
மேலுமொன்றுரைத்தாரன்னான்விரிஞ்சனுமினிமேலென்றான். (௧௦)

அப்பதமவனுக்கீந்தானரக்கர்வேரறுப்பதாக
விப்பதியெய்தினானவ்விராமனென்றெவருஞ்சொன்னார்
ஒப்பினாலுரைக்கின்றாரோவுண்மையேயுணர்த்தினாரோ
செப்பியென்குரங்காய்வந்தார்தனித்தனிதேவரென்றார். (௧௧)

ஆயதுதெரிந்தோர்தங்களச்சமோவறிவோயார்க்கும்
சேயவளெளியளென்னாச்சிந்தையினிகழலம்மா
தூயவளமிர்தினோடுந்தோன்றினாளென்றுந்தோன்றாத்
தாயவளுலகுக்கெல்லாமென்பதுஞ்சாற்றுகின்றார். (௧௨)

கானிடைவந்ததேயும்வானவர்கடாவவேயால்
மீனுடையகழிவேலைவிலங்கன்மேலிலங்கைவேந்தன்
றானுடைவரத்தையெண்ணித்தனித்தனிதலைவர்தாமே
மானிடவடிவங்கொண்டாரென்பதோர்வார்த்தையிட்டார். (௧௩)

ஆயிரமுற்பாதங்களிக்குளவடுத்ததென்றார்
சாயினுமுயிர்க்குநல்லாளிருந்துழியறியத்தக்கோ
னேயினதூதனெற்றப்பற்றுவிட்டிலங்கைத்தெய்வம்
போயினதென்றுஞ்சொன்னார்புகுந்ததுபோருமென்றார். (௧௪)

அம்பினுக்கிலக்கமாவாரரசொடுமரக்கரென்றார்
நம்பரத்தடங்குமென்னநாவினிற்பொய்யிலாதான்
உம்பர்மந்திரிக்குமேலாவொருமுழமுயர்ந்தஞானத்
தம்பியேசாற்றிப்போனானென்பதுஞ்சமையச்சொன்னான். (௧௫)

ஊறெலாமுணர்ந்தோருமென்குலமிறுதியுற்ற
தாறியினிவருலென்றமுன்றன்மேலன்பினாலும்
வேதனைசெந்நினெய்தவெம்பியான்விளவசொன்னேன்
சீதையைவிடுதியாயிற்றீருமித்தீமையென்றான். (கசு)

மற்றெலாநிற்கவந்தமனிதர்வானரங்கள்வாவின்
இற்றைநாளளவினின்றுரிமையவவொன்றுந்தன்மை
சொற்றவாறன்றியேயுந்தோற்றிநீயென்றுஞ்சொன்னாய்
கற்றவாநன்றுபோவென்றினையனமேறலுற்றான். (கஎ)

பேதைமானிடவரோடுகுரங்கலபிறவேயாகப்
பூதலவரைப்பினுகர்புரத்தினைப்புறத்ததாகக்
காதுவெஞ்செருவேட்டென்னைக்காத்தினர்கலந்தபோதுஞ்
சீதைதன்றிறத்தன்றுயினமர்த்தொழிதிறம்புவேனே. (கஅ)

ஒன்றலபகழியென்கைக்குரியனவுலகமெல்லாம்
வென்றனவொருவன்செய்தவினையினும்வலியவெம்போர்
மூன்றருகென்றதேவர்முதுகுபுக்கமரின்முன்னஞ்
சென்றனவின்றுவந்தகுரங்கின்மேற்செல்கலாவோ. (ககூ)

குலமேய்நடக்கையஞ்ஞானுமோர்குரங்காய்த்தோன்றி
னேனுமேலிடைவதல்லாலென்செய்வனென்னைக்கால
வேலையேகடைந்தமேருகுலகெலாம்வெருவவந்த
வாலமோவிழுங்கவென்கையின்முகப்பகழியம்மா. (உ0)

அரிகிலேபோலுமையவமனைக்கஞ்சிப்போன
வெறிசுடர்நேமியான்வந்தெதிர்ப்பினுமென்கைவாளிப்
பொறிபடச்சுடர்கடையப்போவனபோகிலாத
மறிகடல்கடையவந்தமணிகொலாம்பூணமார்பில். (உக)

கொற்றவனிமையோர்கோமான்குரங்கினதுருவுகொண்டால்
அற்றைநாளவன்றன்விட்டவயிற்படையறுத்தமாற்ற
விற்றவான்சிறையவாகிவிழுந்தபோயெழுந்தவிங்காப்
பொற்றைமால்வரைகளோவென்புயநெடும்பொருப்புமம்மா. (உஉ)

உள்ளமேதூதுசெல்லவுயிரனுருறையுளுடன்
கள்ளமாமகளிர்ச்சேருநேமிப்புட்கவற்சிநீங்கக்
கொள்ளைபூண்டமார்வைகுன்குன்றையுங்கோட்டிற்கொண்ட
வெள்ளநீர்வடிந்ததென்னவிங்கிருள்வெடிந்ததன்றே. (உங)

இன்னதோர்தன்மைத்தாமென்றெட்டியும்பார்க்கவஞ்சிப்
பொன்மதிற்புறத்தநாளும்போகின்றன்போர்மேற்கொண்டு
மன்னவர்க்கரசன்வந்தான்வலியமாலென்றுதானும்
தொன்னகர்காண்பான்போலக்கதிரவன்றோற்றஞ்செய்தான். (உச)

அருந்ததியனையநங்கையவ்வழியிருந்தாளென்று
பொருந்தியகாதலுண்டப்பொன்னகர்காண்பான்போலப்
பெருந்துணைவீரர்சுற்றந்தம்பியும்பின்புசெல்ல
விருந்தமாமலையினுச்சியேறினனிராமனிப்பால். (௨௫)

செருமலிவீரரெல்லாஞ்சேர்ந்தனர்மருங்குசெல்ல
விருதிறல்வேந்தர்தாங்குமிணைநெடுங்கமலக்கையான்
பொருவலிவயவெஞ்சீயம்யாவையும்புலியுஞ்சுற்ற
வருவரையிவர்வதாங்கோரரியரசனையனானான். (௨௬)

கதிருந்திரைத்துப்பொங்குங்கனைகடலுலகமெல்லாம்
புதைவுசெய்யிருளிற்பொங்குமரக்கர்தம்புரமும்பொற்பும்
சிதைவுசெய்குறியைக்காட்டிவடதிசைச்சிகரக்குன்றின்
உதையமதொழியத்தோன்றுமொருகருஞாயிறொத்தான். (௨௭)

துமிலத்தின்செருவின்வாளிப்பெருமழைசொரியத்தோன்றும்
விமலத்தின்சிலையனுண்டோர்வெற்பினைமேயவீரன்
அமலத்தின்கரமுங்காலும்வதனமுங்கண்ணுமான
கமலத்தின்காடுபூத்தகாளமாமேகமொத்தான். (௨௮)

மற்குவடனையதிண்டோண்மானவன்மானமில்லாக்
கற்குவடடுக்கிவாரிக்கடலினைக்கடந்தகாட்சி
நற்குவடனையவீரரீட்டத்தினடுவணின்றான்
பொற்குவடிடையேதோன்றுமரகதக்குன்றம்போன்றான். (௨௯)

அணைநெடுங்கடலிற்றோன்றவாற்றியசிற்றத்தையன்
பிணைநெடுங்கண்ணியென்னுமின்னுயிர்துறந்தபின்னைத்
துணைபிரிந்தயருமன்றிற்சேவலிற்றுளங்குகின்றான்
இணைநெடுங்கமலக்கண்ணாலிலங்கையையெய்தக்கண்டான். (௩௦)

நந்திருநகரோயாதிவேறுளநகர்கட்கெல்லாம்
வந்தபேருவமைகூறிவழுத்துவானமைந்தகாலை
யிந்திரனிருக்கையென்பரிலங்கையையெடுத்துக்காட்டார்
அந்தரமுணர்தறெற்றாரருங்கவிப்புலவரம்மா. (௩௧)

பழுதறவிளங்குஞ்செம்பொற்றலத்திடைப்பருதிநாண
முழுதெரிமணியிற்செய்துமுடிந்தனமுனைவராலு
மெழுதருவகையவாயவியைவனவியையச்செய்த
தொழிறெரிகிலவாற்றங்கட்சுடர்மணிக்கற்றைசுற்றி. (௩௨)

விரிகின்றகதிரவாகிமிளிர்கின்றமணிகள்வீசச்
சொரிகின்றசுடரின்சும்மைவிசும்புறத்தொடருந்தோற்றம்
அரியென்றவெற்றியாற்றன்மாருதியமைத்ததீயால்
எரிகின்றதாமேகாணிக்கொடிநகரிருந்ததின்றும். (௩௩)

மாசடைபசர்ந்தமாணமரகதத்தலத்துள்வைத்த
காசடைசமைந்தமாடக்கதிர்தழைகற்றைசுற்ற
வாசடைகுன்றவெள்ளியகன்மலையன்னமாகப்
பாசடைப்பொய்கைபூத்தபங்கயநிகர்ப்பபாராய். (௩௪)

நீச்சிகைசிவணுஞ்சோதிச்செம்மணிச்செய்தனணிற்
றூச்சுடர்மாடமீண்டித்துறுதலாற்கருமைதோன்று
மீச்செலுமேகமெல்லாம்விரிசுடரிலங்கைவேவ
காய்ச்சியவிரும்புமானச்சேர்ந்தவையொளிர்வகாணாய். (௩௫)

விற்படிதிரடோள்வீரநோக்குதிவெங்கண்யானை
யற்படிநிறத்தவேனுமாடகத்தலத்தையார்க்கக்
கற்படிவயிரத்திண்கானகங்களிற்கல்விக்கையாற்
பொற்படியென்னவிசிப்பொன்மலையென்னப்போவ (௩௬)

பூசல்விற்குமரநோக்காய்புகாறவிளங்கும்பொற்பிற்
காசடைக்கவரிக்கற்றைக்கால்களாற்கதுவுகின்ற
வீசுபொற்கொடிகளெல்லாம்விசும்பினின்விரிந்தமேக
மாசறத்துடைத்தவானம்விளங்குவபோலுமாதோ. (௩௭)

நூல்படத்தொடர்ந்தபம்பொற்சித்திரநனித்தபத்திக்
கோல்படுமனைகளானகுலமணியவையுங்கூட்டிச்
சால்படுத்தரங்கன்மாடத்தனிமணிநடுவட்சார்த்தி
மால்கடற்கிறைவன்பூண்டமாலைபோன்றுளதிம்மூதூர். (௩௮)

நன்னெறியறிநோக்காய்நளிர்நெடுந்தெருவிறுப்பண்
பன்மணிமாடப்பந்திநிழல்படப்படர்வபண்பாற்
றன்னிறந்தெரிகிலாதவொருநிறஞ்சார்கிலாத
வின்னதோர்குலத்தவென்றுபுலப்படாப்புரவியெல்லாம். (௩௯)

வீரபோராய்மெல்லென்பளிங்கினால்விளங்குகின்ற
மாரனுமருளச்செய்தமாளிகைமற்றோர்சோதி
சேர்தலுந்தெரிவதன்றேற்றேர்கிலாத்தெரிந்தகாட்சி
நீருலியன்றவென்னநிழலெழுகின்றநீர்மை. (௪0)

கோனிறக்குனிவிற்செங்கைக்குமரனேகொழுவெண்டிங்கட்
கானிறக்கதிர்வெண்டிங்கடெற்றியவாயகாட்சி
வானிறத்தாளப்பந்தர்மரகதநடுவண்வைத்த
பானிறப்பரவைவைகும்பரமனைநிகர்ப்பபாராய். (௪௧)

கோளவாவரியேறன்னகுருசிலேகொள்ளநோக்காய்
நாளவாமின்றேய்மாடத்தும்பரோர்நாகர்பாவை
காளவாவுறையின்வாங்குங்கண்ணடிவிசும்பிற்கவ்வி
யாளராவிழுங்கிக்காலுமதியினைநிகர்ப்பபாராய். (௪௨)

கொற்றவான்சிலைக்கைவீரகொடியுடைமாடக்குன்றை
யுற்றவான்கழுத்தவானவொட்டகம்வைத்தவும்பர்
செற்றியமணிகளின்றசுடர்களைச்செக்காத்தின்
கற்றையந்தளிர்களென்னக்கவ்வியகிமிர்வகாணாய். (௪௩)

வாகைவெஞ்சிலைக்கைவீரமலர்க்குழல்வடிக்குமாலைத்
தோகையரிட்டஅமத்தகிற்புகைமுழுதஞ்சுற்ற
வேகவெங்களிற்றின்வன்றோன்மெய்யுறப்போர்த்ததையல்
பாகவிற்பொலிந்ததோன்றும்பவளமாளிகையைப்பாராய் (௪௪)

காவலன்பயந்தவிரக்கார்முகக்களிறேகற்ற
தேவர்தந்தச்சனிலக்காசினுற்றிருந்தச்செய்த
நீவருதெரியாவுள்ளத்திராக்கதரீட்டிவைத்த
பாவபண்டாரமன்னசெய்குன்றம்புலவும்பாராய் (௪௫)

பிணைமதத்தனையநோக்கம்பாழ்படப்பிடியுண்டன்பிற்
றுணைவனைப்பிரிந்துபோந்துமருங்கெனத்துவளுமுள்ளம்
பணைமயிர்ப்பெய்துமல்குற்பாவையர்பருவநோக்குங்
கணைமயிற்குழுவினம்மைக்காண்கின்றார்தம்மைக்காணாய். (௪௬)

நாழ்மலர்த்தெரியல்வீரநம்படைகாணவானத்
தியாழ்மொழித்தெரிவைமாருமைந்தருமேறுகின்றார்
வாழ்வினிச்சமைந்ததென்றேயென்றுமாநகரையெல்லாம்
பாழ்படுத்திரியல்போவாரொக்கின்றபரிசுபாராய். (௪௭)

இன்னவாறிலங்கைதன்னையிளையவற்கிராமன்காட்டிச்
சொன்னவாசொல்லாவண்ணமதிசயந்தோன்றுங்காலை
யன்னமாநகரின்வேந்தனரிக்குலப்பெருமைகாண்பான்
சென்னிவான்றடவுஞ்செம்பொற்கோபுரத்தும்பர்சேர்ந்தான். (௪௮)

இலங்கைகாண்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அ௦க.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௧௦-வது—இராவணன்றுணைகாண்படலம்.

கவடுகப்பொருதகாய்களிறன்னு
னவடுயக்கின்மலரம்புறவெம்புஞ்
சுவடுடைப்பொருவிறேள்கொடனேகம்
குவடுடைத்தனியொர்குன்றெனநின்றான். (௧)

பொலிந்ததாமினிதுபோனனலோடு
மலிந்தநங்கையெழிலால்வலிநாளு
மெலிந்ததோள்கள்வடமேருவின்மேலும்
வலிந்துசெல்லமிசைசெல்லுமனத்தான் (௨)

செம்பொன்மௌலிசிகரங்கடொறுக்க
வம்பொன்மேருவரைகோபுரமாக
வெம்புகாலினைவிழுங்கிடமேருள்
உம்பர்மீதினிமிர்வாசுகியொத்தான். (௩)

தொக்கபூதமவ்வையைத்தொடுதன்னிட்
டொக்கநின்றதிசையொன்பதொடொன்றும்
பக்கமுற்றிழல்பரப்பிவியப்பால்
மிக்கநின்றகுடைமீதுவிளங்க. (௪)

கைத்தருங்கவரிவீசியகாலா
னெய்த்திருண்டயருநீள்வரைமீதிற்
றத்திவிழருவியின்றிரள்சால
வுத்தரீகநெடுமார்பினுலாவ. (௫)

வானகத்தினிவருப்பசிலாசத்
தேனகத்தருநிலோத்தமைசெவ்வாய்
ஏனைக்குலவரம்பையர்யாருஞ்
சானகிக்கமருதந்தயல்சார. (௬)

விழியின்கனியிதழ்ப்பணிமென்சொ
லாழிவந்தவரமங்கையரைஞ்ஞாற்
றேழிரண்டினிரண்டுபயின்றோர்
சூழிரண்டுபுடையும்முறைசுற்ற. (௭)

முறைபடிந்தபிறைமுள்ளெயிறொள்வா
ளிறைபடிந்தவிளவெண்ணிலவினக்
குறைபடிந்தவொருகுன்றின்முழங்கா
மறைபடிந்தனையதொங்கல்வயங்க. (௮)

ஓதநூல்கள்வழியின்செவியுள்ளுஞ்
சீதசீதையெனுமாருயிர்தேய
காதலினையிசைநாரதர்பாட
வேதகீதவமிர்தள்ளிவிழுங்க. (௯)

வெங்கரத்தரயில்வாளினர்வில்லோர்
சங்கரற்கும்வலிசாய்வில்வலத்தோர்
அங்கரக்கர்சதகோடியமைந்தோர்
பொங்கரத்தவிழியோர்புடைசூழ. (௧௦)

கல்லிலங்கையுலகங்கவர்கிற்போர்
நல்லிலங்கைமுதலோர்நவையில்லோர்
சொல்லிலங்கர்சதகோடிதொடர்ந்தோர்
வில்லிலங்குபடையோர்புடைவிம்ம. (௧௧

பாரியங்குனர்விசும்புபரந்தோர்
வாரியங்குமழையின்குரன்மானும்
பேரியங்கண்முருடாகுளிபெட்குந்
ஆரியங்கடலினின்றுதுவைப்ப. (௧௨)

நஞ்சமஞ்சுவிழிநாகியர்நாண
வஞ்சியஞ்சுமிடைமங்கையர்வானத்
தஞ்சொலிஞ்சொலினரம்பையரோடும்
பஞ்சமஞ்சிவனுமின்னிசைபாட. (௧௩)

நஞ்சுக்கடுயெரிகண்ணினர்நாமக்
கஞ்சுகத்தர்கைதபற்றியகையர்
மஞ்சுக்குமுறுசொல்லினர்வல்வாய்ச்
சிஞ்சுகத்தின்விசையோர்திசைசெல்ல. (௧௪)

கூயுளைப்பகுலமால்வளையேனும்
சாயுளைப்பரியவாயதடந்தோள்
வாயுளைத்தகலைவக்களிவாசம்
வேயுளைப்பதெனவந்துவிளம்ப. (௧௫)

வேத்திரத்தொரிவீசிவிழிக்கும்
நேத்திரத்தரிறைவின்றுழிநில்லாக்
காத்திரத்தர்மனைகாவல்விரும்புஞ்
சூத்திரத்தர்பதினுயிரர்சுற்ற. (௧௬)

தோரணத்தின்மணிவாயின்மிசைச்சு
ளிரணைத்தமுகிலாமெனநின்றான்
ஆரணத்தையரியையமறைதேடும்
காரணத்தைவிமிர்கண்கொடுகண்டான். (௧௭)

மடித்தவாயினன்வயங்கெரிவந்து
பொடித்திழிந்தவிழியன்னதுபோழ்தி
னிடித்தவன்றிசையெரிந்தனநெஞ்சம்
அடித்தகண்ணினொடிடத்திரடோள்கள். (௧௮)

ஆகராகவனையவ்வழிகண்டான்
மாகராகநிறைவாளொளியோனை
யேகராசியினினெய்தவெதிர்க்கும்
வேகராகுவெனவெம்பிவெகுண்டான். (௧௯)

ஏனையோனிவனிராமனெனத்தன்
மேனியேயுளைசெய்கின்றதுவென்றிச்
சேனைவீரர்படையைத்தெரியென்று
தான்வினவவெதிர்சாரன்விளம்பும். (௨௦)

இங்கிவன்படையிலங்கையர்மன்னன்
தங்கையென்னுமுழுநிர்த்தசலத்தா
ளங்கைவாள்கொடவளாகம்விளங்குங்
கொங்கைநாசிசெவிகொய்துகுறைத்தான். (௨௧)

அறக்கணென்பதொருகண்ணிலனாகி
இறக்கருங்கடனேமியினின்று
துறக்கமெய்தியவருந்துறவாத
வுறக்கமென்பதனையோடமுனிந்தான். (௨௨)

ஐயவன்றொடவமைந்தகரத்தா
னையவாலியொடிவண்டரொடுங்கச்
செய்தவன்செருவினிற்றிகழ்கின்றான்
வெய்யவன்புதல்வன்யாரினும்வெய்யான். (௨௩)

தந்தைமற்றவனசார்வில்வலத்தோர்
அந்தரத்தாமுதார்கலிகாண
மந்தரத்தினெடும்வாசுகியோடும்
சுந்தரப்பெரியதோள்கடிரித்தான். (௨௪)

நடந்துநின்றவனருங்கதிர்முன்பு
தொடர்ந்தவன்றலைகுசற்றுமெயிற்றி
விடந்தெழுந்தவனையொத்தவன்வேலை
கடந்தவன்சரிதைகண்டனையன்றே. (௨௫)

நீலனின்றவனெருப்பின்மகன்றன்
சூலமுங்கயிறுமின்மைதொடர்ந்தோ
ஞாலமொன்றுமிறமென்றயலோனைக்
காலனென்பரிவனைக்கருதாதார். (௨௬)

வேறு.

வேறுகின்றனளனென்றும்விலங்கலன்று
னேறுவருணன்வழிதந்திலனென்றிராமன்
சீறுதவுள்ளத்தெழுசீற்றமுருத்தசெந்தீ
யாறுதமுன்னம்மகன்வேலையையாறுசெய்தான். (௨௭)

முக்காலமுமொய்ம்மதியான்முறையினுணர்வான்
புக்காலமெழப்புணரிப்புலவோர்கலக்கு
மக்காலமுள்ளான்கரடிக்கரசாகின்றான்
இக்காலநின்றுமுலகேழுமெடுக்கவல்லான். (௨௮)

சேனாபதிதன்னயலேயிருள்செய்தகுன்றி
னானுமருங்கேயிரண்டாடகக்குன்றினின்று
ரோனேரிராமனிலக்குவனென்றுமீட்டார்
வானோர்தமருத்தவன்மைந்தர்வலிக்கண்மிக்கார். (௨௯)

உவன்காண்குமுதன்குமுதாக்கனுமுங்கவன்கா
ணிவன்காண்கவயன்கவயாக்கனுமிங்கிவன்காண்
சிவன்காணயன்காணெனுந்தாதனைப்பெற்றசெல்வ
னவன்காணெடுங்கேசரியென்பவனுற்றன்மிக்கான். (௩௦)

முரபன்னகுதோளவன்மூரிமடங்கலென்னக்
கரபன்னகமன்னவைமின்றுகக்கார்துநின்றான்
வரபன்னகர்தன்னையும்வேரொடுவேண்டின்வாங்குஞ்
சரபன்னவலிவன்சதவலியாயதக்கோன். (௩௧)

வேறு.

மூன்றுகண்ணிலனுயினுமூன்றெயிலெரித்தோன்
போன்றுநின்றவன்பனசனிப்போர்க்கெலாந்தானே
யென்றுநின்றவனிடபன்மற்றிவன்றனக்கெதிரோ
தோன்றுகின்றவன்சுசேடனையிவொடுதொடர்ந்தோன். (௩௨)

வெதிர்கொள்குன்றெலாம்வேரொடும்வாங்கிமேதினியை
முதுருநொய்தெனச்செய்தவன்கனலையுமுனிவோன்
கதிரவன்மகற்கிடமருங்கேநின்றகாளைத்
ததிமுகன்னவன்சங்கனென்றுரைக்கின்றசிங்கம். (௩௩)

அண்ணல்கேளிதற்கவதியுமளவுமொன்றுளதோ
விண்ணின்மீனினைக்குணிப்பினும்வேலையின்மீனை
யெண்ணிநோக்கினுமக்கடன்மணலினையெல்லாங்
கண்ணிநோக்கினுங்கணக்கிலவொன்றனன்காட்டி. (௩௪)

சினங்கொடிண்டிறலரக்கனுஞ்சிறுநகைசெய்தான்
புனங்கொள்புன்றலைக்குரங்கினைப்புகழுதிபோலாம்
வனங்களும்படர்வரைதொறுந்திரிதருமானி
னினங்களும்பலவென்செயுமரியினையென்றான். (௩௫)

என்னும்வேலையினிராவணற்கிளவலையிராமன்
கன்னிமாமதினகர்நின்றநம்வலிகாண்பான்
முன்னிவானினுமுடிநின்றார்களைமுறையால்
இன்னநாமத்தரினையவொன்றியம்புதியென்றான். (௩௬)

நாறுதன்குலக்கிளையெலாநரகத்துநடுவான்
சேறுசெய்துவைத்தானும்பர்திலோத்தமைமுதலாக்
கூறுமங்கையர்குழாத்திடைக்கோபுரக்குன்றத்
தேறிநின்றவன்புன்றொழிலிராவணனென்றான். (௩௭)

கருதிமற்றொன்றுகழறுதன்முனம்விழிக்கனல்கள்
பொருதுபுக்கனன்முந்துறச்சூரியன்புதல்வன்
சுருதியன்னமுன்சிவந்தநற்கனியென்றுசொல்லப்
பருதிமேற்பண்டுபாய்ந்தவனுமெனப்பாய்ந்தான். (௩௮)

அனையத்தோங்கியசேவகத்திறத்தினையுற்று
நினையத்திண்டிறலிராவணக்குன்றிடைச்சென்றான்
றனையச்செங்கரம்பரப்பியதன்பெருந்தாதை
புனையக்குன்றினின்றருகுன்றிற்பாய்வதையொத்தான். (௧௯)

பள்ளம்போய்ப்புகும்புனலெனப்படியிடைப்படிந்து
தள்ளும்பொற்கிரிசலிப்புறக்கோபுரஞ்சார்ந்தான்
வெள்ளம்போற்கண்ணியமூதலுமிராவணன்மேற்றன்
னுள்ளம்போற்செலுங்கழுகினுக்கரசனுமொத்தான். (௨௦)

கரியகொண்டலைக்கருணையங்கடலினைக்காணப்
பெரியகண்கள்பெற்றுவக்கின்றவரம்பையர்பிறரு
முரியகுன்றிடையுருமிடிவிழ்தலுமுலைவுற்
றிரியல்போயினமயிற்பெருங்குலமெனவிரிந்தார். (௨௧)

இராவணன்றனைகாண்படலம்-முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - ௮௪௨.
கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

௧௧-வது—மகுடபங்கப்படலம்.

காலவிருள்சிந்துகதிரோன்மதலைகண்ணுற்
றேலவெதிர்சென்றடலிராவணனையெய்தி
நீலமலைமுன்கயிலைநின்றதெனநின்று
ஞலவிடமன்றுவரநின்றசிவனன்னான். (௧)

இத்திசையின்வந்தபொருளென்னெனவியம்பத்
தத்தியெதிர்சென்றுதிசைவென்றுயர்தடந்தோள்
பத்தினொடுபத்துடையவன்றுடல்பதைப்பக்
குத்தினனாத்திணிமிர்கைத்தலைகுளிப்ப. (௨)

இருபெயசினத்தொடுசெறுத்தெதிர்விழித்தா
னொருபதுதிசைக்கனுமொலித்தவொலியொப்பத்
தருவனமெனப்புடைதழைத்துயர்தடக்கை
யிருபதுமெடுத்துருமிடித்தெனவடித்தான். (௩)

அடித்தவிரல்பட்டவுடலத்துழியிரத்தம்
பொடித்தெழவுருக்கியெதிர்புக்குடல்பொருத்திக்
கடுத்தவிசையிற்கடிதெழுந்துகதிர்வேலான்
முடித்தலைகள்பத்தினுமுகத்திலுமுதைத்தான். (௪)

உதைத்தவனடித்துணைபிடித்தொருகணத்திற்
பதைத்தலைவுறப்பலவிதத்திகல்பரப்பி
மதக்கரியையுற்றரிசெரித்தெனமயக்கிச்
சதைத்தலனிடைக்கடிதடிக்கொடுதுகைத்தான். (௫)

அகைத்தவனுடற்பொறைகழுக்கொளவிருக்கித்
தகைப்பெருவலத்தொடுதலத்திடையமுக்கி
வகைப்பிறைநிறத்தெயிறுடைப்பொறிவழக்கிக்
குகைப்பொழிபுனற்குருதிகைக்கொடுகுடித்தான். (௬)

கைக்கொடுகுடித்தவனுடற்கனகவெற்பைப்
பைக்கொடுமிடற்றாவெனப்பலகைபற்றி
மைக்கொடுநிறத்தவன்மறத்தொடுபுறத்திற்
றிக்கொடுபொருப்புறநெருப்பொடுதிரித்தான். (௭)

திரித்தவனுாத்திறுகிர்செற்றும்வகைகுத்திப்
பெருத்துயர்தடக்கையொடடித்திடைபிடித்துக்
கருத்தழிவுறத்திரிதிறத்தெயில்கணத்தன்
றெரித்தவனையொத்தவனெடுத்தகழியிட்டான். (௮)

இட்டவனையிட்டவகழிற்கடிதினிட்டான்
றட்டவுயரத்தினிலுலுந்தசமுகத்தான்
ஒட்டவுடனேயவனும்வந்தவனையுற்றுன்
விட்டிலர்புரண்டிருவரோரகழின்வீழ்ந்தார். (௯)

விழுந்தனர்சுழன்றனர்வெகுண்டனர்திரிந்தா
ரழுந்தினரழுந்திலரகன்றிலரகன்று
றெழுந்தனரெழுந்திலரெதிர்ந்தனர்முதிர்ந்தா
ரொழிந்தனரொழிந்திலருணர்ந்திலர்களொன்றும். (௧௦)

அந்தரவருக்கன்மகனுழியகழாகச்
சுந்தரமுடைக்கரம்வலிப்பதொர்சுழிப்பட்
டெந்திரமெனத்திரியிரக்கமிலரக்கன்
மந்தரமெனக்கடையும்வாலியையுமொத்தான். (௧௧)

ஊறுபடுசெம்புனலுடைந்தகலுழுயுற்ற
தாறுபடர்கின்றனவெனப்படரவன்னூர்
பாறுபொருகின்றனபருந்திவையெனப்போ
யேறினர்விசும்பிடையிரிந்தவுலகெல்லாம். (௧௨)

ஊரநெடுவானின்மலையுஞ்சுடரவன்சேய்
காரிநெடுமேருநிகர்காய்சினவரக்கன்
றூருடையதோள்கள்பலவுந்தழுவநின்றுன்
ஊரிநெடுகோள்கதுவுதாதையையுமொத்தான். (௧௩)

பொங்கமர்விசும்பிடையுடன்றுபொருபோழ்திற்
செங்கதிரவன்சிறுவனைத்திரள்புயத்தால்
மங்கலவயங்கொளிமறைத்தவலரக்கன்
வெங்கதிர்கரந்ததொருமேகமெனலானன். (௧௪)

நூபுரமடந்தையர்கிடர்தலைதரோணூர்
மாபுரமடங்கலயிரிந்தயாவன்றான்
பீபுரமடங்கலெனவெங்கதிரவன்சேய்
கோபுரமடங்கவிடியத்தனிகுதித்தான். (௧௫)

ஒன்றுறவிழுந்தவருமைத்தொடரவோடா
மின்றெரியெயிற்றிரொருமேகம்விழுமென்னத்
தின்றிடுவனென்றெழுசினத்திகலரக்கன்
பின்றொடரவந்திருகரத்துணைபிடித்தான். (௧௬)

வந்தவனைநின்றவன்வலிக்கெதிர்மலைந்தான்
அந்தகனுமஞ்சிடவிலத்திடையனைத்தான்
எந்திரமெனக்கடிதெடுத்தவனெறிந்தான்
கந்துகமெனக்கடிதெழுந்தெதிர்கலந்தான். (௧௭)

படிந்தனமாந்தரைபகிர்ந்தனபரப்புங்
கொடுஞ்சினமுறிந்தனவுரத்தின்மிசைகுத்த
நெடுஞ்சுவர்பிளந்தனநெரிந்தவியிர்குன்றம்
இடிந்தனதகர்ந்தனவிலங்கைமதிலெங்கும். (௧௮)

செறிந்துயர்கறங்கனையமேனியிலைதேரார்
பிறிந்தனர்பொருந்தினரெனத்தெரிதல்பேறு
றெறிந்திலர்களெய்திலர்களின்னரெனமுன்னின்
றறிந்திலராக்கருமமர்த்தொழிலயர்ந்தார். (௧௯)

வேறு.

இன்னதோர்தன்மையெய்துமளவையினெழிலிவண்ணன்
மன்னுயிரனையகாதற்றுணைவனைவரவுகாணு
றுன்னியகருமமெல்லாமுன்னெனுமுடிந்தவென்னுத்
தன்றுணர்வழிந்துசிந்தையலம்வந்துதளர்ந்துசாய்ந்தான். (௨௦)

ஒன்றியவுணர்வேயாடவோருயிர்த்துணைவவுன்னை
யின்றியானுளனாய்நின்றொன்றியற்றுவதியைவதன்று
லன்றியுந்துயரத்திட்டாயமரரையரக்கர்க்கெல்லாம்
வென்றியுங்கொடுத்தாயென்னைக்கெடுத்ததுன்வெகுளியென்றான். (௨௧)

தெய்வவெம்படையுந்திராமாயையும்வல்லதீயோன்
கையிடைப்புக்காய்நீவேறெவ்வண்ணங்கடத்திகாவல்
வையமோரேழும்பெற்றால்வாழ்வனோவாராயாகில்
உய்வனோதமியனேனுக்குயிர்தந்தவுதவியோனே. (௨௨)

ஒன்றுகவிளையவொன்றாய்விளைந்ததென்கருமமந்தோ
வென்றுமியானேவாழேனியிலையெனவுங்கேளே
வின்றுயபழியுதிற்கநெடுஞ்செருக்களத்திலென்னைக்
கொன்றாய்நீயன்றேயின்னைக்கொல்லுமேற்குணங்கடையோன். (௨௩)

இறந்தனையென்றபோதுமிருந்தியானரக்கனென்பார்
திறந்தனையுலகினீக்கிப்பின்றுயிர்தீர்வனேனும்
புறந்தருபண்பினாயவுயிரொடும்பொருந்தினானை
மறந்தனன்வலியனென்பாராதலாலதுவுமாட்டேன். (உ௪)

அழிவனசெய்தாயையவன்பினாலளியத்தேனுக்
கொழிவருமுதவிசெய்தவுன்னையாரொழியவாழ்த
லெழுவதுவெள்ளந்தன்னினீண்டோர்பேரொஞ்சாதேவிச்
செழுநகரடையினன்றேருவித்துயர்தீர்வதென்றான். (உ௫)

என்றவனிரங்குங்காலத்திருவருமொருவர்தம்மின்
வென்றிலர்தோற்றிலாராய்வெஞ்சமம்விளைக்கும்வேலை
வன்றிறலரக்கன்மௌலித்தனிமணிவலியால்வாங்கிப்
பொன்றினனாக்கினன்றென்றவன்வெட்கவிவனும்போர்தான். (உ௬)

கொழுமணிமுடிகடோறுங்கொண்டனகுழுவின்கூட்ட
மழுதயருறுகின்றான்றனடித்தலைதனிற்சூட்டித்
தொழுதயனணிகின்றான்றூயவரிருவரோடும்
எழுபதுவெள்ளம்யாக்கைக்கோருயிரொய்திற்றன்றே. (உ௭)

என்புறக்கிழிந்தபுண்ணினிழிபெருங்குருதியோடும்
புன்புலத்தரக்கன்றன்னைத்தீண்டியதீமைபோக
வன்பனையமரப்புல்லிமஞ்சனமாட்டிவிட்டான்
றன்பெருநயனமென்னுந்தாமரைசொரியுநீரால். (உ௮)

ஈர்கின்றதன்றேயென்றனுள்ளத்தையிங்குமங்கும்
பேர்கின்றதாவியாக்கைபெயர்கின்றதில்லைப்பின்னைத்
தேர்கின்றசிந்தையொன்றேருதிகைத்தனையென்றுதெண்ணீர்
சோர்கின்றவருவிக்கண்ணான்றுணைவனைநோக்கிச்சொல்லும். (உ௯)

கல்லினும்வலியதோளாய்நின்னையக்கருணையில்லோன்
கொல்லுதல்செய்தானாகிற்கொடுமையாற்குற்றம்பேணிப்
பல்பெரும்பகழிமாரிவேரொடும்பறியநூறி
வெல்லினுந்தோற்றேன்யானேயல்லனோவிளிந்திலாதேன். (௩0)

பெருமையும்வண்மைதானும்பேரொழிலாண்மைதானு
மொருமையினுணரநோக்கிற்பொறையினதாற்றமன்றே
யருமையுமடர்ந்துநின்றபழியையுமயர்ந்தாய்போல
விருமையுங்கெடுத்தாயன்றேயென்வினைந்தென்செய்தாய்நீ. (௩௧)

இந்நிலைவிளைவினெய்தாதித்துணைதாழ்த்தியாயி
னன்னுதற்சீதையாலென்ஞாலத்தாற்பயனென்னம்பி
யுன்னையான்றொடர்வனென்னைத்தொடருமிவ்வுலகமென்றாற்
பின்னையெனிதனைநோக்கிவினையாடிப்பிழைக்கச்செய்தாய். (௩௨)

காட்டிலேனுநின்வேந்தன்செய்தனகாட்டமாட்டே
னூட்டிலேனுகறர்செய்தன்மையைநயக்கமாட்டேன்
கேட்டிலேனின்றுகண்டுங்கிளிமொழிமாதரானை
மீட்டிலேன்றலைகள்பத்துங்கொணர்ந்திலேன்வெறுங்கைவந்தேன். (௩௩)

வன்பகைநிற்கவெங்கள்வானரத்தொழிலுக்கேற்ற
புன்பகைகாட்டும்யாரேபுகழ்ப்பகைக்கொருவன்போலா
மென்பகைநீர்த்தென்றுவியரசொடுமெனக்குத்தந்த
வுன்பகையுனக்குத்தந்தேனுயிர்சுமந்துழலாநின்றேன். (௩௪)

செம்புக்குஞ்சிவந்தசெங்கட்டிசைநிலைக்களிற்றின்சேற்றக்
கொம்புக்குங்குறைந்ததுண்டேயென்னுடைக்குரக்குப்புன்றோ
ளம்புக்குமுன்னஞ்சென்றனரும்பகைமுடிப்பனென்று
வெம்புற்றமனமும்யானுந்திநின்றிமீளவந்தேன். (௩௫)

நூல்வலிகாட்டுஞ்சிந்தைநும்பெருந்துதன்வெம்போர்
வேல்வலிகாட்டுவோர்க்கும்வில்வலிகாட்டுவோர்க்கும்
வால்வலிகாட்டப்போந்தவளநகர்புக்குமற்றென்
கால்வலிகாட்டப்போந்தேன்கைவலிக்கவழியுண்டோ. (௩௬)

இன்னனபலவும்பன்னியிறைஞ்சியமுடியனுமி
மன்னவர்மன்னன்முன்புவானரமன்னனிற்ப
வன்னவன்றன்னைநோக்கியழகனைநோக்கியாழி
மின்னெனவிளங்கும்பைம்பூண்வீடணன்விளம்பலுற்றான். (௩௭)

வாங்கியமணிகளன்றுன்றலைமிசைமௌலிமேலே
யோங்கியவல்லவோமற்றினியப்பாலுயர்ந்ததுண்டோ
தீங்கவன்சிரத்தின்மேலுமுயிரினுஞ்சீரிதம்மா
வீங்கியபுகழையெல்லாம்வேரொடும்வாங்கிவிட்டாய். (௩௮)

பாரகஞ்சுமந்தபாம்பின்பணமணிபறிக்கவேண்டின்
வார்கழற்காலினாலேகல்லவல்லவனைமுன்னாத்
தார்கெழுமௌலிபத்தின்றனிமணிவலிதிற்றந்த
வீரனைவிடைவலோர்க்குமுடியுமோவேறுமுண்டோ. (௩௯)

கருமணிகண்டத்தான்றன்சென்னியிற்கறைவெண்டிங்கள்
பருமணிவண்ணன்மார்பிற்செம்மணிபறித்திட்டாலும்
தருமணியிமைக்குந்தோளாய்தசமுகன்முடியிற்றைத்த
திருமணிபறித்துத்தந்தவென்றியேசீரிதன்றோ. (௪௦)

தொடிமணியிமைக்குந்தோளாய்சொல்லினும்வேறுமுண்டோ
வடிமணிவயிரவெவ்வாள்சிவன்கையில்வாங்கிக்கொண்டான்
முடிமணிபறித்திட்டாயோவவனிநிமுடிக்கும்வென்றிக்
கடிமணியிட்டாயன்றேயரிக்குலத்தரசவென்றான். (௪௧)

வென்றியென்றென்றுமன்றுவிரர்க்குவிளம்பத்தக்க
நன்றியென்றென்றுமன்றுநானிலமெயிற்றிற்கொண்ட
பன்றியன்றுகிலிதாரியற்றுவார்பரிவினென்று
வின்றிருவென்றியென்றென்றிராமனுமிரங்கிச்சொன்னான். (௩௨)

தன்றனிப்புதல்வன்வென்றித்தசமுகன்முடியிற்றைத்த
மின்றளிர்த்தனையபன்மாமணியினைவெளியிற்கண்டா
ன்றென்றுழித்தொன்றுமென்றவ்வாக்கனுக்கொளிப்பான்போல
வன்றனிக்குன்றுக்கப்பாலிரவியுமறையப்போனான். (௩௩)

கங்குல்வந்திறுத்தகாலைக்கைவிளக்கெடுப்பக்காவல்
வெங்கழலரக்கன்மௌலிவிளக்கமேவிளக்கஞ்செய்யச்
செங்கதிர்ச்செல்வன்செய்தவென்றியைநிறையத்தேக்கிப்
பொங்கியதோளினானுமிழிந்துபோயிருக்கைபுக்கான். (௩௪)

என்றுநுமினையதன்மையெய்தாதவிலங்கைவேந்த
னின்றார்கடேவர்கண்டாரொன்பதோர்நாணனீள
வன்றுயமகளிர்நோக்கமாடவர்நோக்கமாகப்
பொன்றுறுபொன்றினன்றன்புகழெனவிழிந்துபோனான். (௩௫)

மகுடபங்கப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அஅஎ.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கஉ-வது—அணிவகுப்புப்படலம்.

மானத்தானல்லற்பட்டமருமத்தான்வதனமெல்லாம்
கூனற்றுமனாயிற்றேன்றவான்றெடுங்கோயில்புக்கான்
பானத்தானல்லன்றெய்வப்பாடலானல்லனாடற்
றானத்தானல்லன்மெல்லென்சயனத்தானுனாயுந்தாரான். (க)

வையம்விற்றுநேராமணியிழந்தனனேமானும்
பையணைத்துயிற்கும்வெவ்வாய்ப்பஃறலைப்பாம்பின்பாலின்
மெய்யணைத்திரையின்வேலைமென்மலர்ப்பள்ளியான
வையனைப்பிரிந்துவைகுமனந்தனேயரக்கர்வேந்தன். (உ)

தாயினும்பழகினுருந்தன்னிலைதெரிக்கலாகா
மாயைவல்லுருவத்தான்முன்வருதலும்வாயில்காப்பான்
சேயவர்சேனைநண்ணிச்செய்திறந்தெரித்திரியென்
றேயவனெய்தினனென்றரசனையிறைஞ்சிச்சொன்னான். (ந)

அழையெனவெய்திப்பாதம்வணங்கியவறிஞன்றன்னைப்
பிழையறவறிந்ததெல்லாமுணாத்தியென்றரக்கன்பேச
முழையுறுசியமன்னான்முகத்தினுலகத்தைநோக்கிக்
குழையுறுமெய்யன்பையவரன்முறைகூறலுற்றான். (ச)

வீரியவிறலினெய்திப்பதினெழுவெள்ளத்தோடும்
மாருதிமேலைவாயிலுழிஞைமேல்வருவதானான்
சூரியனமைந்தவெள்ளமத்தனையோடொற்றிச்
சூரியன்மைந்தன்றன்னைப்பிரியலிற்கச்சொன்னான். (௫)

அன்றியும்பதினேழ்வெள்ளத்தரியொடுமரசன்மைந்தன்
தென்றிசைவாயிற்செய்யுஞ்செருவெலாஞ்செய்வதானான்
ஒன்றுபத்தாறுவெள்ளத்தரியொடுந்துணைவரோடும்
நின்றனனீலனென்பான்குணதிசைவாயினெற்றி. (௬)

இம்பரினியைந்தகாயுங்கனியுங்கொண்டிரண்டுவெள்ளம்
வெம்புவெஞ்சேனைக்கெல்லாமுணவுதந்துழலவிட்டான்
உம்பியையவாயிலோருவிலைதெரிந்துணரச்சொன்னான்
தம்பியுந்தானுநிற்பதாயினன்சமைவிதென்றான். (௭)

சார்த்துலனிதனைச்சொல்லத்தழறெரிதறுகணானும்
பார்த்துழிவாடைபொங்கப்படுவதுபடுமாபார்த்தி
போர்த்துளிதுடைப்பனுலையவருடற்பொறையினின்றுந்
தேர்த்தனுருதிதன்னாலென்றனனெயிறுதின்று. (௮)

மாவலனீலக்குன்றத்திளவெயில்வளர்ந்ததென்னத்
தாவினைக்குருதிச்செக்கர்ச்சுவடுறப்பொலிந்ததோளா
னேவினைவரிவிற்காமன்கணைபடவெரியாநின்ற
பூவினையாற்றவேறோர்புனைமணியிருக்கைபுக்கான். (௯)

செய்வனமுறையினெண்ணித்திறந்திறமுறையிற்றேரு
மையறுமரபின்வந்தவமைச்சரைவருகவென்றான்
பொய்யெனப்பளிங்கினியவிருக்கையின்புறத்தைச்சுற்றி
யையிரண்டாயகோடிபேய்க்கணங்காப்பதாக்கி. (௧௦)

அளந்தறிவரியதாயவமைச்சரையடங்கநோக்கி
வளைந்ததுகுரங்கின்சேனைவாயில்கடோறும்வந்து
விளைந்ததுபெரும்போரொன்றுவிட்டதுவிடாதுநம்மை
யுளைந்தனவென்னவெண்ணியென்செயற்குரியவென்றான். (௧௧)

எழுபதுவெள்ளத்துற்றகுரங்கினமெயிலைமுற்றுந்
தழுவினவென்றுசெய்யத்தக்கதுசமைதிபோலா
மழுவரீர்வேலையன்னதாயிரவெள்ளமன்றே
யுழிஞையைத்தொடக்கநோக்கினுச்சிகைக்கொண்டதன்னார். (௧௨)

எழுமழுத்தண்டுவேல்வாளிலைநெடுஞ்சூலம்வென்றி
மழுமுதற்படைகளேந்தியிராக்கதர்மலைந்தபோது
தொழுதுதம்படைகண்முன்விட்டோடுவார்சுரர்களென்றால்
விழுமிதுகுரங்குவந்துவெறுங்கையாற்கொள்ளும்வென்றி. (௧௩)

ஈதிவனிகழ்ச்சியென்றுவெரிவிழித்திடியினக்குப்
பூதலத்தழித்தகைய னிரும்பனென்றொருவன்பொங்கி
வேதனைக்காமமந்தோவேரொடுங்கெடுத்ததென்ன
மாதலத்தலைவன்பின்றுமன் பினோர்வார்த்தைசொன்னான். (கச)

புக்கெரிமடுத்திவ்வூலாப்பொடிசெய்துபோயினாற்குச்
சக்கரமுண்டோகையிற்றசமுகன்றலைகளான
விக்கிரீபத்தின்மௌலியினமணியடங்கக்கொண்ட
சுக்கிரீவற்குமுண்டோசூலமும்வாளும்வேலும். (கரு)

தொடைக்கலத்திராமன்வாளிதோன்றுதன்முன்னந்தோன்று
விடைக்கலம்வருதல்செய்யுமுலையினுடன்னையீர்அ
படைக்கலமுடையநாமப்படையிலாப்படையையீண்ட
வடைக்கலம்புகுவதல்லாலினிப்புகுமாறுமுண்டோ. (கசு)

என்புழிமாலிதன்னையெரியெழநோக்கியென்பால்.
வன்பழிதருதிபோலாம்வான்முறையறியாவார்த்தை
யன்பழிசிந்தைதன்னுலடாதனவறையலென்றுன்
பின்பழியெய்தவின்றுனவன்பின்னைப்பேச்சுவிட்டான். (கஎ)

காட்டியகாலகேயர்கொழுநிணக்கற்றைகாலத்
தீட்டியபடைக்கைவீரச்சேனையின்றலைவதெள்ளி
தீட்டியபடைஞரோடுமிருநூறுவெள்ளங்கொண்டு
கீட்டிசைவாயினிற்றிநின்பெருங்கிளைகளோடும். (கஅ)

காலன்றன்களிப்புத்தீர்த்தமகோதரக்காளைவேபோய்
மாலொன்றுமனத்துவீரமாபெரும்பக்கனோடும்
சூலங்கொள்குரங்கையெல்லாங்கொல்லுமின்வெள்ளமான
நாலன்பதோடுஞ்சென்றுநமன்றிசைவாயினண்ணி. (க௯)

ஏற்றமென்சொல்லினென்பாலிந்திரன்பகைஞவந்நாள்
காற்றினுக்கரசன்மைந்தன்கடுமைநீகண்டதன்றோ
நூற்றிரண்டாயவெள்ளநும்பெரும்படைஞர்சுற்ற
மேற்றிசைவாயிற்சேர்திவெடிவதன்முன்னம்வீர. (உ0)

கடகரிபுரவியாட்டேர்கமலத்தோனுலகுக்கிப்பால்
புடையுளபொருதுகொண்டுபோர்பொரப்பொங்குகின்ற
விடையிடையிடைந்தசேனையிருநூறுவெள்ளங்கொண்டு
வடதிசைவாயில்காப்பான்யானெனவகுத்துவிட்டான். (உக)

இன்றெடுங்காலமெல்லாமிமையவர்க்கிறுதிகண்டாய்
புன்னெடுங்குரங்கிற்சேறல்புல்லிதுபுகழுமன்றால்
அந்நெடுமூலத்தானையதனொடுமமைச்சரோடுந்
தொன்னெடுநகரிகாக்கவிருபாக்கவென்னச்சொன்னான். (உஉ)

கலங்கியகங்குலாகிநீங்கியகற்பகாலும்
நலங்கிளர்தேவர்க்கேயோநான்மறைமுனிவர்க்கேயோ
யொலங்கெழுசீதைக்கேயோபொருவலியிராமற்கேயோ
விலங்கையர்வேந்தற்கேயோவெல்லார்க்குஞ்செய்ததின்பம். (௨௩)

அளித்தகையில்லாவாற்றலமைந்தவன்கொடுமையஞ்சி
வெளிப்படவரிதென்றன்றிவேதனையுழக்கும்வேலை
களித்தவர்களிப்புநீங்கக்காப்பவர்தம்மைக்கண்ணுற்
றெளித்தவர்வெளிப்பட்டன்னகதிரவனுதையஞ்செய்தான். (௨௪)

உளைப்புறமோதவேலையோங்கலையொடுங்கத்தூர்க்க
வளப்பருந்துளிச்சுண்ணமாசைகளலைப்பப்பூச
விளைப்பருந்தேவர்முன்னமேவலினெயிலைமுற்றும்
வளைத்தனர்விடியத்தத்தம்வாயில்கடோறும்வந்து. (௨௫)

தந்திரமிலங்கைசூழ்ந்தார்மதிலினைத்தழுவித்தாவி
யந்தரக்குலமீன்சிந்தவண்டமுங்கிழியவார்ப்பச்
செந்தனிச்சடையோன்சேயுந்தம்பியுமுன்புசெல்ல
விந்திரன்றொழுதுவாழ்த்தவிராமனுமெழுந்துபோனான். (௨௬)

நாற்கடற்புலவராலுமளிப்பரும்வலத்ததாய
மேற்கடற்றுணையானவிரிகடல்விழுங்கிற்றேனுங்
கார்க்கடல்புறத்ததாகக்கவிக்கடல்வளைந்தகாட்சி
பாற்கடலமுதந்துள்ளதொத்ததப்பதகன்மூதூர். (௨௭)

அலகிலாவரக்கன்சேனையகப்படவரியின்றானை
வலைகொலாமென்னச்சுற்றிவளைத்ததற்குவமைகூறிற்
கலைகுலாம்பரவையேழுங்கால்கிளர்ந்தெழுந்தகாலத்
தலைகெலாமொருங்குகூடியொதுக்கினவேயுமொத்த. (௨௮)

அணிவகுப்புப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௧௫.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

௧௩-வது—அங்கதன்றூதுப்படலம்.

வள்ளலும்வினையினெய்திவடதிசைவாயின்முற்றி
வெள்ளமோரேழுபத்துங்கணித்தவன்சேனையோடும்
கள்ளனைவரவுநோக்கிநின்றனன்கணக்கிலாதான்
ஒள்ளியதுணர்ந்தேனென்னவீடணற்குரைப்பதானான். (௧)

ஆதலினொருவன்றன்னையிவ்வழிவிரைவிற்றூண்டி
மாதினைவிடுதியோவென்றுணர்த்தவேமறுக்குமாகில்
காதல்கடனென்றுள்ளங்கருதியதறனுமஃதே
நீதியுமஃதேயென்றான்கருணையினிலயமன்னான். (௨)

அரக்கர்கோனதனைக்கேட்டானழகிற்றேயாகுமென்றான்
குரக்கினத்தலைவனின்றான்கொற்றவற்குற்றதென்றான்
இரக்கமதிழுக்கமென்றானிளையவனினிராமம்பு
துரக்குவதல்லால்வேறோர்சொல்லுண்டோவென்னச்சொன்னான். (௩)

தேசியைச்சிறையில்வைத்தான்றேவரையிடுக்கண்செய்தான்
பூசுரர்க்கலக்கணீந்தான்மன்னுயிர்புடைத்துத்தின்றா
னாசையினளவெல்லாவுலகமுந்தானேயாள
வாசவன்றிருவுங்கொண்டான்வழியலாவழிமேற்செல்வான். (௪)

வாழியாய்நின்னையன்றுவரம்பறுதுயரின்வைகச்
சூழ்விலாமாயஞ்செய்துன்றேவியைப்பிரிவுசூழ்ந்தான்
ஏழைபாலிரக்கநோக்கியொருதனியிகன்மேற்சென்ற
ஊழிகாண்கிற்கும்வாணாளுந்தையையுயிர்பண்டுண்டான். (௫)

அன்னவன்றனக்குமாதைவிடிலுயிரருளுவாயே
லென்னுடைநாமகிற்குமளவெலாமிலங்கைமூதூர்
மன்னவனீயேயென்றுவந்தடைந்தவற்குவாயாற்
சொன்னசொலென்னுமுன்னஞ்சுமுறவென்னாய்த்தோன்றும். (௬)

அறந்தருதவத்தையாயுமறிவினாலவற்றைமுற்று
மறந்தனையெனினுமற்றிவிலங்கையின்வளமைநோக்கி
யிறந்திடுபோதறிதென்றிரங்கினையெனினுமெண்ணிற்
சிறந்ததுபோரோவென்றான்சேவகன்முறுவல்செய்தான் (௭)

அயர்த்திலன்முடிவுமஃதேயாயினுமறிஞராய்ந்த
நயத்துறைநூலினீதிநாந்துறந்தமைதனன்றே
புயத்துறைவலியரோனும்பொறையொடும்பொருந்திவாழ்தல்.
சயத்துறையறனுமஃதேயென்றிவைசமையச்சொன்னான். (௮)

மாருதியின்னுஞ்செல்லின்மற்றிவனன்றிவந்து
சாருதல்வலியாரில்லையென்பதுசாலுமன்றே
யாரினியேகத்தக்காரங்கதனமையுமொன்னார்
வீரமேவிளைப்பரேனுந்தீதின்றிமீளவல்லான். (௯)

நன்றெனவவனைக்கூவிநம்பிநீநண்ணலார்பாற்
சென்றிரண்டாயினொன்றைச்செப்பிநீதிரிதியென்றான்
அன்றவனருளப்பெற்றவாண்டகையலங்கற்பொற்றோள்
குன்றினுமுயர்ந்ததென்றான்மனநிலைகூறலாமோ. (௧௦)

என்னவற்குரைப்பதென்னவேந்திழையாளைவிட்டுத்
தன்னுயிர்பெறுதனன்றோவன்றெனிற்றலைகள்பத்துஞ்
சின்னபின்னங்கள்செய்யச்செருக்களஞ்சேர்தனன்றோ
சொன்னவையிரண்டினொன்றேதுணிவெனச்சொல்லிடென்றான். (௧௧)

அறத்துறையன்றுவீரர்க்கழகுமன்றாண்மையன்று
மறத்துறையன்றுசேமமறைந்துறைந்தொதுங்கிவாழ்தல்
நிறத்துறவாளிகோத்துநேர்வந்துயிர்க்குமாகில்
புறத்துறவெதிரேவந்துபோர்தரப்புகுதியென்றான். (௧௨)

பார்மிசைவணங்கிச்சேயம்விண்மிசைப்படர்வதேபோல்
வீரன்வெஞ்சிலையிற்கோத்தவம்பெனவிசையிற்போனான்
மாருதியல்லனாகினியெனும்வார்த்தைபெற்றே
னாரினியென்னோடொப்பவென்பதோரின்பமுற்றான். (௧௩)

அயில்கடந்தெரியநோக்குமரக்கரைக்கடக்கவாழித்
துயில்கடந்தயோத்திவந்தான்சொற்கடவாததூதன்
வெயில்கடந்திலாதகாவன்மேருவின்மேலுநீண்ட
வெயில்கடந்திலங்கையெய்தியரக்கனதிருக்கைபுக்கான். (௧௪)

அழுகின்றகண்ணராயெழுமன்கொலென்னவஞ்சித்
தொழுகின்றசுற்றஞ்சுற்றுஞ்சொல்லியதுறைகடோறு
மொழுகின்றவீரன்வார்த்தைமுகந்தொறுஞ்செவியின்மூழ்க
வெழுகின்றசேனைநோக்கியிருந்தானைக்கண்டான். (௧௫)

கல்லுண்டுமோமுண்டேழைக்கடலொன்றுங்கடந்தோமென்னுஞ்
சொல்லுண்டேயிவனைவெல்லத்தோற்றத்தோர்கூற்றமுண்டே
யெல்லுண்டபடைகைக்கொண்டானெதிருண்டேயிராமன்கையில்
வில்லுண்டேயுண்டென்றெண்ணியாற்றவும்வியந்துநின்றான். (௧௬)

இன்றிவன்றன்னையெய்தநோக்கினேற்கெதிர்ந்தபோரில்
வென்றவென்றுதைமார்பின்வில்லின்மேற்கணையொன்றேவிக்
கொன்றவன்றானேவந்தானென்றுடன்குறிப்பினல்லால்
ஒன்றிவன்றன்னைவெல்லவல்லரோவுயிர்க்குநல்லார். (௧௭)

அணிபறித்தழகுசெய்யுமணங்கின்மேல்வைத்தவாசைப்
பிணிபறித்திவனையாவர்முடிப்பவர்படிக்கட்பேழ்வாய்ப்
பணிபறித்தெழுந்தமானக்கலுழனிவனைப்பற்றி
மணிபறித்தெழுந்தவெந்தையாரினும்வலியனென்றான். (௧௮)

நெடுந்தலைவிடுத்ததூதனிலைவயினைவிரம்பவெண்ணிக்
கடுங்கனல்விடமுங்கூற்றுங்கலந்தகால்கரமுங்காட்டி
விடுஞ்சுடர்மகுடமின்னவிரிகடலிருந்ததென்னக்
கொடுந்தொழின்மடங்கலன்னானெதிர்சென்றுகுறுகினின்றான். (௧௯)

நின்றவன்றன்னையன்னானெருப்பெழவிழிரப்பார்த்திங்
கின்றிவண்வந்தநீயாரெய்தியகருமமேது
கொன்றிவர்நின்னைமுன்னங்கூறுதிதெரியவென்றான்
வன்றிறல்வாலிசேயும்வாளெயிறிலங்கநக்கான். (௨௦)

பூநாயகனீர்சூழ்ந்தபுவிக்குநாயகனப்பூமேற்
சீதைநாயகன்வேறுள்ளதெய்வநாயகனீசெப்பும்
வேதநாயகன்மேனின்றவிதிக்குநாயகன்றான்விட்ட
தூதன்யான்பணித்தமாற்றஞ்சொல்லியவந்தேனென்றான். (உக)

அரன்கொலாமரிகொலாமற்றயன்கொலாமென்பாரன்றிக்
குரங்கெலாங்கூடிவேலைக்குட்டத்தைச்சேறகட்டி
யிரங்குவாளுதிலின்னமறிதியென்றுன்னையேவும்
நரன்கொலாமுலகநாதனென்றுகொண்டரக்கனக்கான். (உஉ)

கங்கையும்பிறையுஞ்சூடுங்கண்ணுதல்கரத்துநேமி
சங்கமுந்தரித்தமான்மற்றிந்நகர்தன்னைச்சாரார்
அங்கவர்நம்மையன்றிமனிதனுக்காகவஞ்சா
இங்குவந்திதனைச்சொன்னதூதனீயாவனென்றான். (உந)

இந்திரன்செம்மல்பண்டோரிராவணனென்பான்றன்னைச்
சுந்தரத்தோள்களோடும்வாலிடைத்தூங்கச்சுற்றிச்
சிந்துரக்கிரிகடாவித்திரிந்தனன்றேவருண்ண
மந்தரக்கிரியால்வேலைகலக்கினான்மைந்தனென்றான். (உச)

உந்தையென்றுணைவனன்றேயோய்கறஞ்சான்றுமுண்டா
விந்தனையிதன்மேலுண்டோநீயவன்றூதனாதல்
தந்தனனுனக்குநானேவானரத்தலைமைதாழா
வந்தனைநன்றுசெய்தாயென்னுடைமைந்தவென்றான். (உரு)

தாதையைக்கொன்றான்பின்னேதலைசுமந்திருகைநாற்றிப்
பேதையனென்னவாழ்ந்தாயென்பதோர்பிழையுந்தீர்ப்பாய்
சீதையைப்பெற்றேனுன்னைச்சிறுவனுமாகப்பெற்றேன்
ஏதெனக்கரியதென்றானிறுதிநாற்கெல்லைகண்டான். (உகா)

அந்நரரின்றுநாளையழிவதற்கையமில்லை
யுன்னரசுனக்குத்தந்தேனூழியூழிகாலம்
பொன்னரிசுமந்தபீடத்திமையவர்போற்றிசெய்ய
மன்னவனாகயானேசூட்டுவன்மகுடமென்றான். (உஎ)

அங்கதனதனைக்கேளாவங்கையோடங்கைதாக்கித்
துங்கவன்றோளுமார்புமிலங்கையுந்துளங்கநக்கா
னிங்குநின்றார்கட்கெல்லாமிறுதியேயென்பதுன்னி
யுங்கள்பானின்றுமெம்பாற்போந்தனனும்பியென்றான். (உஅ)

வாய்தரத்தக்கசொல்லியென்னையுன்வசஞ்செய்வாயே
லாய்தரத்தக்கதன்றேதூதுவந்தரசதாள்கை
நீதரக்கொள்வேன்யானேயிதற்கினிநிகர்வேறெண்ணில்
நாய்தரக்கொள்ளுஞ்சீயநல்லரசென்றுநக்கான். (உகூ)

அடுவனேயென்னப்பொங்கிவோங்கியவரக்கனக்தோ
தொடுவனேநான்கைச்சிதிச்சுடர்ப்படையென்றுதோன்று
னடுவனேசெய்யத்தக்கானலந்தார்க்குத்தூத
படுவதேகுணித்தாயாகில்வந்ததுபகர்தியென்றான். (௩௦)

கூவியின்றென்னைநீபோய்த்தன்குலமுழுதுங்கொல்லும்
பாவியையெய்தியஞ்சியரண்புக்குப்பதுங்கினானைத்
தேவியைவிடுகவன்றேற்செருக்களத்தெதிர்ந்துதன்க
ணாவியைவிடுகவென்றானருளினம்விடுகிலாதான். (௩௧)

பருந்தனைப்பாட்டியாக்கைபடுத்தநாள்படைஞரோடு
மருந்திறமினியமாமன்மடிந்தநாள்வனத்துள்வைகி
யிருந்துழிவந்தங்கையிருஞ்செவிமுலையுமூக்கு
மரிந்தநாள்வந்திலாதானினிச்செய்யுமாண்மையுண்டோ. (௩௨)

இளையொடும்படைஞரோடுங்கேடிலாவுயிர்கட்கெல்லாம்
களையனதம்பிமாராவேரொடுங்களையக்கண்டு
மிளையவன்பிரியமாயமியற்றியேகொண்டுபோன
வளையெயிற்றரக்கன்வெம்போர்க்கினியிவன்வருவதுண்டோ. (௩௩)

ஏந்திழைதன்னைக்கண்ணுற்றெதிர்ந்தவர்தம்மையெற்றிச்
சாந்தெனப்புதல்வன்றன்னைத்தலையிடைத்தேய்த்துத்தன்னூர்
காந்தெரிமடுத்துத்தானுங்காணவேகடலைத்தாவிப்
போந்தபின்வந்திலாதானினிப்பொருபோருமுண்டோ. (௩௪)

உடைக்குலத்தொற்றர்தம்பாலுயிர்கொடுத்துள்ளக்கள்ளந்
துடைத்துழிவருணன்வந்துதொழுதுழித்தொழாதகொற்றக்
குடைத்தொழிலும்பிகொள்ளக்கொடுத்துழிவேலைகோலி
யடைத்துழிவந்திலாதானினிவரவையமுண்டோ. (௩௫)

மதிப்புண்டதேவர்காணமணிவரைத்தோளின்வைகு
நெதிப்புண்டரீகமன்னமுகத்தியர்முன்னேநிற்கப்
பொதிப்புண்டரீகம்போலுமொருவனுற்புனைந்தமௌலி
பதிப்புண்டும்வந்திலாதானினிப்பொரும்பான்மையுண்டோ. (௩௬)

என்றிவையியம்பிவாவென்றேவினனென்னையெண்ணி
யொன்றுனக்குறுவதன்னித்துணிந்துரையுறுதிபார்க்கிற்
றுன்றிருங்குழலைவிட்டுத்தொழுதுவாழ்சுற்றத்தோடும்
பொன்றுதியாகிலென்பின்வாயிலிற்புறப்படென்றான். (௩௭)

நீரிலேபட்டுச்சூழ்ந்தநெருப்பிலேபட்டுநீண்ட
பாரிலேபட்டுவானப்பரப்பிலேபட்டவெல்லாம்
போரிலேபட்டுவிழப்பொருதநீயொளித்துப்புக்கு
ஊரிலேபட்டவென்றாற்பழியெனவுளையச்சொன்னான். (௩௮)

வேறு. சொற்றவார்த்தையைக்கேட்டலுந்தொல்லுயிர்
முற்றுமுண்பதுபோலுமுனிவினன்
பற்றுமின்கடிதினெடும்பார்மிசை
யெற்றுமின்னெனநால்வரையேவினன். (௯௯)

ஏவினன்பிடித்தாரையெடுத்தெழத்
தாவினனவர்தந்தலைபோயறக்
கூவினனவன்கோபுரவாயிலிற்
றாவினன்றுகைத்தானிவைசொல்லினன். (௱)

ஏமஞ்சாரவெளியவர்யாவரும்
நாமங்கால்வனவீரன்சுடுசரம்
வேமின்போல்வனவீழ்வதன்முன்னமே
போமின்போமின்புறத்தென்றுபோயினன். (௱௧)

அந்தரத்திடையார்த்தெழுந்தானவன்
சிந்தரத்தந்துதைந்தெழுஞ்செச்சையா
னிந்துவிண்ணின்றிழிந்துளதாமென
வந்துவீரனடியின்வணங்கினன். (௱௨)

உற்றபோதவனுள்ளக்கருத்தெலாம்
கொற்றவீரனுணர்த்தென்றுகூறலு
முற்றவோதியென்மூர்க்கன்முடித்தலை
யற்றபோதன்றியாசையறுதென்றான். (௱௩)

அங்கதன்றூதுப்படலம்-முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - கறுஅ.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கச - வது—முதற்போர்ப்படலம்.

பூசலேபிறிதில்லையெனப்புறத்
தாசைதோறுமுரசமறைந்தெனப்
பாசறைப்படையின்னிடம்பற்றிய
வாசரேறுமுறையின்வருத்திரால். (க)

மற்றுநின்றமலையுமரங்களும்
பற்றிவீரர்பரவையின்மும்முறை
கற்றகைகளினுற்கடிமாநகர்
சுற்றுநின்றவகழியைத்தூர்த்திரால். (உ)

இடுமின்பன்மரமெங்குமியங்கறத்
தடுமின்போர்க்குவருமெனச்சாற்றுமின்
கடுமினிப்பொழுதேகதிர்மிச்செலாக்
கொடிமதிற்குடுமித்தலைகொள்கென்றான். (௩)

நடங்கொள்குன்றமரங்களுந்தாங்கிய
மடங்கலன்னவவ்வானரமாப்படை
யிடங்கர்மாவிரியப்புனலேறிடத்
தொடங்கிவேலையகழியைத்தூர்த்ததால். (௪)

ஏயவெள்ளமெழுபதுமெண்கடல்
ஆயவெள்ளத்தகழியைத்தூர்த்தலும்
தூயவெள்ளந்துனைசெய்வதாமென
வாயிலூடுபுக்கூடாவளைந்தவே. (௫)

விளையும்வென்றியிராவணன்மெய்ப்புகழ்
முளையிலேறுமிங்களைந்துமுடிப்பபோற்
றளையவிழ்ந்தகொழுந்தடந்தாமரை
வளையம்வன்கையில்வாங்கினவானரம். (௬)

ஏலதாரமியம்பியவண்டுகள்
பாலதாதுகுநீர்நெடும்பண்ணைய
தாளதாமரையன்னங்கடாவிட
வாலதாவினவானரந்தாவவே. (௭)

இகழுந்தன்மையனாயவிராவணன்
புகழுமேன்மையும்போயினவாமென
நிகழுங்கண்ணெடுநீலமுகுத்ததால்
அகழிதானுமழுவதுபோன்றதே. (௮)

தண்டிருந்தபைந்தாமரைதாளறப்
பண்டிரிந்தசிலைதயப்படர்சிறை
வண்டிரிந்தனவாய்தொறுமுட்டையைக்
கொண்டிரிந்தனவன்னக்குழாமெலாம். (௯)

ஆறுமாமரமும்மலையுந்தொடர்
நீறுநீர்மிசைசென்றுநெருக்கலா
லேறுபோகழிந்தின்றெனைப்பல
வாறுசென்றனவார்கலிமேலரோ. (௧௦)

இழுகுமாக்கலிநிந்தொழிநிந்தொறும்
அழிகடோறுஞ்சரித்திடைதோன்றுதே
செழுகுதாமரையொத்தனவோங்குநீர்
முழுகிமீதெழுமாதர்முகத்தையே. (௧௧)

தன்மைக்குத்தலையாயதசமுகன்
தொன்மைப்பேரகழ்வானரந்தூர்த்தலால்
இன்மைக்குமொன்றுடைமைக்கும்யாவர்க்கும்
வன்மைக்குமோர்வரம்புமுண்டாங்கொலோ. (௧௨)

ஆர்த்தவானரங்கள்விமடுத்திடச்
சேர்த்தபோனைதன்னையுஞ்சிந்தின
வார்த்ததன்னமதிலின்வரம்புகொண்
டார்த்தவார்கலிகாரொடுமஞ்சவே. (௧௩)

வட்டமேருவிதுவெனவான்முக
டெட்டநீண்டமதின்மிசையேறிவிண்
டொட்டவானாந்தோன்றினமீத்தொக
விட்டவெண்கொடிவிங்கினவென்னவே. (௧௪)

இறுக்கவேண்டுவதில்லையெண்டீர்மணி
வெறுக்கையோங்கியமேருவிழுக்கலா
னிறுக்கநேர்வருவீரர்நெருக்கலாற்
பொறுக்கலாதுமதில்தளாபுக்கதால். (௧௫)

அறைந்தமாமுரசானைப்பதாகையான்
மறைந்தவானெடுவானகமாதிரங்
குறைந்தஅளிகுழுமிவிண்ணாடுபுக்
குறைந்ததாங்கவர்போர்க்கெழுமோதையே. (௧௬)

கோடலம்பினகோதையலம்பின
வாடலம்பரித்தாருமலம்பின
மாடலம்பினமாமணித்தேர்மணி
பாடலம்பினபாய்மதயானையே. (௧௭)

அரக்கர்தொல்குலவேரறவல்லவர்
வருக்கம்யாவையும்வாழ்வுறவந்ததோர்
கருக்கொள்காலம்விதிகொடுகாட்டிடத்
தருக்கியுற்றெதிர்தாக்கினதானையே (௧௮)

பற்கொடுந்நெடும்பாதவம்பற்றியுங்
கற்கொடுஞ்சென்றதக்கவியின்கடல்
விற்கொடுந்நெடுவேல்கொடும்வேறுள
வெற்கொடும்படையுங்கொண்டதிக்கடல். (௧௯)

அம்புகற்களையள்ளினவம்பெலாங்
கொம்புடைப்பணைகூறுறநூறின
வம்புடைத்தடமாமாமாண்டன
செம்புகச்சுடர்வேற்கணைஞ்செல்லவே. (௨௦)

மாக்கைவானரவீரர்மலைந்தகற்
றுக்கிவஞ்சர்தலைகடகர்த்தலா
னுக்கினூடுஞ்செவியினூகம்வாழ்
மூக்கினூடுஞ்சொரிந்தனமூளையே. (௨௧)

அற்கனோடுநிறத்தவரக்கர்தம்
விற்களோடுசரம்படவெம்புணீர்
பற்களோடுநெரிதரப்பற்றிய
கற்களோடுமுருண்டகவிகளே. (௨௨)

நின்றமேருநெடுமதினெற்றியின்
வென்றிவானரவீரர்விசைத்தகல்
சென்றறியவராருயிர்சிந்தின
குன்றின்வீழுமுருமின்குழுவினே. (௨௩)

எதிர்த்தவானரமாக்கையோடிற்றன
மதிற்புறங்கண்டுமண்ணின்மறைந்தன
கதிர்க்கொடுங்கணரக்கர்கரங்களால்
விதிர்த்தெறிந்தவிலங்கிலைவேலினே. (௨௪)

கடித்தருத்தினகையிற்கழுத்தறப்
பிடித்தவன்றுமிராப்பிளவாக்கின
விடித்தவெற்றினவெண்ணிலரக்கரை
முடித்தவானரம்வெஞ்சினமுற்றின. (௨௫)

எறிந்துமெய்தமெழுமுளைத்தண்டுகொண்
டறைந்தும்வெவ்வயிலாகத்தழுத்தியும்
நிறைந்தவெங்கணரக்கர்நெருக்கலாற்
குறைந்தவானரவீரர்குழுக்களே. (௨௬)

செப்பிற்செம்புனலேய்ந்தசெம்பொன்மதி
றுப்பிற்செய்ததுபோன்றதுசூழ்வரை
குப்புற்றிர்பிணக்குன்றுசமைந்துகொண்
டுப்பிற்சென்றவுதிரத்தொழுக்கமே. (௨௭)

வந்திரைத்தபறவைமயங்கின
வந்தரத்தினெருங்கலினங்கொரு
பந்தர்பெற்றதுபோன்றதுபற்றுதல்
இந்திரற்குமரியவிலங்கையே. (௨௮)

தங்குவெங்கனலோடுந்தயங்கிய
பொங்குவெங்குருதிப்புனற்செக்கர்பூங்
கங்குலன்னகவந்தமுங்கையெடுத்
தங்குமிங்குநின்றாடியவாமரோ. (௨௯)

கொள்ளிறக்குருதிக்குடைபுட்களின்
றுன்னிறச்சிறையிற்றுளிதூவலாற்
பன்னிறத்தபதாகைப்பரப்பெலாம்
செந்நிறத்தனவாய்நிறந்திரிந்தவே. (௩௦)

பொழிந்தசோரிப்புதுப்புனல்பொங்கிமீ
வழிந்தமாமதில்கைவிட்டுவானர
மொழிந்தமேருவினும்பர்விட்டிம்பரின்
இழிந்தமாகடலென்னவிழிந்தவே. (௰௧)

பதனமும்மதிலும்படைநாஞ்சிலுங்
கதனவாயிலுங்கட்டியட்டாலையு
முதலயாவையும்புக்குற்றுமுற்றின
விதனவெங்கணிராக்கதர்வெள்ளமே. (௰௨)

பாய்ந்தசோரிப்பரவையிற்பற்பல
நீந்தியெங்குநெருக்கினிடைச்சில
சாய்ந்துசாய்ந்துசாம்படத்துள்ளலுற்
றோய்ந்துவீழ்ந்தசிலசிலவோடின. (௰௩)

தழியவானரமாக்கடல்சாய்தலும்
பொழியவெம்படைப்போர்க்கடலார்த்தலால்
ஒழியுங்காலத்துலகொருமூன்றுமொத்
தழியுமாக்கடலார்ப்பெடுத்தாயரோ. (௰௪)

முரசுமாமுருடும்முரட்சங்கமு
முறைசெய்காளமுமாகுளியோசையும்
விரசும்பல்லியம்வில்லரவத்தொடுந்
திரைசெய்வேலைக்கோராகுலஞ்செய்ததே. (௰௫)

ஆயகாலையனைத்துலகுந்தரும்
நாயகன்முகனாலுநடந்தென
மேயசேனைவிரிகடல்விண்குலாம்
வாயிலூடும்புறப்பட்டுவந்ததே. (௰௬)

நெடியகாவதம்விட்டுநிரம்பிய
படியவாயிற்பருப்பதம்பாய்ந்தெனக்
கொடியொடுங்கொடிசுற்றத்தொடுத்தநண்
டொடியலூன்றினமும்மதவோங்கலே. (௰௭)

சூழியானைமதம்படுதொய்யலி
னூழிநாணெடுங்காலெனவோடுவ
பாழியாள்வயிரப்படிபன்முறை
பூழியாக்கினபொன்னெடுந்தேர்களே. (௰௮)

பிடித்தவானரம்பேரெழிற்றோள்களா
லிடித்தமாமதிலாடையிலங்கையாள்
மடுத்தமாகடல்வாவுந்திரையெலாங்
குடித்துக்கால்வனபோன்றகுதிரையே. (௰௯)

கேளிர்ஞாலங்கிளத்தியதொன்முறை
நாளுநாளுநடந்தனனன்னிரா
நீளமெய்ந்நியொருநிலைநின்றன
மீளுமாலையும்போன்றனர்வீரரோ. (௪0)

பத்திவன்றலைப்பாம்பின்பரக்கெட
முத்திராட்டின்முகத்தினைமுற்றுறப்
பித்திபித்ப்பட்டவன்றிசைபேர்வுறத்
தொத்திமீண்டிலவாலெனவெங்கூளியே. (௪௧)

நெருக்கிவந்தவிருதர்நெருங்கலாற்
குரக்கினப்பெருந்தானைகுலைந்தபோய்
அருக்கன்மாமகனுமாமராசையாற்
செருக்கினின்றவனின்றுழிச்சென்றவால். (௪௨)

சாய்ந்ததானைத்தளர்வுஞ்சலித்தெதிர்
பாய்ந்ததானைப்பெருமையும்பார்த்துறக்
காய்ந்தநெஞ்சன்கனல்சொரிகண்ணின
னேய்ந்ததங்கோர்மராமரமேந்தினன். (௪௩)

வாரணத்தெதிர்வாசியினோர்வயத்
தேர்முகத்தினிற்சேவகர்மேற்செறுத்
தோரொருத்தர்க்கொருவரினுற்றுயர்
தோரணத்தொருவனெனத்தோன்றினன். (௪௪)

களிறுமாவுமிருதருங்காலற
வொளிறுமாமணித்தேருமுருட்டிவெவ்
குளிறுசோரியொழுகக்கொதித்திடை
வெளிறிலாமரமேகொண்டுவீசினன். (௪௫)

அன்னகாலையரிக்குலவீரரும்
மன்னன்முன்புகவன்கணரக்கரும்
முன்னுமுந்தமுழங்குபெருஞ்செருத்
தன்னில்வந்தலைமயக்குற்றதால். (௪௬)

கற்றுரந்தகளம்படவஞ்சக
ரிற்றுலந்துமுடிந்தவரெண்ணிலர்
விற்றுரந்தனவெங்கணையாலுட
லற்றுலந்தகுரங்குமனந்தமே. (௪௭)

எற்கடந்துயிர்த்தகவுஞ்செரு
மற்கடங்கள்வலிந்தமலைந்திடத்
தற்கடங்கியலந்தவர்தம்முயிர்
நெற்கடங்கிநிறைந்துசெறிந்தவால். (௪௮)

பாடுகின்றனபேய்க்கணம்பல்விதந்
தாடுகின்றவருகுறையாழ்கடற்
கோடுகின்றதுதிரம்புகுந்திட
னாடுகின்றனர்கற்புடைநங்கைமார். (௪௯)

ஆனைபட்டவழிபுனலாறெலாம்
பானல்பட்டபலகணைமாரியின்
சோனைபட்டதுசொல்லரும்வானரச்
சேனைபட்டதுபட்டதுசெம்புனீர். (௫௦)

காய்ந்தவானரவீரர்கரத்தினுற்
றேய்ந்தவாயுளரானவர்செம்புனீர்
பாய்ந்ததானைப்படுகளம்பாழ்படச்
சாய்ந்ததானிருதக்கடற்றுனையே. (௫௧)

தங்கண்மாப்படைசாய்தலுந்தீயெழ்
வெங்கண்வாளரக்கன்விரைதேரினைக்
கங்கசாலந்தொடரக்கடற்செலூஉம்
வங்கமாமெனவந்தெதிர்தாக்கினான். (௫௨)

வந்துதாக்கிவடிக்கணைமாமழை
சிந்திவானரச்சேனைசிதைத்தலும்
இந்திராதியருந்திகைத்தேங்கினர்
நொந்துசூரியன்கான்முளைநோக்கினான். (௫௩)

நோக்கிவஞ்சனெறில்வயமாப்பரி
வீக்குதேரினின்மீதெழப்பாய்ந்துதோட்
டேக்குநாணியும்வில்லுந்தொலைத்தவன்
யாக்கையுஞ்சிதைத்திட்டெழுந்தேகினான். (௫௪)

மலைகுலைந்தனவச்சிரமுட்டிதன்
னிலைகுலைந்துவிழுதலினின்றுளார்
குலைகுலைந்துகொடிநகர்நோக்கினா
ரலைகிளர்ந்தெனவானரமார்த்தவே. (௫௫)

விழிவெங்கணிராக்கதர்வெம்படை
யூழியாழிகிளர்ந்தெனவோங்கின
கீழைவாயிலிற்கிட்டலுமுட்டினர்
சூழும்வானரவீரர்துவன்றியே. (௫௬)

சூலம்வாளயில்சக்கரந்தோமரம்
வாலம்வாளிமழையின்வழங்கியே
யாலமன்னவரக்கரடர்த்தலுங்
காலும்வாலுந்துமிந்தகவிக்குலம். (௫௭)

வென்றிவானரவீரர்விசைத்தெறி
குன்றமாமரமுங்கொடுங்காலனிற்
சென்றுவீசநிருதர்கள்சிந்தினர்
பொன்றிவீழ்ந்தபுரவிவெம்பூட்கைதேர். (௫௮)

தண்டுவாளயில்சக்கரஞ்சாயகங்
கொண்டுசீற்றநிருதர்கொதித்தெழப்
புண்டிறந்தகுருதிபொழிந்தக
மண்டியோடினர்வானரவீரரே. (௫௯)

எரியின்மைந்தனிருநிலங்கீழுற
விரியநின்றமராமரம்வேரொடும்
நிரியவாங்கிநிருதர்வெஞ்சேனைபோய்
வெரியஊழிநெருப்பெனவீசினான். (௬௦)

தேரும்பாகரும்வாசியுஞ்செம்முகக்
காரும்யாளியுஞ்சிங்கமுங்காண்டகு
பாரின்வீழ்ப்புடைப்பப்பசும்புனி
நீரும்வாரியதனைநிறைத்ததே. (௬௧)

அரக்கர்சேனையடுகளம்பாழ்பட
வெருக்கொண்டோடிடவெம்படைக்காவல
னெருக்கநேர்ந்தகும்பானுநெடுஞ்சாங்
தாக்கவானரச்சேனையணிந்ததே. (௬௨)

கண்டுநின்றகரடியின்காவல
னெண்டிசாமுகமெங்குமிடும்பனோர்
சண்டமாருதமென்னத்தடவரை
கொண்டுசீறியவனெதிர்குப்புற. (௬௩)

தொடுத்தவாளிகள்வீழமுன்சூழ்ந்தெதிர்
எடுத்தகுன்றையிடும்பனெறிதலு
மொடித்தவில்லுமிரதமுமொல்லெனப்
படுத்தவாசிபதாகையும்பாழ்பட. (௬௪)

தொழிந்தசிலையுமழிந்தகக்
காரிழிந்தவுருமெனக்காய்ந்தெதிர்
பார்கிழிந்தகப்பாய்ந்தனன்வானவர்
போர்கிழிந்தபுரந்தரப்போர்செய்தான். (௬௫)

சத்திமார்பின்வயிரத்தடக்கையாற்
குத்திநின்றகும்பானுவைத்தானெதிர்
மொத்திநின்றுமுடித்தலைகவ்வுறப்
பத்திவன்றடந்தோளுறப்பற்றுவான். (௬௬)

கடித்தலத்திருகாலுறக்கைகளாற்
பிடித்தத்தோளைப்பிறங்கலின்கோடுநேர்
முடித்தலத்தினைக்கவ்வுறமுனிகள்
வெடித்தவிழ்தரவிழ்த்தினனுமரோ. (௬௭)

தன்படைத்தலைவன்படத்தன்னெதிர்
துன்படைத்தமனத்தன்சுமாலிசேய்
முன்படைத்தமுகிலன்னகாட்சியின்
வன்படைத்தவரிசிலைவாங்கினான். (௬௮)

வாங்கிவார்சிலைவானரமாப்படை
ஏங்காவெணைறிந்திட்டிடையின்றியே
ஆங்குமாரியெனச்சுடர்வாளிகள்
வீங்குதோளினன்விட்டனனுமரோ. (௬௯)

நூறுமாயிரமுங்கணைநொய்தினின்
வேறுவேறுபடுதலின்வெம்பியே
மீறில்வானரமாப்படையெங்கணும்
பாறவீரன்வெகுண்டெதிர்பார்ப்புறு. (௭௦)

குன்றமொன்றதெடுத்தெதிர்கூற்றெனச்
சென்றெறிந்தவன்சேனைசிதைத்தலும்
வென்றிவில்லின்விடுகணைமாரியா
லொன்றுநூறுதிருற்றதுகுன்றமே. (௭௧)

மீட்டுமங்கோர்மராமரம்வேரொடும்
ஈட்டிவானத்திடியெனவேற்றலுங்
கோட்டும்வில்லுங்கொடியும்வயப்பரி
பூட்டுந்தேரும்பொடித்துகளாயவே. (௭௨)

தேரிழந்துசிலையுமிழந்திடக்
காரிழந்தவுருமெனக்காந்துவான்
பாரிழிந்துபருவலித்தண்டொடு
மூரிழந்தகதிரொனவோடினான். (௭௩)

வாய்மடித்தழல்கண்டொறும்வந்துகப்
போயடுத்தலுநீலன்புகைந்தெதிர்
தாயடுத்தவன்றன்கையிற்றண்டொடும்
மீயெடுத்துவிசும்புறவீசினான். (௭௪)

அம்பரத்தெறிந்தார்ப்பவரக்கனு
மிம்பருற்றெரியின்றிருமைந்தன்மேற்
செம்பொனற்பொழியக்கதைசேர்த்தினான்
உம்பர்தந்தமதுள்ளநடுங்கவே. (௭௫)

அடித்தலோடுமதத்திலையாதவ
னொடித்ததண்டம்பதித்தெறியாவிகன்
முடித்துமென்றெருநைகொடுமோதினன்
குடித்துமிழ்ந்தெனக்கக்கக்குருதியே. (௭௬)

குருதிவாய்நின்றொழுகவுங்கூசலன்
நிருதனிலனெனவளாமார்பினிற்
கருதலாதமுன்குத்தலுங்கைத்தவர்
பொருதபூசல்புகலவொண்ணாததே. (௭௭)

மற்றுநீலனரக்கனைமாடுறச்
சுற்றியால்கொடுதோளினுமார்பினு
னெற்றிமேலுநெடுங்கரநீட்டலு
மிற்றுமால்வரையென்னவிழுந்தனன். (௭௮)

இறந்துவீழ்ந்தனனேபிரகத்தனென்
றறிந்துவானவராவலங்கொட்டினார்
வெறிந்தசெம்மயிர்வெள்ளெயிற்றுடவர்
முறிந்துதத்தமுறுநகவெய்தினார். (௭௯)

தெற்குவாயலிற்சென்றபிசாசர்
மற்குலாவுவயப்புயத்தங்கத
விற்கவேயெதிர்நின்றிலரோடினார்
பொற்குலாவுசுபாரிசன்போன்றினான். (௮௦)

நாற்றிரண்டெனும்வெள்ளமுநோன்கழ
லாற்றல்சால்துன்முகனுமங்கார்த்தெழ
மேற்றிண்வாயலின்மேவினர்வீடினார்
காற்றின்மாமகன்கையெனுங்காலனால். (௮௧)

அன்னகாலையயிந்திரவாய்முதற்
றன்றுபோர்கண்டதூதவர்தோன்றினார்
மன்னகேளெனவந்துவணங்கினார்
சென்னிதாழ்க்கச்செவியிடைச்செப்பினார். (௮௨)

கீழ்வாயிற்கிளர்நிருதப்படை
சூழிநாளினும்வெற்றிகொண்டுற்றநின்
றூழியன்னவனிகத்தலைமகன்
பூழியாருயிர்புக்கதுவின்னென்றார். (௮௩)

வென்றிவேற்கைநிருதர்வெருண்டெழத்
தென்றிசைப்பெருவாயலிற்சேர்ந்துழிப்
பொன்றினான்சுபாரிசன்போயினா
னின்றுபோனவிடமறியோமென்றார். (௮௪)

வடக்குவாயிலின்வச்சிரத்தாடவர்
குடக்குவாயிலிற்குன்றனதோளினு
ரடற்கரும்வலத்தன்பதுவெள்ளமும்
படச்சிதைந்ததும்படையென்றனர். (௮௫)

என்றவார்த்தையெரிபுகுநெய்யெனச்
சென்றுசிந்தைபுகுதலுஞ்சீற்றத்தீ
கன்றுகண்ணின்வழிச்சுடர்கான்றிட
நின்றுநின்றுநெடிதுயிர்த்தானரோ. (௮௬)

மறுத்துமற்றவனாருயிர்வவ்வினு
விறுத்துக்கூறியென்றுன்றிசையெங்கணு
நிறுத்துநீலனெடும்பெருஞ்சேனையை
யொறுத்துமற்றவனோடும்வந்துற்றனன். (௮௭)

உற்றபோதுயிருவருமொன்றல
கற்றபோர்களெலாஞ்செய்தகாலையி
னெற்றிமேன்மற்றநீலனெடுங்கையா
லெற்றவிந்தனனென்னவியம்பினான். (௮௮)

அன்னவனொடும்போனவரக்கரி
னன்னகர்க்குவந்தோமையநாங்களே
யென்னவென்னவெயிற்றிகல்வாயினைத்
தின்னத்தின்னவெரிந்தனதிக்கெலாம். (௮௯)

மாறுநின்றவிருதனைவன்கணா
னோடநோக்கியுயர்படையான்மற்றக்
கோடுகொண்டுபொருமக்குரங்கினால்
வீடினானென்றுமீட்டும்விளம்பினான். (௯0)

கட்டதிந்திரன்வாழ்வைக்கடன்முறை
பட்டதிங்கோர்குரங்குபடுத்தவன்
றிட்டவெஞ்சொலெரிபுகுநெய்யெனச்
சுட்டதென்றனிநெஞ்சினைச்சுட்டதால். (௯௧)

கருப்பைபோற்குரங்கெற்றக்கதிர்சுழல்
பொருப்பையொப்பவர்தாமின்றுபோயினு
ரருப்பமென்றுபகையையுமாரழ
னெருப்பையுமிகழ்ந்தாலதுநீதியோ. (௯௨)

நிற்கவன்னதுநீர்நிறைகண்ணினார்
வற்கமாயினமாப்படையோடுஞ்சென்
றொற்கம்வந்துதவாமலுறுகென
விற்கொள்வெம்படைவீரரையேவினான். (௯௩)

மண்டுகின்றசெருவின்வழக்கெலாங்
கண்டுநின்றகயிலையிடந்தவன்
புண்டிறந்தனகண்ணினன்போக்கினான்
றிண்டிறன்னெடுந்தேர்தெரிந்தேறினான். (கச)

ஆயிரம்பரிபூண்டதிர்குரான்
மாயிருங்கடல்போல்வருவானவர்
தேயமெங்குந்திரிந்ததிண்டிறல்
சாயவிந்திரனேபண்டுதந்தது. (கரு)

ஏற்றியென்னியிறைஞ்சியிடக்கையா
லாற்றினான்றனுசிலையன்னதின்
மாற்றமென்னெடுநாணொலிவைத்தலுங்
கூற்றினையுமாருயிர்கொள்வதே. (கசு)

மற்றும்வான்படைவானவர்மார்பிடை
யிற்றிலாதனவெண்ணிலாதன
பற்றினான்கவசம்படர்மார்பிடைச்
சுற்றினானெடுந்தும்பையுஞ்சூடினான். (கஎ)

பேருங்கற்றைக்கவரிப்பெருங்கட
லிருதிர்நுரையும்மெனநின்றவ
னாரும்வெண்மையுவாமதிக்கிழுயர்
காருமொத்தனன்முத்தின்கவிகையான். (கஅ)

போர்த்தசங்கப்படகம்புடைத்திடச்
சீர்த்தசங்கங்கடலுகந்தேவர்கள்
வேர்த்தசங்கிடவண்டம்வெடிபட
வார்த்தசங்கமறைந்தமுரசமே. (ககூ)

தேருமாவும்படைஞருந்தெற்றிட
ராளியன்னெடுந்தானையின்முற்றினா
னோரேழுமுடியினெருக்குநாள்
மேருமால்வரையென்னவிளங்கினான். (க00)

வேறு.

ஏழிசைக்கருவிவிற்றிருந்ததென்னினுஞ்
சூழிருந்திசைகளைத்தொடருந்தொல்கொடி
வாழியவுலகெலாம்வளைந்துவாயிடு
மூழியினந்தகனுவிரேங்கவே. (க0க)

வேறுயர்நெடுவரையாக்கர்வேலைக்கோர்
தோணிபெற்றனவெனக்கடக்குந்தொல்செருக்
காணியவந்தவர்கலக்கங்கைமிகச்
சேணுயர்விசும்பிடையமார்சிந்தவே. (க0உ)

கன்றுறுகடும்பொறிகதுவக்கார்நிறத்
தன்னல்வாளரக்கர்தமரத்தபங்கிக
ளொண்ணிறங்கோடலினுருவின்வேற்றுமை
நண்ணினர்நோக்கவுமயிர்ப்புநல்கவே. (௧௦௩)

கானெடுந்தேருயர்கதலியுங்காத்
தேனையரோந்தியபதாகையீட்டமு
மானையின்கொடிகளுமளவித்தோய்தலால்
வானயாறெருமிமழையொற்றிவற்றவே. (௧௦௪)

ஆயிரங்கோடிபேயங்கையாயுதங்
ஆயனசமந்துயின்றொடாச்சுற்றொளிர்
சேயிருமணிநெடுஞ்சேமத்தேர்தெரிந்
தேயினவாயிரத்திரட்டியெய்தவே. (௧௦௫)

ஊன்றியபெரும்படையுலையவுற்றுட
னூன்றபோரரக்கர்களொருங்கியார்த்தெழத்
தோன்றினனுலகெலாந்தொடர்ந்துநின்றன
மூன்றையுங்கடந்தொருவெற்றிமுற்றினான். (௧௦௬)

ஓதுறுகருங்கடற்கொத்ததானையான்
றீதுறுசிறுதொழிலரக்கன்சீற்றத்தாற்
போதுறுபெருங்களம்புகுந்துளானெனத்
தூதுவர்நாயகற்கறியச்சொல்லினார். (௧௦௭)

ஆங்கவனமர்த்தொழிற்கணுகினானென
வாங்கினன்சிலைதனையென்னும்வன்மையாற்
நீங்குறுபிரிவினுற்றேய்ந்ததேய்வற
வீங்கினவிராகவன்மீளித்தோள்களே. (௧௦௮)

தொடையுறுவற்கலையாடைசுற்றிமேற்
புடையுறுவயிரவாள்பொலியவீக்கின
னிடையுறுகருமத்தினெல்லைகண்டவர்
கடையுறுநோக்கினிற்காணுங்காக்ஷியான். (௧௦௯)

ஒத்திருசிறுகுறட்பாதமுய்த்தநாள்
வித்தகவருமறையுலகைமிக்குமேற்
பத்துளவிரல்புடைபரந்தபண்பெனுஞ்
சித்திரச்சேவடிக்கழலுஞ்சேர்த்தினான். (௧௧௦)

பூவுயர்மீனெலாம்பூத்தவானிகர்
மேவிருங்கவசமிட்டிறுகவீக்கினன்
றேவியைத்திருமறுமார்பிற்றீர்ந்தன
னேவிலளென்பதுநோக்கினான்கொலோ. (௧௧௧)

நற்புறக்கோதைதன்னவிலச்செங்கையில்
விற்புறத்தற்றியகாஷிகேயிசால்
கற்பகக்கொம்பினைக்கரியமாசுணம்
பொற்புறத்தழுவியதன்மைபோன்றவால். (கக௨)

புரையிருட்பொழுதினுமலரும்பொங்கொளி
நிரைவருநாள்வரச்சிவந்ததாமரை
யிதழ்தொழும்வல்கிவீற்றிருந்ததாமெனத்
தரைவுறுவிறைவிரற்புட்டிருங்கினான். (கக௩)

பல்லியலுலகுறுபாடைபாடமைந்
தெல்லையினாற்கடலேறநோக்கிய
நல்லியல்வையமுகவினுர்நாவருஞ்
சொல்லெனத்தலைவிலாத்தூணிதூக்கினான். (கக௪)

கிளர்மழைக்குழுவிடைக்கிளர்ந்தமின்னென
வளர்பிறைநெற்றியிற்பட்டமார்த்தன
விளைவரிக்கவட்டிலையாரொடேர்பெறத்
துளவியறும்பையுஞ்சுழியச்சூடினான். (கக௫)

ஓங்கியவுலகமுமுயிருமுட்புறந்
தாங்கியபொருள்களுந்தானுந்தானென
நீங்கியதியாவதுநினைக்கிலோமவன்
வாங்கியவரிசிலைமற்றொன்றேகொலாம். (கக௬)

நாற்கடலுலகமும்விசும்புநான்மலர்
ஆர்க்கவெஞ்சேனையுந்தானுந்தோன்றினான்
மாற்கடல்வண்ணன்முன்வளருமாலிரும்
பாற்கடலோடும்வந்தெதிரும்பான்மையான். (கக௭)

வழியினுருத்திரனுருவுகொண்டுதா
னேழுயருலகமும்வீக்கின்றானென
வாழியவரிசிலைத்தம்பிமாப்படைக்
கூழையினெற்றியின்றனைக்கூடினான். (கக௮)

என்புழிநிருதராமேழுவேலையு
மின்பொழியெயிறுடைக்கவியின்வெள்ளமுந்
தென்புலக்கிழவனுஞ்செய்கைதிட்டிடப்
புன்புலக்களத்திடைப்பொருதபோலுமால். (கக௯)

தெற்கிவைவடக்கிவையென்னுந்திக்கெலாம்
பற்குலவபரந்தனகுரக்குப்பல்பிணம்
பொற்குவைநிகர்த்தனநிருதர்போர்ச்சவங்
கற்குவைநிகர்த்தனமழையுங்காட்டின. (க௨0)

துமிந்தனதலைகுடர்சொரிந்ததேர்க்குலம்
அவிந்தனபுரவியுமாளுமற்றன
குவிந்தனபிணக்குவைசுமந்துகோணில
நிமிர்ந்தனபரந்தனகுருதிநீத்தமே. (கஉக)

கடுங்குரங்கிருகையாலெற்றக்கால்வயக்
கொடுங்குரந்துணிந்தனபுரவிகுத்திடு
லொடுங்குரந்துணிந்தனர்நிருதரோடினர்
நெடுங்குரம்பெனநிறைகுருதிநீத்தமே. (கஉஉ)

அவ்வழியிராவணனமாரஞ்சத்தன்
வெவ்வழிநெருப்புகவில்லினுணிலைச்
செவ்வழிக்கோதையிற்றெறிப்பச்சிந்தின
வெவ்வழிமருங்கினுமிரிந்தவானரம். (கஉ௩)

உருமிடித்தழியுலைந்தொளிக்குநாகமொத்
திரியலுற்றனசிலவிறந்தவாற்சில
வெருவலுற்றனசிலவிம்மலுற்றன
பொருகளத்துயிரொடும்புரண்டுபோஞ்சில. (கஉ௪)

பொரக்கருநிறநெடுவிசும்புபுண்பட
விரக்கமிலிராவணனெறிந்தநாணினுற்
குரக்கினமுற்றதென்கூறிற்றன்குலத்
தரக்கருமனையதோரச்சமெய்தினர். (கஉ௫)

வீடணனொருவனுமிளையவீரனுங்
கோடணைகுரங்கினுக்கரசுங்கொள்கையா
னுடினர்நின்றனர்நாலுதிக்கினு
மோடினரல்லவரொளித்ததும்பரோ. (கஉ௬)

வேறு.

எடுக்கினனிலத்தையேந்துமிராவணனெறிந்தநாணி
னடுக்கினனுலகையென்பார்நல்கினனென்னற்பாற்றே
மிடுக்கினன்மிக்கவானோர்மேக்குயர்வெள்ளமேனாள்
கெடுக்குநாளுருமினார்ப்புக்கேட்டனனொன்னக்கேட்டார். (கஉ௭)

ஏந்தியசிகரமொன்றங்கிந்திரன்குலிசமென்னக்
காந்தியதருமின்விட்டான்கவிக்குலத்தரசனக்க
னீந்தருநெருப்புச்சிந்திநிமிர்தலுநிருதர்க்கெல்லாம்
வேந்தனும்பகழியொன்றால்வெண்டுகளாக்கிவீழ்த்தான். (கஉ௮)

அண்ணல்வாளரக்கன்விட்டவம்பினாலழிந்துசிந்தித்
திண்ணெடுஞ்சிகரநீறுய்த்திசைதிசைசிந்தலோடுங்
கண்ணெடுங்கடுந்தீக்காலக்கவிக்குலத்தரசன்கையால்
மண்மகள்வயிறுகீறமரமொன்றுவாங்கிக்கொண்டான். (கஉ௯)

கொண்டமாமாத்தையம்பின்கூட்டத்தாற்காட்டத்தக்க
கண்டமாயிரத்தின்மேலுமுளவெனக்கண்டங்கண்டான்
விண்டவாளரக்கன்மீதுவிசும்பெரிபரக்கவிட்டான்
பண்டைமால்வரையின்மிக்கதொருகிரிபருதிமைந்தன். (௧௩௦)

அக்கிரியினையுமாங்கோரம்பினாலறுத்துமாற்றித்
திக்கிரதப்போர்வென்றசிலையினையுளையவாங்கிச்
சுக்கிரீவன்றன்மார்பிற்புங்கமுந்தோன்றுவண்ண
முக்கிரவயிரவாளியொன்றுபுக்கொளிக்கவெய்தான். (௧௩௧)

உடுகணைபடுதலோடுந்துளங்கினான்றளங்காமுன்னங்
குடதிசைவாயினின்றமாருதிபுகுந்தகொள்கை
புடவுறைந்தறிந்தானென்னவோரிமையொடுங்காமுன்னம்
வடதிசைவாயில்வந்துமன்னவன்முன்னரானான். (௧௩௨)

பருதிசேய்தேருமுன்னம்பருவலியரக்கபல்போர்
புரிதியோவென்றானென்றுப்புகையெழவிழித்துப்பொங்கி
வருதியோவாவென்பான்மேன்மலையொன்றுநிலையின்வாங்கிச்
சுருதியேயனையதோளால்வீசினான்காலின்றோன்றல். (௧௩௩)

மீயெழுமேகமெல்லாம்வெந்துவெங்கரியிற்சிந்தித்
தீயெழவிசும்பினூடுசெல்கின்றசெயலைநோக்கிக்
காய்கணையைந்துமைந்தன்கடுப்புறத்தொடுத்துக்கண்டித்
தாயிரங்கூறுசெய்தானமராலாயலக்கண்செய்தான். (௧௩௪)

மீட்டொருசிகரம்வாங்கிவீங்குதோள்விசையின்வீசி
யோட்டினானோட்டவானத்துருமினுங்கடுகவோடிக்
கோட்டுவெஞ்சிலையின்வாளிமுன்சென்றுகொற்றப்பொற்றோள்
பூட்டியவலயத்தோடும்பூழியாய்ப்போயிற்றன்றே. (௧௩௫)

மெய்யெரியமன்றுபொங்கிவெங்கணான்விம்மிமீட்டோர்
மைவரைவாங்குவானைவரிசிலையுளையவாங்கிக்
கையினுந்தோளின்மேலுமார்பினுங்கரக்கவாளி
யையிரண்டழுந்தவெய்தானவனவையாற்றிநின்றான். (௧௩௬)

யாரிதுசெய்யகிற்பாரென்றுகொண்டிமையோரேத்த
மாருதிபின்னுமாங்கோர்மராமரங்கையின்வாங்கி
வேரொடுஞ்சுழற்றிவிட்டான்விடுதலுமிலங்கைவேந்தன்
சாரதிதலையைத்தள்ளிச்சென்றதுநிருதர்சாய. (௧௩௭)

மாதியோர்பாகனேறமதிதிரைப்பரவையின்னுஞ்
சீறியதனையனுங்கோர்செறிகழலரக்கன்றெய்வ
நூறுகோனெய்தினெய்தானவையுடனுழைதலோடு
மாறுபோற்குருதிசோரவனுமனுமலக்கணுற்றான், (௧௩௮)

சூற்கொண்டமாக்கள்கொண்டுங்கைக்கொண்டுங்களித்துறும்வாய்ச்
சொற்கொண்டமயிரின்புன்றோற்றோள்கொண்டுஞ்சுள்ளிவெள்ளிப்
பற்கொண்டுமலைகின்றாரிற்பழிகொண்டுபெயர்ந்தியானோர்
விற்கொண்டுநின்றபோதுவிறல்கொண்டுமிருதிபோலாம். (௧௩௯)

என்றுரைத்தெயிற்றுப்பேழ்வாயெரியுகநகைசெய்தியான்ற
பொன்றுடர்வடிம்பின்வாளிகடையுகத்துருமுப்போல
வொன்றினொன்றதிகமாகவாயிரகோடியுய்த்தான்
சென்றதுகுரங்குச்சேனைகாலெதிகடலிற்சிந்தி. (௧௪௦)

கலக்கியவரக்கன்வில்லின்கல்வியுங்கவிகளுற்ற
வலக்கணுந்தலைவர்செய்ததன்மையுமமையக்கண்டா
னிலக்குவனென்கைவாளிக்கிலக்கிவனிவனையின்று
விலக்குவனென்னவந்தான்வில்லுடைமேகமென்ன. (௧௪௧)

தேயத்தின்றலைவன்மைந்தன்சிலையைநாணெறிந்தான்றீய
மாயத்தின்வினையைவல்லார்விலையென்னைமுடிவின்மாரி
யாயத்தினிடியிதென்றேயஞ்சினவுலகம்யானை
யீயத்தின்முழக்கங்கேட்டல்போன்றனர்செருநரெல்லாம். (௧௪௨)

ஆற்றல்சாலரக்கன்றானுமயனின்றவயவர்நெஞ்சம்
வீற்றுவீற்றாகியுற்றதன்மையும்வீரன்றம்பி
கூற்றின்வெம்புருவமன்னசிலைநெடுங்குரலுங்கேளா
வேற்றினன்மகுடமென்னேயிவனொருமனிதனென்னா. (௧௪௩)

கட்டமைதேரின்மேலுங்களிநெடுங்களிற்றின்மேலும்
விட்டெழுபுரவிமேலும்வெள்ளெயிற்றரக்கர்மேலு
முட்டியமழையின்றுள்ளிமுறைமுறைமொய்க்குமாபோற்
பட்டதுபகழியெங்கும்பரந்தனகுருதிப்பவ்வம். (௧௪௪)

நகங்களிற்பெரியவேழநறைமதவருவிநாலு
முகங்களிற்புக்கவாளியபரத்தைமுற்றிமொய்ம்ப
ரகங்களைக்கழன்றுதேரினச்சினையுருவியப்பா
லுகங்களிற்கடைசென்றாலுமோய்விலவோடலுற்ற. (௧௪௫)

ஊக்கியகளிறுந்தேரும்புரவியுநூழில்செய்ய
வாக்கியவரக்கர்தானையிருகோடிகையொத்
தூக்கியபடைகள்வீசியுட்றியதுலகஞ்செய்த
பாக்கியமனையவீரன்றம்பியைச்சுற்றும்பற்றி. (௧௪௬)

உறுபகைமனிதனின்றெம்மிறைவனையுறுகிற்பானேல்
வெறுவிதுநந்தம்வீரமென்றொருமேன்மைதோன்ற
வெறிபடையரக்கரோற்றாரோற்றதுமாற்றானென்ன
வறியவனொருவன்வண்மைபூண்டவன்மேற்சென்றென்ன. (௧௪௭)

அறுத்தனனரக்கரெய்தவெறிந்தனவறுத்தருத
பொறுத்தனன்பகழிமாரிபொழிந்தனனுயிரின்போகம்
வெறுத்தனனமனும்வேலையுதிரத்தின்வெள்ளமீன
மறிந்தனமறிந்தவெங்கும்பிணங்களம்மலைகண்மான. (௧௪௮)

தலையெலாமற்றமற்றத்தாளெலாமற்றதோளா
மலையெலாமற்றபொற்றேர்மார்பெலாமற்றகுலத்
திலையெலாமற்றவீரரெயிறெலாமற்றகொற்றச்
சிலையெலாமற்றகற்றசெருவெலாமற்றசிந்தி. (௧௪௯)

தேரெலாந்துமிந்தமாவின்றிறமெலாந்துமிந்தசெங்கட்
காரெலாந்துமிந்தவீரர்கழலெலாந்துமிந்தகண்டத்
தாரெலாந்துமிந்துமின்றதருவெலாந்துமிந்துதத்தம்
போரெலாந்துமிந்துகொண்டபுகழெலாந்துமிந்துபோன. (௧௫௦)

ஆவியற்றறுகண்வன்றாளாள்விழவாண்மேல்விழப்
புரவிமேற்பூட்கைவீழப்பூட்கைமேற்பொலன்றேர்விழ
விரவியதேரின்மேன்மேனெடுந்தலைகிடந்தநெய்த்தோர்
விரவியகளத்துளெங்கும்வெள்ளிடையரிதுவீழ. (௧௫௧)

கடுப்பின்கணமரரோயுங்கார்முகத்தம்புகையாற்
றொடுக்கின்றான்றுரக்கின்றானென்றுணர்ந்திலர்தூர்ந்தவாளி
யிடுக்கொன்றுங்காணார்காண்பதெய்தகோளெய்தினெய்திப்
படுக்கின்றபிணத்தின்பம்மற்குப்பையின்பரப்பேபல்கால். (௧௫௨)

கொற்றவாள்கொலைவேல்சூலங்கொடுஞ்சிலைமுதலகோலி
வெற்றிவெம்படைகள்யாவும்வெந்தொழிலரக்கர்மேற்கொண்
டுற்றனசுற்றுமஞ்சவொளிர்வனவொன்றுநூறு
யற்றனவலதியாவுமறுதனவில்லையன்றே. (௧௫௩)

குன்றனையாளைமானக்குரகதக்கொடுந்தேர்கோப
வன்றிறலாளிசியமற்றையபிறவுமுற்றுஞ்
சென்றனவெல்லையில்லதிரிந்தனசிறிதுபோது
நின்றனவில்லையெல்லாங்கிடந்தனநெளிந்தபார்மேல். (௧௫௪)

சாய்ந்ததுவிருதர்தானைதமர்தலையிடறித்தள்ளாற்
றேய்ந்ததுவொழிந்ததோடியுலர்ந்ததுமாகவன்றே
வேய்ந்ததுவாகைவிற்கினையவன்வரிவில்வெம்பிக்
காய்ந்தவவ்விலங்கைவேந்தன்மனமெனுங்காலச்செந்தீ. (௧௫௫)

காற்றுறழ்கலினமான்றேர்கடிதினிற்கடாவிக்கண்ணுற்
றேற்றனனிலங்கைவேந்தனெரிவிழித்திராமன்றம்பி
கூற்றுமால்கொண்டதென்னக்கொல்கின்றான்குறுகச்சென்றான்
சீற்றமுந்தானுநின்றான்பெயர்ந்திலன்சென்றபாதம். (௧௫௬)

வேறு.

காக்கின்றவென்னெடுங்காவலின்வலிக்கியகள்வா
போக்கின்றுனக்கரிதாலெனப்புகன்றான்புகையுயிர்ப்பான்
கோக்கின்றனதொடுக்கின்றனகொலையம்புகடலையோ
டார்க்கின்றனகனலொப்பனவெய்தானிகல்செய்தான். (கருஎ)

எய்தான்சரமெய்தாவகையிற்றீர்கெனவிடையே
வைதாலெனவைதாவினவடிவாளியினறுத்தா
னைதாதலினறுத்தாயினியறுப்பாயெனவழிகார்
பெய்தாலெனச்சரமாரிகள்சொரிந்தான்றுயில்பிரிந்தான். (கருஅ)

ஆங்குஞ்சரமனையான்விடுமயில்வாளிகள்வைதாம்
வீங்குஞ்சரம்பருவத்திழிமழைபோலவன்விலக்காத்
தாங்குஞ்சரநெடும்புட்டிலிற்சுடர்வேலவற்கிளையான்
வாங்குஞ்சரம்வாங்காவகையறுத்தானறமறுத்தான். (கருகூ)

அப்போதையினயர்வாறியவனுமானமுல்விழியாப்
பொய்ப்போர்சிலபுரியேயெனெனவவன்றேரெதிர்புகுந்தான்
கைப்போதகமெனமுந்தவன்கடுந்தேரெதிர்நடந்தா
னிப்போரொழிபிற்போருளவவைகேளெனவிசைத்தான். (கசு0)

வென்றாயுலகொருமூன்றையுமெலியாநெடுவலியாற்
றின்றாய்செறிகழலிந்திரனிசையைத்திசைதிரிந்தா
யென்றாலுமின்றழிவுன்வயினெய்தும்மெனவிசையா
நின்றானவனெதிரேயுலகளந்தானெனநிமிர்ந்தான். (கசுக)

எடுத்தான்வலத்தடக்கையினையதுபோயுலகெல்லா
மடுத்தாய்வுறவளர்ந்தான்றிருவடியின்வரவன்றன்
மடுத்தாங்குறவளர்ந்தானெனவளர்கின்றவனுருவங்
கடுத்தானெனக்கடியாற்கெதிர்காண்பாயெனக்காட்டா. (கசுஉ)

வில்லாயுதமுதலாகியவயவெம்படைமிடலோ
டெல்லாமிடைபயின்றாய்புயநாலைந்தினொடியையர்தாய்
வல்லாய்செருவலியாய்திறன்மறவோய்மிகலெதிரோ
நில்லாயெனநிகழ்த்தாநெடுநெருப்பாமெனவுயிர்ப்பான். (கசுங)

நீளாண்மையினுடனேயெதிர்நின்றாயினியொன்றே
வாளாண்மையுமுலகேழினொடுடனேயுடைவலியுந்
தாளாண்மையுநிகராருமிறனியாண்மையுமினிநின்
றோளாண்மையுமிசையோடுடன்றுடைப்பேனொருபுடைப்பால். (கசுச)

பரக்கப்பலவுரைத்தென்படர்கயிலைப்பெருவரைக்கு
மரக்குற்றெரிபொறிக்கட்டிசைக்கரிக்குஞ்சிறிதனுங்கா
வரக்குப்பையினுயர்தோள்பலவுடையாயுரனுடையாய்
குரக்குத்தனிக்கரத்திற்புடைபொறையாற்றலைகொல்லாம். (கசுரு)

என்றோள்வலியதனாலெடுத்தியானெற்றவுயிறவா
நின்றாயெளினிபின்னெனினின்னைத்தலங்காயாற்
குன்றேபுரைதோளாய்விடல்கொடுருத்துதிருத்தப்
பொன்றேனெனினின்றோடெதிர்பொருகின்றிலனென்றான். (௧௬௬)

காரிற்கரியவன்மாருதிகழறக்கடிதகவா
வீரற்குரியதுசொற்றனைவிறலோயொருதனியே
நேர்நிற்பவருளரோபிறர்நீயல்லவரினிநின்
பேருக்குலகளவேயினியுளவோபிறவென்றான். (௧௬௭)

ஒன்றாயுதமுடையாயலையொருநீயெனதறவுங்
கொன்றாயுயர்தேர்மேனிமிர்கொடுவெஞ்சிலைகோலி
வன்றானையிலுடன்வந்தவனெதிர்வந்துநின்வலியா
லின்றாயொடுநின்றானினிநிகரோவுனைநெடியோய். (௧௬௮)

முத்தேவர்கண்முதலாயினர்குழுமூன்றுலகிடையு
மெத்தேவர்களெத்தானவரெவ்வீரர்களென்னோர்
பித்தேறினரல்லாலிடைபோராதெதிர்மார்பிற்
குத்தேயெனநின்றாயிதுகூறுந்தரமன்றால். (௧௬௯)

பொருகைத்தலமிருபத்துளபுகழுந்திறிதுளதால்
வருகைத்தலமதவெங்கரிவலிகெட்டனவருவா
யிருகைத்தலமுடையாயெதிரிவைசொற்றனையினிமேற்
றருகைக்குரியதொர்கொற்றமெனமர்தக்கதுமன்றால். (௧௭௦)

திசையத்தனையையும்வென்றதுசிதையப்புகழ்தெறுமவ்
வசைமற்றினியுளவேயெனதுயிர்போல்வருமகனை
யசையத்தலையசைவித்தனையழிசெம்புனலதுவோ
யசையற்றிலதொருநீயெனவெதிர்நின்றின்வயகர்வாய். (௧௭௧)

பூணித்திவையுறைசெய்தனையதனாலுறைபொதுவே
பாணித்ததுபிறிதென்சிலபகர்கின்றதுபழியா
னாணித்தலையிடுகின்றிலனிவந்தலகைவையுங்
காணக்கடிதெதிர்குத்துதியென்றான்வினைகடியான். (௧௭௨)

வீரத்திறமிதுகன்றெனவியவாமிகவிளியாத்
தேரிற்கடிதிவராமுழுவிழியிற்பொறிசிதற
வாரத்தொடுகவசத்துடல்பொடிபடுகவ்வனமா
மார்பிற்கடிதெதிர்குத்தினன்வயிரக்கரமதனால். (௧௭௩)

அயிருக்கனநெடுமால்வரையனலுக்கனவிழிக
டயிருக்கனமுழுமூளைகடலையுக்கனதரியா
வுயிருக்கனநிருதக்குலமுயர்வானரமலையு
மயிருக்கனவெயிலுக்கனமழையுக்கனவானம். (௧௭௪)

விற்சிந்தினநெடுநாணியிர்கணைசிந்தினவிரிநீர்
கற்சிந்தினகுலமால்வரைகதிர்சிந்தினசுடரும்
பற்சிந்தினமதயானைகள்படைசிந்தினரொருவ
மெற்சிந்தினவெரிசிந்தினவிகலோன்மணியகலம். (௧௭௫)

கைக்குத்ததுபடலுங்கழனிருதர்க்கிறைகறைநீர்
மைக்குப்பையினெழில்கொண்டொளிர்வயிரத்தடமார்பிற்
றிக்கிற்சினமதயானைகள்வயவெம்பணைசெருவிற்
புக்கிற்றனபோகாதனபுறமுக்கனபுகழின். (௧௭௬)

அள்ளாடியகவசத்தவிர்மணியற்றனதிசைபோய்
விள்ளாநெடுமுழுமீனெனவிழிவெம்பொறியெழுமின்
றுள்ளாடியநெடுங்கால்பொரவொடுங்காவுலகுலையத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தானறம்வலித்தான். (௧௭௭)

ஆர்த்தார்விசும்புறைவோர்நெடிதனுமான்மிசையதிகந்
தூர்த்தார்நறுமுழுமென்மலரிசையாசிகள்சொன்னார்
வேர்த்தார்நிருதர்கடானவர்வியந்தாரவன்விசையந்
தீர்த்தானெனவுவந்தாடினர்முழுமெய்மயிர்சிலிர்த்தார். (௧௭௮)

கற்றங்கியினெடுவாயுவினிலைகண்டவர்கதியால்
மற்றங்கொருவடிவுற்றதுமாருடுறுகாலை
பற்றங்கொருமைமயிலன்னதுபயில்கின்றதொர்செயலா
லுற்றங்கதுபுறம்போயுடல்புகுந்தாலெனவுணர்ந்தான். (௧௭௯)

உணராநெடிதுயிராவுளையுதவாவெரியுமிழா
வினையாருமிலவனேர்வரவெய்தாவலிசெய்தா
யனையாயினியெனதாழெனவடராவெரிபடராப்
பணையார்புயமுடையானிடைசிலவிம்மொழிபகர்ந்தான். (௧௮௦)

வலியென்பதுமுளதேயதுநின்பாலதுமறவோ
யலியென்பனபுறநின்றனவுலகேழினுமடைத்தாய்
சலியென்றெதிர்மலரோனுரைதந்தாலிறைசலியேன்
மெலிவென்பதுமுணர்ந்தேனெனைவென்றாயினிவிறலோய். (௧௮௧)

ஒன்றுண்டினியுரைநேர்குவதுன்மார்பினென்னொருகைக்
குன்றின்மிசைகடைநாள்விழுமுருமேறெனக்குறித்தா
னின்றிங்கிலைதருவாயெனினியல்லவருளரோ
வின்றும்முளையென்றும்முளையிலையோர்பகையென்றான். (௧௮௨)

என்றானெதிர்சென்றானிகலடுமாருதியெனைநீ
வென்றாயலையோவுன்னுயிர்வீடாதனைசெய்தாய்
நன்றாகநின்னிலைநன்றெனநல்காவெதிர்நடவாக்
குன்றாகியதிரடோளவன்கடன்கொள்ளெனக்கொடுத்தான். (௧௮௩)

உறுக்கித்தனியெதிர்நின்றவனுரத்திற்றனதோளிற்பல
இறுக்கிப்பலநெடுவாய்மடித்தெரிகண்டொறுமிழிய
முறுக்கிப்பொறிபிறப்பலவிரன்றூரியதிசையக்
குறுக்கிக்கரநெடுந்தோள்புறங்கிரக்கொடுகுத்த. (௧௮௪)

பள்ளக்கடல்கொள்ளப்படர்படிபேரிரும்பதையா
வள்ளப்பெருவெள்ளத்தெறுழ்வலியாரினும்வலியான்
கள்ளக்கறையுள்ளத்ததிர்கழல்வெய்யவன்கரத்தாற்
றள்ளத்தளர்வெள்ளிப்பெருங்கிரியாமெனச்சலித்தான். (௧௮௫)

வேறு.

சலித்தகாலையினிமையவருலகெலாஞ்சலித்த
சலித்ததாலறஞ்சலித்ததுமெய்ம்மொழிதகவுஞ்
சலித்தநன்றியும்புகழொடுசெறிவுஞ்சலித்த
சலித்தநீதியுஞ்சலித்ததுகருணையுந்தவமும். (௧௮௬)

அனையகாலையினரிக்குலத்தலைவரவ்வழியோ
ரினைவரன்னவர்யாவருமோர்குவடேந்தி
நிலைவின்முன்னெடுவிசும்பொருவெளியின்றிநெருங்க
வினையிதென்றறிந்திராவணன்மேற்செலவிட்டார். (௧௮௭)

ஒத்தகையினருழியினிறுதியிலுலகை
மெத்தமிசெழுமேகத்தின்விசும்பெலாமிடையப்
பத்தநூறுகோடிக்குமேற்பனிபடுகிரா
மெத்தமேற்செலவெறிந்தனர்பிறிந்தனரிமையோர் (௧௮௮)

நெருக்கிவீசிடவிசும்பிடமின்மையிற்றம்மி
னெருக்குகின்றனநின்றனசென்றிலநிறைந்த
வருக்கனும்மறைந்தாரிருள்விழுங்கியதண்டஞ்
சுருக்கமுற்றனராக்கொன்றிமையவர்சூழ்ந்தார். (௧௮௯)

ஒன்றையொன்றுபட்டொடிவனவிடித்துருமதிரச்
சென்றவன்பொறியின்பலசெறிந்திடத்தெய்வ
வென்றிவில்லெனவிருநிலம்வீழ்ந்திடமேன்மேற்
குன்றியோடிடக்கன்மழைபிகர்த்தனகற்கள். (௧௯0)

இரிந்துநீங்கியராக்கதப்பெரும்படையெங்கும்
விரிந்துசிந்தினவானத்துமீனெனுவிமானஞ்
சொரிந்தவெம்பொறிபடக்கடல்சுவறினதோற்றங்
கரிந்தகண்டகர்கண்மணியெனப்பலகழறி. (௧௯௧)

இறத்தநின்றுலகென்பதோர்திமிலம்வந்தெய்தக்
கறுத்தசிந்தையவிராவணனனையதுகண்டா
னொறுத்துவானவர்புகழுண்டபாரவில்லுலைய
வறுத்துநீக்கினனுயிர்கோடிமேலம்பால். (௧௯௨)

சாம்பெலாங்கடுந்தகள்படக்கனிறெலாந்துணியப்
பாம்பெலாம்படவாளியுமுழுவையும்பாறக்
கூம்பர்மாமரமெரிந்தகக்குழுந்தகணெருங்கச்
சாம்பராயினதடவரைசுடுகணைதடிய. (கஞக)

உற்றவாறென்றுமொன்றுநூறுயிரமுருவா
யிற்றவாறென்றுமிடிப்புண்டுபொடிப்பொடியாகி
யற்றவாறென்றுமரக்கனையடுசிலைக்கொடியோன்
கற்றவாறென்றும்வானவர்கைத்தலங்குலைத்நார். (கஞச)

அடருடைத்தமென்றரிக்குலவீரன்றெறிந்த
இடருடைத்தனதசமுகன்சிரமவைதிசைசூழ்
கடருடைத்தனகளத்தினின்றுயர்தரும்பூழி
யுடருடைத்தனவுதிரமுந்தடைத்ததொண்புடவி. (கஞரு)

கொல்வலிக்குறியேமற்றிவ்வானரக்குழுவை
வெல்வன்மாவிடாிருவனையெனச்சினம்வீங்கப்
பல்வன்வார்சிலைபத்தடலிடக்கையின்வாங்கித்
தொல்வன்மாரியிற்றுடர்வனசுடுசரந்தூர்ந்தான். (கஞசு)

ஐயிரண்டுகார்முகத்தினுமாயிரம்பகழி
கைகளிரைந்தினுலும்வெங்கடுப்பினிற்றொடுத்தூற்
றெய்யவெஞ்சினவானமுமிருநிலவரைப்பு
மொய்கொள்வேலையுந்திசைகளுஞ்சரங்களாய்முடிந்த. (கஞஎ)

அந்திவானகமொத்ததவ்வமர்க்களமுதிரஞ்
சிந்திவேலையுந்திசைகளுநிறைந்தனசரத்தாற்
பந்திபந்தியாய்மடிந்ததுவானரப்பகுதி
வந்துமேகங்கள்படிந்தனபிணப்பெருமலைமேல். (கஞஅ)

நிலனம்பொடுசென்றிலனின்றிலனிலத்தான்
காலனூர்வயத்தடைந்திலனேவுண்டகவைய
நூலமன்னதோர்சரத்தொடுமங்கதனயிர்த்தான்
சூலமன்னதோர்வாளியாற்சோம்பினன்சாம்பன். (கஞகூ)

மற்றும்வீரர்தம்மருமத்தினயிலம்புமடுப்பக்
கொற்றவீரமுமாண்டொழிற்செய்கையுங்குறைந்தார்
சுற்றும்வானரப்பெருங்கடற்றொலைந்ததுதொலையா
தாற்றுமின்றவரோடினரிலக்குவனுருத்தான். (உ00)

நூறுகோடியநூறுநூறுயிரகோடி
வேறுவேறெய்தசரமெலாஞ்சரங்களால்விலக்கி
யேறுசேவகன்றம்பியவ்விராவணனெடுத்த
வாறுநாலுவெஞ்சிலையையுங்கணைகளாலறுத்தான். (உ0க)

ஆர்த்தவானவராவலங்கொட்டினரரக்கர்
வேர்த்துநெஞ்சமும்வெதும்பினர்வினையறுமுனிவர்
அர்த்தனன்மலர்சொரிந்தனரிராவணன்றனைப்
பார்த்துவந்தனன்குனித்தநல்லறம்பாடி. (௨௦௨)

நன்றுபோர்வலிநன்றுபோராள்வலிவீர
நன்றுநோக்குநன்றுகைக்கடுமையுநன்று
நன்றுகல்வியுநன்றுநின்திண்மையுநலனு
மென்றுகைமறித்திராவணனொருவனியென்றான். (௨௦௩)

காலினன்றிகற்கரன்படைபடுத்தவக்கிரியோன்
றானுமிந்திரன்றன்னையோர்தநுவலந்தன்றல்
வானில்வென்றவென்மதலையும்வரிசிலைபிடித்த
யானுமல்லவர்யாருனக்கெதிரொன்றுமிசைத்தான். (௨௦௪)

வில்லினுலிவன்வெலப்படானெனச்சினம்வீங்கக்
கொல்லுநாளுமின்றிதுவெனச்சிந்தையிற்கொண்டான்
பல்லினுலிதழதுக்கினன்பருவலிக்கரத்தா
லெல்லிநான்முகன்கொடுத்ததோர்வேலெடுத்தெறிந்தான். (௨௦௫)

எறிந்தகாலவேலெய்தவம்பியாவையுமெரிந்து
பொறிந்துபோயுகத்தீயுகவிசையினிற்பொங்கிச்
செறிந்ததாரவன்மார்பிடைச்சென்றதுசிந்தை
யறிந்தமைந்தனுமமர்நெடுங்களத்திடையயர்ந்தான். (௨௦௬)

இரியலுற்றதுவானரப்பெரும்படையிமையோர்
பரியலுற்றனருலைந்தனர்முனிவரும்பதைத்தார்
விரிதிரைக்கடற்கிரட்டிகொண்டார்த்தனர்விரவார்
திரிகையொத்ததுமண்டலங்கதிரொளிதிரிந்த. (௨௦௭)

அஞ்சினனலனயன்றந்தவேலினுமாவி
அஞ்சினலன்வளக்கினனென்பதுதணியா
வெஞ்சிலியாக்கையையெடுத்துக்கொண்டகல்வனென்றெண்ணி
நஞ்சினுற்செய்தமனத்தினன்பாரின்மேனடந்தான். (௨௦௮)

உள்ளிவெம்பிணத்துதிரநீர்வெள்ளத்திடைநேடி
யள்ளியக்கைகளிருபதும்பற்றிப்பண்டரன்மா
வெள்ளியங்கிரியெடுத்தனன்வெட்கினனென்ன
வெள்ளில்பொன்மலையெடுக்கலுற்றானெனவெடுத்தான். (௨௦௯)

அடுத்தகல்லுணர்வொழிந்திலனம்பாஞ்செம்பொ
னுடுத்தநாயகன்றனெனவுணர்தலினொருங்கே
தொடுத்தவெண்வகைமூர்த்தியைத்துளக்கிவெண்பொருப்போ
டெடுத்ததோள்களுக்கெழுந்திலனிராமனுக்கிளையான். (௨௧௦)

தலைகள்பத்தொடுந்தழுவியதசமுகத்தலைவ
னிலைகொண்மாகடலொத்தனன்கரம்புடைநிமிரு
மலைகளொத்தனவதினெழுமாமதியொத்தா
னிலைகொடலங்கடொடையிலங்குதோளிராமனுக்கினியான். (உகக)

எடுக்கலுற்றவன்மேனியையேந்துதற்கேற்ற
பிடுக்கிலாமையினிராவணன்வெய்துயிர்ப்புற்று
விடுக்கினின்றவம்மாருதிபுகுந்தெடுத்தேந்தித்
தடுக்கலாததோர்விசையினினெழுந்தயல்சார்ந்தான். (உகஉ)

தொகவொருங்கியஞானமென்றெவரினுந்தூயான்
றகவுகொண்டதோரன்பெனுந்தனித்துணையல்லா
லகவுகாதலாலாண்டகையென்னிருமனுமன்
மகவுகொண்டுபோய்மரம்புகுமந்தியையகர்த்தான். (உகங)

மையல்கூர்மனத்திராவணன்படையினுன்மயங்குஞ்
செய்யவாளரியேறனுன்சிறிதினிற்றேறிக்
கையுங்கால்களுநயனமுங்கமலமேயனைய
பொய்யிலாதவனின்றிடத்தனுமனும்போனான். (உகச)

போனகாலையிற்புக்கனன்புங்கவன்போர்வேட்
டியானைமேற்செலுங்கோளரியேறிதுவென்ன
வானுளோர்கணமார்த்தனர்தூர்த்தனர்மலர்மேற்
றானவின்றவேலரக்கனுந்தேரினைத்தூண்டினான். (உகரு)

தேரிற்போரரக்கன்செலச்சேவகன்செவ்வே
பாரிற்செல்கின்றவறுமையைநோக்கினன்பரிந்தான்
சீரிற்செல்கின்றதில்லையிச்செருவெனுந்திறத்தால்
வாரிற்பெய்கழன்மாருதிகதுமெனவந்தான். (உகசு)

ஊறுபத்துடைநொதில்பரித்தேரின்மேனும்முன்
மாறில்போரரக்கன்பொரநிலத்துநீமலைதல்
வேறுகாட்டுமோர்வெறுமையைமெல்லியவெனினு
மேறுநீயையவென்னுடைத்தோளின்மேலென்றான். (உகஎ)

நன்றுநன்றெனநாயகனேறினனமக்
குன்றின்மேலிவர்கோளரியேறெனக்கூறி
யன்றுவானவராசிகளியம்பினரீன்ற
கன்றுதாங்கியதாயெனமாருதிகளித்தான். (உகஅ)

மாணியாயுலகளந்தநாளவனுடைவடிவை
யாணியாயுணர்மாருதியதிசயமுற்றான்
காணியாகப்பண்டுடையனுமொருதனிக்கலுழ
னாணினான்மற்றையனந்தனுந்தலைநடுக்குற்றான். (உகக)

ஓதமொத்தனன்மாருதியதனகத்துறையும்
நாதனொத்தனனென்னிலோதுயில்கிலனம்பன்
வேதமொத்தனன்மாருதிவேதத்தின்சிரத்தின்
போதமொத்தனனிராமன்வேறிதனிலைப்பொருவே. (௨௨௦)

வேறு.

சுருதியாய்நின்றவென்றிமாருதிதனிலைமைசார்ந்த
மிருதியைவேறுநோக்கினெவ்வண்ணம்விளம்புந்தன்மை
புருதிகூர்ந்துள்ளார்வேதம்பொருவுறப்புலத்துநோக்கும்
பருதியையொத்தான்வீரன்மேலைத்தன்பதமேயொத்தான். (௨௨௧)

மேருவின்சிகரம்போன்றதென்னிறும்வெளிறுண்டாமால்
மூரிநீரண்டமெல்லாம்வயிற்றிடைமுன்னங்கொண்ட
வாரியற்கனேகமாற்கத்தாலிடம்வலமதாகச்
சாரிகைதிரியலானமாருதிதாமப்பொற்றேருள். (௨௨௨)

ஆதிசொல்லினாருந்தவாறமெனுந்தெய்வங்
காலினன்னெடுங்கரமெடுத்தாடிடக்கயிலை
யீசனுன்முகனென்றிவைமுதலியவிமையோர்
பூசல்காணியவந்தனரந்தரம்புகுந்தார். (௨௨௩)

அன்னவஞ்சனவண்ணனுமமர்குறித்தமர்ந்தா
னெண்ணரும்பெருந்தனிவலிச்சிலையைநாணெறிந்தான்
மண்ணும்வானமுமற்றையபிறவுந்தன்வாய்ப்பெய்
துண்ணுங்காலத்தவுருத்திரனார்ப்பொத்ததோதை. (௨௨௪)

ஆவிசென்றிலர்நின்றிலரரக்கரோடியக்கர்
நாவுலர்ந்தனர்கலங்கினர்விலங்கினர்நடுங்கிக்
கோலவின்றபேரண்டமுங்குலைந்தனகுலையாத்
தேவதேவனும்விரிஞ்சனுஞ்சிரதலங்குலைத்தார். (௨௨௫)

ஊழிவெங்கனலொப்பனதுப்பனவுருவ
வாழிநீரையுங்குடிப்பனதிசைகளையளப்ப
கீழின்மீச்செலின்மண்ணையும்விண்ணையுந்துளைப்ப
யேழுவெஞ்சரமுடன்றொடுத்திராவணனெய்தான். (௨௨௬)

எய்தவாளியையேழினாலேழிரண்டேழு
செய்தவெஞ்சரமைந்தொருதொடையினிற்சேர்த்தி
வெய்துகாலவெங்கனல்களும்வெள்குறப்பொறிகள்
பெய்துபோம்வகையிராகவன்சிலைநின்றும்பெயர்த்தான். (௨௨௭)

வாளியைந்தையுமைந்தினால்விசும்பிடைமாற்றி
யாளிமொய்ம்பினவ்வரக்கனுமையிரண்டம்பு
தோளினூறவாங்கினன்றுரந்தனன்சுருதி
யாளுநாயகனவற்றையுமற்றினாலறுத்தான். (௨௨௮)

அறுத்துமற்றவனயலின்றவளப்பருமரக்கர்
செறுத்துவிட்டனபடையெலாங்கணைகளாற்சிந்தி
யிறுத்துவிசியகிரிகளையெரியுகநூறி
யொறுத்துமற்றவர்தலைகளாற்சிலமலையுய்த்தான். (௨௨௯)

மீனுடைக்கருங்கடல்புரையிராக்கதர்விட்ட
வூனுடைப்படையிராவணனம்பொடுமோடி
வானரக்கடல்படாவகைவாளியான்மாற்றித்
தானுடைச்சரத்தாலவர்தலைமலைதடிந்தான். (௨௩௦)

இம்பரானெனவில்விசம்பினனுகுமோரிமைப்பிற்
றும்பைசூடியவிராவணன்முகந்தொறுந்தோன்றும்
வெம்புவஞ்சகர்விழிதொறுந்திரியுமேனின்று
னம்பின்முன்செலுமனத்திற்குமுன்செலுமநுமன். (௨௩௧)

ஆடுகின்றனகவந்தமுமவற்றொடுமோடிப்
பாடுகின்றனவலகையுநீங்கியபணைக்கைக்
கோடுதுன்றியகரிகளும்பரிகளுந்தலைக்கொண்
டோடுகின்றனவுலப்பிலவுதிரவாறுவரி. (௨௩௨)

அற்றவாழியவறுப்புண்டவச்சினவம்போ
டிற்றகொய்யுளைப்புரவிபடுதேர்க்குலமெல்லா
மொற்றைவாளியோடிருண்டனகருங்களிற்றோங்கல்
சுற்றும்வாசியுந்துமிந்தனவமர்க்களந்தொடர்ந்த. (௨௩௩)

தேரிழந்துவெஞ்சிலைகளுமிழந்துசெந்தறுகட்
காரிழந்துவெங்கலினமாக்கால்களுமிழந்து
சூரிழந்துவன்கவசமுமிழந்துதுப்பிழந்து
தாரிழந்துபின்னிழந்தனர்நிருதர்தந்தலைகள். (௨௩௪)

அரவவல்குலாரரக்கியர்கணவரன்றற்ற
சிரமுமன்னவையாதலின்வேற்றுமைதெரியாப்
புரவியின்றலைபூட்கையின்றலையிவைபொருத்திக்
கரவிலின்னுயிர்துறந்தனர்கவ்வுறத்தழுவி. (௨௩௫)

ஆர்ப்படங்கினவாயெலாமழற்கொழுந்தொழுகப்
பார்ப்படங்கினகண்ணெலாம்பலவகைப்படைக
டேர்ப்படங்கினகையெலாந்தூளியின்படலைப்
போர்ப்படங்கினவுலகெலாமுரசெலாம்போன. (௨௩௬)

ஒன்றுநூறினோடாயிரங்கொடுந்தலையுருட்டிச்
சென்றுதீர்வனவெனைப்பலகோடியுஞ்சிந்தி
நின்றதேரொடுமிராவணனொருவனுநிற்கக்
கொன்றுவீழ்த்தினதிராகவன்சரமெனுங்கூற்றம். (௨௩௭)

தேரும்யானையும்புரவியுமாக்களுந்தெற்றிப்
பெருமோரிடமின்றெனத்திசைதொறும்பிறங்கிக்
காரும்வானமுந்தொடுவனபிணக்குவைகண்டான்
மூரிவெஞ்சிலையிராவணனராவெனமுனிந்தான். (௨௩௮)

மூண்டொருஞ்சிலையிமைப்பினின்முறையுறவாங்கிப்
புரண்டுதோளுறப்பொலன்கொளுண்வலம்படப்போக்கித்
திரண்டவாளிகள்சேவகன்மரகதச்சிகரத்
திரண்டுதோளினுமிரண்டுபுக்கழுந்திடவெய்தான். (௨௩௯)

முறுவலெய்தியமுகத்தினன்முளரியங்கண்ணன்
மறுவிலாததோர்வடிக்கணைதொடுத்துறவாங்கி
யிறுதியெய்துநாட்கால்பொரமந்தரமிடையிட்
டறுவதாமெனவிராவணன்சிலையினையறுத்தான். (௨௪௰)

மாற்றும்வெஞ்சிலைவாங்கினன்வடிம்புடைநெடுநா
ணேற்றுமுனமிடையறக்கணைகளாலெய்தான்
காற்றினுங்கடிதாவனகதிர்மணிநெடுந்தே
ராற்றுகொய்யுளைப்புரவியின்சிரங்களையறுத்தான். (௨௪௧)

மற்றும்வெம்படைவாங்கினன்வழங்குறுமுன்ன
மிற்றவிற்றகவெரிகணையிடையறவெய்தான்
கொற்றவெண்குடைகொடியொடுந்துணிபடக்குறைத்தான்
கற்றையஞ்சுடர்க்கவசமுங்கட்டறக்கழித்தான். (௨௪௨)

மாற்றுத்தேரவண்வந்தனவந்தனவாரா
வீற்றுவீற்றுகவெயிலுமிழ்கடுங்கணைவிட்டான்
சேற்றுச்செம்புனற்படுகளப்பரப்பிடைச்செங்கட்
கூற்றுங்கையெடுத்தாடவிராவணன்கொதித்தான். (௨௪௩)

மின்றும்பன்மணிமவுலிமேலொருகணைவிட்டா
னன்னகாய்கதிரிரவிமேற்பாய்ந்தபோலும
னென்னலாயதோர்விசையினிற்சென்றவன்றலையிற்
பொன்னின்மாமணிமகுடத்தைப்புணரியில்வீழ்த்த. (௨௪௪)

செறிந்தபன்மயிர்பெருவனந்திசைபரந்தெரியப்
பொறிந்தவாய்வயக்கடுஞ்சுடர்க்கணைபடும்பொழ்தி
னெறிந்தகால்பொரமேருவின்கொடுமுடியிழந்து
மறிந்துவீழ்ந்ததுமொத்ததவ்வரக்கன்றன்மகுடம். (௨௪௫)

அண்டர்நாயகனடுஞ்சிலையுதைத்தபேரம்பு
கொண்டுபோகப்போய்க்குணகடற்குளித்தவக்கொள்கை
மண்டலந்துடர்வயங்குவெங்கதிரினைவாவா
அண்டகோளொடுமொலிகடல்வீழ்ந்ததுமொக்கும். (௨௪௬)

சொல்லுமந்தனையனைவயின்மணிமுடிதுறந்தா
னெல்லிமைத்தெழுமதியமுனூறாயிரமிழந்த
வல்லுமொத்தனன்பகலுமொத்தனனமர்பொருமேல்
வெல்லுமத்தனையல்லதுதோற்றிலாவிறலோன். (உசஎ)

மாற்றருந்தடமணிமுடியிழந்தவாளரக்க
னேற்றவெவ்வுலகத்திலுமுயர்ந்துளனெனினு
மாற்றனன்னெடுங்கவிஞரோராங்கதமுணாப்பப்
போற்றரும்புகழிழந்தபேரொருவனும்போன்றான். (உசஅ)

அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்திடநிலம்விரல்கிளைத்திடநின்றா
னிறங்குகண்ணினனெல்லழிமுகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன்விழுதுடையாலன்னமெய்யன். (உசகூ)

நின்றவன்னிலைநோக்கியநெடுந்தகையிவனைக்
கொன்றலென்பயன்வெறுங்கைநின்றானெனக்கொள்ளா
வின்றவிந்ததுபோலுமுன்றீமையென்றிசையோ
டொன்றவந்தனவாசகமினையனவுரைத்தான். (உரு௦)

அறத்தினாலன்றியமரர்க்குமருஞ்சமங்கடத்தல்
மறத்தினாலரிதென்பதுமனத்திடைவலித்தி
பறத்திநின்னெடும்பதிபுகக்கிளையொடும்பாவி
யிறத்தியானதுநினைக்கிலன்றனிமைகண்டிரங்கி. (உருக)

உடைப்பெருங்குலத்தாரொடுமுறவொடுமுதவும்
படைக்கலங்களுமற்றுநீதேடியபலவு
மடைத்துவைத்தனதிறந்துகொண்டாற்றுதியாயிற்
கிடைத்தியல்லையேலொளித்தியாற்சிறுதொழிற்றோய். (உருஉ)

சிறையில்வைத்தவடன்னைவிட்டுலகினிற்றேவர்
முறையில்வைத்துநின்றம்பியையிராக்கதர்முதற்பே
ரிறையில்வைத்தவற்கேவல்செய்திருத்தியேலின்னுந்
தறையில்வைக்கிலனின்றலைவாளியிற்றடிந்து. (உருங)

அல்லையாமெனினுமாற்றெனுந்தோற்றம்
வல்லையாமெனினுனக்குளவலியெலாங்கொண்டு
நில்லையாவெதிர்நேர்நின்றுபொன்றுதியெனினும்
நல்லையாகுதிபிழைப்பினியுண்டெனநயவேல். (உருச)

ஆளையாயுனக்கமைந்தனமாருதமறைந்த
பூளையாயினகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
நாளைவாவெனநல்கினனிளங்கமுகின்
வாளைதாவுறுகோசலநாடுடைவள்ளல். (உருரு)

முதற்போர்ப்படலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம் - கஉகங.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கரு - வது — கும்பகருணப்படலம்.

வாரணம்பொருதமார்பும்வரையினையெடுத்ததோளும்
நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவுந்
தாரணிமவுலிபத்துஞ்சங்கரன்கொடுத்தவாளும்
வீரமுங்களத்தேபோட்டுவெறுங்கையோடிலங்கைபுக்கான். (௧)

கடந்தபோர்வலியார்மாட்டேகெடாதவானவரையெல்லாங்
கடந்துபோயுலகமூன்றுங்காக்கின்றகாவலாளன்
றொடர்ந்தபோம்பழியினோடுமொன்றாக்கியகரங்களோடும்
நடந்துபோய்நகரம்புக்கானருக்கனுநாகஞ்சேர்ந்தான். (௨)

மாதிரமெவையுநோக்கான்வளநகர்நோக்கான்வந்த
காதலர்தம்மைநோக்கான்கடற்பெருஞ்சேனைநோக்கான்
போதவிழ்கூந்தன்மாதர்தனித்தனிநோக்கத்தானப்
பூதலமென்னுமங்கைதன்னையேநோக்கிப்புக்கான். (௩)

நாளொத்தநளினமன்னமுகத்தியர்நயனமெல்லாம்
வாளொத்தமக்கள்வார்த்தையிராகவன்வாளியொத்த
கோளொத்தசிறைவைத்தான்கொற்றவற்கற்றைநாட்டன்
றோளொத்ததுணைமென்கொங்கைநோக்கங்குத்துடர்கிலாமை. (௪)

மந்திரச்சுற்றத்தாரும்வாணுதற்சுற்றத்தாருந்
தந்திரச்சுற்றத்தாருந்தன்கிளைச்சுற்றத்தாரு
மெந்திரப்பொறியினிற்பயாவருமின்றித்தானோர்
சிந்துரக்களிறுகூடம்புக்கெனக்கோயில்சேர்ந்தான். (௫)

ஆண்டொருசெம்பொற்பீடத்திருந்துதன்வருத்தமாறி
நீண்டுயர்கிளைப்பனுவிக்கஞ்சுகியயனின்றானை
யீண்டுநந்தாதர்தம்மையிவ்வழித்தருதியென்றான்
பூண்டதோர்பணியின்வல்லைநால்வரைக்கொண்டுபுக்கான். (௬)

மனகதிவாயுவேகன்மருத்தன்மாமேகனென்றிவ்
வினையறிதொழிலர்முன்னுவாயிரர்விரவினாரை
யினைவதன்முன்னநீர்போய்நெடுந்திசையெட்டுநீந்தி
களைகழலரக்கர்தானைகொணருதிர்கடிதினென்றான். (௭)

ஏழ்பெருங்கடலுஞ்சூழ்ந்தவேழ்பெருந்தீவுமண்ணிற்
பாழியம்பொருப்புங்கீழ்பாலடுத்தபாதாளத்துள்ளு
மாழியங்கிரியின்மேலுமரக்கரானவரையெல்லாந்
தாழ்விலீர்கொணர்தீரென்றானவருதலைமேற்கொண்டார். (௮)

மூவகையுலகுளோருமுறையினின்றேவல்செய்வார்
பாவகையின்னதென்றுதெரிகிலர்பதைத்துவிம்மித்
தாவகலாதவைவாயெஃகுறத்துளக்கையானை
சேவகமமைந்ததென்னச்செறிமலரமளிசேர்ந்தான். (௯)

பண்ணிறைபவளச்செவ்வாய்ப்பைந்தொடிசீதையென்னும்
பெண்ணிறைகொண்டநெஞ்சனுண்ணிறைகொண்டபின்னர்
கண்ணிறைகோடல்செய்யான்கையறுகவலைசுற்ற
வுண்ணிறைமானந்தன்னையுமிழ்ந்தெரியுயிர்ப்பதானான். (க0)

வானகமண்ணுமெல்லாநகுநெடுவயிரத்தோளான்
நானகும்பகைவரெல்லாநகுவரொன்றதற்குநாணான்
வேனகுநெடுங்கட்செவ்வாய்மெல்லியன்மிதிலைவந்த
சானகிநகுவளென்றேநாணத்தாற்சாம்புகின்றான். (கக)

ஆங்கவன்றன்மூதாதையாகியமுப்பினியாக்கை
வாங்கியவரிவிலன்னமாலியவானென்றோதும்
பூங்கழலரக்கன்வந்துபொலங்கழலிலங்கைவேந்தைத்
தாங்கியவமளிமாடோர்தவிசிடைப்பீடஞ்சார்ந்தான். (கஉ)

இருந்தவனிலங்கைவேந்தனியற்கையையெய்தநோக்கிப்
பொருந்தவந்துற்றபோரிற்றோற்றனன்போலுமென்னு
வருந்தினமனமுந்தோளும்வாடினைநாளும்வாடாப்
பெருந்தவமுடையவையாவென்னுற்றபெற்றியென்றான். (கங)

கவையுறுநெஞ்சன்காந்திக்கனல்கின்றகண்ணன்பத்துச்
சிவையின்வாயென்னச்செந்தீயுயிர்ப்புறச்சிவந்தமுக்க
ணவையறுபாகையன்றியமுதினைநக்கினானுஞ்
சுவையறப்புலர்ந்தநாவானினையனசொல்லலுற்றான். (கச)

சங்கம்வந்துற்றகொற்றத்தாபதர்தம்மோடெம்மோ
டங்கம்வந்துற்றதாகவமரர்வந்துற்றதாற்றோர்
கங்கம்வந்துற்றசெய்யகளத்துநங்குலத்துக்கொவ்வாப்
பங்கம்வந்துற்றதன்றிப்பழியும்வந்துற்றதென்றான். (கரு)

முளையமைதிங்கள்சூடுமுக்கணான்முதல்வராகக்
கிளையமைபுவனமூன்றும்வந்துடன்கிடைத்தவேனும்
வளையமைவரிவில்வாளிமெய்யுறவழங்குமாயி
னிளையவன்றனக்குமாற்றாதென்பெருஞ்சேனைநம்ப. (கசு)

எறித்தபோராக்கராவியெண்ணிலாவெள்ளமெஞ்சப்
பறித்தபோதென்னையந்தப்பரிபவமுதுகிற்பற்றப்
பொறித்தபோதன்னானந்தக்கூனிகூன்போகவுண்டை
செறித்தபோதொத்ததன்றிச்சினவுண்மைதெரிந்ததில்லை. (கஎ)

மலையுறப்பெரியராயவாளெயிற்றரக்கர்தானை
நிலையுறச்செறிந்தவெள்ளநூற்றிரண்டெனினுநேரோ
கொலையுறக்குனித்தவாளிகுதிரையைக்களிற்றையாளின்
றலையறப்பட்டதல்லாலுடல்களிற்றங்கிற்றுண்டோ. (கஅ)

போயபினவன்கைவாளியுலகெலாம்புகுவதல்லா
லோயுமென்றுரைக்கவோமோவூழிசென்றாலுமூழித்
தீயையுந்தீய்க்குஞ்செல்லுந்திசையையுந்தீய்க்குஞ்சொல்லும்
வாயையுந்தீய்க்குமுன்னின்மனத்தையுந்தீய்க்குமன்றே. (௧௯)

மேருவையுருவுமென்றால்விண்டடக்தேருமென்றாற்
பாரினைப்பிளக்குமென்றாற்கடல்களைப்பருகுமென்றா
லாருமேயயத்திறற்றலாற்றுமேலனந்தகோடி
மேருவும்விண்ணுமண்ணுங்கடல்களும்வேண்டுமன்றே. (௨௦)

வரிசிலைநாணிற்கோத்துவாங்கினன்விடுதலொன்றுந்
தெரிவிலவமர்தனுற்றலியாரவன்செய்கைதேர்வார்
பொருளினைத்தரக்காவிபோயெபோகவென்று
கருதியவுலகமெல்லாஞ்சரங்களாய்க்காட்டுமன்றே. (௨௧)

நல்லியற்கவிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தநாமச்
சொல்லெனச்செய்யுட்கொண்டதொடையெனத்தொடையைநீக்கி
யெல்லையில்செல்வந்தீராவிசையெனப்பழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாகுத்தன்பகழிமாதோ. (௨௨)

இந்திரன்குலிசவேலுமீசன்கையிலைமூன்றென்று
மந்திரவசியுமாயோன்வளையுமஃதின்வரவுங்கண்டே
னந்தரசீர்தம்மாதாபதனம்புக்காற்று
நொந்தனர்யானலாதாராரவைநோக்கிற்பார். (௨௩)

பேயிருங்கணங்களோடுகெடுகளத்துறையும்பெற்றி
யேயவன்றோள்களெட்டுமிந்திரனிரண்டுதோளு
மாயிருஞாலமுற்றும்வயிற்றிடைவைத்தமாய
னாயிரந்தோளுமன்னன்விரலொன்றிறுற்றலாற்று. (௨௪)

சீர்த்தவீரியராயுள்ளார்செங்கண்மாலெனினுமியானக்
கார்த்தவீரியனைநேர்வாருளரெனக்கருதலாற்றேன்
பார்த்தபோதவனுமற்றத்தாபதன்றம்பியாதத்
தார்த்ததோர்துகளுக்கொவ்வானாவற்காற்றகிற்பார். (௨௫)

முப்புரமொருங்கச்சுட்டமூரிவெஞ்சிலையும்வீர
னற்புதவில்லுக்கையவம்பெனக்கொளலுமாகா
வொப்புவேறுரைக்கலாவதொருபொருளில்லைவேதந்
தப்பினபோதுமன்றோன்றறுவுமிழ்சரங்கடப்பா. (௨௬)

உற்பத்தியயனேயொக்குமோடும்போதரியேயொக்குங்
கற்பத்தினரனேயொக்கும்பகைஞரைக்கலந்தகாலைச்
சிற்பத்திலம்மாற்பேசச்சிறியவோவென்னைத்தீராத்
தற்பத்தைத்துடைத்தவென்றற்பிறிதொருசான்றுமுண்டோ. (௨௭)

குடக்கதோகுணக்கதேயோகோணத்தின்பாலதேயோ
நடத்தபெருலகத்தேயோவிசும்பதோவெங்குந்தானோ
வடக்கதோதெற்கதோவென்றுணர்ந்திலன்மனிதன்வல்வி
லிடத்ததோவலத்தோவென்றுணர்ந்திலேனியானுமின்றும். (௨௮)

ஏற்றமொன்றில்லையென்பதேழமைப்பாலதன்றே
யாற்றல்சால்கலுழனோதானுமாமேயமரினாற்றல்
காற்றையேமேற்கொண்டானோகனலையேகடாவினானோ
கூற்றையேயூர்கின்றானோகுரங்கின்மேற்கொண்டுநின்றான். (௨௯)

போயினித்தெரிவதென்னேபொறையினாலுலகம்போலும்
வேயெனத்தகையதோளியிராகவன்மேனிநோக்கித்
தீயெனக்கொடியவீரச்சேவகச்செய்கைகண்டா
னாயெனத்தகுதுமன்றேகாமனுநாமுமெல்லாம். (௩௦)

வாசவன்மாயன்மற்றைமலருளோன்மழுவாளங்கை
யீசனென்றினையதன்மையெளிவருமிவராலன்றி
நாசம்வந்துற்றபோதுநல்லதோர்பகையைப்பெற்றேன்
பூசல்வண்டுறையுந்தாராயிதுவிங்குப்புகுந்ததென்றான். (௩௧)

முன்னுரைத்தேனைவாளாமுனிந்தனைமுனியாவம்பி
யின்னுரைப்பொருளுங்கேளாயேதுவுண்டெனினுமோராய்
நின்னுரைக்குரைவேறுண்டோநெருப்புரைத்தாலுநீண்ட
மின்னுரைத்தாலுமொவ்வாவிளங்கொளியலங்கல்வேலாய். (௩௨)

உளைவனவெனினுமெய்மையுற்றவர்முற்றுமோர்ந்தார்
விளைவனசொன்னபோதுங்கொள்கிலைவிடுதிகண்டாய்
கிளைதருசுற்றம்வெற்றிகேண்மைமங்கல்விசெல்வங்
களைவருதானையோடுங்கழிவதுகாண்டியென்றான். (௩௩)

ஆயவனுரைத்தலோடுமப்புறத்திருந்தானன்ற
மாயைகள்பலவும்வல்லமகோதரன்கடிதின்வந்து
தீயெழநோக்கியென்னிச்சிறுமைநீசெப்பிற்றென்ன
வோயுறுசிந்தையானுக்குறுதபேருறுதிசொன்னான். (௩௪)

நன்றியீதென்றுகொண்டநயத்தினைநயந்துவேறு
வென்றியேயாகமற்றேதோற்றுயிர்விடுதலாக
வொன்றிலேநிற்றல்போலாமுத்தமர்க்குரியதொல்கிப்
பின்றுமேலவனுக்கன்றேபழியொடுநரகம்பின்னை. (௩௫)

திரிபுரமெரியவாங்கோர்தனிச்சரந்துரந்தசெல்வ
னொருவனிப்புவனமூன்றுமோரடியொடுக்கிக்கொண்டோன்
பொருதுனக்குடைந்துபோனார்மானிடர்பொருதபோர்க்கு
வெருவுதிபோலுமானக்கபிலையைவெருவல்கண்டாய். (௩௬)

வென்றவர்தோற்பர்தோற்றோர்வெல்குவரெவர்க்குமேலாய்
நின்றவர்தாழ்வர்தாழ்ந்தோருயர்குவர்நெறியுமஃதே
யென்றனரறிஞரன்றேயாற்றலுக்கெல்லையுண்டோ
புன்றவமிருவர்போரைப்புகழ்தியோபுகழ்க்குமேலோய். (௪௭)

தேவியைவிடுதியாயிற்றிருமுன்றீமையன்றே
லாவியைவிடுதலன்றியல்லதொன்றுவதுண்டோ
தாவரும்பெருமையம்மாநீயினித்தாழ்ந்ததென்னே
காவலவிடுதியின்றிக்கையறுகவலைநோய்தின். (௪௮)

இனியிறைதாழ்த்தியாகிலிலங்கையும்யாமுமெல்லாங்
கனியுடைமரங்களாகக்கவிக்குலங்கடக்குங்காண்டி
பனியுடைவேலைச்சின்னீர்பருகினவிரவியென்னத்
துனியுழந்தயர்வதென்னேதுறத்தியாற்றுன்பமென்றான். (௪௯)

மூன்றுனக்கிறைவரானமூவருந்தோற்றார்தேவர்
பின்னுனக்கேவல்செய்யவுலகொருமூன்றும்பெற்றாய்
புன்றுணைப்பனிநீரன்னமனிதரைப்பொருளென்றுன்னி
யென்றுனக்கிளையரும்பகருணையிகந்ததெந்தாய். (௫௦)

ஆங்கவன்றன்னைக்கூவியேவுதியென்னினைய
வோங்கலேபோல்வான்மேனிகாணவேயொளிப்பரன்றே
தாங்குவார்செருமுன்னென்னிற்றுபதருயிரைத்தானே
வாங்குமென்றினையசொன்னவனுமனத்திற்கொண்டான். (௫௧)

பெறுதியேயெவையுஞ்சொல்லிப்போதிவாளசிரித்
தறிதியேயென்பால்வைத்தவன்பினுக்கவதியுண்டோ
வுறுதியேசொன்னாயென்றுவுள்ளமும்வேறுபட்டா
னிறுதியேயிவையதானுவிடையொன்றுற்றடையுண்டாமோ. (௫௨)

நன்றிதுகருமமென்றானம்பியைநணுகவோடிச்
சென்றிவட்குறுதியொன்றுளென்றலுநால்வர்சென்றார்
தென்றிசைக்கிழவன்றூதர்தேடினர்திரியவொன்னக்
குன்றினுமுயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில்புக்கார். (௫௩)

இங்கரர்நால்வர்சென்றக்கிரியனுன்கிடந்தகோயில்
மங்குறோய்வாயில்சார்ந்தமன்னநீயுணர்தியென்னத்
தங்கையினெழுவினாலேதலைசெவிதாக்கிப்பின்னும்
வெங்கணார்துயில்கின்றானைவெருளியாலினையசொன்னார். (௫௪)

வேறு.

உறங்குகின்றகும்பகன்னவுங்கண்மாயவாழ்வெலா
மிறங்குகின்றதின்றுகாணெழுந்திராயெழுந்திராய்
கறங்குபோலவிற்பிடித்தகாலதூதர்கையிலே
யுறங்குவாயுறங்குவாயினிக்கிடந்துறங்குவாய். (௫௫)

என்றுமீறிலாவரக்கரின்பமாயவாழ்வெலாஞ்
சென்றுதியரும்முறேன்றெரிந்துதிமைமதேடினு
வின்றிறத்தறின்னமாகவின்னமுன்னுறக்கமே
யன்றலைத்தசெங்கையாலலைத்தலைத்துணர்த்தினர். (௪௬)

என்றுசொல்லவன்னவனெழுந்திராமைகண்டுபோய்
மன்றறங்குமாலைமார்பவன்றுயிலெழுப்பலம்
அன்றகொள்கைகேண்மினென்றுமாவொடாளியேவி னு
ஞன்றின்மேலொராயிரம்முழக்கிவிட்டெழுப்புவீர். (௪௭)

அனையதானையன்றுசெல்லவாண்டுநின்றுபோர்த்தில
வினையசேனமீண்டதென்றிராவணற்கியம்பலும்
வினையம்வல்லநீங்களுங்கடானையோடுசென்மினென்
றினையமல்லராயிராரையேவிநின்றியம்பினன். (௪௮)

வேறு.

சென்றனர்பத்துநூறுசீரியவீரரோடி
மன்றலந்தொங்கலான்றன்மனந்தனில்வருத்தமாற
வின்றிவன்முடிக்குமென்றுவெண்ணினரொண்ணியீண்டக்
குன்றெனவுயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில்புக்கார். (௪௯)

திண்டிறல்வீரர்வாயிற்றிறத்தலுஞ்சுவாசவாத
மண்டுறவீரரெல்லாம்வருவதுபோவதாகிக்
கொண்டுறுதடக்கைப்பற்றிக்குலமுடைவலியினலே
கண்டுயிலெழுப்பவெண்ணிக்கடிதொருவாயில்புக்கார். (௫0)

இங்கிவன்றன்னையாமின்றெழுப்பலாம்வகையேதென்று
துங்கபேழ்வாயுமூக்குங்கண்டுமெய்துணுக்கமுற்று
ரங்கைகடண்டவஞ்சியாழ்செவியதனிலுள்ளே
சங்கொடுதாரைசின்னஞ்சமைவுறச்சாற்றலுற்றார். (௫௧)

கோடிகரண்டுகூடக்குந்தம்வல்லோர்கள்கூடித்
தாடைகள்சந்துமார்புதலையெனுமவையிற்றாக்கி
வாடியகையராகிமன்னவற்குரைப்பப்பின்னும்
நீடியபரிகளெல்லாநிரைப்பிடும்விரைவினென்றான். (௫௨)

கட்டுறுகவனமாவோராயிரங்கடிதின்வந்து
மட்டறவுறங்குவான்றன்மார்பிடைவருத்தமாக
விட்டுறநடத்தியோட்டிவிரைவுளசாரிவந்தார்
தட்டுறுகுறங்குபோலத்தடந்துயில்கொள்வதானன். (௫௩)

கொய்மலர்த்தொங்கலான்றன்குரைகழல்வணங்கியைய
வுய்யலாம்வகைகளென்றிங்கெழுப்பலாம்வகையேசெய்து
கையெலாம்வலியுமோய்ந்துகவனமாக்காலுமோய்ந்து
செய்யலாம்வகைவேறுண்டோசெப்புதிதெரியவென்றார். (௫௪)

வேறு. இடைபோரவியாவியினையாழிமணிநெடுந்தேர்
படைபோரவரும்போதம்பதையாதவுடம்பானை
மடைபோக்குலத்தான்மழுவாட்கொண்டெறிந்தாலும்
புடைபோந்துயிலானைத்துயிலெழுப்பிக்கொணர்கென்றான். (ருரு)

என்றலுமேயடிவணங்கியிராக்கதர்கள்
வன்றொழிலாற்றுயில்கின்றமன்னவன்றன்மாடணுகி
நின்றிரண்டுகைப்புறநெடுமுசலங்கொண்டடிப்பப்
பொன்றினவனெழுந்தாற்போற்புடைபெயர்ந்தங்கெழுந்திருந்தான். (ருசு)

வேறு.

விண்ணினையிடறுமேன்மைவிசும்பினைநிறைக்குமேனி
கண்ணெனுமவையிரண்டுங்கடல்களிற்பெரியவாகு
மெண்ணிலும்பெரியனன்னவிலங்கையர்வேந்தன்பின்னோன்
மண்ணினையளந்துநின்றமாலெனவளர்ந்துநின்றான். (ருஎ)

மூவகையுலகுமுட்கமுரட்டிசைப்பணைக்கையானை
நாவருந்திசையினின்றசலித்திடக்கிருமுட்கப்
பூவுளான்புனரிமேலான்பொருப்பினன்முதல்வராய
யாவருந்துணுக்குற்றேங்கவெளியினினெழுந்தான்வீரன். (ருஅ)

வேறு.

உறக்கமவ்வழிநீங்கியுணர்ந்தரும்
வறைக்கமர்ந்தனனூன்றுவாங்கிய
நறைக்குடங்கள்பெருங்கடைநக்குவா
விறக்கநின்றமுகத்தினையெய்துவான். (ருகூ)

ஆறுநூறுசகடத்தடிசிலும்
நூறுநூறுகுடங்களுந்தங்கிரு
னேறுநின்றபசியையெழுப்பினான்
சீறுநின்றமுகத்திருசெங்கணான். (சா0)

எருமையேற்றையேராறுநூற்றையு
மருமையின்றியேதின்றிறையாறினான்
பெருமையேற்றதுகோடுமென்றேபிறங்
குருமையேற்றைப்பிசைந்தெரியூதுவான். (சாக)

இருந்தபோதுயிராவணனின்றெனத்
தெரிந்தமேனியன்றின்கடலின்றிரை
செரிந்தனன்னபுருவத்துநெற்றியான்
சொரிந்தசோரிதன்வாய்வரத்தூங்குவான். (சாஉ)

உதிரவாரியோடொன்றொடெலும்புதோ
லதிரவாரிநுகர்வதோருணினான்
கதிரவான்வயிரப்பணைக்கையினான்
கதிரவான்வயிரக்கழற்காலினான். (சாங)

இரும்பசிக்குமருந்தெனவெஃகினோ
டிரும்பசிக்குமருந்தமெயிற்றினான்
வருங்களிற்றினைத்தின்றனன்மாலறு
வருங்களிற்றிரிகின்றதோராசையான். (௬௪)

சூலமேகந்திருத்தியதோளினான்
சூலமேகமெனப்பொலிதோற்றத்தான்
காலன்மேனியிர்மத்தன்கழற்பொரு
காலன்மேனியிர்செம்மயிர்க்கற்றையான். (௬௫)

எயிறலைத்தகரதலத்திந்திர
னெயிறலைத்தகரதலத்தெற்றினு
னயிறலைத்தடரங்கையன்சிங்கவு
னயிறலைத்தடாங்ககல்வாயினான். (௬௬)

உடல்கிடந்துழியும்பர்க்குமுற்றுயிர்
குடர்கிடந்தடங்காநெடுங்கோளினான்
கடல்கிடந்ததுகின்றதன்மேற்கதழ்
வடகடுங்கனல்போன்மயிர்ப்பங்கியான். (௬௭)

திக்கடங்கலும்வென்றவன்சீறிட
மிக்கடங்கலில்வெங்கதிரங்கிகள்
புக்கடங்கியமேருப்புழையெனத்
தொக்கடங்கித்துயிறருகண்ணினான். (௬௮)

காம்புறங்குங்கனவரைக்கைமலைத்
தாம்புறங்குமுகத்தினதாய்த்தட
லோம்புறும்முழையென்றுயர்மூக்கினன்
பாம்புறங்கும்படர்செவிப்பாழியான். (௬௯)

கூயினன்னும்முனென்றவர்கூறலும்
போயினன்னகர்பொம்மென்றிரைத்தெழ
வாயில்வல்லைநுழைந்துமதிதொடுங்
கோயிலெய்தினன்குன்றனகொள்கையான். (௭0)

நிலைகிடந்தநெடுமதிட்கோபுரத்
தலைகிடந்தவிலங்கையரண்ணலைக்
கொலைகிடந்தவேற்கும்பகருணனோர்
மலைகிடந்ததுபோலவணங்கலும். (௭௧)

வன்றுணைப்பெருந்தம்பிவணங்கலுந்
தன்றிரண்டதோளாரத்தழுவின
னின்றகுன்ருென்றுநீணெடுங்காலொடுஞ்
சென்றகுன்றைத்தழீஇயன்னசெய்கையான். (௭௨)

உடலிருந்தியுதிரத்தோடொண்ணறைக்
குடலினாத்தலைவுட்டித்தசைக்கொளிஇக்
கடனுனாத்துகில்சுற்றிக்கிர்க்குழாம்
புடையினாத்தொளிர்பல்கலன்பூட்டினுன். (எங)

போவிட்டபெருவலியிந்திர
னாவிட்டகளிற்றெருடுமோகோட்
சோரவிட்டசுடர்மணியோடையை
விரபட்டமெனநதல்விக்கினுன். (எச)

மெய்யெலாமின்னிளவெயில்வீசிடத்
தொய்யில்வாசத்துவர்நறைந்தாடிய
கையிலுகமெனக்கடலாமெனத்
தெய்வநாறுசெஞ்சாந்தமுஞ்சேர்த்தினுன். (எரு)

விடமெழுந்ததுபோனெடுவிண்ணினைத்
தொடவுயர்ந்தவன்மார்பிடைச்சுற்றிரு
விடபமுந்துமெரிபுரைநான்குதோட்
கடவுளிய்ந்தகவசமுங்கட்டினுன். (எசு)

அன்னகாலையிருமபயியாவையு
மென்னகாரணத்தாலென்றியம்பினுன்
மின்வினன்னபுருவமும்விண்ணினைத்
தன்றுதோளுமிடந்துடியாகின்றுன். (எஎ)

வானரப்பெருந்தானையர்மானிடர்
கோனகர்ப்புறஞ்சுற்றினர்கொற்றமு
மேனையுற்றனர்நீயவரின்றுயிர்
போனகத்தொழின்முற்றுதிபோயென்முன். (எஅ)

வேறு.

ஆனதோவெஞ்சமமலகில்கற்புடைச்
சானகிதுயரினந்தவிர்ந்ததில்லையோ
வானமும்வையமும்வளர்ந்தவான்புகழ்
போனதோபுகுந்ததோபொன்றுங்காலமே. (எகூ)

கிட்டியதோசெருக்கிளர்பொற்சீதையைச்
சுட்டியதோமுனஞ்சொன்னசொற்களாற்
றிட்டியின்விடமன்னகற்பின்செல்வியை
விட்டிலையோவிதுவிதியின்வண்ணமே. (அ0)

கல்லலாமுலகினைவரம்புகட்டவுஞ்
சொல்லலாம்பெருவலியிராமன்றேள்களை
வெல்லலாமென்பதுஞ்சீதைமேனியைப்
புல்லலாமென்பதுபோதுமாலையா. (அக)

புலத்தியன்வழிமுதல்வந்தபொய்யறு
குலத்தியல்பழிந்ததுகொற்றமுற்றுமோ
வலத்தியலழிவதற்கேதுமையறு
நிலத்தியனிரியலென்றுநீரதால். (௮௨)

கொடுத்தனையிந்திரற்குலகுங்கொற்றமும்
கெடுத்தனைநின்பெருங்கிளையுநின்னையும்
படுத்தனைபலவகையமரர்தங்களை
விடுத்தனைவேறினிவீடுமில்லையால். (௮௩)

அறமுனக்கஞ்சியின்றொளித்ததாலதன்
திறமுனமுழத்தலின்வலியுஞ்செல்வமு
நிறமுனக்களித்ததங்கதனைநீக்கிநீ
திறமினிங்கியாருமையெடுத்துநாட்டுவார். (௮௪)

என்றுகொண்டினையனவிளம்பியானுனக்
கொன்றுளதுணர்த்துவதுணர்ந்துகோடியே
னன்றதுநாயகநயக்கிலாயெனிற்
பொன்றினையாகவேகோடிபோக்கிலாய். (௮௫)

தஞ்சமுந்தருமமுந்தகவுமேயவர்
நெஞ்சமுங்கருமமுமுரையுமேநெடு
வஞ்சமும்பாவமும்பொய்யும்வல்லநா
முஞ்சுமோவதற்கொருகுறையுண்டாகுமோ. (௮௬)

காலினிற்கருங்கடல்கடந்தகாற்றது
போலவன்குரங்குளசீதைபோகிலள்
வாலியையுரங்கிழித்தேகவல்லன
கோலுளயாமுளோங்குறையுண்டாகுமோ. (௮௭)

தையலைவிட்டவன்சரணந்தாழ்ந்துநின்
மையறுதம்பியோடளவளாவுத
லுய்திறமன்றெனினுளதுவேறுமோர்
செய்திறமுண்டதுதெளிந்துகோடியால். (௮௮)

பந்தியிற்பந்தியிற்படையைவிட்டவை
சிந்துதல்கண்டுநீயிருந்துதேம்புதல்
மந்திரமன்றுநம்வலியெலாமுட
னுந்துதல்கருமமென்றுணரக்கூறினான். (௮௯)

உறுவதுதெரியவன்றுன்னைக்கூயது
சிறுதொழின்மனிதரைக்கோறிசென்றெனற்
கறுவுடையமைச்சனியல்லையஞ்சினை
வெறிவிதுன்வீரமென்றிவைவிளம்பினான். (௯௦)

மறங்கிளர்செருவினுக்குரிமைமாண்டனை
பிறங்கியதசையொடுநறவும்பெற்றனை
விறங்கியகண்முகிழ்த்திரவுமெல்லியு
முறங்குதிபோயெனவுளைவக்கூறினான். (௧௧)

மாவிடரிருவரைவணங்கிமெற்றுமக்
கூறுடைக்குரங்கையுங்கும்பிட்டுத்தொழி
லாறுடையும்பிக்குமுனக்குமேகடன்
யானதுமுடிக்கிலேனெனமுனிபோதியால். (௧௨)

தருகவென்றேர்படைசாற்றென்கூற்றையும்
வருகவென்வானமுமண்ணுமற்றவு
மிருகைவன்சிறுவரோடொன்றியென்னொடும்
பொருகவெம்போரெனப்போதன்மேயினான். (௧௩)

அன்னதுகண்டவன்றம்பியானவன்
பொன்னடிவணங்கிநீபொறுத்தியாலென
வன்னெடுஞ்சூலத்தைவலத்துவாங்கினா
னின்னமொன்றுளதென்னக்கூறினான். (௧௪)

வென்றிவன்வருவனென்றுரைக்கினென்விதி
நின்றதுபிடர்பிடித்துந்தநின்றது
பொன்றுவன்பொன்றினாற்பொலன்கொடோளியை
நன்றெனநாயகவிடுதிநன்றரோ. (௧௫)

இந்திரன்பகைஞருமிராமன்றம்பியை
மந்திரவலியினான்மடிதல்வாய்மையாற்
றந்திரங்காற்றுறுசாம்பல்பின்னரு
மந்தரமுணர்ந்தனக்குறுவதாற்றுவாய். (௧௬)

என்னைவென்றுளரெனிலிலங்கைகாவல
வுன்னைவென்றுயருதலுண்மையாதலாற்
பின்னைநின்றெண்ணுதல்பிழையப்பெய்வளை
தன்னைநன்களிப்பதுதவத்தின்பாலதே. (௧௭)

இற்றைநாள்வரைமுதலியான்முன்செய்தன
குற்றமுமுளவெனிற்பொறுத்திகொற்றவ
வற்றதான்முகத்தினில்விழித்தலாரிய
பெற்றனன்விடையெனப்பெயர்ந்துபோயினான். (௧௮)

அவ்வழியிராவணனனைத்துநாட்டமுஞ்
செவ்வழிநீரொடுங்குருதிதேக்கின
னெவ்வழியோர்களுமிரங்கியேங்கினா
ரிவ்வழியவனும்போய்வாயிலெய்தினான். (௧௯)

இரும்படைகடிப்பெடுத்தெற்றியேகுக
பெரும்படையிளவலோடென்றபேசினால்
வரும்படைவந்ததுவாருளோர்கடஞ்
சுரும்படைமலர்முடிதுளிதூர்க்கவே. (க00)

தேர்க்கொடியானையின்பதாகைசேணுற
தார்க்கொடியென்றிவைதகைந்துவீங்குவ
பார்க்கொடுந்தூளிபோய்த்துறக்கம்பண்புற
வார்ப்பதுதுடைப்பதுபோன்றவாடுவ. (க0க)

எண்ணுறுபடைக்கலமிழுகவெற்றிட
நண்ணுறுபொறிகளும்படைக்குநாயகர்
கண்ணுறுபொறிகளுங்கதுவக்கண்ணகன்
விண்ணுறுமழையெலாங்கரிந்துவீந்தவால். (க0உ)

தேர்செலக்கரிசெலநெருக்கிச்செம்முகக்
கார்செலத்தேர்செலப்புரவிக்கால்செலத்
தார்செலக்கடைசெலச்சென்றதானையும்
பார்செலற்கரிதெனவிசும்பிற்பாய்ந்ததால். (க0ங)

ஆயிரங்கோளரியாளியாயிர
மாயிரமதகரிபூதமாயிர
மாயிருஞாலத்தைச்சுமப்பவாங்குவ
தேயிருஞ்சுடர்மணித்தேரொன்றேறினான். (க0ச)

தோமரஞ்சக்கரஞ்சூலங்கோன்மழு
நாமவேலுலக்கைவாளுஞ்சிறண்டெழு
வாமவில்வலயங்கற்பரிசைமற்றுள
சேமவெம்படையெலாஞ்சுமந்துசென்றவால். (க0ரு)

நறையுடைத்தசும்பொடுநறையின்வெந்தலூன்
குறைவினற்சகடமோராயிரங்கொடு
பிறையுடையெயிற்றவன்பின்புசென்றனர்
முறைமுறைதகைகொடுமுடுகிநீட்டுவார். (க0சா)

ஒன்றலபற்பலருதவுமூனறை
பின்றரும்பிலனிடைப்பெய்யுமாறுபோல்
வன்றிறலிருகரம்வழங்கமாந்தியே
சென்றனனியாவருந்திடுக்கமெய்தவே. (க0எ)

கணந்தருகுரங்கொடுகழிவதன்றிது
நிணந்தருநெடுந்தடிக்குலகுநேருமோ
பிணந்தலைப்பட்டதுபெயர்வதெங்கினி
யுணர்ந்ததுகூற்றமென்றும்பரோடினார். (க0அ)

பார்த்தனினெடுத்தலைவழுவிப்பாரொடும்
வேர்த்தனவிளங்கியமேருமால்வரை
போர்த்தபோற்பொலந்தேரிற்பொங்கிய
வேர்தலையேந்தெழுமிராமனோக்கினான். (க௦௯)

வினையென்றுணரினதன்றுவிண்டொடுஞ்
சேணுயர்கொடியதுவயவெஞ்சியமாக்
காணிறுங்காலின்மேலரியகாட்சியன்
பூணொளிமார்பினனியாவன்போலுமால். (கக௦)

தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குதி
னாள்பலகழியுமானடுவணின்றதோர்
தாளுடைமலைகொலாஞ்சமரம்வேட்டதோ
ராளெனவுணர்கிலேனார்கொலாமிவன். (ககக)

அரக்கனவ்வுருவொழித்தரியின்சேனையை
வெருக்கொளத்தோன்றுவான்கொண்டவேடமோ
தெரிக்கிலேனிவ்வுருத்தெரியும்வண்ணநீ
பொருக்கெனவீடணாபுகறியாலென்றான். (கக௨)

வேறு.

ஆரியனினையகூறவடியினையிறைஞ்சியைய
பெரியவிலங்கைவேந்தன்பின்னவனெனக்குமுன்னோன்
காரியல்காலனன்னகழற்கும்பகருணனென்னும்
கூரியசூலத்தானென்றவனிலைகூறலுற்றான். (கக௩)

தவனுணங்கியரும்வேதத்தலைவருமுணருந்தன்மைச்
சிவனுணர்ந்தலரின்மேலத்திசைமுகனுணருந்தேவ
னவனுணர்ந்தெழுந்தகாலத்தசுரர்கள்படுவதெல்லா
மிவனுணர்ந்தெழுந்தகாலத்திமையவர்படுவரெந்தாய். (கக௪)

வேறு.

ஆழியாயிவராகுவா
ரேழைவாழ்வுடையெம்முனோர்
தாழ்விலாவொருதம்பியா
ரூழிநாளுமுறங்குவார். (கக௫)

காலனாருயிர்காலனார்
காலின்மேனியிர்காலினார்
மாலினார்கெடவாலகையே
சூலமேகொடுகூடினார். (கக௬)

தாங்குகொம்பொருநான்குகா
லோங்கலொன்றினையும்பர்கோன்
வீங்குநெஞ்சன்விழுந்திலான்
ஆங்கதின்கழற்றினான். (கக௭)

ஒழிந்ததீயொடுகாலையும்
பிழிந்துசாறுகொள்பெற்றியா
னழிந்துமீதுகவாழிநீ
ரிழிந்துகாலினிலேற்றுவான். (௧௧௮)

ஊனுயர்ந்தவுரத்தினன்
மேனிமிர்ந்தமிடுக்கினன்
ஞானுயர்ந்ததவத்தினன்
வானுயர்ந்தவரத்தினன். (௧௧௯)

திறங்கொள்சாரிதிரிந்தநாட்
கறங்கலாதுகணக்கிலா
விறங்குதாரவனின்றுகா
லறங்கலாதுலகுய்ந்ததால். (௧௨0)

சூலமுண்டதகுருளோர்
காலமுண்டதுலகக்கொள்வா
னாலமுண்டவனுழிவாழ்
ஞாலமுண்டவனல்கினன். (௧௨௧)

மின்னினென்றியவிண்ணுளோர்
முன்னிலென்றமர்முற்றினு
மொன்னிலென்றுமவெண்ணிலார்
வென்னிலன்றிவிழித்திலான். (௧௨௨)

தருமமன்றியுதானிதால்
வருநமக்குயிர்மாள்வெனு
வுருமில்வெய்யவனுக்குரை
யிருமைமேலுமியம்பினன். (௧௨௩)

மறுத்தசம்முனைவாய்மையா
லொறுத்துமாவதுணர்த்தினன்
வெறுத்துமாள்வதுமெய்யெனு
விறுத்துமின்னெதிரெய்தினன். (௧௨௪)

நன்றிதென்றுநமக்கெனு
வொன்றுநீதியுணர்த்தினு
லின்றுகாலன்முனெய்தினு
னென்றுசொல்லியிறைஞ்சினன். (௧௨௫)

வேறு.

என்றவனுரைத்தலோடுமிரவிசேயவனையின்று
கொன்றொருபயனுமில்லைகூடுமேற்கூட்டிக்கொண்டு
நின்றதுபுரிதுமென்றுநிருதர்கோவிடருநீங்கு
நன்றெனநினைத்தேனென்றுநாதனுநலனிதென்றான். (௧௨௬)

எதுதற்றெரியாரியாரேயென்னையிலங்கைவேந்த
னுனின்மற்றடியனேசென்றறிவிருவதனேயுள்ளந்
தேசுறத்தெருட்டியின்பீசேருமேற்சேர்ப்பனென்றான்
மேகமொப்பானுநன்றுபோகென்றுவிடையுமீய்ந்தான். (கஉஎ)

தந்திரக்கடலினீத்தித்தன்பெரும்பலத்தைச்சார்ந்தான்
வெந்திறலவனுக்கையவீடணன்விளைவினன்பால்
வந்தனனென்னச்சொன்னார்வரம்பிலாவுவகைகூரச்
சிந்தையாற்களிக்கின்றான்றன்செறிகழற்சென்னிசேர்த்தான். (கஉஅ)

முந்திவந்திறைஞ்சினானைமுகக்குயிர்முழ்கப்புல்லி
யுய்ந்தனையொருவன்போனுயெனமனமுவக்கின்றேன்றன்
சிந்தனைமுழுதுஞ்சிந்தத்தெளிவிலார்போலமீள
வந்ததென்றனியேயென்றான்மறையினீர்வழங்குகண்ணான். (கஉகூ)

அவையாநீபெற்றவாறுமமரரும்பெறுதலாற்று
உவையலோகத்திருள்ளசிறப்புங்கேட்டுவந்தேனுள்ளங்
கவின்றனையிரவுமிக்காய்காலன்வாய்க்களிக்கின்றேம்பா
னவையிலவந்ததென்னியமுதுண்பாய்நஞ்சுண்பாயோ. (கங0)

குலத்தியல்பழிந்ததேனுங்குமாமற்றுன்னைக்கொண்டே
புலத்தியன்மரபுமாயாப்புண்ணியம்பொருந்திற்றென்ன
வலத்தியனேனைநோக்கிமகிழ்கின்றேன்மன்னவாவைய
யுலைத்தினைதிரியவந்தாயுனைநின்றருள்ளமந்தோ. (கஙக)

அறப்பெருந்துணைவர்தம்மையபயமென்றடைந்தவன்னைத்
துறப்பதுதுணியார்தங்களாருயிர்துறந்தபோது
பிறப்பெனும்பதத்தைவிட்டாயிராமனென்பளவுமற்றிப்
பிறப்பெனும்புன்மையில்லைநினைந்தென்கொல்பெயர்ந்தவண்ணம். (கஙஉ)

அறமெனநின்றநம்பர்க்கடிமைபெற்றவர்களாலே
மறமெனநின்றமூன்றுமருங்கறமாற்றிமற்றுந்
திறமெனநின்றதீய்மையின்மையேதீர்ந்தசெல்வம்
பிறர்மனைநோக்குவோமையுறவெனப்பெறுதிபோலாம். (கஙங)

நீதியுந்தருமநின்றநிலைமையும்புலமைதானு
மாதியல்கடவுளாலேயருந்தவமாற்றிப்பெற்றாய்
வேதியர்தேவன்சொல்லால்விளிவிலாவாயுப்பெற்றாய்
சாதியின்புன்மையின்னந்தவிர்ந்திலைபோலுந்தக்கோய். (கஙச)

ஏற்றியவில்லோனியார்க்குமிறையவனிராமனின்றான்
மாற்றருந்தம்பிநின்றான்மற்றையோர்முற்றுநின்றார்
கூற்றமுநின்றதெம்மைக்கொல்லியவிதியுநின்ற
தோற்றவெம்பக்கலைபவெவ்வலிதொலையவந்தாய். (கஙரு)

ஐயநீயயோத்திவேந்தற்கடைக்கலமாகியாங்கே
உய்கிலையென்னின்மற்றிவ்வரக்கராயுள்ளோரெல்லாம்
எய்கணைமாரியாலேயிறந்துபாழ்படுதும்பட்டாற்
கையினாலெண்ணீர்நல்கிக்கடன்கழிப்பாரைக்காட்டாய். (கஙசு)

வருவதுமிலங்கையூர்க்கிப்புலையெலாமாண்டபின்னைத்
திருவுறைமார்பனோடும்புகுந்தபினென்றுந்தீராப்
பொருவருசெல்வந்துய்க்கப்போதுதிவிரைவினென்றான்
கருமமுண்டுரைப்பவென்றுனாயெனக்கழறலுற்றான். (கஙஎ)

இருளறுசிந்தையோர்க்குமின்னருள்சுரந்தவீர
னருளுநீசேரினொன்றோவவயமுமளிக்குமன்றி
மருளுறுபிறவிநோய்க்குமருந்துமாமாறிச்செல்லு
முருளுறுசகடவாட்கையொழித்துவீடளிக்குமன்றே. (கஙஅ)

எனக்கவன்றந்தசெல்வத்திலங்கையுமரசுமெல்லா
மினக்குநான்றருவன்றந்தன்னேவலினெளிதினிற்ப
னுனக்கிதினுறுதியில்லையுத்தமவுன்பின்வந்தேன்
மனக்குநோய்துடைத்துவந்தமரபையும்விளக்குவாழி. (கஙகூ)

போதலோவரிதுபோனாற்புகலிடமில்லைவல்லே
சாதலேசாதநீதியறத்தொடுந்தழுவிநின்றா
யாதலாலுளதாமாவியனையமேயுகுத்தெனைய
வேதநூன்மரபுக்கேற்றவொழுக்கமேபிடிக்கவேண்டும். (கச0)

தீயவைசெய்வாராகிற்சிறந்தவர்பிறந்தவுற்றார்
தாயவைதந்தைமாரென்றுணர்வரோதருமம்பார்ப்பார்
நீயவையறிதியன்றேயெனக்குநானுரைப்பதென்னே
தூயவைதுணிந்தபோதுபழிவந்துதொடர்வதுண்டோ. (கசக)

மக்களைக்குருக்கடம்மைமாதரைமற்றுளோரை
யொக்குமின்னுயிரனாரையுதவிசெய்தாரோடொன்றத்
துக்கமித்தொடர்ச்சியென்றுதுறப்பராற்றுணிவுபூண்டோர்
மிக்கதுநலனேயாகிவீடுபேறளிக்குமன்றே. (கசஉ)

தீவினையொருவன்செய்யவவனொடுந்தீங்கிலாதோர்
வீவினையுறுதலையமேன்மையோகேண்மைதானோ
வாய்வினையுடையையன்றேயறத்தினைநோக்கிநின்ற
தாய்வினைசெய்யவன்றோகொன்றதுதவத்தின்மிக்கான். (கசங)

கண்ணுதறீமைசெய்யக்கமலத்துமுளைத்ததாதை
யண்ணறன்றலையினொன்றையறுக்கவென்றமைந்தானன்றே
புண்ணுறுபுலவுவேலோய்பழியொடும்பொருந்திப்பின்னை
யெண்ணுறுநரகின்வீழ்வதிருமியற்றுவாரோ. (கசச)

உடலிடைத்தோன்றிற்றொன்றையறுத்ததனுதிரமுற்றிச்
சுடருறச்சுட்டுவேறோர்மருந்தினாற்றுயரந்தீர்வர்
கடலிடைக்கோட்டந்தேய்த்துக்கழிவதுகருமமன்றால்
மடலுடையலங்கன்மார்பமதியுடையவர்க்குமன்னோ. (கசரு)

காக்கலாநும்முன்றன்னையெனினதுகண்டதில்லை
யாக்கலாமறத்தைவேறேயென்னினுமாவதில்லைத்
தீக்கெலாங்கொண்டதேவர்சிரிக்கலாஞ்செருமுன்னாவி
போக்கலாம்புகலாம்பின்னைநரகன்றிப்பொருந்தித்துண்டோ. (கசசு)

மறங்கிளருலகைவென்றுவாழ்த்திலைமண்ணின்மேலா
பிறங்கினையின்றுகாறுமிளமையும்வறிதேயேக
வுறங்கினையென்பதல்லாலுற்றதொன்றுளதோவென்னி
யறங்கெடவுயிலாதீர்த்துமேற்கொள்வானமைந்தனையா. (கசஎ)

திருமறுமார்பனல்கவனந்தருந்தீர்ந்தசெல்வப்
பெருமையுமெய்திவாழிதீதிலாநாளும்பெற்று
யொருமையேயாகசெய்வதுரிமையேயுளதேயொன்று
மருமையுமிவற்றினில்லைக்காலமுமடுத்ததையா. (கசஅ)

தேவர்க்குந்தேவனல்கவிலங்கையிற்செல்வம்பெற்று
லேவற்குஞ்சிறியையல்லையாருனைநலியுமிட்டார்
மூவர்க்குந்தலைவரானமூர்த்தியாறத்தைமுற்றுங்
காவற்குப்புகுந்துநின்றார்காகுத்தவேடங்காட்டி. (கசகூ)

உன்மக்களாகியுள்ளாருன்னொடுமுறைதயஞ்செய்த
வென்மக்களாகியுள்ளாரிக்குடிக்கிறுதிசூழ்ந்தான்
றன்மக்களாகியுள்ளார்தலையொடுந்திரிவரன்றே
புன்மக்கட்டருமம்பூணுபுலமக்கட்டருமம்பூண்டால். (கரு0)

முனிவருங்கருணைவைப்பாமூன்றுலகத்துந்தோன்றி
யினிவரும்பகையுமில்லையீதுண்டென்றிரங்கவேண்டாந்
துனிவருஞ்செருநரானதேவரோதுணைவராவர்
கனிவருங்காலத்தையபூக்கொய்யக்கருதலாமோ. (கருக)

வேதநாயகனேயுன்னைக்கருணையால்வேண்டிவிட்டான்
ஈதலாலென்மேல்வைத்தகருணையாற்கருமமீதே
ஆதலாலவனைக்காணவறத்தொடுந்திறம்பாதைய
போதுவாய்நீயேயென்னப்பொன்னடியிரண்டும்பூண்டான். (கருஉ)

தும்பியின்றுடையின்மாலைச்சுடர்முடிபடியிற்றோயப்
பம்புபொற்கழல்கள்கையாற்பற்றினன்புலம்பும்பொற்றோட்
டம்பியையெடுத்துமார்பிற்றழுவித்தன்றறுகணூடு
வெம்புநீர்சொரியநின்றானினையனவிளம்பலுற்றான். (கருங)

நீர்க்கோலவாழ்வைநச்சிநெடிதுநாள்வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலஞ்செய்துவிட்டாற்குயிர்கொடாதங்குப்போகேன்
றீர்க்கோலமேனிமைந்தவென்றுயர்தவிர்த்தியாகிற்
கார்க்கோலமேனியானைக்கூடுதிகடிதினென்றான். (௧௫௪)

மலரின்மேலிருந்தவள்ளன்மழுவலான்வரத்தினானி
யுலைவிலாத்தருமம்பூண்டாயுலகுளதனையுமுள்ளாய்
தலைவனீயுலகுக்கெல்லாமுனக்கதுதக்கதேயாற்
புலையுறுமரணமெய்தலெமக்கதுபுகழதேயால். (௧௫௫)

கருத்திலாவிறைவன்றீமைகருதினாலதனைக்காத்துத்
திருத்தலாமாகினன்றேதிருத்துகதிராதாயிற்
பொருத்துறுபொருளுண்டாமோபொருதொழிற்குரியராகி
யொருத்தரின்முன்னஞ்சாதலுண்டவர்க்குரியதம்மா. (௧௫௬)

தும்பியந்துடையல்வீரன்சுடுகணைதுணிப்பச்சுற்றும்
வெம்புவெஞ்சேனையோடும்வேறுளகிளைஞரோடு
மும்பரும்பிறரும்போற்றவொருவன்மூவுலகையாண்டு
தம்பியையின்றிமாண்டுகிடப்பனோதமையன்மண்மேல். (௧௫௭)

அணையின்றியுயர்ந்தவென்றியஞ்சினார்நகையதாகப்
பிணையொன்றுகண்ணாள்பங்கன்பெருங்கிரிநெருங்கப்பேர்த்த
பணையொன்றுதிரடோள்காலபாசத்தாற்பிணிப்பக்கூசித்
துணையின்றிச்சேரனன்றோதோற்றுளகூற்றின்சூழல். (௧௫௮)

செம்பிட்டுச்செய்தவிஞ்சித்திருநகர்ச்செல்வந்தேறி
வம்பிட்டதெரியலெம்முனுயிர்கொண்டபகையைவாழ்த்தி
யம்பிட்டுத்துன்னங்கொண்டபுண்ணுடைநெஞ்சோடைய
கும்பிட்டுவாழ்கிலேனியான்கூற்றையுமாடல்கொண்டேன். (௧௫௯)

அனுமனைவாலிசேயையருக்கன்சேய்தன்னையம்பொற்
றனுவுடையவனைவேறோர்நீலனைச்சாம்பன்றன்னைக்
கனிதுடர்குரங்கின்காலக்கடலொடுங்கடந்துமற்றப்
பணிதுடைத்துலகஞ்சுற்றுங்கதிரெனத்திரிவன்பார்த்தி. (௧௬௦)

ஆலங்கண்டஞ்சியோடுமமரர்போலரிகளோடச்
சூலங்கொண்டோடிவேலைதுடர்வதோர்தோற்றந்தோன்ற
நீலங்கொள்கடலுமோடக்காலொடுநெருப்புமோடக்
காலங்கொளுலகுமோடக்கறங்கெனத்திரிவன்காண்டி. (௧௬௧)

செருவிடையஞ்சார்வந்தென்கண்ணெதிர்சேர்வாராகிற்
கருவரைகனகக்குன்றமென்னலாங்காட்சிதந்த
விருவருநிற்கமற்றிங்கியாருளரவரையெல்லா
மொருவருந்திரியவொட்டேனுயிர்சுமந்துலகிலென்றான். (௧௬௨)

தாட்கிற்பாயல்லையெச்சொற்றலைக்கொளத்தக்கதென்று
கேட்கிற்பாயாகினெய்தியவொடுங்கெழீஇயநட்பை
வேட்கிற்பாயினியோர்மாற்றம்விளம்பினுல்விளைவுண்டென்று
ருட்கிற்பாயல்லையாருந்தொழிற்பாயென்னச்சொன்னான். (௧௬௩)

போதநிலையயனின்னைப்பொன்றினார்க்கெல்லாநின்று
வேதியர்தேவன்றன்னைவேண்டினைபெற்றுமேன்மை
யாதிநான்மாயினாலேகடன்களுமாற்றியேற்ற
மாதுயர்நரகநண்ணுவண்ணமுங்காத்திமன்றே. (௧௬௪)

ஆருவதாருங்காலத்தழிவதுமழிந்தாலுந்திப்
போருவதயலேநின்றுபோற்றினும்போதல்செய்யுஞ்
சேகறவுணர்ந்தோர்வின்விலியாருளர்வருத்தஞ்செய்யா
தேருதியெம்மைநோக்கியிரங்கலையென்றுமுள்ளாய். (௧௬௫)

என்றவன்றன்னைமீட்டுமெடுத்துமார்பிறுகப்புல்லி
நின்றுநின்றிரங்கியேங்கிநிறைகளுனெடிதுநோக்கி
யின்னெருடுந்தவிர்ந்தன்றேயுடன்பிறப்பென்பதென்றான்
வென்றிவெந்திறலினானுமவனடித்தலத்துவீழ்ந்தான். (௧௬௬)

வணங்கினான்வணங்கிக்கன்றும்வதனமுமனமும்வாயு
முணங்கினானுயிரோடியாக்கையொடுங்கினானசெய்தினம்
பிணங்கினாலாவதில்லைப்பெயர்வதென்றெழுந்துபோந்தான்
குணங்களாலுயர்ந்தான்சேனைக்கடலெலாங்கரங்கள்கூப்ப. (௧௬௭)

கள்ளநீர்வாட்கைபோமைக்கைவிட்டுக்காலும்விட்டான்
பிள்ளைமைதுறந்தானென்னப்பெய்துதுநிலையனாகி
வெள்ளநீர்வேலைதன்னில்வீழ்ந்தநீர்விழவெங்க
ணுள்ளநீரொல்லாமாறியுதிரநீரொழுகநின்றான். (௧௬௮)

எய்தியநிருதர்கோனுமிராமனையிறைஞ்சியெந்தா
யுய்திறமுடையார்க்கன்றேவறநெறியொழுக்கமுண்மை
பெய்திறனெல்லாம்பெய்துபேசினேன்பெயருந்தன்மை
செய்திலன்குலத்துமானந்தீர்த்திலசிறிதுமென்றான். (௧௬௯)

கொய்திறற்சடையின்கற்றைக்கொந்தளங்கோலக்கொண்ட
தொய்தினிற்றுளக்கியையநின்னெதிர்நம்முன்னோனை
யெய்துறத்துணித்துவிழ்த்தலினிதன்றென்றினையசொன்னேன்
செய்திறனினிவேறுண்டோவிதியையார்தீர்க்ககிற்பார். (௧௭௦)

எனவினிதுரைக்கும்வேலையிராக்கதர்சேனையென்னுங்
கனைகடல்கவியின்றானைக்கழிபினைவலைந்துகட்டி
முனைதொறுமுயன்றாகமூவகையுலகமுற்றத்
தனிநெடுந்துளியார்த்தார்த்திலபரவைதள்ளி. (௧௭௧)

ஓடினபுரவிவேழமோடினவுருளைத்திண்டே
ரோடினமலைகளோடவோடினவுதிரப்பேரா
றோடினகவந்தபந்தமாடினவலகைமேன்மே
லாடினபதாகையோங்கியாடினபறவையம்மா. (கஎஉ)

மூளையுந்தசையுமென்புங்குருதியுமிணமுமூரி
வாளொடுங்குழம்புபட்டார்வாளெயிற்றரக்கர்மற்றவ்
வாளிருங்குருதிவெள்ளத்தழுந்தினகவிகளம்பொற்
றோளொடுமாறுங்கல்லுஞ்சூலமும்வேலுந்தாக்க. (கஎ௩)

எய்தனர்நிருதர்கல்லாலெறிந்தனர்கவிகளேந்திப்
பெய்தனரரக்கர்பற்றிப்பிசைந்தனரரிகள்பின்று
வைதனர்யாதுதானர்வலித்தனர்வானரேசர்
செய்தனர்பிறவும்வெம்போர்திகைத்தனர்தேவரெல்லாம். (கஎச)

நீரினையோட்டுங்காற்றுங்காற்றெதிர்நிற்குநீரும்
போரினைவாகவென்றுபொருகின்றபூசனோக்கித்
தேரினையோட்டிவந்தான்றிருவினைத்தேவர்தங்க
ளூரினைநோக்காவண்ணமுதிரவேனோக்கியுள்ளான். (கஎரு)

ஊழியிற்பட்டகாலத்துலகங்கள்பட்டாலொப்பப்
பூழியிற்பட்டுச்செந்நீர்ப்புணரியிற்பட்டுப்பொங்குஞ்
சூழியிற்பட்டநெற்றிக்களிற்றொடுந்துரந்ததேரி
னூழியிற்பட்டதன்றேயவனியிற்பட்டதெல்லாம். (கஎசா)

குன்றுகொண்டெறியும்பாரிற்குதிக்கும்வெங்கூலம்பற்றி
யொன்றுகொண்டொன்றையெற்றுமுதைக்கும்விட்டுழக்கும்வாரித்
தின்றுதின்றுமியும்பற்றிச்சிரங்களைத்திருகுந்தேய்க்கு
மென்றுமென்றிழிச்சும்விண்ணில்வீசுமேற்பிசைந்துபூசும். (கஎஎ)

வாரியினமுக்குங்கையான்மண்ணிடைத்தேய்க்கும்வாரி
நீரிடைக்குவிக்குமப்பானெருப்பிடைநிமிரவீசுந்
தேரிடையெற்றுமெட்டுத்திசையினுஞ்செல்லச்சிந்துந்
தூரிடைமரத்துமோதுமலைகளிற்புடைக்குஞ்சுற்றி. (கஎஅ)

பறைந்தனரமரரஞ்சிப்பல்பெரும்பிணத்தின்பம்ம
னிறைந்தனபரவையெல்லாநெடுந்திசைநான்குநான்கு
மறைந்தனபெருமைதீர்ந்தமலைக்குலம்வற்றிவற்றிக்
குறைந்தனகுரக்குவெள்ளங்கொன்றனன்கூற்றுங்கூச. (கஎகு)

மற்றினியொருவன்மேலோர்மரனொடுங்கற்கள்வைக்கப்
பெற்றிலவாகுமன்றேயின்றொடும்பெறுவதாமே
யற்றனனீங்குமென்னாவரிகுலத்தலைவர்பற்றி
யெற்றினவெறிந்தவெல்லாமிணைநெடுந்தோளினேற்றான். (கஅ0)

கல்லொடுமோதும்வெருக்கட்டையுங்காலிற்றீண்டும்
புல்லொடும்பிறவுமெல்லாம்பொடிப்பொடியாகிப்போன
வில்லைமற்றெறியத்தக்கவெற்றுவகற்றுமென்னப்
பல்லொடும்பல்லுமென்றுபட்டனகுரங்குமுட்டி. (௧௮௧)

குன்றின்வீழ்குருவியென்னக்குழாங்கொளக்குதித்துக்கூடிச்
சென்றுமேலெழுந்துபற்றிக்கைத்தலந்தேயக்குத்தி
வன்றிறலெயிற்றுற்கவ்விவள்ளுகிர்மடியநூறி
பொன்றுமாகின்றதில்லையென்றிழிந்தோடிப்போன. (௧௮௨)

மூலமேமண்ணின்மூழ்கிக்கிடந்ததோர்பொருப்பைமுற்றுங்
காலமேலெழுந்தகால்போற்கையினாற்கடிதின்வாங்கி
நீலன்மேனியிர்ந்தாங்கோர்நெருப்பெனத்திருப்பிவிட்டான்
சூலமேகொண்டுநூறிமுறுவலுந்தோன்றிநின்றான். (௧௮௩)

பெயர்ந்தொருசிகரந்தேடினச்சமாம்பிறர்க்குமென்னாப்
புயங்களேபடைகளாகத்தேரெதிரோடிப்புக்கா
னியங்களுங்கடவுமேகத்திடிகளுமொழியயாரும்
பயங்கொளக்கரங்களோச்சிக்குத்தினனுதைத்தான்பல்கால். (௧௮௪)

கைத்தலஞ்சலித்துக்காலுங்குலைந்துதன்கருத்துமுற்றி
நெய்த்தலையழலிற்காந்திவெரிகின்றநீலன்றன்னைக்
கைத்துயிர்குடிப்பனென்றுவெற்றினனிடதுகையால்
மெய்த்தலைச்சூலமோச்சான்வெறுங்கையானென்றுவெள்கி. (௧௮௫)

ஆண்டதுநோக்கிநின்றவங்கதனுழிதன்று
னீண்டதோர்நெடுங்கிண்குன்றநிலமுதுகாற்றநீக்கி
மாண்டனனரக்கன்றம்பியென்றுலகேழும்வாழ்த்தத்
தாண்டினனதனையன்றேயொருதனித்தோளினேற்றான். (௧௮௬)

ஏற்றபோதனையகுன்றமெண்ணருந்துகளதாகி
வீற்றுவீற்றாகியோடிவிழுதலுங்கவியின்வெள்ள
முற்றமேநமக்கென்றெண்ணியுடைந்ததுகுமாறுற்ற
சீற்றமுந்தானுநின்றான்பெயர்ந்திலன்சென்றுபாதம். (௧௮௭)

இடக்கையாலரக்கனுங்கோரொழுமுளைவயிரத்தண்டு
தடுக்கலாந்தரத்ததல்லாவலியதுதருக்கின்வாங்கி
மடக்குவாயுயிலாயென்றுவீசினனதனைமைந்தன்
றடக்கையாற்பிடித்துக்கொண்டான்வானவர்தன்னைவாழ்த்த. (௧௮௮)

பிடித்ததுசுழற்றிமற்றப்பெருவலியரக்கன்றன்னை
யிடித்துருமேறுகுன்றத்தெறிமடுத்தியங்குமாபோ
லடித்துயிர்குடிப்பனென்றுவனல்விழித்தார்த்துமண்டிக்
கொடித்தடந்தேரின்முன்னங்குதித்தெதிர்குறுகிநின்றான். (௧௮௯)

நின்றவன்றன்னையன்னானெருப்பெழவிழியாநோக்கிப்
பொன்றவந்தடைந்ததானைப்புரவலனொருவன்றானோ
வன்றவன்மகனோவெம்போரனன்மடித்தரக்கர்தம்மை
வென்றவன்றானோவாரோசொல்லுதிவினாவினென்றான். (ககo)

றம்முனைவாலிற்சுற்றிநோன்றிசைநான்குந்தாவி
மும்முனைநெடுவேலண்ணல்முளரியஞ்சரணந்தாழ்ந்த
வெம்முனைவீரன்மைந்தனின்னையென்வாலின்வீக்கித்
தெம்முனையிராமன்பாதம்வணங்கிடச்செல்வனென்றான். (ககக)

உந்தையைமறைந்தோரம்பாலுயிருண்டவுதவியோற்குப்
பந்தனைப்பகையைவென்றுகாட்டலையென்னிற்பாரோர்
நிந்தனைநின்னைச்செய்வர்நல்லதுநினைந்தாய்நேரோ
வந்தனைபுரிவான்றேவிரராய்வசையிற்றீர்ந்தார். (கக௨)

இத்தலைவந்ததென்னையிராமன்பால்வாலினீர்த்து
வைத்தலைநுதலியன்றுவானவர்மார்பிற்றைத்த
முத்தலையயிலினுச்சிமுதுகுறமூரிவால்போற்
கைத்தலங்காலுந்தூங்கக்கிடத்தலைக்கருதியென்றான். (கக௩)

அற்றவனுரைத்தலோடுமனல்விழித்தசனிகுன்றத்
தற்றதுபோலுமென்னுமொலிபடவுலசமுட்கப்
பொற்றடந்தோளின்வீசிப்புடைத்தனன்பொறியிற்சிந்தி
யிற்றதுநூறுகூறுயெழுமுனைவயிரத்தண்டு. (கக௪)

தண்டிறத்தடக்கையோச்சித்தழுவியதறுகணானைக்
கொண்டிறப்புறுவனென்னுத்தலையுறக்குனிக்குங்காலைப்
புண்டிறப்புறவலாளன்கையினாற்புகைந்துகுத்த
மண்டிறப்பெய்துவிழ்ந்தான்மாருதியிமைப்பின்வந்தான். (கக௫)

மறித்தவனவனைத்தன்கைவயிரவாட்சூலமார்பிற்
குறித்துறவெறியலுற்றகாலையிற்குன்றமொன்று
பறித்தவனெற்றிமுற்றப்பரப்பிடைப்பாகமுள்ளே
செறித்தெனச்சுரிக்கவீசித்தீர்த்தனைவாழ்த்தியார்த்தான். (கக௬)

தலையினிற்றைத்துவேறோர்தலையெனநின்றதன்ன
மலையினைக்கையின்வாங்கிமாருதிவயிரமார்பி
னுலையுறவெந்தபொன்வேய்கம்மியர்கூடமொப்பக்
கொலையுறுபொறிகள்சிந்தவீசித்தோள்கொட்டியார்த்தான். (கக௭)

அவ்வழிவர்லிசேயையரிகுலவீரருஞ்சார்
வவ்வினர்கொண்டுபோந்தார்மாருதிவானைமுற்றுங்
கவ்வியதனையதாங்கோர்நெடுவரைகடிதின்வாங்கி
யெவ்வமிலாற்றலானைநோக்கிநின்றினையசொன்னான். (கக௮)

எதிருவலிதனைநின்மேன்மைப்புறமனவிலாற்றல்
மதிருவதன்றியல்லான் மாற்றினையென்னின்வன்மை
யதிருவவொவரும்பின்னையானுன்றோடமருஞ்செய்யேன்
பிதிருவனுலகில்வல்லோய்பெரும்புகழ்பெறுதியென்றான். (௧௯௯)

மாற்றமஃதுரைப்பக்கேளாமலைமுழைதிறந்ததென்னக்
கூற்றுறழ்பகுவாய்விள்ளச்சிரித்தநீகொணர்ந்தகுன்றை
யேற்றனனேற்றகாலத்திறையதற்கொற்கமெய்திற்
றோற்றனனுனக்கென்வன்மைசுருங்குமென்றரக்கன்சொன்னான். (௨௦௦)

மாருதிவல்லையாகிலில்லடாமாட்டாயாகிற்
பேருதியுயிர்கொண்டென்றுபெருங்கையானெருங்கிவிட்ட
காருறவயிரக்குன்றைக்காத்திலன்றோண்மேலேற்று
றேருதிர்நூறுகூறுயுக்கதெவ்வுலகுமுட்க. (௨௦௧)

இளக்கமொன்றின்றிநின்றவியற்கைபார்த்திவனதாற்ற
லளக்குறற்பாலுமாகாக்குலவரையமரினுற்றத்
தளக்குறுகிலையானல்லன்சுந்தரத்தோளன்வாளி
பிளக்குமேற்பிளக்குமென்னுமாருதிபெயரப்போனான். (௨௦௨)

எழுபதுவெள்ளத்துள்ளாரிறந்தவரொழியயாரு
முழுமுதன்மாள்வரின்றேயிவன்வலத்தமைந்தமுச்சூற்
கழுவிலினென்றுவானோர்கலங்கினார்நடுங்கினாற்
பொழுதினின்றுலகமூன்றுந்திரியுமென்றுள்ளம்பொங்கி. (௨௦௩)

தாக்கினார்தாக்கினார்தங்கைத்தலஞ்சலித்ததன்றி
ஆக்கினாரில்லையாருநோவுசெய்தாருமில்லை
யாக்கினான்களத்தினுங்கோர்குரங்கினதடியுமின்றிப்
போக்கினானுண்மையோடும்புதுக்கினான்புகழையம்மா. (௨௦௪)

சங்கத்தார்குரங்குசாயத்தாபதொன்னத்தக்கா
ரிங்குற்றாரல்லரோதான்வேறுமோரிலங்கையுண்டோ
வெங்குற்றொக்குற்றொன்றெடுத்தழைத்திமையோரஞ்சத்
தங்கத்தோள்கொட்டியார்த்தான்கூற்றையுந்துணுக்கங்கொண்டான்.

பறந்தலையதனின்வந்தபலபெருங்கவியின்பண்ணை
யிறந்துகிடக்கின்றதிரிதலாவியாருமின்றி
வறந்ததுசோரிபாயவளர்ந்ததுமகரவேலை
குறைந்தனவுவாவுற்றோதங்கிளர்ந்துமீக்கொண்டதென்ன. (௨௦௫)

வேறு.

குன்றங்கற்களுமரங்களுங்குறைந்தனகுரங்கின்
வென்றியம்பெருஞ்சேனையோர்பாதியின்மேலு
மின்றுதேய்ந்ததென்றுரைத்தலுமமரர்கண்டுவெப்பச்
சென்றுதாக்கினனொருதவிச்சுமித்திரைச்சிங்கம். (௨௦௭)

நாணெறிந்தனன்சிலையினையரக்கியர்நகுபொற்
பூணெறிந்தனர்படியிடையிடிபொடித்தென்னச்
சேணெறிந்தெழுதிசைசெவிடெறிந்தனவலகை
மூணெறிந்தனகையெடுத்தாடினதுணங்கை. (உ0அ)

இலக்குவன்கடிதேவியதினைபெருநினைப்பச்
சிலைக்கடுங்கணைநெடுங்கனைஞ்சிறையுடன்செல்ல
வுலைக்கொடுங்கனல்வெதும்பிடவாயெரிந்தோடிக்
குலக்கயங்களிற்குளித்தனகுடித்தனகுருதி. (உ0க)

அலைபடைத்தவாளரக்கரைச்சிலகழுத்தரியச்
சிலசிரத்தினைத்துணித்தவைதிசைகொண்டுசெல்லக்
கொலைபடைத்தவெங்களத்திடைவிழாக்கொண்டுபோவ
தலைபடைத்தனபோன்றனவாளெடுஞ்சரங்கள். (உக0)

உருப்பதங்களையொப்பனசிலகணையோடைப்
பொருப்பதங்களையுருவிமற்றப்புறம்போன
செருப்பதம்பெருவரக்கர்தந்தலைபலசிந்திப்
பருப்பதங்கள்புக்கொளிப்பனமுழைபுகுபாம்பின். (உகக)

மின்புகுந்தனபல்குழுவாமெனமிளிரும்
பொன்புகுந்தொளிர்வடிம்பினகடுங்கணைபோவ
முன்புநின்றவர்முகத்திற்குங்கடைக்குழைமுறகிற்
பின்புநின்றவர்மிடற்றிற்கும்விசையொக்கும்பிறழா. (உகஉ)

போர்த்தபேரியின்கண்ணனகாளத்தின்பொகுட்ட
வார்த்தவாயனகையனவானையின்கழுத்த
வீர்த்ததோனவிவுளியின்றலையனவெவர்க்கும்
பார்த்தநோக்கனகலந்தனவிலக்குவன்பகழி. (உகங)

மருப்பிழந்தனகளிறெலாம்வால்செவியிழந்த
நெருப்புகுங்கண்களிழந்தனநெடுங்கரந்துணிந்த
செருப்புகுங்கடுங்காற்றுறரஞ்சிந்தினசிகரப்
பொருப்புருண்டனவாமெனத்தலத்திடைபுரண்ட. (உகச)

நிரந்தரந்தொடைநெகிழ்த்தலிற்றிசையெங்குநிறைந்த
சரந்தலைத்தலைபடப்படமயங்கினசாய்ந்த
வுரந்தலத்துறவுழைத்தலாற்பிழைத்ததொன்றில்லைக்
குரந்தலத்தினும்விசும்பினுமிதித்திலாக்குதிரை. (உகரு)

பல்லவப்படைபடப்படுபுரவியபல்கால்
வில்லுடைத்தலையாளொடுருதநாவீழ்த்த
வெல்லையுற்றவெங்குருதியினீர்ப்புண்டதல்லாற்
செல்லகிற்றிலநின்றிலகொடிநெடுந்தேர்கள். (உகசா)

பேழையொத்தகல்வாயனபேய்க்கணமுகக்கு
முழையொத்தனகுருதுமிழ்ந்தனமுரைசா
னுழையொத்தனவோர்கணைதைத்தனவுதிரத்
தாழியொத்தவெங்குருதியின்மிதப்பனதலைகள். (உகஎ)

ஓட்டிநாயகன்வென்றிநாள்குறித்தொளிர்முனைக
ளெட்டிவைத்தனபாலிகைநிகர்த்தனவழிந்த
நட்டவாமெனவீழ்ந்தனமுடிகளினவைநீர்
வட்டவான்கணில்வதிந்தனவருணசாமரைகள். (உகஅ)

எரிந்தவெங்கணைநெற்றியிற்படுதொறுமியானை
யரிந்தவங்குசத்தல்லகையின்கல்வியினமைவாற்
பிரிந்தவேகத்தபாரங்கடீர்ந்தனசெருவிற்
புரிந்தவானரத்தானையிற்புக்கனபுயலின். (உகக)

வேலிலானன்னவிலக்குவன்கடுங்கணைவிலக்க
மானவெள்ளெயிற்றரக்கர்தம்படைக்கலம்வாரிப்
போனபோயினதிசைதொறும்பொறிக்குலம்பொடிப்ப
மீனெலாமுடன்விசும்பினின்றுதிர்ந்தனவீழ்ந்த. (உஉ0)

கரங்குடைந்தனதுடர்ந்துபோய்க்கொய்யுளைக்கடுமாக்
குரங்குடைந்தனவெரிநுறக்கொடிநெடுங்கொற்றத்
தரங்குடைந்தனவணிநெடுந்தேர்க்குலந்தகர்ந்த
வரங்குடைந்தனவயினெடுவாளிகளறுப்ப. (உஉக)

ஆக்குமெய்யுணர்விருவினைகளையெனுஞ்சொல்லிற்
காக்கும்வீரங்கடமையேயெனுமிதுகண்டோ
மிராக்கிவ்வெனாரறத்தொடுந்திறம்பினனொனிறு
மாக்கராக்கையையரம்பையர்தழுவினர்விரும்பி. (உஉஉ)

மறக்கொடுந்தொழிலரக்கர்கண்மறுக்கிலர்மழைபோ
லிறக்கொடுங்கணைநெருப்பொடுங்கீர்வனவுயிர
விறக்கமெய்தினயாவருமெய்தினரொவினத்
அறக்கமென்பதிற்பெரியதொன்றுளதெனச்சொல்லேம். (உஉ௩)

ஒருவரைக்கரமொருவரைச்சிரமற்றங்கொருவர்
குருகழற்றுணைதோளிணைபிறமற்றுங்கொளலால்
விரவலர்ப்பெருவறுமையவாயினவெவ்வே
றிரவுகற்றனபோன்றனவிலக்குவன்பகழி. (உஉச)

சிலவரைக்கரஞ்சிலவரைச்செவிசிலர்நாசி
சிலவரைக்கழல்சிலவரைக்கண்கொளுஞ்செயலா
லில்வரைத்தருபொருள்வழிதண்டமினிரப்பும்
புலவர்சொற்றுறைபுரிந்தவும்போன்றனசரங்கள். (உஉரு)

அறத்தினின்றுயிரனையவன்கணைபடவரக்க
ரிறத்துமிங்கிறைசிற்பினென்றிரியலின்மயங்கித்
திறத்திறம்படத்திசைதொறுந்திசைதொறுஞ்சிந்திப்
புறத்தினோடினரோடினகுருதியேபோல. (உஉசு)

செருவின்மாண்டவர்பெருமையுமிலக்குவன்செய்த
வரிவிலாண்மையுநோக்கியபுலத்தியன்மருமான்
திரிபுரஞ்செற்றதேவனுமிவனுமேசெருவி
னொருவிலாளரென்றுயிரக்காலெடுத்துரைத்தான். (உஉஎ)

படர்நெடுந்தடந்தட்டிடைத்திசைதொறும்பாகர்
கடவுகின்றதுகாற்றினுமனத்தினுங்கடிய
தடல்வயங்கொள்வெஞ்சீயமின்றூர்க்கின்றதம்பொன்
வடபெருங்கிரிபோல்வதேரோட்டினன்வந்தான். (உஉஅ)

துளைகொள்வானுகச்சுடர்நெடுந்தேர்மிசைதோன்றி
வளைகொள்வெள்ளெயிற்றரக்கன்வெஞ்செருத்தொழின்மலையக்
கிளைகொளாதிகலென்றெண்ணிமாருதிகிடைத்தா
னிளையவள்ளலேயேறுதிதோண்மிசையென்றான். (உஉகூ)

ஏறினனிளங்கோளரியிமையவராசி
கூறினரொடுத்தார்த்தனவானரக்குழுவும்
நூறுபத்துடைப்பத்தியினேறில்பரிபூண்ட
வாறுதேரினுமகன்றதவ்வனுமன்றன்றடந்தோள். (உ௩0)

தன்னினேர்பிறர்தானலாதில்லவன்றோண்மேற்
றுன்னுபேரொளியிலக்குவன்றோன்றியதோற்றம்
பொன்னின்மால்வரைவெள்ளிமால்வரைமிசைபொலிந்த
தென்னுமாறன்றிப்பிறிதெடுத்தியம்புவதியாதோ. (உ௩க)

ஆங்குவீரனோடமர்செய்வானமைந்தவாளரக்கன்
றாங்குபல்கணைப்புட்டிலுந்தகைபெறக்கட்டி
வீங்குதோள்வலிக்கேயதுவிசும்பில்வில்வெள்க
வாங்கினானெடுவடவரைபுரைவதோர்வரிவில். (உ௩உ)

இராமன்றம்பிநீயிராவணன்றம்பிநானிருவேம்
பொராநின்றேமிதுகாணியவந்தனர்புலவோர்
பராவுந்தொல்செருமுறைவலிக்குரியனபகர்ந்து
விராவுநல்லமர்விளைக்குதுமியாமெனவிளம்பா. (உ௩௩)

பெய்தவத்தினோர்பெண்கொடியெங்களிற்பிறந்தாள்
செய்தகுற்றமொன்றில்லவளுசிவெஞ்சினத்தாற்
கொய்தகொற்றவமற்றவள்கூந்தலொட்டார்த்த
கைதலத்திடைக்கிடந்தவன்காக்குதியென்றான். (உ௩ச)

அல்லினாற்செய்தநிறத்தவனையெய்தபகா
மல்லினாற்செய்ததோளினன்மாற்றங்கனும்பால்
வில்லினாற்சொல்லினல்லதுவெந்திறல்வெள்கச்
சொல்லினாற்சொலக்கற்றிலமியாமெனச்சொன்னான். (௨௩௫)

விண்ணிரண்டுகூறாயதுபிளந்ததுவெற்பு
மண்ணிரண்டுறக்கிழிந்ததென்றிமையவர்மறுகக்
கண்ணிரண்டினுந்தியுகக்கதிர்முகப்பகழி
யெண்ணிரண்டினோடிரண்டொருதொடைதொடுத்தெய்தான். (௨௩௬)

கொம்புநாலுடைக்குலக்கரிகும்பத்திற்குளித்த
அம்பராத்தலையொதுக்கியதாருமெனச்செல்ல
வெம்புவெஞ்சினத்திராவணற்கிளையவன்விட்ட
வம்புநான்கினாற்பத்தினோடெட்டையுமறுத்தான். (௨௩௭)

அறுத்தகாலையினரக்கனுமமராநெடுநா
ளொறுத்ததாயிரமுருவதுதிசைமுகனுதவப்
பொறுத்ததாங்கொருபுகர்முகக்கடுங்கணைப்புத்தே
ளிறுத்திமற்றிதுவல்லையேலென்றுகோத்தெய்தான். (௨௩௮)

புரிந்துநோக்கியதிசைதொறும்பகழியின்புயலா
லெரிந்துசெல்வதைநோக்கியவிராமனுக்கிளையான்
தெரிந்துமற்றதுதன்னையோர்தெய்வவெங்கணையா
லரிந்துவீழ்த்ததுமாயிரஞ்சரங்களுமற்ற. (௨௩௯)

ஆறிரண்டுவெங்கடுங்கணையனுமன்மேலழுத்தி
வேறுவெஞ்சரமிரண்டிளங்குமரன்மேலேற்றி
நூறுமைம்பதுமொருதொடைதொடுத்தொருநொடியிற்
கூறுதிக்கையும்விசும்பையுமறைத்தனன்கொடியோன். (௨௪0)

மறைக்கவாளிகளவற்றையுமவற்றினான்மாற்றித்
துறைத்தலத்தொறுந்தலந்தொறுநின்றுதேர்சுமக்கும்
பொறைக்கமைந்தவெங்கரிபரியாளிமாப்பூதந்
திறத்திறம்படத்துணித்தவன்றேரையுஞ்சிதைத்தான். (௨௪௧)

தேரழிந்ததுசெங்கதிர்ச்செல்வனைச்சூழ்ந்த
வூரழிந்ததுபோற்றுறந்தார்பவருலந்தார்
நீரழிந்திடாவெழுமழைக்குழாத்திடைமிளிர்ந்த
பாரவெஞ்சிலையழிந்தெனத்துமிந்ததப்பருவில். (௨௪௨)

அன்றுதேரொடுசிலையிலன்கடல்கிளர்ந்தொப்பா
னென்றுமற்றவனின்னுயிர்குடிப்பனென்றுலக
மூன்றும்வென்றமைக்கிசேறியென்னமுச்சிகைத்தாய்த்
தோன்றும்வெஞ்சுடர்ச்சூலவெங்கூற்றினைத்தொட்டான். (௨௪௩)

செய்தபோரினைநோக்கியித்தேரிடைச்சேர்ந்த
கொய்யுளைக்குடுங்கோளரிமுதலியகுழுவை
யெய்துகொன்றனனேருநெடுமர்திரமியம்பி
வைதுகொன்றனனேவெனவானவர்மகிழ்ந்தார். (௨௪௪)

இழியப்பாய்ந்தனனிருநிலம்பிளந்திருகூற்றுய்க்
கிழியப்பாய்புனல்கிளர்ந்தெனக்கிளர்சினத்தரக்கன்
பழியப்பாலிவன்பதாதியென்றனுமன்றன்படர்தோ
ளொழியப்பார்மிசையிழிந்துசென்றிளவலுமுற்றான். (௨௪௫)

உற்றகாலையினிராவணன்றம்பிமாடுதவ
விற்றதானையினிருமடியிகற்படையேவ
முற்றியன்னவைமுழங்குமுந்நீரொனமுடுகிச்
சுற்றியார்த்தனசுமித்திரைசிங்கத்தைத்தொடர. (௨௪௬)

இரிந்துவானவரிரியலின்மயங்கினரொவருஞ்
சொரிந்தவெம்படைதுணித்திடத்தடுப்பருந்தொழிலாற்
பரிந்தவண்ணலும்பரிவிலொருபுடைபடாப்
புரிந்தவன்னெடுஞ்சேனையங்கருங்கடல்புக்கான். (௨௪௭)

முருக்கினுண்மலர்முகைவிரிந்தாலன்னமுரட்கண்
ணரக்கர்செம்மயிர்க்கருந்தலையடுக்கலினணைகள்
பெருக்கினூற்பெருங்கடலிடைப்பெய்துபெய்தெருவை
யுருக்கினாலன்னகுருதிநீராறுகளொதுங்க. (௨௪௮)

கரியின்கைகளும்புரவியின்கால்களுங்காலிற்
றிரியுந்தேர்களின்சில்லியுமரக்கர்தஞ்சிரமுஞ்
சொரியுஞ்சோரியுந்துறைதொறுந்துறைதொறுஞ்சுழிப்ப
நெரியும்பல்பிணப்பெருங்கரைகடந்திலசித்தம். (௨௪௯)

கொற்றவாளெழுத்தண்டுவேல்கோன்மழுக்குலிச
மற்றும்வேறுளபடைக்கலமிலக்குவன்வாளி
சுற்றுமோடுவதுடர்ந்திடைதுணித்திடத்தொகையா
யற்றதுண்டங்கள்படப்படத்துணிந்தனவனந்தம். (௨௫௦)

குண்டலங்களுமவுலியுமாரமுங்கோவைத்
தண்டைதோள்வளைகடகமென்றினையனதறுகட்
கண்டகண்டங்களொடுங்கணைதுரந்தனகதிர்சூழ்
மண்டலங்களைமாறுகொண்டிமைத்தனவாளி. (௨௫௧)

பரந்தவெண்குடைசாமரைநெடுங்கொடிபதாகை
சரந்தருஞ்சிலைகேடகம்பிச்சமெய்சரங்க
டரந்துசெல்வனகுருதிநீராறுகடோறு
நிரந்தபேய்க்கணங்கரைதொறுங்குவித்தனநீந்தி. (௨௫௨)

ஈண்டுவெஞ்செருவினையனநிகழ்வுறியவர்க்கு
நீண்டவெள்ளெயிற்றரக்கன்மற்றொருதிசைநின்றான்
பூண்டவெஞ்செருவிரவிகான்முளையொடும்பொருதான்
காண்டரும்மெனவிமையவர்குழுக்கொண்டுகண்டார். (௨௫௩)

வேறு.

பொறிக்கெழுகண்ணினன்புகையும்வாயினன்
செறிக்கெழுகதிரவன்சிறுவன்சீறினன்
முறிந்தனவரக்கன்மாமுட்டிண்டோளென
வெறிந்தனன்விசும்பின்மாமலையொன்றேந்தியே. (௨௫௪)

அம்மலைநின்றுவந்தவனியெய்திய
செம்மலையனையவெங்களிறுஞ்சேனையின்
வெம்மலைவேழமும்பொருதவேதினி
யெம்மலையுளவவற்கெடுக்கொணாதன. (௨௫௫)

இவ்வகைநெடுமலையிழிந்தமாசணங்
கவ்வியநிருதர்தங்களிறுங்கட்டற
வவ்வகைமலையினையேற்றொரங்கையால்
வவ்வினனரக்கன்வாளவுணர்வாழ்த்தினார். (௨௫௬)

ஏற்றொருகையினுலிதுகொளியடா
வாற்றியகுன்றமென்றளவிலாற்றலா
னிற்றியஞனுறுப்பிசைத்தனீங்கெனுத்
தூற்றினனிமையவர்துணுக்கமெய்தினார். (௨௫௭)

செல்வனேர்நெடுங்கிரியின்றுர்ந்தெனு
வெல்லவன்கான்முளையுனருமேல்லையிற்
கொல்லெனவெறிந்தனன்குறைவிலேன்பினோர்
சொல்லெனப்பிழைப்பிலாச்சூலஞ்சோர்விலான். (௨௫௮)

பட்டனன்பட்டனனென்றுபார்த்தவர்
விட்டழைத்திடநெடுவிசும்பிற்சேறலு
மெட்டினனதபிடித்திறுத்தனிக்கினு
னெட்டுமோமாருதியறத்தையோம்புவான். (௨௫௯)

சித்திரவனமுலைச்சீதைசெவ்வியால்
முத்தனுமிதலையூரறிவுமுற்றிய
பித்தன்வெஞ்சிலையினையிறுத்தபேரொலி
யொத்ததுகுலமன்றிற்றவோசையே. (௨௬௦)

நிருதனுமனையவனிலைமைநோக்கியே
கருதவுமியம்பவுமரிதன்கைவலி
யரியனமுடிப்பதற்கனைத்துநாட்டினு
மொருதனியுளையிதற்குவமையாதென்றான். (௨௬௧)

என்றெடும்பொருதியேலின்றுமியானமர்
சொன்னனபுரிவனென்றரக்கன்சொல்லலு
முன்னிவியெதிர்கிலேனென்றுமுற்றிய
பின்விகல்பழுதெனப்பெயர்ந்துபோயினான். (உசுஉ)

அற்றதுகாலையினரக்கனுயுதம்
பெற்றிலன்பெயர்ந்திலனனையபெற்றியிற்
பற்றினன்பாய்ந்தெதிர்பருதிகான்முளை
யெற்றினன்குத்தினனெறியுங்கைகளால். (உசுங)

அரக்கனுமன்றுமின்றுவன்மையாயினுந்
தருக்கினியின்றெடுசமையுந்தானென
நெருக்கினன்பற்றினனிங்கொணுவகை
யுருக்கியசெம்பெனவுதிரக்கண்ணினான். (உசுச)

திரிந்தனர்சாரிகைதேவர்கண்டிலர்
புரிந்தனர்நெடுஞ்செருப்புகையும்போர்த்தெழ
வெரிந்தனவுருமெலாமிருவர்வாய்களுஞ்
சொரிந்தன குருதிதாமிறையுஞ்சோர்ந்திலார். (உசுரு)

ஒறுக்கிலரொருவரையொருவருற்றிகல்
முறுக்கினர்முறைமுறையரக்கன்மொய்ம்பினாற்
பொறுக்கிலாவகைநெடும்புயங்களாற்பிடித்
திறுக்கினனிவன்சிறிதுணர்வுமெஞ்சினான். (உசுசு)

மண்டமரின்றுடுமடங்குமன்னிலாத்
தண்டலில்பெரும்படைசிந்தந்தக்கதோ
ரொண்டருகருமமற்றிதனினில்லெனக்
கொண்டனன்போயினனிருதர்கோனகர். (உசுஎ)

உரற்றினபார்ப்பினையூறுகொண்டெழச்
சிரற்றினப்பறவையிற்சிந்தைசிந்திட
விரற்றுறுகைத்தலத்தடித்துவெய்துயிர்த்
தரற்றினகவிக்குலமரக்கரார்த்தனர். (உசுஅ)

நடுங்கினாமராநாவும்வேர்த்துலர்ந்
தொடுங்கினர்வானரத்தலைவருண்முகிழ்த்
திடுங்கினகண்ணினனெரிந்தநெஞ்சின
னடங்கினனுமுயிர்ப்பென்னுமன்பினார். (உசுக)

புழுங்கியவெஞ்சினத்தரக்கன்போகுவா
னமுங்கலில்கோண்முகத்தரவமாயினு
னெழுங்கதிரிரவிதன்புதல்வனெண்ணுற
விழுங்கியமதியெனமெலிந்துதோன்றினான். (உஎ0)

இக்குறவினக்குலான்றெவன்றியவன்
மைக்கருநிறத்திடைமறைந்ததன்னுரு
மிக்கதுங்குறைந்ததுமாகமேகத்துப்
புக்கதும்புறத்ததாமதியும்போன்றனன். (உஎக)

ஒருங்கமர்புரிகிலேனென்றொடியாவென
நெருங்கியவுணாயினினினைந்துநேர்கிலன்
கருங்கடல்கடந்தவக்காலன்காலன்வாழ்
பெருங்கரம்பிசைந்தவன்பின்புசென்றனன். (உஎஉ)

ஆயிரம்பெயரவனடியில்வீழ்ந்தனர்
நாயகமெமக்கினியாவர்நாட்டினிற்
காய்கதிர்ச்செருவனைப்பிணித்தகையினன்
போயினனரக்கனென்றிசைத்தபூசலார். (உஎங)

தீயினுமுதிர்வுறச்சிவந்தகண்ணினன்
காய்கணைசிலையொடுங்கவர்ந்தகையினு
னேயெனுமளவினிலிலங்கைமாநகர்
வாயில்சென்றெய்தினன்மழையின்மேனியான். (உஎச)

உடைப்பெருந்துணைவனையுயிரிற்கொண்டுபோய்க்
கிடைப்பருங்கொடிநகரடையிற்கேடெனத்
தொடைப்பரும்பகழியின்மாரிதூர்த்துரா
வடைப்பனென்றடைத்தனன்விசும்பினூறெலாம். (உஎரு)

மாதிரமறைந்தனவயங்குவெய்யவன்
சோதியின்கிளர்நிலைதுடர்தலோவின
யாதும்விண்படர்கிலவியங்குகார்மழை
மீதுயின்றகன்றனவிசும்புதூர்த்தலால். (உஎசா)

மனத்தினுங்கடியதோர்விசையின்வான்செல்வா
னினக்கொடும்பகழியின்மதிலையெய்தினு
மினைத்தவரிக்குதலருமையின்றெனச்
சினக்கொடுந்திறலவன்றிரிந்துநோக்கினன். (உஎஎ)

கண்டனன்வந்தனம்வாய்கண்கைகாலெனப்
புண்டரீகத்தடம்பூத்தபொற்சிலை
மண்டலந்துடர்ந்துமண்வயங்கவந்ததோர்
கொண்டலிற்பொலிதருகோலத்தான்றனை. (உஎஅ)

மடித்தவாய்கொழும்புகைவழங்கமாதிரம்
அடித்தமார்புருவங்கள்சுருக்கொண்டேறிடப்
பொடித்ததிநயனங்கள்பொறுக்கிலாமையா
விடித்தவான்றெழிப்பினாலிடித்தகுன்றெலாம். (உஎகூ)

மாக்கவர்தரும்வலிதொலைந்தவாலியாம்
பூக்கவர்ந்துண்ணியும்போலுமென்றெனைத்
தாக்கவந்தனையிவன்றன்னையின்றுயிர்
காக்கவந்தனையெனக்கழறன்மேயினன். (௨௮௰)

உம்பியைமுனிந்திலேனவனுக்கூர்தியாந்
தும்பியைமுனிந்திலேன்றுடர்ந்தவாலிதன்
றம்பியைமுனிந்திலேன்சமரந்தன்னிலியா
னம்பியல்சிலையினாய்புகழின்றாதலால். (௨௮௧)

தேடினன்றிரிந்தனனின்னைத்திக்கிறந்
தோடியதன்படையும்பியோர்ந்தொரு
பாடுறநடந்தனனனுமன்பாதின
வீடுறுமிவனைக்கொண்டெளிதினெய்தினேன். (௨௮௨)

காக்கியவந்தனையென்னிற்கண்டவென்
பாக்கியந்தந்ததுநின்னைப்பன்முறை
யாக்கியசெருவெலாமாக்கியெம்முனைப்
போக்குவன்மனத்துறுகாதற்புன்கணாய். (௨௮௩)

ஏதிவெந்திறலினாயிமைப்பிலோரெதிர்
பேதுறுகுரங்கையான்பிணித்தகைப்பிணி
கோதைவெஞ்சிலையினாற்கோடிவீடெனிற்
சீதையும்பெயர்ந்தனள்சிறைநின்றுமென்றான். (௨௮௪)

என்றலுமுறுவலித்திராமனியானுடை
யின்றுணையொருவனையெடுத்ததோளினைக்
குன்றினுமுயர்ந்தனகுறைக்கிலேனெனிற்
பின்றினனுனக்குவிற்பிடிக்கிலேனென்றான். (௨௮௫)

மீட்டவன்கரங்களால்விலங்கலானையை
மூட்டறநீக்குவான்முயலும்வேலையில்
வாட்டலைபிடர்த்தலைவயங்கவாளிகள்
சேட்டகனெற்றியினிரண்டுசேர்த்தினான். (௨௮௬)

சுற்றியகுருதியின்செக்கர்சூழ்ந்தெழ
நெற்றியினெடுங்கணையொளிரநின்றவன்
முற்றியகதிரவன்முளைக்குமுந்துவந்
துற்றெழுமருணனதுதையம்போன்றனன். (௨௮௭)

குன்றின்வீழருவியிற்குதித்துக்கோத்திழி
புன்றலைக்குருதிநீர்முகத்தைப்போர்த்தலு
மின்றுயிலெழுந்தனவுணர்ச்சியெய்தினான்
வன்றிறனேற்றிலான்மயக்கமெய்தினான். (௨௮௮)

ஒற்றியினின்றெளிரொடிதிளைமப்பன
கொற்றவன்சரமெனக்குறிப்பினன்வினான்
சுற்றுறநோக்கினன்றொழுதுநோக்கினான்
முற்றியபொருட்கெலாமுடிவுளான்றனை. (உ௯)

கண்டனனாயகன்றன்னைக்கண்ணுறுத்
தண்டலின்மானமுநாணுந்தாங்கினான்
விண்டவனாசியுஞ்செவியும்வேரொடுங்
கொண்டனனெழுந்துபோய்த்தமரைக்கூடினான். (உக0)

வானரமார்த்தனமழையுமார்த்தன
தானரமகளிருந்தமருமார்த்தனர்
மீனரல்வேலையும்வெற்புமார்த்தன
வானவரோடின்றறமுமார்த்தன. (உகக)

கார்திகலரக்கன்வெங்காத்துணீங்கிய
வேந்தலையகமகிழ்ந்தெய்தநோக்கிய
வேந்தனுஞ்சானகியிலங்கைவெஞ்சிறை
போந்தனளாமெனப்பொருமனீங்கினான். (உகஉ)

மத்தகம்பிளந்துமாடுருவவார்சிலை
வித்தகன்சரந்தொடமெலிவுதோன்றியச்
சித்திரம்பெறுதலிற்செவியுமூக்குங்கொண்
டத்திசைபோயினனல்லதொண்ணுமோ. (உகங)

அக்கணத்தறிவுவந்தனுகலங்கையின்
றக்கனன்கவியரசென்றுமுன்மைய
மிக்குயர்நாசியுஞ்செவியும்வேறிடம்
புக்கதுமுணர்ந்தனனுதிரப்போர்வையான். (உகச)

தாதுராகத்தடங்குன்றந்தாரைசால்
கூதிர்காலெடுமழைசொரியக்கோத்திழி
யூதையோடருவிகளுமிழ்வதொத்தனன்
மீதுறுகுருதியாறொழுகுமேனியான். (உகரு)

என்னுடைத்தன்மையனினையவெண்ணிலாப்
பெண்ணுடைத்தன்மையதாயபீடையாற்
புண்ணுடைச்செவியொடுமூக்கும்போன்றவாற்
கண்ணுடைச்சுழிகளுங்குருதிகால்வன. (உகசு)

ஏசியுற்றெழும்விசும்பினைப்பார்க்குந்தன்
னாசிலையப்பார்க்குமுன்னடந்தாளுடை
வாசிலையப்பார்க்குமிம்மண்ணைப்பார்க்குமாற்
றேசியுற்றதுவெனத்தீயுநெஞ்சினன். (உகஎ)

என்முகங்காண்பதன்முன்னமியானவன்
றன்முகங்காண்பதுசாதந்தானெனப்
பொன்முகங்காண்பதோர்தோளும்போரிடை
வன்முகங்காண்பதோர்வாளும்வாங்கினான். (௨௯௮)

வீசினன்கேடகம்விசும்பின்மீதெலாங்
கூசினவமரருங்குடர்குழம்பினார்
காய்சினவரக்கனுங்கன்னற்போதல
னாசியுஞ்செவியும்வெங்குருதிகான்றதே. (௨௯௯)

ஆயிரம்பேய்சுமந்தளித்ததாங்கொரு
மாயிருங்கேடகமிடத்துவாங்கினான்
பேயிரண்டாயிரஞ்சுமந்துபேர்வதோர்
சாயொளிவயிரவாட்பிடித்தகையினான். (௩௦௦)

விதிர்த்தனன்வீசினன்விசும்பின்மீதெலா
முதிர்த்தனனுலகினையனந்தனுச்சியோ
டதிர்த்தனனார்த்தனனாயிரம்பெருங்
கதிர்த்தலஞ்சூழ்வடவரையின்காட்சியான். (௩௦௧)

வீசினகேடகமுகத்துவீங்குகால்
கூசினகுரக்குவெங்குழுவைக்கொண்டெழுந்
தாசைகடோறும்விட்டெறியவார்த்தெழு
மோசையொண்கடலையுந்திடர்செய்தோடுமால். (௩௦௨)

போயினகேடகம்போகநோக்கினா
னாயிரம்பெயரவனறியுமுன்பவன்
பேயிரண்டாயிரம்பேணுங்கேடக
மேயெனுமளவினினெய்தச்சென்றதால். (௩௦௩)

தோலிடைத்தூக்கவுந்துகைக்கவுஞ்சுடர்
வேலுடைக்கூற்றினுற்றுனியவீசவுங்
காலுடைக்கடலெனச்சிந்திக்கைகெட
வாலுடைநெடும்படையிரிந்துமாய்ந்ததால். (௩௦௪)

ஏறுபட்டதுமிடையெதிர்ந்துளோரெலாங்
கூறுபட்டதுங்கொழுங்குருதிகோத்திழிந்
தாறுபட்டதுமிலமனந்தனுச்சியுஞ்
சேறுபட்டதுமொருகணத்திற்றீர்ந்ததால். (௩௦௫)

இடிக்கிலையெதிரினியிவனையிவ்வழித்
தடிக்கிலாமெனிற்குரங்கின்றானையை
யொடுக்கினையரக்கனையுயர்த்தினையென
முடுக்கினனிராமனைச்சாம்பன்முன்பினான். (௩௦௬)

அண்ணலுந்தானையினழிவுமாங்கவன்
திண்ணெடுங்கொற்றமும்வலியுஞ்சிந்தியா

நல்லினனடக்கெதிர்நமனையின்றிவன்
கண்ணிலடிதுத்தவனென்றுங்கற்பிறுன். (௩0௭)

ஆதிரேறுடேழுகோலசலியேறென
வீதிலாவிசையனவிராமனெய்தனன்
பாறுகுதிரையெனவிசும்பிற்பாறிட
றாதிருன்வாளிறுணக்குகல்வியால். (௩0௮)

ஆடவர்க்கரசனுந்தடாவவ்வழி
கோனுடையிற்கதிரொளக்கொடியகூர்ங்கணை
யிமிறத்தாந்தனனையுமிற்றுகக்
கேடகப்புறத்திருற்கிழியச்சிந்திறுன். (௩0௯)

நெத்தரோர்முறுவலுக்கெரியச்செங்கனுன்
மரிந்தொருவடிக்கணைதொடுக்கமற்றவ
னெறுத்தொளிர்வாளொறுமுராவுாகத்லத
யறுத்தகலுழனிமமாரார்க்கவே. (௩௧0)

அற்றதுதடக்கைவாளற்றதில்லென
மற்றொருவயிரவாள்கடிதின்வாங்கிறுன்
முற்றினன்முற்றினனென்றுமுன்புவந்
தற்றனனுழித்தீயவியலுதவான். (௩௧௧)

அக்கொடுவாளையுந்தணித்தவாண்டகை
பொன்னெடுங்கேடகம்புரட்டிப்போர்த்ததோர்
கன்னெடுங்கவசத்துநாமவெங்கணை
மின்றெருங்கிகர்ப்பனபலவும்வீசிறுன். (௩௧௨)

அந்தாமன்னுறுங்கழுமவ்வழி
யிந்திரன்றமரொடுமிரியலெய்திடச்
சிந்துவுந்தன்னிலைகுலையச்சேனுற
வந்ததுதசமுகன்விடுத்தமாப்படை. (௩௧௩)

வில்வினையொருவனுமிவனைவிட்டுதற்
கொல்வினையிதவெனக்கருதியூன்றிறுன்
வல்வினைதீயெனவந்தபோதொரு
நல்வினையொத்ததுநடந்ததானையே. (௩௧௪)

கோத்ததுபுடைதொறுங்குதிரைதேரொடாள்
பூத்திழிமதமலைமிடைந்தபோர்ப்படை
காத்ததுகருணைக்கண்டுமாயமாக்
கூத்தனும்வருகெனக்கடிதுகூவிறுன். (௩௧௫)

குழிவெங்கடகரிபுரவிதுண்டுமா
லாழியந்தேரொடுமிடைந்தவார்கலி
யேழிருகோடிவந்தெய்திற்றென்பரா
ஊழியொருவனுமெதிர்சென்றான்றிறுன். (௩௧௬)

காலமுங்காலனுங்கணக்கிறிலமையு
மூலமுமிலையெனவகுத்தமுற்றிய
ஞாலமுநாகரும்விசும்புளக்குழுஞ்
சூலமொன்றாக்கனும்வாய்த்தோன்றினுன். (௩௧௭)

வேறு. ஆங்கிடந்தனவறுகுறைநடிப்பனவல்லதொன்றிணமயோரு
மாங்கிடந்தனமலைக்குலவகிடந்தனவாமெனமாருடிச்
சரங்கிடந்தனதாத்ராங்கிடந்தனகறைபடும்படிகவ்விச்
சிரங்கிடந்தனகண்டனர்கண்டிலருயிர்கொடுதிரிவாரை. (௩௧௮)

இற்றவல்லவுமீர்ப்புண்டவல்லவுமிடையிடைமுறிந்தெங்குஞ்
சூற்றவல்லவுந்துணிபட்டவல்லவுஞ்சுடுபொறித்தொகைதூவி
வெற்றவெம்பொடியாயினவல்லவும்வேறொன்றுறுமுருவி
யற்றவல்லவுங்கண்டிலர்படைக்கலமுகொளந்திடராக. (௩௧௯)

படர்ந்தகும்பத்துப்பாய்ந்தனபகழிகளபரத்தைப்பறிந்தோடிக்
குடைந்துவையகம்புக்குறத்தாக்கியகுருதியாற்குடர்சோரத்
தொடர்ந்துநோயொடுந்துணைமருப்பிழந்துதங்காத்திரந்துணியாகிக்
கிடந்தவல்லதுநடந்தனகண்டிலர்கிளர்மதக்கரியெங்கும். (௩௨௦)

வீழ்ந்தவாலனவிளிவுற்றபதாகையவெயிலுமிழ்மிலம்பு
போழ்ந்தபன்னெடும்புரவியமுறைமுறையச்சொடும்பொறியற்றுத்
தாழ்ந்தவெண்ணிணந்தயங்குவெங்குழம்பிடைத்தலைத்தலைமாருடி
யாழ்ந்தவல்லதுபெயர்ந்தனகண்டிலரதிர்குரன்மணித்தேர்கள். (௩௨௧)

ஆடறீர்ந்தனவளைகழுத்தற்றனவதிர்பெருங்குரறீத்த
தாடுணிந்தனதறுகண்வெங்கரிகொதாங்கியபிணத்தோங்கற்
கோடமைந்தவெங்குருதிநீராறுகள்சுழிதொறுங்கொணர்ந்துந்தி
யோடலன்றிநின்றுகள்வனகண்டிலருருகெழும்பரியெல்லாம். (௩௨௨)

வேதநாயகன்வெங்கணைவழக்கத்தின்மிகுதியைவெவ்வேறிட்
டோதுகின்றதெனும்பருமரக்கர்வெங்களத்துவந்துற்றுளாக்
காதல்விண்ணிடைக்கண்டனரல்லதுகணவர்தமுடனூடு
மாதர்வெள்ளமேகண்டனர்கண்டிலர்மலையினும்பெரியாரை. (௩௨௩)

பனிப்பட்டாலெனக்கதிர்வரப்படுவதுபட்டதப்படைபற்றுர்
துனிப்பட்டாரொனத்துலங்கினரிமையவரியாவர்க்குந்தோலாதா
வினிப்பட்டானெனவீங்கினவரக்கருமேங்கினரிவனந்தோ
தனிப்பட்டானெனவவன்முகநோக்கியொன்றுரைத்தனன்றனிநாதன்.

ஏதியோடெதிர்பெருந்துணையிழந்தனையெதிரொருதனிநின்றுய்
நீதியோனுடன்பிறந்தனையாலினுநின்னுயிர்நினக்கீவன்
போதியோநாளைவருதியோவன்றெனிற்போர்புரிந்திப்போதே
சாதியோவுனக்குறுவதுசொல்லுதிதெரிவுறச்சமைந்தம்மா. (௩௨௫)

இழைத்ததீவினையிற்றிலதாதலினியானுனையிளையோனு
லழைத்தபோதினும்வந்திலையந்தகனுணையின்வழிநின்றுய்

பிழைத்ததாலுனக்கருந்திருநாளொடுபெருந்துயினெடுங்கால
முழைத்துயிலிவ்வதாயினையென்றுனக்குறுவதொன்றுளாயென்றான். (௩௨௬)

மற்றொளிர்க்கவரியுமானமுமறந்துறைவழுகாத
கொற்றநீதியுங்குலமுதற்றருமமுமென்றிவைகுடியாகப்
பெற்றவுங்களாலெங்களைப்பிரிந்ததன்பெருஞ்செவிமூக்கோடு
மற்றவெங்கைபோலென்முகங்காட்டிநின்றூற்றுவனுயிரம்மா. (௩௨௭)

கோக்கிழந்தனர்வானவரொங்களாலவ்வகைநிலைநோக்கித்
தாக்கணங்கனையவள்பிறர்மனைவியைத்தடுத்தனனெனத்தக்கோர்
வாக்கிழந்தபின்றனையர்வுறுவேன்செவிதன்னொடுமாற்றால்
மூக்கிழந்தபின்பிளவென்றலதுமுடியுமோமுடியாதாய். (௩௨௮)

உங்கடோடலைவாள்கொடுதுணித்துயிர்குடித்தெம்முனுவந்தெய்த
நங்கையென்னலங்கொடுக்கியவந்தான்வானவர்நகைசெய்யச்
செங்கைதாங்கியிரத்தொடெங்கண்ணினீர்குருதியினொடுதேக்கி
வெங்கைபோலெமக்கழைத்தனன்வீழ்வதேறுவிராவணனெனதிரம்மா.

ஒருத்தனேதனியுலகொருமூன்றிற்குமாயினும்பழியோருங்
கருத்தினால்வருஞ்சேவகரல்லரோசேவகர்கடேறுவார்
செருத்தின்வாளினுற்பிறத்திறனுங்கனையலுத்துறச்சிரங்கொய்து
பொருத்தினல்லதுபொருந்துமோதக்கதுபுகன்றிலைபோலென்றான். (௩௩௦)

என்றுதன்னெடுஞ்சூலத்தையிடக்கையின்மாற்றின்வலக்கையாற்
குன்றமின்றதுகோத்தெடுத்திருநிலக்குடர்கவர்ந்தெனக்கொண்டான்
சென்றுவின்னெடும்பொறியொடுந்தீச்செலச்சேவகன்செனிநேரோ
வென்றுதீரெனவிட்டனனவன்றுபட்டதுமேலென்ன. (௩௩௧)

அலையருன்றெறுமசனியையாவர்க்குமறிவருந்தனிமேவி
புலையுநன்னெடுநீறெனதூறியபுரவலன்போர்வென்று
நினையுமாத்திரத்தொருகையினொருகையினிமிர்கின்றநெடுவேலை
திணையின்மாத்திரந்துணிபடவான்முறைசிந்தினன்சரஞ்சிந்தி. (௩௩௨)

அண்ணல்விற்கொடுங்கால்விசைத்துதைந்தனவலைகடல்வறளாக
வண்ணவிற்பனவுருமையுஞ்சுடுவனமேருவையுருவிப்போய்
விண்ணனைத்தையுங்கடப்பனபிழைப்பிலாமெய்யனமேற்சேர்ந்த
கண்ணுதற்பெருங்கடவுடன்கவசத்தைக்கடந்திலகதிர்வாளி. (௩௩௩)

தாக்குகின்றனநுழைகிலதலையதுதாமரைத்தடங்கண்ணு
னோக்கியிங்கிதுசங்கரன்கவசமென்றுணர்வுறநினைத்துன்னி
யாக்கியக்கவனடுபடைதொடுத்துவிட்டறுத்தனனதுசிந்தி
வீக்கிழந்ததுவீழ்ந்ததுவனைசுழல்விரிசுடர்வீழ்ந்தென்ன. (௩௩௪)

காந்துவெஞ்சுடர்க்கவசமற்றதுதலுங்கண்டொறுங்கனல்சிந்த
வேந்தவன்னெடுந்தோள்புடைத்தார்த்தங்கொரொழுமுளைவயிரப்போர்
வாய்ந்தவன்னெடுந்தண்டுகைபற்றினன்வானரப்படைமுற்றுஞ்
சாந்துசெய்குவனுமெனமுறைமுறையலாத்தனன்றனையோடும். (௩௩௫)

பறப்பவாயிரம்படுவனவாயிரம்பட்டெழிலகன்மார்பர்
இறப்பவாயிரந்திரிவனவாயிரஞ்சென்றுபுக்குருவாறு
மறைப்பவாயிரம்வருவனவாயிரம்வடிக்கணையென்றாலும்
பிறப்பவாயிடைநெழித்துறத்திரிந்தனன்கறங்கெனப்பெருஞ்சாரி. (௩௩௪)

தண்டுகைத்தலத்துளதெனினுளதன்றுதானேயென்றதுசாற்றக்
கொண்டலொத்தவன்கொடுங்கணைபத்தொருதொடையினிற்றொடுத்தெய்[தான்
கண்டமுற்றனமற்றதுகருங்கழலரக்கனுங்கனன்றுங்கோர்
மண்டலச்சுடராமெனக்கேடகம்வாங்கினன்வாளோடும். (௩௩௫)

வாளெடுத்தலும்வானரவீரர்கண்மறுகினர்வழிதோறுந்
தாளெடுத்தனர்கழிந்தனர்வானவர்தலையெடுத்திலர்தாழ்ந்தார்
கோளெடுத்ததுமிளவென்றுரைத்தலுங்கொற்றவன்குன்றொத்த
தோளெடுத்ததுதுணித்தியென்றொருசரந்துரந்தனன்சுரர்வாழ்த்த. (௩௩௬)

அலக்கணுற்றதுதீவினைநல்வினையார்த்தெழுந்ததுவொத்துக்
கலக்கமுற்றனரிராக்கதர்காலவெங்கருங்கடற்றிரைபோலும்
வலக்கையற்றதுவாளொடுங்கோளுடைவானமாமதிபோலு
மிலக்கையுற்றதவ்விலங்கைக்குமிராவணன்றனக்குமென்றெழுந்தோட.

மற்றும்வீரர்களுளரொனற்கெளிதரோமறத்தொழிலிவன்மாடு
பெற்றுநீங்கினதாமெனினல்லதுபேரொழிற்றோளோடு
மற்றுவீழ்ந்தகையறுதவெங்கையினாலெடுத்தவனார்த்தோடி
யெற்றவீழ்ந்தனவெயிறிளித்தோடினவானரக்குலமெல்லாம். (௩௩௮)

வள்ளல்காத்துடனிற்கவும்வானரத்தானையைமறக்கூற்றங்
கொள்ளைகொண்டிடப்பண்டையின்மும்மடிகுமைக்கின்றகுறிநோக்கி
வெள்ளமின்றொடும்வீய்ந்துறுமென்பதோர்விம்மலுற்றுயிர்வெம்ப
வுள்ளகையினுமற்றவெங்கரத்தையேயஞ்சினவுலகெல்லாம். (௩௩௯)

மாறுவானரப்பெருங்கடலோடத்தன்றோணின்றுவார்சோரி
யாறுவிண்டொடும்பிணஞ்சுமந்தோடமேலமரருமிரிந்தோடக்
கூறுகூறுபட்டிலங்கையும்விலங்கலும்பறவையுங்குலைந்தோட
வேறுசேவகன்மேலெழுந்தோடினன்மழைக்குலமிரிந்தோட. (௩௪௦)

ஈற்றுக்கையையுமிக்கணத்தரியுமென்றிமையவர்தொழுதேத்தத்
தொற்றுக்கையகன்றொழிந்தவனுளவைதுலையவுந்தோன்றாத
கூற்றுக்கையமுமச்சமுங்கெடநெடுங்கொற்றவன்கொலையம்பால்
வேற்றுக்கையையும்வேலையிலிட்டனன்வேறுமோரணையாக. (௩௪௧)

சந்திரப்பெருந்துணையுஞ்சாற்றியநதிலொன்றுந்தவிராம
லந்தரத்தவரலைகடலமுதெழக்கடைவுறுமந்நாளிற்
சுந்தரத்தடந்தோள்வளைமாசுணஞ்சுற்றியதொழில்காட்ட
மந்தரத்தையுங்கடுத்ததுமற்றவன்மணியணிவயிரத்தோள். (௩௪௨)

வெணவண்ணவன்கருங்கடற்கொடுவெந்தசெயலிலுஞ்செறிதாளைச்
சுவணவண்ணவெற்றிறைபுடைக்கடுவிசைமுடுகியதொழிலானு
மவணவண்ணலத்தேவலிவியற்றியவமைவிலுமயில்வானி
உவணவண்ணலையொத்தனமர்தரமொத்ததவ்வுயர்பொற்றேர். (௩௪௩)

பழக்காள்வருமெருவையுள்ளுறத்துளைத்தொருபனையாக்கி
வழக்கிறுலகளந்தவற்கமைத்ததோர்வான்குணில்வலத்தேந்தி
முழக்கினலெனமுழங்குபேரார்ப்பினன்வானரமுங்கிளை
யுழக்கினன்றசைதோலெலும்பெருமிவைகுருதியோடொன்றாக. (௩௪௪)

நிலத்தகால்கனல்புனலெனவிவைமுற்றுமிருதனவுருவாக்கிக்
கொலைத்தகாததோர்வடிவுகொண்டானெனவுயிர்களைக்குடிப்பானைச்
சலத்தகாலனைத்தறுகணர்க்கரசனைத்தருக்கினிற்பெரியானை
வலத்தகாலையும்வடித்தவெங்கணையினற்றடிந்தனன்றறுவல்லான். (௩௪௫)

பந்திபந்தியின்பற்குலமீன்குலம்பாடுபாடுறுயாகித்
திந்தவெள்ளெயிறிமைத்திடக்குருதியாமெக்கர்கொண்டெழுசெக்க
ரந்திவந்தெனவகனெடுவாய்விரித்தடியொன்றுகடிதோட்டிக்
குந்திவந்தனனெடுநிலங்குழிபடக்குறைகடல்கோத்தேற. (௩௪௬)

மாறுகாலின்றிவாறுறநிமிர்ந்துமாடுளதெலாம்வளைத்தேந்திச்
சூறைமாருதமாமெனச்சுழித்துமேற்றுடர்கின்றதொழிலானை
யேறுசேவகனெரிமுகப்பகழியாலிருநிலம்பொறைநீங்க
வேறுகாலையுந்துணித்தனனறத்தொடும்வேதங்கள்கூத்தாட. (௩௪௭)

கையிரண்டொடுகால்களுந்துணிந்தனகருவரைபொருவுந்தன்
மெய்யிரண்டுறுமுயிரம்பகழியால்வெரிநுறத்துளைபோன
செய்யகண்பொழிதீச்சிகையிருமடிசிறந்தனதெழிப்போடும்
வையம்வானிடைமழையினும்பெருத்தனவளர்ந்ததுபெருஞ்சீற்றம். (௩௪௮)

பாதல்கைகளோடிழந்தனன்படியிடையிருந்துவான்பருவாயாற்
காதலினியமலைகளைக்கடித்திறுத்தெடுத்துவெங்கனல்பொங்கி
மீறமீதுதன்னகத்தெழுகாற்றினல்விசைகொடுதிசைசெல்ல
ஊதலுதப்பட்டுலந்தனவானரமுருமுவீழுமென்ன. (௩௪௯)

தீயினுற்செய்தகல்லுடையானெடுஞ்சிகையினுற்றிசைதீய
வேயினற்றிணிவெற்பொன்றுகாயினல்விசும்புறவளைத்தேந்திப்
பேயினர்ப்புடைப்பெருங்களமிரிந்தெழப்பிலந்திறந்ததுபோலும்
வாயினுற்செலவீசினன்வள்ளலுமலர்க்கரம்விதிர்ப்புற்றான். (௩௫௦)

ஐயன்விற்றொழிற்காயிரமிராவணரமைவிலரந்தோயான்
கையுங்கால்களுமிழந்தனன்வேறினியுதவலாந்துணைகாணேன்
மைபனேய்கொடுமுடிந்தவனுளென்றுவரம்பின்றிவாழ்ந்தானுக்
குய்யுமாறரிதென்றுதனுள்ளத்தினுணர்ந்தொருதுயருற்றான். (௩௫௧)

வேறு. சித்திரச்செம்பகங்குருதிதிரைகடோறுஞ்சிறையாறு
யெந்திரத்தேர்கரிபரியாளீர்த்தோடப்பார்த்திருந்த
கந்தரப்பொற்றனியாண்மைக்களிற்றனையான்கண்ணின்ற
சுந்தரப்பொற்றோளானைமுகனோக்கியிவைசொன்னான். (௩௫௨)

புக்கடைந்தபுறவொன்றின்பொருட்டாகத்துலைபுக்க
மைக்கடங்கார்மதயானைவாள்வேந்தன்வழிவந்தி
ரிக்கடன்களுடையீர்நீரெம்வினைதீர்த்தும்முடைய
கைக்கடைந்தானுயிர்காக்கக்கடவீரென்கடைக்கூட்டால். (௩௫௩)

நீதியால்வந்ததொருநெடுந்தருமநெறியல்லார்
சாதியால்வந்தசிறுநெறியறியானென்றம்பி
யாதியாயுனையடைந்தானரசருருக்கொண்டமைந்த
வேதியாயின்னமுனக்கடைக்கலமியான்வேண்டினேன். (௩௫௪)

வெல்லுமாநினைக்கின்றவேலரக்கன்வேரொடுங்
கல்லுமாமுயல்கின்றானிவனெனலுங்கருவுடையா
னெல்லுமாறியலுமேலுடன்பிறப்பின்பயனோரான்
கொல்லுமாலவனிவனைக்குறிக்கொணீகோடாதாய். (௩௫௫)

தம்பியெனநினைந்திரங்கித்தவிரானத்தகவில்லா
னம்பியிவன்றனைக்காணிற்கொல்லுமிறைநல்கா
னும்பியைத்தானுன்னைத்தானுமனைத்தானொருபொழுது
மெம்பிபிரியானாகவருளுதியான்வேண்டினேன். (௩௫௬)

மூக்கிலாமுகமென்றுமுனிவர்களுமமரர்களு
நோக்குவார்நோக்காமைநுன்கணையாலென்கழுத்தை
நீக்குவாய்நீக்கியபின்னெடுந்தலையைக்கருங்கடலுட்
போக்குவாயிதுநின்னைவேண்டுகின்றபொருளென்றான். (௩௫௭)

வரங்கொண்டானினிமறுத்தல்வழக்கன்றென்றொருவாளி
யுரங்கொண்டதடஞ்சிலையினுயர்நெடுநாணுட்கொளுவாச்
சிரங்கொண்டான்கொண்டதனைத்திண்காற்றின்கடும்படையா
லரங்கொண்டகருங்கடலுளழுவத்துளழுத்தினான். (௩௫௮)

மாக்கூடுபடர்வேலைமறிமகரத்திரைவாங்கி
மேக்கூடுகீழ்க்கூடுமிக்கிரண்டுதிக்கூடு
போக்கூடுகவித்திருகண்புகையோடுபுகையுயிர்க்கு
மூக்கூடுபுகப்புக்கிமூழ்கியதம்முகக்குன்றம். (௩௫௯)

ஆடினார்வானவர்களரமகளிரமுதவிசை
பாடினார்மாதவரும்வேதியரும்பயந்தீர்ந்தார்
கூடினார்படைத்தலைவர்கொற்றவனைக்குடர்கலங்கி
யோடினாரடலரக்கரிராவணனுக்குணர்த்துவார். (௩௬0)

கும்பகருணன்வதைப்படலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௧௫௭௩.
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

அவ்வழிக்கருணன்செய்தபேரெழிலாண்மையெல்லாஞ்
செவ்வழியுணர்வுதோன்றச்செப்பினஞ்சிறுமைதீரா
வெவ்வழிமாயையொன்றுவேறிருந்தெண்ணிவேட்கை
யிவ்வழியிலங்கைவேந்தனியற்றியதியம்பலுற்றாம். (௧)

மாதிரங்கடந்ததோளான் மந்திரவிருக்கைவந்த
மோதரனென்றுநாமத்தொருவனைமுறையினோக்கிச்
சீதையையெய்தியுள்ளஞ்சிறுமையிற்றீருஞ்செய்கை
யாதெனக்குணர்த்தியின்றென்னின்றுயிர்தியென்றான். (௨)

உணர்த்துவனின்றுநன்றோருபாயத்தினுறுதிமாயை
புணர்த்தவன்சீதைதானேபுணர்வதோர்வினையம்போற்றிக்
கணத்தவன்சனகன்றன்னைக்காட்டினன்கொணர்ந்துகாட்ட
மணத்தொழில்புரியுமன்றேமருத்தனையுருவமாற்றி. (௩)

எனவவனுரைத்தலோடுமெழுந்தமார்பிறுகப்புல்லி
யனையவன்றன்னைக்கொண்டாங்கனுகுதியன்பவென்னாப்
புனைமலர்ச்சாளச்சோலைநோக்கினனெழுந்துபோனான்
வினைகளைக்கற்பின்வென்றவிளக்கினைவெருவல்காண்பான். (௪)

பண்களாற்கிளவிசெய்துபவளத்தாலதரமாக்கிப்
பெண்களானார்க்குநல்லவுறுப்பெலாம்பெருக்கினிட்ட
வெண்களாலளவாமானக்குணந்தொகுத்தியற்றினாளைக்
கண்களாலரக்கன்கண்டானவளையோர்கலக்கங்கண்டான். (௫)

மின்றெளிர்மகுடகோடிவெயிலொளிவிரித்துவீசத்
தன்னிருளிரிந்துதோற்பச்சுடர்மணித்தோளிற்றுன்றும்
பொன்னரிமாலைநீலமலையின்வீழருவிபோர்ப்ப
நன்னெடுங்களிமாலியானைநாணுவநடந்துவந்தான். (௬)

விளக்கொருவிளக்கந்தாங்கிமின்னணியரவிற்சுற்றி
யிளைப்புறுமருங்குநோவமுலைசுமந்தியங்குமென்ன
முளைப்பிறைநெற்றிவானமடந்தையர்முன்னும்பின்னும்
வளைத்தனர்வந்துசூழவந்திகர்வாழ்த்தவந்தான். (௭)

இட்டதோரிரணபீடத்தமரானாயிருக்கைநின்றும்
கட்டதோட்கானஞ்சுற்றக்கழலொன்றுகாலிற்காண
வட்டவெண்கவிகையோங்கச்சாமராமருங்குவீசத்
தொட்டதோர்சுரிகையாளனிருந்தனனினையசொன்னான். (௮)

என்றுதானடியனேனுக்கிரங்குவதிந்துவென்பா
னென்றுதானிரவியோடும்வேற்றுமைதெரிவதென்பா
லென்றுதானனங்கவாளிக்கிலக்கிலாதிருத்தலாவ
தென்றுதானுற்றதெல்லாமியம்புவாயென்டுத்துக்கொண்டான். (௯)

வஞ்சனேனெனக்குநானேமாதரார்வடிவுகொண்ட
நஞ்சுதோயமுதமுன்பானச்சினேனுநந்தேய்ந்து
நெஞ்சநேரானதம்மைநினைப்புவிட்டாவிநீக்க
வஞ்சினேனடியனேனுமடைக்கலமமுதின்வர்நீர். (௧௦)

தோற்பித்தீர்மதிக்குமேனிசுடுவித்தீர்தென்றலூர்த்த
வேர்ப்பித்தீர்வயிரத்தோளைமெலிவித்தீர்வேனில்வேளை
யார்ப்பித்தீரென்னையின்னலறிவித்தீரமாரச்சந்
தீர்ப்பித்தீரின்னமென்னென்செய்வித்துத்தீர்ந்தீரம்மா. (௧௧)

பெண்ணெலாநீரேயாக்கிப்பேரெலாமுமதேயாக்கிக்
கண்ணெலாநுங்களுக்கிக்காமவேளென்னுநாமத்
தண்ணலெய்வானுமாக்கியைங்கணைக்கரியத்தக்க
புண்ணெலாமெனக்கேயாக்கிவிபரிதம்புணர்த்திவிட்டீர். (௧௨)

ஈசனேமுதலினோர்கள்மானிடரிறுதியாகக்
கூசமூன்றுலகுங்காக்குங்கொற்றத்தென்வீரக்கோட்டி
பேசுவாரொருவர்க்காவிதோற்றிலன்பெண்பால்வைத்த
வாசைநோய்கொன்றதென்னுவாண்மைமாசுண்டதன்றே. (௧௩)

நோயிடைநகரவேயுநணங்கினின்றுணங்குமாவி
நாயுயிராகுமன்றேநாள்பலகழித்தகாலைப்
பாயிரமுணர்ந்தநூலோர்காமத்துப்பகுத்தபத்தி
யாயிரமல்லபோனவையிரண்டென்பர்பொய்யே. (௧௪)

அறந்தருஞ்செல்வமன்னீரமுதினுமினியீரென்னைப்
பிறந்திலனுக்கவந்தீர்பேரொழின்மானங்கொல்ல
மறந்தனனென்னைத்தானேவருமெனுமருந்துதன்னு
லிறந்திறந்துய்கின்றேன்யான்யாரிதுதெரியுமிட்டார். (௧௫)

அந்தாமுணரின்மேனுளகலிகையென்பாள்காத
லிந்திரனுரத்தைநல்கியெய்தினளிழுக்குற்றாளோ
மந்திரமில்லைவேறோர்மருந்தில்லைமையனோய்க்குச்
சுந்தரக்குமுதச்செவ்வாயமுதலாலமுதச்சொல்லீர். (௧௬)

என்றுரைத்தெழுந்துசென்றங்கிருபதென்றுரைக்குநீலக்
குன்றுரைத்தாலுநேராக்குவவுத்தோணிலத்தைக்கூட
மின்றிரைத்தருக்கன்றன்னைவிரித்துமுன்னெருத்தபோலு
நின்றிமைக்கின்றதென்னமுடிபடிநெடிதின்வைத்தான். (௧௭)

வல்லியமருங்குகண்டமானெனமறுக்கமுற்று
மெல்லியலாக்கைமுற்றுநடுங்கினள்விம்முகின்றாள்
கொல்லியவரினுமுள்ளகூறுவன்றெரியவென்னாப்
புல்லியகிடந்ததொன்றைநோக்கினாள்புகல்வதானாள். (௧௮)

பழியிதுபாவமென்றுபார்க்கிலைபகரத்தக்க
மொழியிவையல்லவென்பதுணர்கிலைமுறைமைநோக்காய்
ஒழிகிலைநெஞ்சம்வஞ்சக்கிளியொடேயின்றுகாறு
மழிகிலையென்றபோதென்கற்பென்னுமறந்தானென்னும். (௧௯)

வானுளவறத்திற்றோன்றுஞ்சொல்வழிவாழுமண்ணி
லூனுளவுடம்புக்கெல்லாமுயிருளவுணர்வுமுண்டாற்
றானுளபத்துப்பேழ்வாய்தகாதனவுரைக்கத்தக்க
யானுளகேட்கவென்றாலென்சொலாயாதுசெய்யாய். (௨௦)

வாசவன்மலரின்மேலான்மழுவலான்மைந்தன்மற்றக்
கேசவனென்னநின்றதன்மையோர்தன்மைகேளாய்
பூசலினெதிர்ந்தேனென்றாய்போர்க்களம்புக்கபோதென்
னாசையின்கனியைக்கண்ணிற்கண்டிலைபோலுமஞ்சி. (௨௧)

ஊனிலாவாக்கைபேணியுயிர்புகழ்சுடாதன்முன்னே
மானிலாதிருந்தேனல்லேனவையறுகுணங்களென்னும்
பூணெலாம்பொறுத்தமேனிப்புண்ணியமூர்த்திதன்னைக்
காணலாமின்னுமென்னுங்காதலாலிருந்தேன்கண்டாய். (௨௨)

சென்றுசென்றழியுமாவிதிரிக்குமாற்செருவிற்சேமக்
குன்றுநின்றனையதம்பிபுறக்கொடைகாத்துநிற்பக்
கொன்றுநின்றலைகள்சிந்தியரக்கர்தங்குலத்தைமுற்றும்
வென்றுநின்றருளுங்காலங்காணியகிடந்தவேட்கை. (௨௩)

எனக்குயிர்பிறிதுமொன்றுண்டென்றிரோவெனக்குமல்லாற்
றனக்குயிர்வேறின்றுகித்தாமரைக்கண்ணவாகிக்
கனக்கருமேகமொன்றுகார்முகந்தாங்கியார்க்கு
மனக்கினிதாகிநிற்குமஃதன்றிவரம்பிலாதாய். (௨௪)

என்றனளென்றலோடுமெரியுறுகண்ணன்றன்னைக்
கொன்றனமானந்தோன்றக்கூற்றனசீற்றங்கொண்டான்
வென்றெனையிராமனுன்னைமீட்டபினவனோடாவி
யொன்றெனவாழ்திபோலென்றிடியுருமொக்கக்கான். (௨௫)

இனத்துளாருலகத்துள்ளாரிமையவர்முதலினோரொன்
சினத்துளாரியாவர்நேர்ந்தார்தயரதன்சிறுவன்றன்னைப்
புனத்துழாய்மாலையானென்றுவக்கின்றவொருவன்புக்குன்
மனத்துளானெனினுங்கொல்வன்வாழுதிபின்னைமன்னோ. (௨௬)

வலைத்தனமதிலைவேலைவருத்தனவரம்புவாயா
அலைத்தனகுரங்குபல்காலென்றசமுவந்ததுண்டே
விலைத்தநன்மருங்குனங்காயென்னெனநிரெய்தித்தெல்லாம்
விளக்கெதிர்வந்தவிட்டிற்பான்மையேவியக்கவேண்டாம். (௨௭)

கொற்றவாளரக்கர்தம்மையயோத்தியர்குலத்தைமுற்றும்
பற்றினீர்தருதிரன்றேறப்பசுந்தலைகொணர்ந்துபாரித்
ஆற்றதொன்றியற்றுவீரொன்றுந்தினேனுந்தைமேலும்
வெற்றியர்தம்மைச்செல்லச்சொல்லினன்விரைவினென்றான். (௨௮)

என்றவனுரைத்தகாலையென்னையிம்மாயஞ்செய்தாற்
கொன்றுமிங்கரியதில்லையென்பதோர்துணுக்கமுந்த
நின்றுநின்றுயிர்த்தநெஞ்சம்வெதும்பினுணெருப்பைமீளத்
தின்றுதின்றுமிழ்கின்றாரிற்றுயருக்கேசேக்கையானாள். (௨௯)

இத்தலையின்னசெய்தவிதியினுனொன்னையின்று
மத்தலையன்னசெய்யச்சிறியரோவலியரம்மா
பொய்த்தலையுடையதெல்லாந்தருமமேபோலுமென்னுக்
கைத்தனளுள்ளம்வெள்ளக்கண்ணினீர்கரையிலாதாள். (௩0)

ஆயதுகாலத்தாங்கோரரக்கனைச்சனகனுக்கு
வாய்திறந்தரற்றப்பற்றிமகோதரன்கடிதின்வந்தான்
காயெரியனையான்முன்னர்க்காட்டினன்வணங்கக்கண்டா
டாயெரிவீழக்கண்டபார்ப்பெனத்தரிக்கிலாதாள். (௩௧)

கைகளைநெரித்தாள்கண்ணைமோதினாள்கமலக்கால்க
ணெய்யெரிமிதித்தாலென்னநிலத்திடைபதைத்தாணெஞ்ச
மெய்யெனவெரிந்தாளேங்கிவிம்மினாணடுங்கிவீழ்ந்தாள்
பொய்யெனவுணராளன்பாற்புரண்டரும்பூசலிட்டாள். (௩௨)

தெய்வமோவென்றுமெய்ம்மைசிதைந்ததோவென்னுந்திய
வைவனோவுலகையென்னும்வஞ்சமோவலியதென்னு
முய்வனோவின்னமென்றுமொன்றலதுயரமுற்று
டையலோதருமமேயோவாரதன்றன்மைதேர்வார். (௩௩)

எந்தையேயெந்தையேயென்பொருட்டினுனக்குமிக்கோள்
வந்ததேயென்னைப்பெற்றுவாழ்ந்தவாறிதுவோமண்ணோர்
தந்தையேதாயேசெய்ததருமமேதகவேயென்னும்
வெந்துயரென்னுந்தீவீழ்விறகெனவெந்துவீழ்ந்தாள். (௩௪)

இட்டுண்டாயறங்கள்செய்தாயெதிர்த்துளோரிருக்கையெல்லாஞ்
சுட்டுண்டாயுயர்ந்தவேழ்வித்துறையெலாந்துலைவுகண்டாய்
மட்டுண்டார்மனிதர்த்தின்றவஞ்சரால்வயிரத்தோள்கள்
கட்டுண்டாயென்னையானுங்காண்கின்றேன்போலுங்கண்ணால். (௩௫)

என்றனள்பலவும்பன்னியெழுந்துவீழ்ந்திடரிற்றேய்ந்தாள்
பொன்றினள்போலுமென்னப்பொறையழிந்துயிர்ப்புப்போவாள்
மின்றனிநிலத்துவீழ்ந்துபுரள்கின்றதனையமெய்யா
ளன்றிலம்பெடையேபோலவாய்திறந்தரற்றலுற்றாள். (௩௬)

பிறையுடைநுதலார்க்கேற்றபிறந்தவிக்கடன்கள்செய்ய
விறையுடையிருக்கைமுனமொன்றும்வந்திறுத்தலாதேர்
சிறையிடைக்கானகிருஞ்சிறையொடுஞ்சேர்ந்தவாறே
மறையுடைவாம்புகேள்காவழிவந்தமன்னர்கோ. (௩௭)

வன்சிறைப்பறவையூரும்வானவன்வரம்பின்மாயப்
புன்சிறைப்பிறவிதீர்ப்பானனெனப்புலவர்நின்று
றென்சிறைதீர்க்குவானைக்காண்கிலேனென்னில்வந்த
வுன்சிறைவிடுக்கவல்லாரியாருளருலகத்துள்ளார். (௩௮)

பண்பெற்றோரொடுகூடாப்பகைபெற்றுப்பழிபாய
விண்பெற்றுவெளியானன்றல்வேந்தாயுயர்ந்தமேலோ
ரொண்பெற்றுப்பழியும்பெற்றாயிதுநின்றுற்பெற்றதன்றுற்
பெண்பெற்றாயதனாற்பெற்றாயாரின்னபேறுபெற்றார். (௩௯)

சுற்றுண்டபாசநாஞ்சிற்சமையொடுஞ்சூடுண்டாற்ற
வெற்றுண்டுமென்றுநீங்காவிழுசிறுகுண்டையென்னப்
பற்றுண்டநாளேமாளாப்பாவியேனும்மையெல்லாம்
விற்றுண்டேனெனக்குமீளும்விதியுண்டோநரகில்வீழ்ந்தால். (௪௦)

இருந்ததான்பகையையெல்லாமிறுகண்டளவிலின்பம்
பொருந்தினேனல்லேனெங்கோன்றிருவடிபுனைந்தேனல்லேன்
வருந்தினேனெடுநாளும்மைவழியொடுமுடித்தேன்வாயா
லருந்தினேனயோத்திவந்தவரசர்தம்புகலழயம்மா. (௪௧)

கொல்லெனக்கணவற்காங்கோர்நெடும்பகைகொடுத்தேனெந்தை
கல்லெனத்திரண்டதோளைப்பாசத்தாற்கட்டக்கண்டே
வில்லெனச்சிறந்தநின்றவிரண்டுக்குமின்னல்சூழ்ந்தே
னல்லனோவெளியனோயானளியத்தேனிறக்கலாதேன். (௪௨)

இனையதுவேள்விமேனாளியற்றிநின்றெடுத்தவெந்தை
பணியுறுதிரடோளார்த்துப்பூழியிற்புரளக்கண்டேன்
மணவினைமுடித்தென்கையைமந்திரமரபிற்றொட்ட
கணவனையினையகண்டாலல்லதுகழிகின்றேனோ. (௪௩)

அன்னையேயையமீரோயாருயிர்த்தங்கைமீரோ
யென்னையின்றெடுத்தவெந்தைக்கெய்தியதியாதுமொன்று
முன்னம்நீருணர்ந்திலீரோவுமக்கும்வேறுற்றதுண்டோ
துன்னருநெறியின்வந்துதொடர்ந்திலீர்துஞ்சினீரோ. (௪௪)

மேருவிற்கும்பர்சேர்ந்தவிண்ணினைமீக்கொண்டாலும்
நீருடைக்காவன்முறையொய்தலாநெறியிற்றன்றாற்
போரிடைக்கண்டாரோனும்வஞ்சனைபுணர்த்தாரோனு
மாருமக்கதியப்பாலாருமனுமுளரேதம்பால். (௪௫)

சாதமற்றிவனைத்தந்தார்தவம்புரியாற்றல்சான்ற
பாதனைக்கொணர்தற்கேனுமையுறவில்லைப்பன்னுள்
வாதனும்வாழ்க்தானல்லன்றம்பியுமனையவாமான்
விரதமுற்றறத்தினின்றுற்றுவகொலாம்விளைவமென்மேல. (சுக)

அடைத்ததகடலைமேல்வந்தடைந்ததமதில்யாவி
துடைத்ததுபகையைச்சேனையெனச்சிலர்சொல்லச்சொல்லப்
படைத்ததோருவகைதன்னைவேறுருவினையம்பண்ணி
யுடைத்ததுவிதியேயென்றென்றுனைத்தனனுணர்வுதீர்வாள். (சஎ)

ஏங்குவாளினையபன்னவிமையவரோற்றமெல்லாம்
வாங்குவாளாக்கனுற்றமனமகிழ்ந்தினிதிறைக்கித்
தாங்குவாளல்லடுன்பமிவனையுந்தாங்கித்தாறு
மோங்குவானென்னவுன்னியினையனவுரைக்கலுற்றான். (சஅ)

காரிகையின்னையெய்துங்காதலாற்கருதலாகாப்
பேரிடரியற்றலுற்றேன்பிழையதுபொறுத்தியின்னும்
வேரறமிதிலையோனைவிளிகிலேன்விளிந்தபோது
மாருயிரிவனையுண்ணேனஞ்சலையன்னமன்னாய். (சகூ)

இமையவருலகமேதானிவ்வுலகேமுமேதா
னமைவரும்புவனமூன்றிலென்னுடையாட்சியேதான்
சமைவுறத்தருவன்பற்றித்தாரணிமன்னற்கின்னற்
சுமையுடைக்காமவெந்நோய்துடைத்தியேற்றெழுதுவாழ்வேன். (ருo)

இலங்கையூரிவனுக்கீய்ந்துவேறிடத்திருந்துவாழ்வே
னலங்கிளர்நிதியமூன்றுநல்குவனுமத்தெய்வப்
பொலங்கிளர்விமானந்தானேபொருவுறக்கொடுப்பன்புத்தேள்
வலங்கிளர்வாழ்வும்வேண்டில்வழங்குவனியாதுமாற்றேன். (ருக)

இந்திரன்கவித்தமௌலியிமையவரிறைஞ்சியேற்ற
மந்திரமரபிற்சூட்டிவானவர்மகளிரியாரும்
பந்தரினுரிமைசெய்யயானிவன்பணியினிற்பன்
சுந்தரப்பவளவாயோருன்மொழிசிறிதுசொல்லில். (ருஉ)

எந்தைதன்றந்தைதாதையிவ்வுலகின்றானென்முன்
வந்தவன்றானேவிட்டவரமெலாம்வழங்கிமற்றை
யந்தமிலடியார்செய்கையாற்றுவனமுதின்வந்த
செந்திருநீல்லீரேலவளும்வந்தேவல்செய்யும். (ருா)

தேவரோமுதலினோர்களதிருஞ்சீரியோர்கள்
யாவரும்வந்துறுந்தையடிதொழுதேவல்செய்யப்
பாவைநீயிதனில்வந்தபயன்பழுதாவதன்றால்
மூவுலகாளுஞ்செல்வங்கொடுத்ததுமுடித்தியென்றான். (ருச)

இத்திருப்பெறுகிற்பாருமின்றோவிலங்கைநங்கள்
பொய்த்திருப்பெறுகிற்பாரும்வீடணன்புலவர்கோமான்
கைத்திருச்சாங்கனுன்றன்மார்பிடைக்கலக்கற்பால
மைத்திருநிறத்தான்றானென்றலைமிசைவைக்கற்பால. (௫௫)

கருவனநின்றேனுடையநாயகனுமவாளி
புருவனபோழ்ந்துன்மார்பிற்றிறந்தனபுண்களெல்லாந்
தருவனவினையசொல்லத்தக்கனசாபநாணி
னுருவனமலைகளென்னப்பிறப்பனவொலிகளம்மா. (௫௬)

சொல்லுவமநாமாற்றந்தண்டத்தாலுண்டுன்கண்ணைக்
கல்லுவகாகம்வந்துகலப்பனகமலக்கண்ணன்
வில்லுமிழ்பகழிமின்னர்விலங்கெழிலலங்கன்மார்பம்
புல்லுவகளிப்புக்கூர்ந்துபுலவுநாறலகையெல்லாம். (௫௭)

விரும்பினான்கேட்பதுண்டாலின்றுழைவார்த்தைவீர
விரும்பியல்வயிரவாளியிடறிடவெயிற்றுப்பேழ்வாய்ப்
பெரும்பெயர்த்தலைகள்சிந்திப்பிழைப்பிலமுடிந்தாயென்ன
வரும்பியல்சாளப்பைந்தாரனுமன்வந்தழைத்தவந்நாள். (௫௮)

புன்மகற்கேட்டிகேட்டாற்குரியனபுகுந்தபோரி
னுன்மகனுயிரையெம்மோய்சுமித்திரையுய்யவின்ற
நன்மகன்வாளிகக்கநாயவனுடலைநக்க
வென்மகனிறந்தானென்னநீயெடுத்தாற்றவென்றாள். (௫௯)

வெய்யவனனையகேளாவெயிலுகவிழித்துவீரக்
கையலபிசைந்துபேழ்வாயெயிறுபுக்கழுந்தக்கவ்வித்
தையன்மேலோடலோடுமகோதரன்றடுத்தானின்ற
மொய்கழற்றாதைவேண்டவிசையுநீமுனியலென்றான். (௬0)

என்றவன்விலக்கமீண்டானுசனத்திருக்கவாவி
பொன்றினனுருமென்னத்தரையிடைக்கிடந்தபொய்யோ
னின்றிதுநோயென்னினென்னையென்குலத்தினோடுங்
கொன்றனையாதியென்றுவினையனகூறலுற்றான். (௬௧)

பூவின்மேலிருந்ததெய்வத்தையலும்பொறுமையுற்றாள்
பாவியான்பயந்தநங்கைநின்பொருட்டாகப்பட்டே
னாவிபோயழியான்றேயமார்க்குமரசனுவான்
றேவியாயிருத்திதேசிறையிடைத்தேம்புகின்றாய். (௬௨)

அவ்வுரைகேட்டநங்கைசெவிகளையமையப்பொத்தி
வெவ்வுயிர்த்தாவிதள்ளிவிங்கினள்வெகுளிபொங்கி
யிவ்வுரையெந்தைகூறுனின்னுயிர்வாட்கைபேணிச்
செவ்வுரையன்றிதென்றுச்சீறினளுளையச்செப்பும். (௬௩)

என்னையென்றலத்திறேறுமின்றுயிர்தாங்கியாண்டும்
நன்னெடுஞ்செல்வந்துய்ப்பேருக்கினைநல்கினாரு
முன்னைவெஞ்சிறையிலிக்கியின்பத்துருய்ப்பரென்றுப்
பொன்னடியருகுவீழ்ந்தாலுருமுகப்பொருமுகின்றான். (௬௩)

அறங்கெடவழக்குநீக்கவாசர்தமாயிற்கான்ற
மறங்கெடமெய்மைதேயவசைவரமறைகளோதுந்
திறங்கெடவொழுக்கங்குன்றத்தேவரும்பேணத்தக்க
நிறங்கெடவினையசொன்னாய்சனகன்கொணினையினையா. (௬௪)

வழிகெடவரினுந்தத்தம்வாட்கைசெய்ந்திறிறுமார்பய்
கிழிபடவயில்வேல்வந்துகிழிப்பினுஞ்சான்றோர்கேட்கு
மொழிகொடுவாழ்வதல்லான்முறைகெடப்புறநின்றார்க்கும்
பழிபடவாழ்கிற்பாரும்பார்த்திபருளரோபாவம். (௬௫)

நீயுநின்கிளையுமற்றிர்நெடுநிலவளைப்புநேரோ
மாயினுமுறைமைகுன்றவாழ்வனோவயிரத்திண்டோ
ளாயிரநாமத்தாழிபரியினுக்கடிமைசெய்வே
னுயிரைநோக்குவேனோநாண்டுறந்தாவிநச்சி. (௬௬)

வரிசிலையொருவனல்லான்மைந்தரொன்மருங்குவந்தா
ரெரியிடைவீழ்ந்தவிட்டிலல்லவோவரசுக்கேற்ற
வரியொடும்வாழ்ந்தபேடையங்கணத்தழுக்குத்தின்னும்
நரியொடும்வாழ்வதுண்டோநாயினுங்கடைப்பட்டோனே. (௬௭)

அல்லையேயெந்தையானுயாகத்தானலங்கல்வீரன்
வில்லையேவாழ்த்திமீட்கின்மீளுதுமீட்சியென்ப
தில்லையேலிறந்துதீர்துமிதுவலாலியம்பலாகாச்
சொல்லையேயுரைத்தாயென்னும்பழிகொண்டாயென்னச்சொன்னாள்.

வன்றிறலரக்கனன்னவாசகமனத்துக்கொள்ளா
நின்றதுநிற்கமண்மேனிகழ்ந்தவாநிகழ்கநின்மு
னின்றவனல்லன்போலாஞ்சனகனிக்கணத்தினின்முன்
கொன்றுயிர்குடிப்பனென்றுச்சுரிகைவாளுருவிக்கொண்டான். (௬௯)

என்னையுங்கொல்லாயின்னேயிவனையுங்கொல்லாயின்று
முன்னையுங்கொல்லாய்மற்றிவ்வுலகையுங்கொல்லாயானே
மின்னுயிர்நீங்கியென்றுங்கெடாப்புகழெய்துகின்றேன்
பின்னையுமெங்கோனம்பிற்கிளையொடும்பிழையாயென்றாள். (௭௦)

இரந்தனன்வேண்டிற்றல்லாலிவன்பிழையிழைத்ததுண்டோ
புரந்தரன்செல்வத்தையாகொல்கையோர்பொருளிற்றோதான்
பரந்தவெம்பகையைவென்றுநின்வழிபடருநங்கை
யரந்தையளாகுமன்றேதந்தையைநினைவதானல். (௭௧)

என்றவன்விலக்கமீண்டாண்டிருந்ததோரிருதியின்கட்
குன்றெனநீண்டகும்பகருணனையிராமன்கொல்ல

வன்றிறற்றாங்கின்றனைவாறுறவார்த்தவோதை
சென்றனசெவியினூடுதேவர்களார்ப்புஞ்செல்ல. (எ௨)

உருத்திறலமரர்காணும்வானரவோதத்தோரு
மிருந்திறம்பிளில்லாவிருவர்கடொளியும்விஞ்சத்
தருக்கிறவினைத்தேனம்பிக்கமரிடைத்தனிமைப்பாடு
புருத்தனனன்டென்றுள்ளம்பொருமல்வந்துற்றபோழ்தின். (எ௩)

புறந்தருசேனைமுன்னாிருந்திறைபோக்கிப்போதப்
பறந்தனமேயதர்செவிமருங்கெய்திப்பையத்
திறந்திறமாவின்றகவிப்பெருங்கடலைச்சிந்தி
பிறந்தனனும்பியம்பிற்கொன்றனனிராமனென்றார். (எ௪)

ஊரொடும்பொருந்தித்தோன்றமொனியவனென்னவொண்பொற்
றேரொடும்புனைந்தமௌலிதனையொடும்பொருந்தத்தள்ளப்
பாரொடும்பொருந்தின்றமராமரம்பலவுகளோடும்
வேரொடும்பறிந்துமண்மேல்வீழ்வதேபோலவீழ்ந்தான். (எ௫)

பிறிவெனும்பிணைதாங்கள்பிறந்தநாட்டொடங்கியென்று
முறுவதொன்றின்றியாவியொன்றெனவினைந்துநின்று
னெறிவருமரிற்றம்பிதன்பொருட்டிறந்தானென்ன
வறிவழிந்தவசனுகியாற்றினனண்டமுற்ற. (எ௬)

வேறு. தம்பியோவானவனாந்தமனாயின்காடுறைக்குந்
தம்பியோகான்முகத்தோன்செய்மதலைதோன்றலோ
நம்பியோவித்திரனையாமப்பொறிதுடைத்த
வெம்பியோயானுனைவிவ்வுரையுங்கேட்டேனே. (எஎ)

மின்விலையவேலோனேயானுன்விழிகாணே
னின்விலையாதென்றேனுயிர்பேணிநிற்கின்றே
னன்விலைமையிடுற்றதோடைக்கனிவுந்திப்
பொன்றுகைமீளப்புகாரோபுரந்தரனார். (எ௮)

வன்னெஞ்சனென்னைநீக்கிப்போய்வானடைந்தா
லின்னஞ்சிலரோடொருவயிற்றினியார்பிறப்பார்
மின்னஞ்சம்வேலோய்விழிபஞ்சவாழ்கின்றார்
தன்னெஞ்சத்தாமேதடவாரோதானவர்கள். (எ௯)

கல்லன்றோநீராடுங்காலத்தாட்காறேய்க்கு
மல்லொன்றுதோளாய்வடமேருமாலிடவன்
வில்லொன்றுதீங்கினைவிளைவித்தனனென்றுஞ்
சொல்லன்றோவென்னைச்சுடுகின்றதுதோன்றல். (௮0)

மாண்டனவாற்றுலமுஞ்சக்கரமும்வச்சிரமுந்
தீண்டினவாவொன்றுஞ்செயலற்றவாதெறித்து
மீண்டனவாமானிடவன்மெல்லம்புமெய்யுருவ
நீண்டனவாற்றாமின்னவின்றாரந்தோவேக்கி. (௮௧)

நோக்கறவுமெம்பியர்கண்மாளவுநொய்திலங்கை
போக்கறவுமாதுலனார்பொன்றவுமென்பின்பிறந்தாள்
மூக்கறவும்வாழ்ந்தேனொருத்திமுலைக்கிடந்த
வேக்கறவாலின்னமிரேனேனுவனையிழந்தும். (௮௨)

தன்னைத்தான்றம்பியைத்தான்றுணைத்தலைவனைத்தான்
மன்னைத்தான்மைந்தனைத்தான்மாருதத்தின்காதலைத்தான்
பின்னைக்கரடிக்கிறையைத்தான்பேர்மாயத்தா
லென்னத்தான்கேட்டிலேனென்றுனவாரிதுவோ. (௮௩)

ஏழைமகளிரடிவருடவீர்ந்தென்றல்.
வாழுமணியரங்கிற்பூம்பள்ளிவைகுவாய்
சூழுமலகைத்துணங்கைப்பறைதுவைப்ப
பூழியணைமேற்றுயின்றனையோபோர்க்களத்தே. (௮௪)

செந்தேன்பருகித்திசைதிசையுநீவாழ
வுய்ந்தேனினியின்றுநானுமுனக்காவி
தந்தேன்பிரியேன்றனிபோகத்தாட்கிலேன்
வந்தேன்றடாரமதக்களிறேவந்தேனே. (௮௫)

அண்டத்தளவுமினையபகர்ந்தழைத்துப்
பண்டைத்தன்னாமத்தின்காரணத்தைப்பாவித்தான்
றொண்டைக்கனிவாய்துடிப்பமயிர்பொடிப்பக்
கெண்டைத்தடங்கண்ணாளுள்ளேகினுகினுத்தாள். (௮௬)

வீங்கினாள்கொங்கைமெலிந்தமெலிவகல
வோங்கினாளுள்ளமுவந்தாளுயிர்புகுந்தா
ளங்கிலாக்கற்பிற்றிருமடந்தைசெங்கமலப்
பாங்கினாளுற்றதனையாரோபகர்கிற்பார். (௮௭)

கண்டாள்கருணைத்தன்கண்கடந்ததோளானைக்
கொண்டாளொருதனுக்கமன்னவனைக்கொற்றவனார்
தண்டாதவாளிதடிந்ததனிவார்த்தை
யுண்டாளுடறடித்தாள்வேறொருத்தியொக்கின்றாள். (௮௮)

தாவரியபேருலகத்தெம்பிசவத்தோடும்
யாவரையுங்கொன்றடுக்கியென்றும்பிறவாத
மூவரையுமேலைநாண்மூவாமருந்துண்ட
தேவரையும்வைப்பன்சிறையென்னச்சீறினான். (௮௯)

அக்கணத்துமந்திரியராற்றச்சிறிதாறி
யிக்கணத்துமானிடவீரக்குருதியால்
முக்கைப்புனலுகுப்பனெம்பிக்கெனமுனியாக
திக்கனைத்தும்போர்கடந்தான்போயினான்றீவிழியான். (௯0)

கூறேமினிராமற்கும்பகருணனார்
பாருடுவெங்களத்துப்பட்டானெனப்பதையா
வேறோர்சிறையிவனைவயின்விரைத்தென்ன
மாறோர்திசைநோக்கிப்போனார்மனோகரனார். (கக)

வேறு.

வரிசடைநறுமலர்வண்டுபாடிலாத்
துரிசடைபுரிகுழல்சும்மைசுற்றிய
வொருசடையுடையவட்குடையவன்பிறு
டிரிசடைதெருட்டுவாளினையசெப்புவாள். (கஉ)

உந்தையென்றனக்கெதிருருவமாற்றியே
வந்தவன்மருத்தனென்றனனோர்மாயையா
னந்தமில்கொடுந்தொழிலரக்கனுமெனச்
சிந்தையிற்றுணர்ந்தினளமுதின்செம்மையாள். (கங)

நங்கையுமவனுணாளுந்தேறுவாள்
சங்கையுமின்னலுந்துயருந்தன்னிறு
விங்குமின்றேறியவிலங்கைகாவல
னங்குநின்றியற்றியதறைகுவாமரோ. (கச)

மாயாசனகப்படலம்-முற்றிற்று.
ஆ. திருவிருத்தம்-கஙகஎ.
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

கஎ-வது—அதிகாயன்வதைப்படலம்.

கொழுந்துவிட்டழன்றெரிமடங்கல்கூட்டற
வெழுந்தெரிவெகுளியானிருமருங்கினுந்
தொழுந்தகையமைச்சனாச்சுளிந்துநோக்குறு
மொழிந்தனவிடியொடுமுகிலுஞ்சிந்தவே. (க)

ஒருதிறம்முகத்தெவருமென்றுடை
யோகவெஞ்சேனையுமுதலவும்முடைச்
சாகரத்தானையுந்தழுவச்சார்ந்தவர்
வேகவெஞ்சிலைத்தொழில்விலக்கிவீடினால். (உ)

எடுத்தவரிருந்தழியெய்தியானையும்
படுத்திவண்மீள்தமென்றுரைத்தபண்பினீர்
தடுத்திலீரெம்பியைத்தாங்குகிற்றிலீர்
கொடுத்திலீரும்முயிர்வீரக்கோட்டியீர். (ங)

உம்மையினின்றுநாலுலகமுன்றுமென்
வெம்மையினுண்டதுநீரொன்வென்றியா
லிம்மையினெடுந்திருவெய்தினீரினிச்
செம்மையினின்றுயிர்தீர்ந்துநீர்திரால். (ச)

அற்றலமென்றிரோலென்னின்யானவர்
தோற்றலம்வந்தகத்தரந்தொன்னெடுங்
கூற்றலதுயிரருடிக்குங்கூர்த்தவென்
வேற்றலைமானிடர்வெரினிற்கொண்பஞல். (௫)

அல்லதுமுண்டுமக்குரைப்பதாமமர்
வெல்லுதமென்றிரோன்மேற்செல்கிரினி
வல்லதமடிதலேயென்னின்மாறுதிர்
சொல்லுறுங்கருத்தெனமுனிந்துசொல்லினுன். (௬)

வேறு.

நதிகாய்நெடுமானமுநாணுமுரு
மதிகாய்குடைமன்னனைவைதுணாயர்
விதிகாயினும்வீரம்வெலற்கரியா
னதிகாயனெனும்பெயரானறைவான். (௭)

வானஞ்சுகவையகமஞ்சுகமா
முனஞ்சுமுகத்தவனஞ்சுகமே
னனஞ்சினனென்றுனைநாணுகபோர்
யானஞ்சினனென்றுமியம்புமதோ. (௮)

வெம்மைப்பொருதானவர்மேல்வலியோர்
தம்மைத்தனையிற்கொடுதந்திலனே
யும்மைக்குலையப்பொருமும்பரையுங்
கொம்மைக்குயவட்டனைகொண்டிலனோ. (௯)

காய்ப்புண்டநெடும்படைகையுளதாய்த்
தேய்ப்புண்டவனுஞ்சிலசில்கணையா
லாய்ப்புண்டவனும்மவர்சொல்வலதா
லேய்ப்புண்டவனும்மெனவெண்ணினையோ. (௧௦)

உம்பிக்குயிரீறுசெய்தானொருவன்
றம்பிக்குயிரீறுசமைத்தவனைக்
கம்பிப்பதோர்வன்றுயர்கண்டிலனே
னம்பிக்கொருநன்மகனேவினிநான். (௧௧)

கிட்டிப்பொருதக்கிளர்சேனையெலா
மட்டித்துயர்வானரர்வன்றலையை
வெட்டித்தரையிட்டிருவில்லினைாக்
கட்டித்தருவன்னிதுகாணுதியால். (௧௨)

சேனைக்கடலோடிடைசெல்கெனினும்
யானிப்பொழுதேதனியேகெனினுந்
தானொத்ததுசொல்லுதிதாவிடையென்
முனிந்திறமுன்னியரக்கர்பிரான். (௧௩)

சொன்றாவிறான்றுறணிந்தனைநீ
யன்றுறுயிர்தந்தனையாமெனில்யான்
பின்றாவிராமனெனும்பெயரன்
றன்றுருயிர்கொண்டுசமைக்குவனால். (௧௪)

போவாயிறுபோதுபொலங்கழலோய்
மூவாயிரகோடியரேமுரட்
காவார்கரிதேர்பரிகாவலினின்
றேவாதனயாவையுமேவினறால். (௧௫)

கும்பக்கொடியோனுங்கும்பனும்வே
றம்பொற்கழல்வீரனகம்பனுமுன்
செம்பொற்பொலிதோயல்செல்குவரா
லும்பர்க்கும்வெலற்கரியாருரவோர். (௧௬)

ஓரோருசிவற்குளதொப்புளவாம்
வாரோருவயப்பரியாயிரம்வன்
போரோரிடவேறுவபூணுறுதிண்
டேரோறுமிதந்தனன்வெற்றிறலோய். (௧௭)

ஆமத்தனைமாவுடையத்தனைதேர்
சேமத்தனபின்புடைசெல்லவடுங்
கோமத்தநெடுங்கரிகோடியொடும்
போமத்தனைவெம்புரவிக்கடலீர். (௧௮)

என்றேவிடைநல்கவிறைஞ்சியெழா
வன்றுன்வயிரச்சிலைகைக்கொடுவாள்
பொன்றுழ்கவசம்புகுதாமுகிலி
னின்றுனிமையோர்கணெளித்தனரால். (௧௯)

பல்வேறுபடைக்கலம்வெம்பகலோ
னெல்வேறுதெரிப்பகொடேகினறுற்
சொல்வேறுதெழிக்குனர்சுற்றவுமா
வில்லேறுதெரிப்புறுமேனியினான். (௨௦)

இழையஞ்சனமால்களிறெண்ணிலரி
முழையஞ்சமுழங்கினமும்முறைநீ
ருழையஞ்சமுழங்கினநாணொலிகோண்
மழையஞ்சமுழங்கினமாமுரசே. (௨௧)

ஆர்த்தார்நெடுவானநடுங்கவடிப்
பேர்த்தார்நிலமாமகள்பேர்வதெனத்
தார்த்தார்நெடுவேலைகடேளியினால்
வேர்த்தாரதகண்டுவிசும்புறைவோர். (௨௨)

அடியோடுமதக்களியானைகளிற்
பிடியோடுமிகர்த்தனபின்புறமுன்
றடியோடுதொடக்கியதாரையவெண்
கொடியோடுதொடக்கியகொண்மூவெலாம். (உ௩)

தாமூடினமால்கரியின்புடைதாழ்
மாமூடினமாமதமண்டுதலா
லாமூடினபாய்பரியானைகளுஞ்
சேமூடினசேணெறிசென்றவெலாம். (உ௪)

தேர்சென்றனசெங்கதிரோனொடுதே
ரூர்சென்றனபோலொளியோடைகளின்
கார்சென்றனகார்நிறைசென்றனபோற்
பார்சென்றனசென்றிலபாய்பரியே. (உ௫)

மேரத்தனைவெற்பினமொய்த்துநெடும்
பாரிற்செலுமாறுபடப்படருந்
தேர்சுற்றிடவேகொடுசென்றுமுரட்
போர்முற்றுகளத்திடைபுக்கனரால். (உ௬)

கண்டானவிராமனெனுங்களிமா
வுண்டாடியவெங்களனூடுருவப்
புண்டானுறுநெஞ்சுபுழுக்கமுறத்
திண்டாடினன்வந்தசினத்திறலோன். (உ௭)

மலைகண்டனபோல்வருதோளொடுதோள்
கலைகண்டகருங்கடல்கண்டுளவாம்
நிலைகண்டனகண்டொருதாதைநெடுந்
தலைகண்டிலனின்றுசலித்தனனால். (உ௮)

மிடலொன்றுசரத்தொடுமீதுயர்வான்
றிடலன்றுதிசைக்களிறன்றொருதிண்
கடலன்றிதெனெந்தைகடக்கரியா
னுடலென்றுயிரோடுமுகுத்தனனால். (உ௯)

எல்லையிவைகாணியவெய்தினனே
வல்லையுளராயினமானிடரைக்
கொல்லேனொருநாளுயிர்கோணெறியிற்
செல்லேனெனினிவ்விடர்தீர்குவனே. (௩0)

என்றுமுனியாவிதிழைத்துளவன்
பின்னுனையுமிப்படிசெய்துபெயர்ந்
தன்னுனிடர்கண்டிடராறுவனென்
றன்றுவொருவற்கிதுணர்த்தினனால். (௩௧)

வாரிமமிடன்றெருவல்லிசையிற்
போரியலிலக்குவனிற்புகல்வாய்
ஈரிருவிற்றனனன்னினுல்
மேனியிருணர்க்குவிளம்பிடுவாய். (௩௨)

அந்தாரினவத்தவர்வெய்தியமூந்
தந்தாரைதமனத்திடர்தள்ளிடுவா
னந்தார்துயரோடுமுருத்தெரிவான்
வந்தானெனமுன்சொல்வழங்குதியால். (௩௩)

கோளுற்றவனெஞ்சுடைக்குழைவா
ளுற்றவிருக்கையில்யாவெருதன்
ஞானற்றுருளக்கணைதள்ளிடுவான்
ருற்றதுமுண்டதுசொல்லுதியால். (௩௪)

நிதென்றதுநிந்தனைசெய்திலனு
வீதென்றுமன்னெறியாமெனநீ
அதென்றிகழாதனசொல்வதலாற்
போதென்றுடனேகொடுபோதுதியால். (௩௫)

செருவாசையினுர்புகடேடுறுவா
திருவோரையுநீவலிவுற்றெதிரோ
பொருவோர்மனுர்பதிபுக்குறைவோர்
வருவோரையெலாம்வருகென்றுதியால். (௩௬)

வெந்தாகுலமெத்தைதிருத்திடுவான்
வந்தானெனவென்னெதிரேமதியோய்
தந்தாயெனின்யானலதியார்தருவா
ருந்தாரியவல்லவுயர்தவெலாம். (௩௭)

வேறேபயிலக்குவனென்னவிளம்
பேறேவருமேலினமையோரெதிரே
கூறேபலசெய்துயிர்கொண்டினிய
மாறேயொருமன்னெனவைக்குவனால். (௩௮)

வின்றூடியர்விஞ்சையரஞ்சொலினுர்
பென்றூமுதன்னவர்பெய்தெவரு
முன்றூதனகூர்நறவுண்டதசும்
பென்றுயிரமாயிறுமீகுவனால். (௩௯)

உறைதந்தனசெங்கதிரோனுருவிற்
பொறைதந்தனகாசொளிர்பூணிலமையோர்
நிறைதந்தனதெய்வநிதிக்கிழவன்
முறைதந்தனதந்துமுடிக்குவனால். (௪௦)

மாருமதவாரியவண்டினொடும்
பாருடுமுகத்தனபல்பகலுந்
தேருதனசெங்களிவெங்கதமா
நூருயிரமாயிறுநந்துவனால். (௬௩)

செம்பொன்னினமைந்துசமைந்தனதே
ரும்பர்நெடுவானினுமொப்புறமாப்
பம்பும்மணிதாரணிபாய்பரிமா
விம்பர்நடவாதனவீருவனால். (௬௪)

விதியின்விளைகுப்பைநிறைந்தனவும்
பொதியின்மிளிர்காசுபொறுத்தனவும்
மதியின்னொளிர்தூசுவகுத்தனவு
மதிகஞ்சுகமாயிரமீருவனால். (௬௫)

மற்றும்பொருதீதின்மணிக்கணித
முற்றுன்னினேவியாவையுமுந்துவனாற்
பொற்றின்கழலாய்நனிபோவெனலோ
டெற்றுந்திரடோளவனேகினனால். (௬௬)

ஏகித்தனிசென்றெதிரெய்தலுறுங்
காகுத்தனையெய்தியகாலையின்வாய்
வேகத்தொடுவீரர்விசைத்தெழலு
மோகைப்பொருளுண்டெனவோதினனால். (௬௭)

போதம்முதல்வாய்மொழியேபுகல்வோ
னேதும்மதியான்வறிதேகினனாற்
றூதன்னவனைச்சுளியன்மினெனு
வேதம்முதனுதன்விலக்கினனால். (௬௮)

என்வந்தகுறிப்பதியம்பெனலு
மின்வந்தவெயிற்றவன்வில்வலவுன்
பின்வந்தவனேயதிபெற்றியதான்
மன்வந்தகருத்தெனமன்னர்பிரான். (௬௯)

சொல்லாயதுசொல்லிடுசொல்லிடெனு
வில்லாளனிளங்கிளையோன்வினவப்
பல்லாயிரகோடிபடைக்கடன்மு
னில்லாயெனநின்றுநிகழ்த்தினனால். (௭௦)

உன்மேலதிகாயனுருத்துளனாய்
நன்மேருவினின்றனனாடியவன்
றன்மேலெதிரும்வலிதக்குளையேற்
பொன்மேனியவென்னொடுபோதுதியால். (௭௧)

சையப்படிவத்தொருதந்தையைமுன்
மெய்யெப்படிசெய்தனனும்முன்வினை
தையப்படலப்படியிப்படியிற்
செய்யப்படுமெற்றிதெரிந்தனனால். (௫௦)

கொன்றொன்றுழியக்கொலைகோளரியா
நின்றொன்றுநின்றதெனேடியெனிற்
றன்றுந்தைபடுந்துயர்தந்தையைமுன்
வென்றானையியற்றுமவேட்கையினால். (௫௧)

வானோர்களுமண்ணினுளோர்களுமற்
றேனோர்களுமிவ்வுரைகேண்மினிவன்
றானேபொருவானயலேதமர்வந்
தாருருமுடன்பொருவானமைவான். (௫௨)

என்றேயுலகேழினொடேழினையுந்
தன்றாமரைபோலிருதாளளவா
நின்றுரைசெய்யபிசாசரும்
பின்றவுரையொன்றுபிதற்றினனால். (௫௩)

எழுவாயினியென்றுடனென்றெரியும்
மழுவாய்நிகர்வெஞ்சொல்வழங்குதலுந்
தழுவாவுடனேகுதிதாழலெனத்
தொழுவார்தொழுதாளரிசொல்லுதலும். (௫௪)

எல்லாமுடனெய்தியபின்னிவனே
யில்லாதொருபோர்செயவேணுமெனா
நல்லாறுடைவிடலைநாரணன்முன்
சொல்லாடினனன்னவைசொல்லுறுமால். (௫௫)

வாரோருகழற்சினவாளரியெம்
போரோடொருபோர்புரிவானமையாத்
தேரோருசினக்கடுவெந்தருகட்
காரோரெனவந்தகதத்தொழிலோன். (௫௬)

ஓவாநெடுமாதவமொன்றுடையான்
தேவாசுராதியர்செய்செருவிற்
சாவாவிறையுஞ்சலியாவலியான்
மூவாமுதனான்முகனார்மொழியால். (௫௭)

கடமேய்கயிலைக்கிரிகன்றுதலோ
டிடமேறவெடுத்தனனென்றிவனைத்
திடமேவுலகிற்பலதேவரொடும்
வடமேருவெடுக்கவளர்த்தனனால். (௫௮)

மாலாரொடுமெந்தாமாசனமும்
மேலாகியதேவரும்வேணுமென
வாலாலமுமாரமுதும்மமையக்
காலானெடுவேலைகலக்கிடுமால். (௫௯)

ஊழிக்குமுயர்ந்தொருநாளொருவாய்ப்
பாழித்திசைநின்றுசுமந்தபணைச்
சூழிக்கரிதள்ளுதகேள்வலியோ
வாழிக்கிரிதள்ளுமொராங்கையினால். (௬0)

காலங்கள்கணக்கிலகண்ணிமையா
வாலங்கொண்மிடற்றவாரழல்வாய்
வேலங்கொழியக்கொடுவிட்டவனீள்
சூலங்கொலெனப்பகர்சொல்லுடையான். (௬௧)

பகையாடியவானவர்பல்வகையூர்
புகையாடியநாள்புனைவாகையினான்
மிகையாருயிருண்ணெனவீசியவெந்
தகையாழிதகைந்ததனுத்தொழிலான். (௬௨)

உயிரொப்புறுபல்படையுள்ளவெலாஞ்
செயிரொப்புறுமிந்திரர்சிந்தியநா
ளயிரொப்பனதுண்டுகள்செய்தவர்தம்
வயிரப்படைதள்ளியவாளியினான். (௬௩)

கற்றான்மறைநூலொடுகண்ணுதல்பான்
முற்றுதனதேவர்முரட்படைதான்
மற்றாரும்வழங்கவலாரிலவும்
பெற்றானெடிதாண்மைபிறந்துடையான். (௬௪)

அறனல்லதுநல்லதுமற்றறியான்
மறனல்லதுபல்பணிமற்றறியான்
பிறனல்லதொராருயிருஞ்சிதையா
னுறனல்லதுபேரிசையென்றுணர்வான். (௬௫)

காயத்துயிரோவிடுகாலையினு
மாயத்தவர்கூடிமலைத்திடினுந்
தேயத்தவர்செய்குதல்செய்திடினு
மேயத்தொழில்செய்யமதித்திலனால். (௬௬)

மதுகைடவரொன்பர்வானவர்தம்
பதிகைகொடுதொட்டவர்பண்டொருநா
ளதிகைதவராழியனந்தனையும்
விதிகைமிகமுட்டியவெம்மையினார். (௬௭)

நீராழியிழிந்துநெடுந்தகையைத்
தாராயமொன்றனர்தாமொருகா
லாராழியவன்னுமஃதிசைய
வாராவமர்செய்கெனவந்தனரால். (௬௮)

வல்லாருருவாயிரமாய்வரினும்
நல்லார்முறையினெருந்திறலார்
மல்லாவினைகாதுமலைந்தனன்மா
லல்லாயிரமாயிரமஃதெனவால். (௬௯)

தன்போல்பவர்தானுமிலாததனிப்
பொன்போலொளிர்மேனியனைப்புகழோ
யென்போல்பவர்சொல்லுவதென்னுடையா
ருன்போல்பவரியாருளரொன்றுரையா. (௭௦)

ஒருவோமுலகேழையுமுண்டுமிழ்வோ
மிருவோமொடுநீதனியித்தனைநாட்
பொருவோமொடுநேர்பொருதாய்புகழோய்
தருவோமின்மனத்தறுதந்தனமால். (௭௧)

ஒல்லும்படிநல்லதுனக்குதவச்
சொல்லும்படியென்றவர்சொல்லுதலும்
வெல்லும்படிநும்மைவிளம்புமெனக்
கொல்லும்படியாலரிகூறுதலும். (௭௨)

இடையிற்படுகிற்கிலம்யாமொருவின்
றுடையிற்படுகிற்றுமெனத்துணியா
வடையச்செயகிற்றியதானையெரு
நடையிற்படுநீதியர்நல்குதலும். (௭௩)

விட்டாருலகியாவையுமேலொடுகீ
ழெட்டாவொருவன்றனிடத்துடையை
யொட்டாதவரொன்றினரும்வலியாற்
பட்டாரிதுபட்டதுபண்டொருநாள். (௭௪)

தனிநாயகன்வன்கதைதன்கைகொளா
நனிசாடவிழுந்தனர்நாளுலவாப்
பனியாமதுமேதைபடப்படர்மே
இனியானதுபூவுல்கெங்கணுமே. (௭௫)

விதியாலிவுகந்தனின்மெய்வலியான்
மதுவானவனெம்முன்மடிந்தனனாற்
கதிர்தானிகர்கைடவனிக்கதிர்வே
லதிகாயனிதாகவிழ்ந்தனனால். (௭௬)

என்றானவ்விராவணனுக்கினியா
னன்றாகுகவென்றொருநாயகனு
மின்றானுயிழ்வெண்ணகைவேறுசெயா
வின்றாவிதுகூறிநிகழ்த்தினனால். (எ௭)

என்றாயிரகோடியிராவணரும்
வின்றாடரும்வேறுலகத்தெவரும்
நன்றாவொருமூவருநண்ணிடினுங்
கன்றாலவன்விற்றொழில்காணுதியால். (எ௮)

வானென்பதென்வையகமென்பதென்மா
ருனென்பதென்வேறுதனிச்சிலையோர்
யானென்பதெலீசனெனின்றிமையோர்
கோனென்பதெனெம்பிகொதித்திடுமேல். (எ௯)

தெய்வப்படையுஞ்சினமுந்திறனு
மையற்றொழிமாதவமற்றுமெலா
மெய்தற்குளவோவிவனிச்சிலையிற்
கைவைப்பளவேயிதுகாணுதியால். (௮௦)

என்றேவியையவஞ்சனைசெய்தெழுவா
னன்றேமுடிவானவனன்னவள்சொற்
குன்றேனெனவேகியகொள்கையினு
னின்றானுளனுயநெடுந்தகையான். (௮௧)

ஏகாயுடனியுமெதிர்ந்துளனு
மாகாயநெடுந்தலைவாளியொடு
மாகாயமளந்துவிழுந்ததனைக்
காகாதிகளுங்குதல்காணுதியால். (௮௨)

நீராக்கொடுநீரொதிர்நிற்கினுமே
தீரக்கொடியாரொடுதேவர்பொரும்
போராக்கொடுவந்துபுகுந்ததுநா
மாராக்கொடுவந்ததறிந்திலையோ. (௮௩)

சிவனல்லனெனிற்றிருவின்பெருமா
னவனல்லனெனிற்புவிதந்தருளுந்
தவனல்லனெனிற்றனியேவலியோ
னிவனல்லனெனிற்பிறரியாருளரோ. (௮௪)

ஒன்றாயிரவெள்ளமொருங்குளதாம்
வன்றானையர்வந்துவளைந்தவெலாங்
கொன்றானிவனல்லதுகொண்டுடனே
நின்றார்பிறருண்மைநினைந்தனையோ. (௮௫)

கொல்வானுமிவன்கொடியோனையெலாம்
வெல்வானுமிவன்னடல்விண்டுவென
வொல்வானுமிவனுடனேயொருநீ
செல்வாயெனவேவுதல்செய்தனனால். (௮௬)

அக்காலையிலக்குவனாரியனை
முக்காலும்வலங்கொடுமுதுணர்வின்
மிக்கான்மறிவீடணன்மெய்தொடரப்
புக்கானவன்வந்துபுகுந்தகளம். (௮௭)

சேனைக்கடல்சென்றதுமின்கடல்மே
லேனைக்கடல்வந்தெழுந்தவெனு
வானைக்கடல்தேர்பரியாள்மிடையுந்
தானைக்கடலோடுதலைப்படலும். (௮௮)

வேறு.

பசும்படுகுருதியிற்பண்டுசேறுபட்
டசும்பறவுருவியவுலகமார்ப்பெழக்
குசும்பையினமலர்ச்சுண்ணக்குப்பையின்
விசும்பையுங்கடந்ததுவிரிந்ததூளியே. (௮௯)

தாமிடித்தெழும்பணைமுழக்குஞ்சங்கின
மாமிடிக்குமுறலுமார்ப்பிரோதையு
மேழுடைக்கொடுஞ்சிலையிடிப்புமஞ்சித்தம்
வாய்மடித்தொடுங்கினமகரவேலையே. (௯௦)

உலைதொறுங்குருதிநீரருவியொத்துக
விலைதுறுமரமெனக்கொடிகளிற்றுக
மலைதொறும்பாய்ந்தனமானயானையின்
றலைதொறும்பாய்ந்தனகுரங்குதாவியே. (௯௧)

கிட்டினகிளைநெடுங்கோட்டகேழுரு
மட்டினவருவியின்மதத்தவானரம்
விட்டனெடுவரைவெம்மைவேழத்தை
முட்டினவொத்தனமுகத்தின்வீழ்வன. (௯௨)

இடித்தனவுறுக்கினவிறுக்கியேய்ந்தன
தடித்தனவெயிற்றினாற்றலைகள்சந்தறக்
கடித்தனகவிக்குலங்கால்கண்மேற்படத்
துடித்தனகுருதியிற்றுரகராசியே. (௯௩)

அடைந்தனகவிக்குலமெற்றவற்றன
குடைந்தெறிகால்பொரப்பூட்கைக்குப்பைக
ளிடைந்தனமுகிற்குலமிரிந்துசாய்ந்தென
வுடைந்தனகுலமருப்புகுத்தமுத்தமே. (௯௪)

தோல்படத்துதைந்தெழுவயிரத்துணிகர்
கால்படக்கைபடக்காலபாசம்போல்
வால்படப்புரண்டனர்கிருதர்மற்றவர்
வேல்படப்புரண்டனர்கவியின்வீரரோ. (௯௫)

மாவமுஞ்சிலையொடுமலையும்வாளெயிற்
றரவமுங்கரிகளும்பரியுமல்லவும்
விரவினகவிக்குலம்வீசவிம்மலா
அரவருங்கானெனப்பொலிந்ததம்பரோ. (௯௬)

தடவரைகவிச்குலத்தலைவர்தாங்கின
வடல்வலிகிருதர்தம்மணிகராசிமேல்
விடவிடவிசும்பிடையிடைந்துவீழ்வன
படர்கடலினமழைபடிவபோன்றவே. (௯௭)

இழுக்கினரடிகளினிங்குமங்குமா
மழுக்களுமயில்களும்வாளுந்தோள்களு
முழுக்கினருழக்கினர்மூரியாக்கையை
யொழுக்கினர்கிருதரையுதிரவாற்றினே. (௯௮)

மிடலுடைக்கவிக்குலங்குருதிவெள்ளநீ
ரிடையிடைநீந்தினவியைந்தயானையின்
றிடரிடைச்சென்றவையொழுகிச்சேர்ந்தன
கடலிடைப்புக்கனகரையுங்காண்கில. (௯௯)

கால்பிடித்தீர்த்திழிகுருதிகண்ணகன்
சேல்பிடித்தெழுதிரையாற்றிற்றிண்ணெடுங்
கோல்பிடித்தொழுகுறுகுருடர்கூட்டம்போல்
வால்பிடித்தொழுகினகவியின்மாலையே. (௧௦௦)

பாய்ந்தனகிருதர்தம்பரவைபன்முறை
காய்ந்தனகடும்படைகலக்கிக்கைதொறுந்
தேய்ந்தனசிதைந்தனசிந்திச்சேணுறச்
சாய்ந்தனதகைப்பெருங்கவியின்றானையே. (௧௦௧)

அத்துணையிலக்குவனஞ்சலஞ்சலென்
றெத்துணைமொழிகளுமியம்பியேற்றினன்
கைத்துணைவில்லினைக்காலன்வாழ்வினை
மொய்த்துணைநாணினைமுழங்கத்தாக்கினான். (௧௦௨)

நான்மறைந்தொளிப்பிறுவன்றபூதங்கள்
மேன்மறைந்தொளிப்பினும்விரிஞ்சன்வீயினுங்
கான்மறைந்தொளிக்கிலாக்கடையிற்கண்ணக
ஞான்மறையார்ப்பெனநடந்ததவ்வொலி. (௧௦௩)

ஆர்த்தனகுசரந்தூர்த்ததொன்றல
ஈர்த்தனவிருதர்தங்களாயிலாக்கையி
வீர்த்தநெடும்பிணம்விசும்பினெஞ்சுறப்
பார்த்தனகுருதியப்பள்ளவெள்ளத்தின். (௧௦௪)

யானையின்கரந்தரந்திரதவிர்தம்
வாளுயர்முடித்தலைதடிந்துவாசியின்
காலினையறுத்துவெங்கறைக்கண்மொய்ம்பனா
றுறைடையுடல்பிளந்தோடுமெம்புகள். (௧௦௫)

வில்லிடையறுத்துவேறுணித்துவீரர்த
மெல்லிடைகவசமுமார்புமீர்த்தெறி
கல்லிடையறுத்துமாக்கடிந்துதோமீஇக்
கொல்லியலியானையைக்கொல்லுங்கூற்றினே. (௧௦௬)

வெற்றிவெங்கரிகளின்வளைந்தவெண்மருப்
பற்றெழுவிசைகளிலும்பாண்மின
முற்றருமுப்பகற்றிங்கள்வெண்முனை
யுற்றனவிசும்பிடைபலவுமொத்தன. (௧௦௭)

கண்டகர்நெடுந்தலைகளுங்கண்ணன
துண்டவெண்பிறைத்துணிகவ்வித்தூக்கிய
குண்டலமின்குலந்தழுவிக்கோண்மதி
மண்டலம்விழுந்தனபோன்றமண்ணினே. (௧௦௮)

கூர்மருப்பினையனகுறைந்தகையன
கார்மரக்கனவரைகவிழ்ந்தவீழ்வன
போர்முகக்குருதியின்புணரிபுக்கன
பாரொடிக்குறுநெடும்பன்றிபோன்றன. (௧௦௯)

புண்ணுறவுயிருகும்புரவிபூட்டறக்
கண்ணகன்றேர்க்குலமதிர்தகாட்சிய
வெண்ணுறுபெரும்பதம்வினையிலெஞ்சிட
மண்ணுறவிண்ணின்வீழ்மானம்போன்றன. (௧௧௦)

அடக்கருங்கவந்தநின்றுடுகின்றன
விடற்கரும்வினையறச்சிந்திமெய்யுயிர்
கடக்கருந்துறக்கமேகலந்தவாறென
வுடற்பொறையுவகையிற்குனிப்பவொத்தன. (௧௧௧)

ஆடிவகவந்தமொன்றுறெண்ணாயிரம்
விடியபொழுதெலும்பலுவன்மெய்யதேற்
கோடியின்மேலுளகுனித்தகொற்றவர்
பாடிவியொருவராற்பாரற்பாலதோ. (௧௧௨)

ஆனையின்குருதியுமரக்கர்சோரியு
மேனைவெம்புரவியினுதிரத்திட்டமும்
கானிணமலையினும்பரந்தகாற்புனல்
வானயாறுமெனக்கடன்மடுத்தவே. (௧௧௩)

தாக்கியசரங்களிற்றலைசளிங்கிய
வாக்கையபுரசையோடலைந்ததாளன
மேக்குயாங்குசக்கையவெங்கரி
நாக்குவகளிப்பிலவரக்கர்கோன்பிணம். (௧௧௪)

கோளுடைக்கணைபடப்புரவிகூத்தன
தோளுடைநெடுந்தலைதுமிந்துதேர்சில
வாளுடைக்குறைத்தலையதிரவாடுவ
வாளுடைத்தடக்கையவாசிமேலன. (௧௧௫)

வைவனமுனிவர்சொல்லனையவாளிகள்
கொய்வனதலைகடோள்குறைத்தலைக்குழாங்
கைவளைவரிசிலைக்கடுப்பிற்கைவிடா
வெய்வனவெனைப்பலவிரதவீரரோ. (௧௧௬)

தாதையைத்தம்முனைத்தம்பியைத்தனிக்
காதலைப்பேரனைமருகனைக்களத்
தாதையினொருகனையுருவமாண்டனர்
சீதையென்றொருகொடுங்கூற்றந்தேடினார். (௧௧௭)

ஆண்டருங்கணைபடத்துமிந்துதுள்ளிய
தீண்டருநெடுந்தலைதழுவிச்சேர்ந்தன
பூண்டெழுகாதலம்பொருக்கிலாதன
வாண்டலைநிகர்த்தனவெருவையாடுவ. (௧௧௮)

ஆயிரமாயிரங்கோடியாய்வருந்
தீயுமிழ்கடுங்கணைமனத்திற்செல்வன
பாய்வனபுகுவனவிருதர்பல்லுயி
ரோய்வனநமன்றமர்கால்களோயவே. (௧௧௯)

விளக்குவான்கணைகளால்விளிந்தமேருவைத்
துளக்குவாருடற்பொறைதுணிந்துதுள்ளுவா
ரிளக்குவாரமர்தஞ்சிரத்தையென்முது
குளுக்குவாணிலமகள்பிணத்திரேங்கலால். (௧௨௦)

தாருகனென்றுளனொருவன்றனெடு
மேருவின்பெருமையானெரியின்வெம்மையான்
போருவந்தழக்குவான்புகுந்துதாங்கினான்
றேரினன்சிலையினனுமிழ்ந்தீயினன். (௧௨௧)

தூர்த்தனனெடுஞ்சரநெருப்பின்றேற்றந்த
பார்த்தனவிசும்பிடையொடுங்கப்பல்லுடை
வார்தனில்வளர்வளைவற்றைவள்ளலுங்
கார்தனன்கணைகளான்முனிவுகொண்டுவான். (௧௨௨)

அன்னறன்வடிக்கணைதுணிப்பவற்றவன்
கன்னகனெடுந்தலைவிசையிற்காரென
விண்ணிடையார்த்தவவிடையின்மெய்யுயி
ருண்ணியவந்தவெங்கூற்றமுட்கவே. (௧௨௩)

காலனுங்குலிசனுங்காலசங்கனு
மாலியுமருத்தனுமருவுமைவருஞ்
சூலமுங்கணிச்சியுங்கடிதுசுற்றினர்
பாலமும்பாசமுமயிலும்பற்றுவார். (௧௨௪)

அன்னவரெய்தனவெறிந்தவாயிரந்
துன்னரும்படைக்கலந்துணித்துத்தூவின
னன்னெடுந்தலைகளைத்துணித்தானால்வகைப்
பன்னெடுந்தானையைப்பாறநூறினான். (௧௨௫)

ஆண்டதிகாயன்றன்சேனையாடவ
ரீண்டினமதகரியேழெனாயிரந்
தூண்டினர்மருங்குறச்சுற்றினர்தொக
வேண்டியபடைக்கலமுறையின்வீசுவார். (௧௨௬)

போக்கிலாவகைபுறம்வளைத்துப்பொங்கினார்
தாக்கினார்திசைதொறுந்தடக்கைமால்வரை
நூக்கினார்படைகளானூக்கினார்குழம்
பாக்கினார்கவிகடங்குழுவையார்ப்பினார். (௧௨௭)

எறிந்தனவெய்தனவெய்தியொன்றொடொன்
றறைந்தனவசனியின்விசையினாசைக
ணிறைந்தனமழையெனநெருக்கினிற்றலான்
மறைந்தனவுலகொடுதிசையும்வானமும். (௧௨௮)

அப்படையனைத்தையுமறுத்தவிழ்த்தவர்
துப்புடைத்தடக்கைகடுணித்துச்சுற்றிய
முப்புடைமதமலைக்குலத்தைமுட்டினா
னெப்புடைமருங்கினுமெரியும்வாளியான். (௧௨௯)

வேறு.

குன்றனமதகரிகொம்பொடுகரமற
வன்றலைதுமிதரமஞ்செனமதிவன
வொன்றலவொருபதுமொன்பதுமொருகணை
சென்றரிதரமழைசிந்துவமதமலை. (௧௩௦)

ஒருதொடைவிடுவனவுருமுறழ்கணைபட
விருதுடைபுரசையொடறுபவொறிபடை
விருதுடைநிருதர்கண்மலையெனவிழுவர்கள்
பொருதுடைவனமதமழையனபுகர்மலை. (௧௩௧)

பருமமுமுதுகிடுபடிவையும்வலிபடர்
மருமமுமழிபடநுழைவனவடிகணை
யுருமெனவலியனவருள்வனதிசைதிசை
கருமலைநிகர்வனதனிமலைகனல்வன. (௧௩௨)

இறுவனகொடியவையெறிவனவிடையிடை
அறுவனசுடுகணைதுணிவனமதகரி
யறுவனவவையவைகடவினர்தடிதலை
வெறுமைகள்கெடுவனவிழிகுழிகழுதுகள். (௧௩௩)

மிடலொடுவிடுகணைமழையினுமிகையுள
படலொடுமுருமெறிபருவரைநிலையன
வுடலொடுமுருள்கரியுதிரமதுருகெழு
கடலொடுபொருததுகரியொடுகரியென. (௧௩௪)

மேலவர்படுதலில்விடுமுறையிலமிட
லாலமுமசனியுமனையனவிடுகரி
மாலுறுகரியினின்மறுகினமதமழை
போல்வனதமதமொதிரொதிர்பொருவன. (௧௩௫)

கால்சிலதுணிவனகரமறுவனகதழ்
வால்சிலதுணிவனவயிறுகள்வெளிபட
நால்வனகுடரனநகழ்வனசிலவரு
தோல்சிலகணைபலசொரிவனமழையன. (௧௩௬)

முட்டினமுட்டறமுரணுறுதிசைநிலை
யெட்டினுமெட்டருநிலையனவெவையவன்
விட்டனவிட்டனவிடுகணைபடுதொறும்
பட்டனபட்டனபடர்பணைகுவிவன. (௧௩௭)

அறுபதின்முதலிடைநாலொழியாயிர
மிறுதியமதகரியிறுதலுமெரியுமி
டறுகணர்தகையறுநிலையினர்சலமுறு
கறுவினரவொதிர்கடவினர்கடலென. (௧௩௮)

எல்லையின்மதகரிவிரவினவிமநிகர்
செல்வனமுடிவிலதெறுதொழின்மறவனை
வில்லியையினியிதுவிடுகணைமழையன
கொல்லுதியெனவெதிர்கடவினர்கொடியவர். (௧௩௯)

வற்றனமதகரிவலோதலின்மழைபொதி
சென்றனியொருசடமொனமறைதிறலவ
னிந்திரனுறுவெனவெழுசிலைகுனிவழி
தந்தியினெடுமழைபுசிதறினதனையின. (௧௬௦)

வேறு.

மையற்றனசெவிமுற்பொழிமழைபெற்றனமலையின்
மெய்பெற்றனகடலொப்பனவெயிலுக்களைவிழியின்
மொய்பெற்றனமுதலிற்றனமுகமுக்கணமுரண்வெங்
கையற்றனமருமுற்றியகணிதத்தியல்கதமா. (௧௬௧)

உண்ணின்றலையலைநீருகவிறுதிங்கடையுதகா
லெண்ணின்றலைபயிர்கின்றனவிகல்வெங்கணையிரணப்
பண்ணின்படர்தலையிற்படமடிகின்றனபலவாய்
மண்ணின்றலையுருள்கின்றனமழையொத்தனமதமா. (௧௬௨)

பிறைபற்றியவெருசெற்றியபிறையற்றனபிறழ்வன்
றறையற்றயில்விசையற்றனவரியக்கிரியமார்க்
கிறையற்றுறையமுனிவிற்படவெறியப்புடையெழுபொற்
றிறையற்றனவெனவிற்றனகினமுற்றியமதமா. (௧௬௩)

கதிரொப்பனகணைபட்டெனகதமற்றிலகதழ்கா
ரதிரத்தனியதிர்கைக்கரியளவற்றனவுளவா
லெதிர்பட்டனவொழியக்கிரியிவரித்திளையெழுகா
ருதிரத்தொடுமொழுகிக்கடனடுவுற்றவுமுளவால். (௧௬௪)

கண்ணின்றலையயில்வெங்கணைபடுகின்றனகாறு
வெண்ணின்றலைமிசைவெங்கதமுதிர்கின்றனவினமா
மண்ணின்றலைசெரியும்படிதிரிகின்றனமலைபோ
லண்ணின்றலைசெருதக்கடலுளதிட்டனவுளவால். (௧௬௫)

ஓராயிரமயில்வெங்கணையொருகால்விடுதொடையிற்
காராயிரம்விடுதாரையினிமிர்கின்றனகதுவுற்
றீராயிரமதமால்கரிவிழுகின்றனவினிமே
லாராய்வதெனவன்விற்றொழிலமரோசருமறியார். (௧௬௬)

தேருந்தெழுகரியும்பொருசினமன்னரும்வயவெம்
போரின்றலையுகள்கின்றனபுரவிக்குலமெவையும்
பேருந்திசைபெறுகின்றிலபணையின்பிணைமதவெங்
காரின்றருகுருதிப்பொருகடலின்றனகடவா. (௧௬௭)

ஆருயிரமதவெங்கரியொருநாழிகைநுவலக்
கூருயினபயமுற்றெருகுலைவாயினவுலகந்
தேறுதனமலைகின்றனதெரியாதனசினமா
வேருயினவலையாவையுமுடனேவரவிட்டான். (௧௬௮)

ஒருகோடியமதமால்கரியுளவந்தனவுடன்முன்
பொருகோடிமிலுயிருக்கனவொழியப்பொழிமதயா
றருகோடவெவாவுந்தினரசனிப்படிகணைகா
லிருகோடுடைமழைவெஞ்சிலையிளவாளரியெதிரோ. (௧௪௯)

உலகத்துளமலையெத்தனையவையத்தனையுடனே
கொலையிற்பனபொருகிற்பனபுடைசுற்றினகுழுவா
யலகற்றனசினமுற்றியவனலொப்பனவலவையுந்
தலையற்றனகாமற்றனதனிவிற்றெழுதிலதனால். (௧௫௦)

நாலாயினநவயோசனைநனிவன்றிசையெவையு
மாலாயினமதவெங்கரிதிரிகின்றனவாலுந்
தோலாயினதலைகெங்கனுமெனவஞ்சினதகளே
போலாயினவயவானமுமாருனதபுவியே. (௧௫௧)

கடைகண்டனதலைகண்டிலகழுகின்திரள்பிணமா
விடைகண்டனமலைகொண்டெனவெழுகின்றனதிரையாற்
புடைகொண்டெறிகுருதிக்கடல்புணர்கின்றனபொறிவெம்
படைகொண்டிடைபடர்கின்றனமதயாறுகள்பலவால். (௧௫௨)

ஒற்றைச்சரமதனொடொருகரிபட்டுகவொளிவாய்
வெற்றிக்கணையுருமொப்பனவெயிலொப்பனவயில்போல்
வற்றக்கடல்சுடுகிற்பனமழையொப்பனபொழியுங்
கொற்றக்கரிபதினாயிரமொருபத்தியிற்கொல்வான். (௧௫௩)

மலையஞ்சினமழையஞ்சினவனமஞ்சினபிறவும்
நிலையஞ்சினதிசைவெங்கரிநிமிர்கின்றனகடலி
னலையஞ்சினபிறிதென்சிலதனியையங்காகரியுங்
கொலையஞ்சுதல்புரிகின்றதுகரியின்படிகொளலால். (௧௫௪)

காலேறினசிலநாளொலிகடலேறுகள்படவான்
மேலேறினர்மிசையாளர்கடலைமெய்தொறுமுருவக்
கோலேறினவுருமேறுகள்குடியேறினவெனலாய்
மாலேறினகளியானைகண்மழையேறெனமறிய. (௧௫௫)

இவ்வேலையினனுமான்முதலெழுவேலையுமனையான்
வெவ்வேலவர்செலவேவியகொலையானையின்மிசையைச்
செவ்வேயுறநினையாவொருசெயல்செய்குவனென்பான்
றவ்வேலெனவந்தானவர்தனிவேலெனத்தகையான். (௧௫௬)

ஆர்த்தங்கனல்விழியாமுதிர்மதயானையையனையான்
நீர்த்தன்கழல்பரவாமுதலரிபோல்வருதிறலான்
வார்த்தங்கியகழலாளொருமாரனின்றதுமனூர்
போர்த்தண்டிலும்வலியாயதுகொண்டான்புகழ்கொண்டான். (௧௫௭)

கருங்கார்புரைநெடுங்கையனகளியானைகளவைசென்
றொருங்காயினவுயிர்மாய்ந்தனபிறிதென்பலவுரையால்
வருங்காலமும்பெரும்பூதமுமழைமேகமுமுடனாய்ப்
பொருங்காலையின்மலைமேல்விழுமுருமேறெனப்புடைத்தான். (௧௫௮)

மிதியாற்பலவிசையாற்பலயிடலாற்பலவிடறுங்
கதியாற்பலகாலாற்பலவாலாற்பலவாலி
றுதியாற்பலநுதலாற்பலநொடியாற்பலபயிலுங்
குதியாற்பலகுமையாற்பலகொன்றானறனின்றான். (௧௫௯)

பறித்தான்சிலபகிர்ந்தான்சிலவகிர்ந்தான்சிலபணைபோன்
றிறுத்தான்சிலவிடந்தான்சிலபிளந்தான்சிலவெயிற்றாற்
கறித்தான்சிலகவர்ந்தான்சிலகடித்தான்சிலபிடித்தான்
முறித்தான்சில்லிறத்தானையினெடுங்கோடுகள்முனிந்தான். (௧௬௦)

வாரிக்குழாகடலிற்புகவெறியுநெடுமரத்தாற்
சாரித்தலைத்துருட்டுநெடுந்தலத்திற்படுத்தலைக்கும்
பாரிற்பிடித்தடிக்குங்குடர்பறிக்கும்படர்விசும்பின்
னூரிற்செலவெறியும்மிதித்துழக்கும்முகத்தறைக்கும். (௧௬௧)

வாலால்வரவளைக்குநெடுமலைப்பாம்பெனவளையா
மேலாளொடுபிசையும்முழுமலைமேற்செலவிலக்கு
மாலாலமுண்டவனேயெனவகல்வாயினிட்டடக்குந்
தோலாயிரமிமைப்போதினினரியேறெனத்தொலைப்பான். (௧௬௨)

லைசயத்திறமுயர்வுற்றனதறுகட்களிமதமா
னொய்திற்கடிதெதிருற்றனநூறாயிரமாறா
மையற்கரியுதிரிற்சிலகுழைபுக்குருமறையத்
தொய்யற்படாமுலைக்கொழுஞ்சேறுயுகத்துதைத்தான். (௧௬௩)

வேறாயினமதவெங்கரியொருகோடியின்விறலோ
னாறாயிரம்படுத்தானிதுநவல்காலையினிளையோன்
கூறாயினவெனவன்னவைகொலைவாளியிற்கொன்றா
னேறாநெடும்பயத்தானெடுவிசைகாவலரிரிந்தார். (௧௬௪)

இரிந்தார்திசைதிசையெங்கணுமியானைப்பிணமேற்ற
நெரிந்தார்களுநெரியாதுயிர்நிலைத்தார்களுநெருக்கா
லெரிந்தார்நெடுந்தடந்தேரிழிந்தெல்லாருமுன்செல்லத்
திரிந்தானொருதனியேநெடுந்தேவாந்தகன்சினத்தான். (௧௬௫)

உதிரக்கடல்பிணமால்வரையொன்றல்லனபலவா
யெதிரக்கருநெடும்போர்க்களத்தொருதான்புகுந்தேற்றான்
கதிரொப்பனசிலவெங்கணையனுமானுடற்கரந்தா
னதிரக்கடனெடுந்தேரினன்மழையேறெனவார்த்தான். (௧௬௬)

அப்போதிலினனுமாறுமொர்மாமோச்சியின்றார்த்தா
னிப்போதிவனுயிர்போமெனவுருமேறெனவெறிந்தான்
வெப்போவெனவெயில்கால்வனவயில்வெங்கணைவிசையாற்
றப்போவெனத்துணியாம்வகைதேவாந்தகன்றுரந்தான். (௧௬௭)

மாறுங்கொருமலைவாங்கினன்வயவானரக்குலத்தோர்க்
கேறுங்கதவெறியாதமுன்முறியாயுகவெய்தான்
கோறுங்கியசிலையாளுடனெடுமாருதிகொதித்தான்
பாறுங்கெனப்புகப்பாய்ந்தவனெடுவில்லினைப்பறித்தான். (௧௬௮)

பறித்தானெடும்படைவானவர்பலரார்த்திடப்பலவாய்
முறித்தானவன்வலிகண்டுயர்தேவாந்தகன்முனிந்தான்
மறித்தாங்கொருசுடர்த்தோமரம்வாங்காமிசையோங்காச்
செறித்தானவனிடத்தோண்மிசையிமையோர்களுந்திகைத்தார். (௧௬௯)

சுடர்த்தோமரமெறிந்தார்த்தலுங்கனலாமெனச்சுளித்தா
னடற்றோமரம்பறித்தான்றிரித்துருமேறெனவடித்தான்
புடைத்தானவன்றடந்தேரொடுநெடுஞ்சாரதிபுரண்டான்
மடற்றோகையர்வலிவென்றவன்வானோர்முகமலர்ந்தார். (௧௭௦)

சூலப்படைதொடுவான்றனையிமையாதமுன்றொடர்ந்தா
ஞாலத்தினும்வலியானும்வந்தெதிரோடுகுந்தடர்த்தான்
காலற்கிருகண்ணான்றனகையாலவன்கதுப்பின்
மூலத்திடைபுடைத்தானுயிர்முடித்தான்சிரமடித்தான். (௧௭௧)

கண்டானெதிரதிகாயனுங்கனலாமெனக்கனன்றான்
புண்டானெனப்புனலோடிழியுதிரம்விழிபொழிவா
னுண்டேனிவனுயிரிப்பொழுதொழியேனெனவுரையாத்
திண்டேரினைக்கடிதேவெனச்சென்றானவனின்றான். (௧௭௨)

அன்னான்வருமளவின்றலைநிலைநின்றனவனிகம்
பின்னானதுமுன்னானதுபிறிந்தார்களுஞ்செறிந்தார்
பொன்னானுயர்நெடுமால்வரைபோல்வானெதிர்புக்கான்
சொன்னானிவையதிகாயனும்வடமேருவைத்துணிப்பான். (௧௭௩)

தேய்த்தாயொருதனியெம்பியைத்தலத்தோடொருதிறத்தாற்
போய்த்தாவினைநெடுமாகடல்பிழைத்தாய்கடல்புகுந்தாய்
வாய்த்தானையுமடித்தாயதுகண்டேனெதிர்வந்தே
னுய்த்தாயதுமுடிவின்றுனக்கணித்தாகவந்தடுத்தாய். (௧௭௪)

இன்றல்லதுநெடுநாளுனையொருநாளினுமெதிரோ
னென்றல்லதுசெய்தாயெமையிளையோனையுமுனையும்
வென்றல்லதுமீளாதவென்மிடல்வெங்கணைமழையாற்
கொன்றல்லதுசெல்லேனிதுகொள்ளென்றனன்கொடியோன். (௧௭௫)

பிழையாதிதுபிழையாதெனப்பெருங்கைத்தலம்பிசையா
மழையாமெனச்சிரித்தான்வடமலையாமெனுநிலையான்
முழையாளரியனையானிறுமெனிமிகமுனிவா
யழையாய்த்திரிசிரத்தோனையுமிலத்தோடுமிட்டழைக்க. (௧௭௬)

ஆமாமெனத்தலைமூன்றுடையவனூர்த்தவர்தடர்த்தான்
கோமான்றனிப்பெருந்தூதனுமெதிரோசெருக்கொடுத்தான்
காமாண்டவர்கல்லாதவர்வல்லோனெனக்கழறு
நாமாண்டனாயனின்றுறநடுவேபுகநடந்தான். (௧௭௭)

தேர்மேற்செலக்குதித்தான்றிரிசிரத்தோனையோர்திறத்தாற்
கார்மேற்றுயின்மலைபோலவியைக்காத்தாற்பிடித்தெடுத்தான்
பார்மேற்படுத்தரைத்தானவர்பதிமேற்படப்படுத்தான்
போர்மேற்றிசைகெடுவாயிலினூதாமெனப்போனான். (௧௭௮)

வேறு.

இமைப்பிடையாகச்சென்றானிகலதிகாயனின்றா
னமைவதொன்றுற்றதேற்றானருவியோடழல்கால்கண்ணா
னுவமையொருபாகனேயுமிவன்முனிந்துருத்தபோரா
கமைவிலனுற்றலென்னாக்கநத்தொடுங்குலைக்குய்யையான். (௧௭௯)

பூணிப்பொன்றுடையனாகைப்புருத்தகான்புறத்துநின்று
பாணித்தல்வீரமன்றாற்பருவலிபடைத்தோர்க்கெல்லா
மாணிப்பொன்றானன்றன்னைப்பின்னுங்கண்டறிவனென்னாத்
தூணிப்பொற்புறத்தான்றிண்டேரினவன்மேற்றூண்டச்சொன்னான் (௧௮௦)

தேரொலிகடலைச்சீறச்சிலையொலிமழையைச்சீறப்
போரொலிமுரசினோதைதிசைகளிற்புறத்துப்போகத்
தாரொலிகழற்கான்மைந்தன்றானையுந்தானுஞ்சென்றான்
வீரனுமெதிரேநின்றான்விண்ணவர்விசையஞ்சொல்ல. (௧௮௧)

வல்லினனாகவந்தவனங்கெய்வாலிமைந்தன்
சில்லியந்தேரின்மேலானவனமர்செவ்விதன்றால்
வில்லியர்திலதமன்னநின்றிருமேனிதாங்கப்
புல்லியவெனின்மென்றேனோதுதிபுனிதவென்றான். (௧௮௨)

ஆமெனவமலன்றம்பியங்கதனலங்கற்றோள்மேற்
றாமரைச்சரணம்வைத்தான்கலுழனிற்றாங்கிநின்ற
கோமகனாற்றனோக்கிக்குளிர்கின்றமனத்தராகிப்
பூமழைபொழிந்துவாழ்த்திப்புகழ்ந்தனர்புலவரெல்லாம். (௧௮௩)

ஆயிரம்பரிபூண்டவதிர்குரலசனித்திண்டேர்
போயினதிசைகளெங்குங்கறங்கெனச்சாரிபோமால்
மீயெறிதுயருந்தாழிற்றூழும்விண்செல்லித்செல்லுந்
தீயெழுவரிநோக்கலக்கினான்சிறுவனம்மா. (௧௮௪)

அத்தொழினோக்கியாங்குவானரத்தலைவரார்த்தா
ரித்தொழில்கலுழற்கேயுமரிதெனவிமையோரெல்லாங்
கைத்தலங்குலைத்தாரகக்களிற்றினும்புரவிமேலுந்
தைத்தனவிளையவீரன்சரமெனுந்தாரைமாரி. (௧௮௫)

முழங்கினமுரசம்வேழமுழங்கினமூரித்திண்டேர்
முழங்கினமுகரப்பாய்மாமுழங்கினமுழுவெண்சங்க
முழங்கினதனுவினோதைமுழங்கினகழலுந்தாரு
முழங்கினதெழிப்புமார்ப்புமுழங்கினமுகிலின்மும்மை. (௧௮௬)

கரிபடக்காலாள்வெள்ளங்களப்படக்கலினக்கால்போற்
பரிபடக்கண்டகூற்றும்பயப்படப்பைம்பொற்றிண்டே
ரெரிபடப்பொருதபூமியிடம்படவெதிர்ந்தவெல்லா
முரிபடப்பட்டவீரன்முரட்கணைமூரிமாரி. (௧௮௭)

மன்னவன்றம்பிமற்றவ்விராவணன்மகனைநோக்கி
யென்னுனக்கிச்சைநின்றவெறிபடைச்சேனையெல்லாஞ்
சின்னபின்னங்கள்பட்டாற்பொருதியோதிரிந்துநீயே
நன்னெடுஞ்செருச்செய்வாயோசொல்லுதிநயந்ததென்றான். (௧௮௮)

யாவரும்பொருவரல்லரெதிர்ந்துளயானுநீயுந்
தேவரும்பிறருங்காணச்செய்வதுசெய்வதெல்லாங்
காவல்வர்தன்னைக்காப்பார்காப்பவுமமையும்வேறே
கூவியததனுக்கன்றோவென்றனன்கூற்றின்வெய்யோன். (௧௮௯)

உமையனேகாக்கமற்றங்குமையொருகூறன்காக்க
விமையவரெல்லாங்காக்கவுலகமோரேழுங்காக்கச்
சமையுமுன்வாட்கையின்றோடென்றுதன்சங்கமூதி
யமையுருக்கொண்டகூற்றைநாணெறிந்துருமினார்த்தான். (௧௯௦)

அன்னதுகேட்டமைந்தனரும்பியன்முறுவறோன்றச்
சொன்னவாவாராயானேதோற்கினுந்தோற்கத்தக்கே
னென்னைநீபொருதுவெல்லினவனையும்வென்றியென்னா
மின்னினுமிளிர்வதாங்கோர்வெஞ்சரங்கோத்துவிட்டான். (௧௯௧)

விட்டவெம்பகழிதன்னைவெற்பினைவெதுப்புந்தோளான்
சுட்டதோர்கணையினாலேவிசும்பிடைத்துணித்துநீக்கி
யெட்டினோடெட்டுவாளியிலக்குவவிலக்காயென்னாத்
திட்டியின்விடத்துநாகமனையனசிந்தியார்த்தான். (௧௯௨)

ஆர்த்தவனெய்தவாளியனைத்தையுமறுத்துமாற்றி
வேர்த்தொலிவயிரவெங்கோன்மேருவைப்பிளக்கற்பால
தூர்த்தனனிராமன்றம்பியவையெலாந்துணித்துச்சிந்திக்
கூர்த்தனபகழிகோத்தான்குபேரனையாடல்கொண்டான். (௧௯௩)

எய்தனவெய்யவெல்லாமெரிமுகப்பகழியாலே
கொய்தனனுதிர்த்தியார்க்குமரக்கனைக்குரிசில்கோபஞ்
செய்தனன்றுரந்தான்றெய்வச்செயலன்னசிலையைவெங்கோ
னெய்தவன்கலசந்தேர்ந்தநுழைவனபிழைப்பிலாத. (௧௯௪)

நூறுகோல்கவசத்திநுழைதலுங்குழைவுதோன்றத்
தேறலாங்கலையுர்த்தெய்வச்சிலைநெடுந்தேரினூன்றி
மாறினன்றகாலத்தங்கவறுடையரீகமெல்லாங்
கூறுகூறாக்கியம்பாற்கோடியின்மேலுங்கொன்றான். (௧௯௫)

புடைநின்றார்புரண்டவாறும்போகின்றபுங்கவாளி
கடைநின்றகணிக்கவாங்கோர்கணைக்கிலாவாறுங்கண்டா
விடைநின்றமயக்கந்தீர்ந்தானேந்தியசிலையன்காந்தித்
தொடைநின்றபகழிமாரிமாரியின்மும்மைதூர்த்தான். (௧௯௬)

வானெலாம்பகழிவாளின்வரம்பெலாம்பகழிமண்ணோ
தானெலாம்பகழிகுன்றின்றலையெலாம்பகழிசாய்ந்தோ
ரூனெலாம்பகழிநின்றோருடலெலாம்பகழிவேலை
மீனெலாம்பகழியாகவித்தினன்வெருளிமிக்கோன். (௧௯௭)

மறைந்தனதிசைகளெல்லாம்வானவர்மனமேபோலக்
குறைந்தனசுடரின்மும்மைக்கொழுங்கதிர்குவிந்தொன்றொன்றை
யறைந்தனபகழிவையமதிர்ந்ததுவிண்ணுமஃதே
நிறைந்தனபொறியின்குப்பையுயிர்ந்தனநெருப்பின்கற்றை. (௧௯௮)

முற்றியதின்றேயன்றோவாளாமுழங்குதாளை
மற்றிவன்றன்னைவெல்லவல்லனோவள்ளறம்பி
கற்றதுகாலன்றோடேகொலையிவனொருவன்கற்ற
விற்றொழிலென்னேயென்றுத்தேவரும்வெருவலுற்றார். (௧௯௯)

அங்கதனெற்றிமேலுந்தோளிலுமாகத்துள்ளும்
புங்கமேதோன்றவண்ணம்பொருசரம்பலவும்போக்கி
வெங்கணையிரண்டுமொன்றும்வீரன்மேலேவிமேகச்
சங்கமுமுதிவின்றோர்தலைபொதிரொதியவார்த்தான். (௨௦௦)

வாலிசேய்மேனிமேலுமழைபொருகுருதிவாரி
காலுயர்வரையிற்செங்கேழருவிபோலொழுகக்கண்டான்
கோலொருபத்துநூற்றுற்குதிரையின்றலைகள்கொய்து
மேலவன்சிரத்தைச்சிந்திவில்லையுந்துணித்தான்வீரன். (௨௦௧)

மாற்றொருதடந்தேரேறிமாறொருசிலையும்வாங்கி
யேற்றவல்லரக்கன்றன்மேலெரிமுகக்கடவுளென்பா
னாற்றல்சால்படையைவிட்டானரியனரக்கனம்மா
வேற்றளதாங்கவென்றுவெய்யவன்படையைவிட்டான். (௨௦௨)

பொருபடையிரண்டுந்தம்மிற்பொருதனபொருதலோடு
மெரிகணையுருமின்வெய்யவிலக்குவன்றூரந்தமார்பை
யுருவினவுலப்பிலாதவிளைகிலனாற்றலோயான்
சொரிகணைமழையின்மும்மைசொரிந்தனன்றெழிக்குஞ்சொல்லான். (உ0௩)

பின்னின்றார்முன்னின்றாரைக்காணலாம்பெற்றித்தாக
மின்னின்றவயிரவாளிதிறந்தனமேனிமுற்று
மந்நின்றநிலையினாற்றல்குறைந்திலனுவிரீங்கான்
பொன்னின்றவடிம்பின்வாளியுருமெனப்பொழியும்வில்லான். (உ0௪)

கோன்முகந்தள்ளியள்ளிக்கொடுஞ்சிலைநாணிற்கோத்துக்
கான்முகங்குழையவாங்கிச்சொரிகின்றகாளைவீரன்
பான்முகந்தோன்றநின்றுகாற்றினுக்கரசன்பண்டை
நான்முகன்படையாலன்றிச்சாகிலனம்பவென்றான். (உ0ரு)

நன்றெனவுவந்தவீரனான்முகன்படையைவாங்கி
மின்றனிதிரண்டதென்னச்சாத்தொடுங்கூட்டிவிட்டான்
குன்றினுமுயர்ந்ததீயோன்றலையினைக்கொண்டவாளி
சென்றதுவிசும்பினூடுதேவருந்தெரியக்கண்டார். (உ0சு)

பூமழைபொழிந்தவானோர்போயதெம்பொருமலென்றார்
தாமழைத்தலறியெங்குமிரிந்தனரரக்கர்தள்ளித்
தீமையுங்களிப்புநீங்கித்திகைத்தனர்குரக்குச்சேனைக்
கோமகன்றோளினின்றுங்குதித்தனன்கொற்றவில்லான். (உ0எ)

வெந்திறற்சித்திகண்டவீடணன்வியந்தநெஞ்ச
னந்தரச்சித்தரார்ப்புமமலையுங்கேட்டானையன்
மந்திரசித்தியன்னசிலைத்தொழில்வலியிதாகி
னிந்திரசித்தனார்க்குமிறுதியேயிவையதென்றான். (உ0அ)

ஏந்தெழிலாகத்தெம்முனிறந்தனனென்றுநீமின்
சாந்தகன்மார்புதின்டோளோக்கிநின்றனுவைநோக்கிப்
போந்தவைக்குரியையன்றாற்போகலைபோகலென்னு
நாந்தகமின்னும்விசிநராந்தகனடந்துவந்தான். (உ0கூ)

தேரிடைநின்றுகண்கடையுகச்சீற்றம்பொங்கப்
பாரிடைக்கிழியப்பாய்ந்துபகலிடைப்பருதியென்பா
னூரிடைநின்றானென்னக்கேடகமொருகைதோன்ற
நீருடைமுகிலின்மின்போல்வானிடைமிரவந்தான். (உக0)

வீசினமாமுங்கல்லும்விலங்கலும்வீற்றுவீற்று
யாசைகடோறும்விசவாளினாலறுத்துமாற்றித்
தூசியுமிரண்டுகையும்நெற்றியுஞ்சுருண்டுநீர்மேற்
பாசியினொதுங்கவந்தானங்கதனதனைப்பார்த்தான். (உகக)

மரமொன்றுவிரைவின்வாங்கிவாய்மடித்துருத்தவள்ளல்
சரமொன்றுகடிதிற்சென்றதாக்கினன்றுக்கினன்றன்
கரமொன்றிற்றிரிவதாருங்காண்கிலாததனைத்தன்கை
யரமொன்றவயிரவாளாலாயிரங்கண்டங்கண்டான். (உகஉ)

அவ்விடைவெறுங்கைநின்றவங்கதனுண்மையன்ரு
லிவ்விடைபெயர்தலென்றுவிமையிடையொதுங்காமுன்னம்
வெவ்விடமென்னப்பொங்கியவனிடையெதிர்ந்துவீசுந்
தவ்விடையுருமிற்புக்குவாளொடுந்தழுவிக்கொண்டான். (உகந)

அத்தொழில்கண்டவானோராவலங்கொட்டியார்த்தா
ரித்தொழிலிவனுக்கல்லாலீசற்குமியலாதென்பார்
குத்தொழித்தவன்கைவாடன்கூருகிர்த்தடக்கைக்கொண்டா
னொத்திருகூருய்விழவீசினனுலையவார்த்தான். (உகச)

கூர்மத்தின்முதுகின்வைத்துவானவரமுதங்கொண்ட
நீர்மத்தினிமிர்ந்ததோளானிறைமத்தமதுவைத்தேக்கி
யூர்மத்தமுண்டாலன்னமயக்கத்தாலுருமைத்தின்பான்
போர்மத்தனென்பான்வந்தான்புகர்மத்தப்பூட்கைமேலான். (உகரு)

காற்றன்றேற்கடுமையென்னுங்கடலன்றேன்முழக்கமென்னுங்
கூற்றன்றேற்கொலைமற்றென்னுமுருமன்றேற்கொடுமையென்னுஞ்
சீற்றந்தானன்றேற்சீற்றம்வேறொன்றுதெரிப்பதெங்கே
மாற்றன்றேமலைமற்றென்னேமத்தன்றன்மத்தயானை. (உகசா)

வேகமாக்கவிகள்வீசும்வெற்பினம்விழுவமேன்மேற்
பாகர்காற்சிலையிற்றூண்டுமுண்டையாமெனவும்பற்ரு
மாகமாமரங்களெல்லாங்கடாத்திடைவண்டுசேர்வ
தாகுமாமதன்றேற்கரும்பென்றேயறையலாமால். (உகஎ)

காலிடைப்பட்டுமானக்கையிடைப்பட்டுங்கால
வாலிடைப்பட்டும்வெய்யமருப்பிடைப்பட்டுமாண்டு
நாலிடைப்பட்டசேனைநாயகன்றம்பியெய்த
கோலிடைப்பட்டதெல்லாம்பட்டதுகுரங்குச்சேனை. (உகஅ)

தன்படையுற்றதன்மைநோக்கினன்றரிக்கிலாமை
யன்படையுள்ளத்தண்ணலனலின்றன்புதல்வனுழி
வன்படையனையதாங்கோர்மராமாஞ்சுழற்றிவந்தான்
பின்படைசெல்லநள்ளார்பெரும்படையிரிந்துபேர. (உககூ)

சேறுங்களிற்றின்மேலான்றிண்டிறலரக்கன்செவ்வே
யாயிரண்டம்பினாலநெடுமரமறுத்துவீழ்த்தான்
வேறொருகுன்றநீலன்வீசினனதனைவிண்ணி
னூறுவெம்பகழிதன்னாலறுக்கினன்களிறுதாக்கி. (உஉ0)

பின்னெடுங்குன்றந்தேடிப்பெயர்குவான்பெயராவண்ணம்
பொன்னெடுங்குன்றஞ்சூழ்ந்தபொறிவரியரவம்போல
வங்கெடுங்கோபயானையமரரும்வெயர்ப்பவங்கி
தன்னெடுமகனைப்பற்றிப்பிடித்ததுதடக்கைநீட்டி. (௨௨௧)

ஒடுங்கினனுரமுமாற்றலூற்றமுமுயிருமென்னக்
கொடும்படைவயிரக்கோட்டாற்குத்துவான்குறுகுங்காலை
நெடுங்கையுந்தலையும்வீயநொய்தினினிமிர்ந்துபோனா
னடுங்கினரரக்கர்விண்ணோர்நன்றுநன்றென்னநக்கார். (௨௨௨)

தறைத்தலையுற்றுநீலனென்பதோர்காலந்தன்னி
னிறைத்தலைவழங்குஞ்சோரிநீர்த்ததுநெடுங்குன்றென்னக்
குறைத்தலைவேழம்வீழவிசும்பின்மேற்கொண்டுநின்றுன்
பிறைத்தலைவயிரவாளிமழையெனப்பெய்யுங்கையான். (௨௨௩)

வாங்கியசிரத்தின்மற்றைவயிரவான்கோட்டைவவ்வி
வீங்கியவிசையினீலனரக்கன்மேற்செல்லவிட்டா
னாங்கவனவற்றையாண்டோரம்பினாலறுத்தோரம்பா
லோங்கல்போற்புயத்தினான்றனுரத்திடையொளிக்கவெய்தான். (௨௨௪)

எய்ததுகாலமாகவீழ்ந்திலதியானையென்னக்
கையுடைமலையொன்றேறிக்காற்றெனக்கடாவிவந்தான்
வெய்யவனவனைத்தானுமேற்கொளாவில்லினோடு
மொய்பெருங்களிற்றினிட்டான்மும்மதக்களிற்றின்முன்னர். (௨௨௫)

இட்டனனவனின்றுமெழுவதன்முன்னமியானை
கட்டமைவயிரக்கோட்டாற்களப்படவீழ்த்திக்காலால்
வெட்டிவன்றடக்கைதன்னாலெடுத்தெங்கும்விளாவின்வீசப்
பட்டிலன்றானேதன்போர்க்கரியினைப்படுத்துவீழ்த்தான். (௨௨௬)

தன்கரிதானேகொன்றுதடக்கையாற்படுத்துவீழ்த்த
மின்கரிதென்னமின்னுமெயிற்றினான்வெகுளிநோக்கிப்
பொன்கரிதென்னுங்கண்கள்பொறியுகநீலன்புக்கான்
வன்கரமுறுக்கிமார்பிற்குத்தினன்மத்தன்மாண்டான். (௨௨௭)

உன்மத்தன்வயிரமார்பினுருமொத்தகரஞ்சென்றுற்ற
வன்மத்தைக்கண்டுமாண்டமதமத்தமலையைப்பார்த்துஞ்
சன்மத்தின்றன்மையானுந்தருமத்தைத்தள்ளிவாழ்ந்த
கன்மத்தின்கடைக்கூட்டானும்வயமத்தன்கடிதின்வந்தான். (௨௨௮)

பொய்யினும்பெரியமெய்யான்பொருப்பினைப்பழித்ததோளான்
வெய்யனென்றுரைக்கச்சாலத்திண்ணியான்வில்லின்செல்வன்
பெய்கழலரக்கன்சேனையார்த்தெழப்பிறங்குபல்பே
யையிருநூறுபூண்டவாழியந்தேரின்மேலான். (௨௨௯)

ஆர்க்கின்றனலகையெல்லாமதிர்க்கின்றனுருமுமஞ்சப்
பார்க்கின்றான்பொன்றிரளைப்பழிக்கின்றான்பகழிமாரி
தூர்க்கின்றான்குரக்குச்சேனைதூக்கின்றான்றுணிவைநோக்கி
யேற்கின்றாரில்லையென்றுவீடணன்வந்தவனோடேற்றான். (௨௩0)

சென்றவன்றன்னைநோக்கிச்சிரித்துநீசிறியையுன்னை
வென்றவுமும்மையெல்லாம்விளிவனேவிரிஞ்சன்றானே
யென்றவனெதிர்ந்தபோதுமிராவணன்மகனையின்று
கொன்றவன்றன்னைக்கொன்றேகுரங்கின்மேற்கொதிப்பனென்றான். (௨௩௧)

வாய்கொண்டுசொற்றற்கேற்றவலிகொண்டுபலியுண்வாட்கைப்
பேய்கொண்டுவெல்லவர்நயித்தனைமிடுக்கைப்பேணி
நோய்கொண்டுமருந்தைச்செய்யாவொருவனின்றேன்மையெல்லா
மோய்கின்றாய்காண்டியென்றுவுரைத்தனன்வீடணனொல்கான். (௨௩௨)

ஓடுவாயென்னவோடாதுரைத்தியேலுன்றோடின்னே
யாடுவான்வினையாட்டென்றுவயிலெயிற்றரக்கனம்பொற்
கோடுறுவயிரப்போர்விற்காலொடுபெருவங்கோட்டி
யிறவீடணன்மார்பத்தினோர்துபகழியெய்தான். (௨௩௩)

அசம்புடைக்குருதிபாயுமாகத்தான்வேகத்தாலத்
தசம்புடைக்கொடுந்தேர்தன்னைத்தடக்கையாலெடுத்துவீசப்
பசுங்கழற்கண்ணபேயும்பறந்தனபரவைநோக்கி
விசும்பிடைச்செல்லுங்காரின்றுணைபோனான்றமெய்யான். (௨௩௪)

தேரொடுங்கடலின்வீழ்ந்துசிலையுந்தன்றலையுமெல்லாம்
நீரிடையழுந்திப்பின்றுநெருப்பொடுமிரவந்தான்
பாரிடைக்குதியாமுன்னம்வீடணனும்பதகநீபோ
யாரிடைப்புகுதியென்றுவந்தார்த்துவந்தான். (௨௩௫)

அல்லினைத்தழுவிநின்றபகலெனவரக்கன்றன்னைக்
கல்லிறும்வலியதோளாற்கட்டிவிட்டிறுக்குங்காலைப்
பல்லிடைப்பிலவாயூடும்பசும்பெருங்குருதிபாய
வில்லுடைமேகமென்னவிழுந்தனனுயிர்விண்செல்ல. (௨௩௬)

குரங்கிறுக்கரசம்வென்றிக்கும்பனுங்குறித்தவெம்போ
ரங்கிறக்கழகுசெய்யவாயிரஞ்சாரிபோந்தார்
மரங்கொடுந்தண்டுகொண்டுமலையெனமலையாநின்றார்
சிரங்களுங்கரமுமெல்லாங்குலைந்தனர்கண்டதேவர். (௨௩௭)

வேறு.

கிடைத்தாருடலிற்கிழிசோரியைவாரித்
துடைத்தார்விழியிற்றழன்மாரிசொரிந்தா
ருடைத்தாரொடுபைங்கழலார்ப்பவுலாவிப்
புடைத்தார்பொருகின்றனர்கோளரிபோல்வார். (௨௩௮)

தண்டங்கையின்வீசியதாகவரக்க
னண்டங்கள்வெடிப்பனவென்னவடித்தான்
கண்டங்கதுமாமரமேகொடுகாத்தான்
விண்டங்கதுதீர்ந்ததுமன்னன்வெகுண்டான். (௰௯)

பொன்றப்பொருவேனினியென்றுபொருதா
னொன்றப்புகுகின்றதோர்காலமுணர்ந்தா
னின்றப்பெரியோனிளையாதமுனிவன்
குன்றொப்பதோர்தண்டுகொணர்ந்துகொடுத்தான். (௨௰)

அத்தண்டுகொடுத்ததுகைக்கொடமைந்தா
னொத்தண்டமுமஞ்சுநடுங்கவுருத்தான்
பித்தன்றடமார்பொடுதோள்கள்பிளந்தான்
சித்தங்கலைவுங்கவரக்கர்திகைத்தார். (௨௰௧)

அடியுண்டவரக்கனருங்கனன்மின்று
விடியுண்டதோர்மால்வரையென்னவிழுந்தான்
முடியும்மிவனென்பதோர்முன்னம்வெகுண்டா
னொடியும்முனதோளெனமோதியுடன்றான். (௨௰௨)

தோளிற்புடையுண்டயர்சூரியன்மைந்தன்
றுளிற்றடுமாறறவிர்ந்துதகைத்தான்
வாளிக்கடுவல்விசையாலெதிர்மண்டி
யாளித்தொழிலன்னவன்மார்பினறைந்தான். (௨௰௩)

அடியாயிரகோடியின்மேலுமடித்தார்
முடிவாரவரியாரெனவானவர்மொய்த்தா
ரிடியோடிடிகிட்டியதென்னவிரண்டும்
பொடியாயினதண்டுபொருந்தினர்புக்கார். (௨௰௪)

மத்தச்சினமால்களிறென்னமலைந்தார்
பத்துத்திசையுஞ்செவிடெய்தினபல்காற்
றத்தித்தழுவித்திரடோள்கொடுதள்ளிக்
குத்தித்தனிகுத்தெனமார்புகொடுத்தான். (௨௰௫)

நிலையிற்சுடரோன்மகன்வன்கைநெருங்கக்
கலையிற்படுகம்பியர்கூடமலைப்ப
வுலையிற்படிரும்பெனவன்மையொடுங்க
மலையிற்பிளவுற்றதுதீயவன்மார்பம். (௨௰௬)

செய்வாயிகலென்றவனின்றுசிரித்தா
னைவாயரவம்முழைபுக்கெனவையன்
கைவாய்வழிசென்றவனாருயிர்கக்கப்
பைவாய்நெடுநாவைமுனிந்துபறித்தான். (௨௰௭)

அக்காலிரும்பனைற்சொரிசன்னன்
புக்காளிவியெங்கடபோகுவதென்று
மிக்கானெதிரங்கதனுற்றுவெகுண்டா
னெக்காலமுமில்லதோர்பூசலிழைத்தார். (உ௪அ)

சூலப்படையாளிடைவந்துதொடர்ந்தா
ஞாலத்திறும்வெய்யவனங்கதனங்கோர்
தாலப்படைகைக்கொடுசென்றுதடித்தா
னீலக்கிரிமேனியிர்பொற்கிரிநேர்வான். (உ௪௯)

எறிவானிவர்சூலமெடுத்தலுமின்னே
முறிவாவிகலங்கனென்பதன்முன்னே
யறிவானடன்மாருதியற்றமுணர்ந்தான்
பொறிவாலுருதியெனவந்துபுகுந்தான். (உ௫0)

தடையேதமில்சூலமுனிந்துசலத்தால்
விடையேறிகரங்கதன்மேல்விடுவானை
யிடையேதடைகொண்டுதனோடவிழங்கைப்
புடையேகொடுகொன்றடன்மாருதிபோனான். (உ௫௧)

நின்றார்கடுப்பவரின்மைநெரிந்தார்
பின்றுதவர்பின்றிமிரிந்துமிரிந்தார்
வன்றண்மரம்வீசியவானரவீரர்
கொன்றார்மிகுதானையரக்கர்குறைந்தார். (உ௫உ)

ஓடிப்புகுவாயினெருக்கினுலந்தார்
கோடிக்கதிகத்தினுமேலுளர்குத்தாற்
பீடிப்புறுபுண்ணுடலோடுபெயர்ந்தார்
பாடித்தலையுற்றவரொண்ணிலர்பட்டார். (உ௫௩)

தண்ணீர்தருகென்றனர்தாவுறவோடி
யுண்ணீறவாவியுலர்ந்தனருக்கார்
கண்ணீரொடுமாவிகலுழ்ந்தனர்காலால்
மண்ணீரமுறக்கடிதார்புகவந்தார். (உ௫௪)

விண்மேனெடிதோடினராருயிர்விட்டார்
மண்மேனெடுமால்வரையென்னமறிந்தா
ரெண்மேலுயிர்த்துளரீருடயங்கப்
புண்மேலுடைமேனியினர்திசைபோனார். (உ௫௫)

அறியும்மவர்தங்களையயவிவம்மைப்
பறியும்மெனவந்துபறித்தலுமாவி
பிறியும்மவரெண்ணிலர்தம்மனைபெற்றார்
குறியும்பறிகின்றிலர்சிந்தைகுறைந்தார். (உ௫௬)

பரிபட்டுவிழச்சிலர்நின்றுபதைத்தார்
கரிபட்டுருளச்சிலர்கால்கொடுசென்றார்
நெரிபட்டழிதேரிடையேபலர்நின்று
ரெரிபட்டமனக்குளிருந்தவரொன்ன. (உருஎ)

மன்னின்றலைவானரமேனியர்வந்தார்
புன்னின்றவுடற்பொறையோர்சிலர்புக்கார்
கன்னின்றருராங்குலைந்தனவென்று
வுன்னின்றவரக்கர்மலைக்கவுலந்தார். (உருஅ)

வேறு. இருகணுந்திறந்துநோக்கியயலிருந்திரங்குகின்ற
வருகுதங்காதலோரையுன்னுமீருதவுமென்றார்
வருவதன்முன்னமாண்டார்சிலர்சிலர்வந்ததண்ணீர்
பருகுவாரிடையேபட்டார்சிலர்சிலர்பருகிப்பட்டார். (உருகூ)

மக்களைச்சுமந்துசெல்லுந்தாதையர்வழியினுவி
யுக்கனரொன்னவீசித்தம்மைக்கொண்டோடிப்போனார்
கக்கினர்குருதிவாயாற்கண்மணிசிதறிக்காலாற்
றிக்கொடுநெறியுங்காணார்திரிந்துசென்றுயிருந்தீர்ந்தார். (உசூ0)

இன்னதோர்தன்மையெய்தியிராக்கதரிரிந்துசிந்திப்
பொன்னகர்புக்காரிப்பாற்பூசல்கண்டோடிப்போன
துன்னருந்தூதர்சென்றார்தொழுகழலரக்கர்க்கெல்லா
மன்னவனடியில்வீழ்ந்தார்மழையினீர்வழங்குகண்ணார். (உசூக)

நோக்கியவிலங்கைவேந்தனுற்றதுநுவன்மினென்றான்
போக்கியசேனைதன்னிற்புகுந்துளதிறையும்போதா
வாக்கியபோரினையவதிகாயன்முதல்வராய
கோக்குலக்குமரரெல்லாங்கொடுத்தனராவியென்றார். (உசூஉ)

ஏங்கியவிம்மன்மானமிரங்கியவிரக்கம்வீர
மோங்கியவெகுளிதுன்பமென்றிவையொன்றிற்கொன்று
தாங்கியதரங்கமாகக்கரையினைத்தள்ளித்தள்ளி
வாங்கியகடல்போனின்றானருவிநீர்வழங்குகண்ணான். (உசூங)

திசையினைநோக்குமின்றதேவரைநோக்கும்வந்த
வசையினைநோக்குங்கொற்றவாளினைநோக்கும்பற்றிப்
பிசையுறுங்கையைமீசைசுறுக்கொளவுயிர்க்கும்பேதை
நசையிடைக்கண்டாலென்னநகுமழுமுனியுநாணும். (உசூச)

மண்ணினையெடுக்கவெண்ணும்வானினையிடிக்கவெண்ணு
மெண்ணியவுயிர்களெல்லாமொருகணத்தெற்றவெண்ணும்
பெண்ணெனும்பெயரவெல்லாம்பிளப்பனென்றெண்ணுமெண்ணிற்
புண்ணிடையெரிபுக்கென்னமானத்தாற்புழுங்குகின்றான், (உசூரு)

ஒருவருமுரையார்வாயினுயிர்த்திலருள்ளமோய்வார்
வெருவருந்தகையராகிவிம்மினரிருந்தவேலை

தருவனமனையதோளான்றன்னைநீர்தாவிமாலை
யிரியலிட்டலறியோயாப்பூசலிட்டேங்கிலந்தாள். (௨௬௬)

மலைக்குவட்டிடிவீழ்ந்தென்னவனைகளோடாரமோங்கு
முலைக்குவட்டேற்றுங்கையாண்முறைமுறைதிறந்தன்னவாயா
டலைக்குவட்டனைந்தசெக்கர்சரிந்தனகுழல்சடைத்தி
யுலைக்குவட்டுருகுசெம்பொற்றுதிரநீர்வழங்குங்கண்ணாள். (௨௬௭)

வீழ்ந்தனளரக்கன்றன்மேன்மென்மைத்தோணிலத்தைமேவப்
போழ்ந்தனள்பெரும்பாம்பென்னப்புரண்டனள்பொருமிப்பொங்கிச்
சூழ்ந்தனைகொடியாயென்றுந்துடித்தருந்துயரவெள்ளத்
தாழ்ந்தனள்புலம்பலுற்றுளமுக்கண்ணெமதிந்திலாதாள். (௨௬௮)

வேறு.—மாட்டாயோவிக்காலம்வல்லோர்வலிதீர்க்க
மீட்டாயோவீரமெலிந்தாயோதோளாற்றல்
கேட்டாயுணர்ந்திலையோவென்றலையுங்கோளாயோ
காட்டாயோவென்றுடையகண்மணியைக்காட்டாயோ. (௨௬௯)

இந்நாற்குந்தோலாதகன்மகனையின்றுளென்
றந்தாத்துவாழ்வாருமேத்துமணியத்தென்
மந்தாததோளென்மகனைமாட்டாமனிதன்ற
னுந்துசிலைப்பாழிக்குண்ணக்கொடுத்தேனே. (௨௭0)

அக்கனுலந்தானதிகாயன்றுலந்தான்
மிக்கதிறத்துள்ளார்களெல்லாரும்வீடினர்
மக்களினினின்றுளார்வண்டோதரிமகனே
இக்குவிலைசயமினியொருகாற்செய்யாயோ. (௨௭௧)

ஏதையாமிந்திருக்கின்றயெண்ணிறந்த
கோதையார்வேலரக்கர்பட்டாரைக்கூவாயோ
பேதையாய்க்காமம்பிடிப்பாய்பிழைப்பாயோ
சீதையாலின்னம்வருவபிலவேயோ. (௨௭௨)

உம்பியுணர்வுடையான்சொன்னவுரைகேளாய்
நம்பிகுலக்கிழவன்கூறுநலமோராய்
கும்பகருணனையுங்கொல்வித்தென்கோமகனை
யம்புக்கிரையாக்கியாண்டாயரசைய. (௨௭௩)

என்றுபலபலவும்பன்னியெடுத்தழைத்துக்
கன்றுபடப்பிழைத்ததாய்போற்கவல்வாளை
நின்றவுருப்பசியுமேனகையுநேர்ந்தெடுத்துக்
குன்றுபுரையுநெடுங்கோயில்கொண்டணைந்தார். (௨௭௪)

தானநகரத்தரக்கர்தலைமயங்கிப்
போனமகவுடையார்போலப்புலம்பினர்
ஏனமகளிர்கிலையென்றுரும்போயிரங்கி
வானமகளிருந்தம்வாய்திறந்துமாழ்கினர். (௨௭௫)

நாரகலத்துன்னைறவிக்கோயிருசாறு
பேரவுலகுற்றதுற்றதாற்பேரிலங்கை
பூரகலமெல்லாமரந்தையுவாவுற்ற
வார்கலியேயொத்ததழுதகுராலோசை. (௨௭௫)

அதிகாயன்வதைப்படலம்-முற்றிற்று.
ஆ திருவிருத்தம்-௧௧௪௨.
கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

௧௮ - வது — நாகபாசப்படலம்

குழுமிக்கொலைவாட்கணரக்கியர்கூந்தருழத்
தழுவித்தலைப்பெய்துதங்கைகொடுமார்பினெற்றி
யழுவித்தொழிலியாதுகொலென்றேரயிர்ப்புழுற்று
னெழுவித்தனியேறெனவிந்திரசித்தெழுந்தான். (௧)

எட்டாகியதிக்கையும்வென்றவனின்றுமீடு
பட்டான்கொலதன்றெனிற்பட்டழிந்தான்கொல்பண்டு
சுட்டானிவகன்பதியைத்தொடுவேலையோடுங்
கட்டான்கொலிதற்கொருகாரணமென்கொலென்றான். (௨)

கேட்டானிடையுற்றதென்னென்றுகிளத்தலியாரு
மாட்டாதுநடுங்கினர்மாற்றமறந்துநின்று
ரோட்டாநெடுந்தேர்கடிதோட்டியிமைப்பினுற்றான்
காட்டாதனகாட்டியதாதையைச்சென்றுகண்டான். (௩)

கண்டானிறையாறியநெஞ்சினன்கைகள்கூப்ப
வுண்டாயதெனிவ்வழியென்றலுமும்பிமாரைக்
கொண்டானுயிர்காலனுங்கும்பனிகும்பனோடும்
விண்டானடைந்தானதிகாயனும்வீரவென்றான். (௪)

சொல்லாதமுன்னஞ்சுடரைச்சுடர்தூண்டுகண்ணான்
பல்லாலதரத்தையதுக்கிவிண்மீதுபார்த்தா
னெல்லாருமிறந்தனரோவெனவேங்கிநைந்தான்
வில்லாளரையெண்ணில்வீரர்க்குமுன்னிற்கும்வீரன். (௫)

ஆர்கொன்றவரொன்றலும்பேரதிகாயனென்னும்
பேர்கொன்றவன்வென்றியிலக்குவன்பின்புநின்று
ரூர்கொன்றவனுற்பிறராமெனவுற்றதெல்லாந்
தார்கொன்றையினன்கிரிசாய்த்தவன்றானுரைத்தான். (௬)

கொன்றாரவரோகொலைசூழ்கெனநீகொடுத்தாய்
வன்றானையர்மானிடர்வன்மையதின்றுமன்று
வென்றானுமெனச்செலவேவலையிற்றதென்று
நின்றானெடிதுன்னிமுனிந்தநெருப்புயிர்ப்பான். (௭)

அக்கப்பெயரோனிலைத்தொடைத்தளானை
விக்கற்பொருதவனென்றுவிளம்பிவிட்டாய்
புக்கத்தலையெய்தவினைக்கிலைபுத்தியில்லாய்
மக்கட்டுணையற்றனையிற்றதன்வாட்கைமென்றோ. (௮)

என்னின்றுவினைத்தமியம்பியுமெண்ணியுந்தான்
சொன்னின்றபடைக்கலத்தெம்பியைக்கொன்றுளானை
பன்னின்றவிலத்தவனுக்கையைநீக்கியல்லால்
மன்னின்றநகர்க்கினியானலன்வாழ்வும்வேண்டேன். (௯)

மாற்றுவயிரொம்பியைமாற்றியமானிடன்ற
னாற்றார்குருதிப்புனல்பார்மகனுண்டிலானே
லேற்றுனிகலிந்திரனிருகாலெனக்கே
தோற்றான்றனக்கென்னெடுஞ்சேவகந்தோற்கவென்றான். (௧௦)

வெங்கண்ணெடுவானரத்தானையைவீற்றுவீற்றாய்ப்
பங்கம்முறநூறியிலக்குவனைப்படேனே
லங்கந்தாவந்திசெயன்றுணைகடக்கிலாத
செங்கண்ணெடுமான்முதற்றேவர்சிரிக்கவென்னை. (௧௧)

பாம்பிற்றருவெம்படைபாசுபதத்திறேடுந்
தேம்பற்பிறைசென்னிவைத்தான்றருதெய்வவேதி
யோம்பித்திரிந்தேற்கினியின்றுதவாதுபோமேற்
சோம்பித்துறப்பன்றுயிர்சோறுமுகந்துவாழேன். (௧௨)

மருந்தேநிகரெம்பிதன்றாருயிர்வவ்விறானை
விருந்தேயெனவந்தகற்கிலென்வில்லுமேந்திப்
பொருந்தேவர்குழாநகைசெய்திடப்போந்துபாரி
லிருந்தேனெனினானிராவணியல்லனென்றான். (௧௩)

ஏகாயிதுசெப்பெனநின்னலைநீக்கிடெந்தைக்
காகாதனவும்முளவோவெனக்காற்றலார்மேல்
மாகால்வரிவெஞ்சிலையோடும்வளைத்தபோது
சேகாருமென்றெண்ணியிவ்வின்னலிற்சிந்தைசெய்தேன். (௧௪)

என்றானைவணங்கியிலங்கயில்வாளுமார்த்திட்
டொன்றாலுமருவுருவாவுடற்காவலோடும்
பொன்றாழ்கனையின்னெடும்புட்டில்புறத்துவீக்கி
வன்றாள்வயிரச்சிலைவாங்கினன்வானைவென்றான். (௧௫)

வயிரந்நெடுமால்வரைகொண்டுமலர்க்கண்வந்தான்
செயிரொன்றுமுறுவகையிந்திரற்கென்றுசெய்த
வுயர்வெஞ்சிலையச்சிலைபண்டவன்றன்னையோட்டித்
தயரின்றலைவைத்திவன்கொண்டதுதோற்றமீதால். (௧௬)

தோளிற்கணைப்புட்டிலுமிந்திரன்ரேற்றநாளே
யாளித்திறலன்னவன்கொண்டனவாழியேழு
மாளப்புனல்வற்றிலும்வாளிவருந்தவன்கட்
கூளிக்கொடுங்கூற்றினுறையதோர்கூடுபோல்வ. (௧௭)

பல்லாயிரகோடிபடைக்கலம்பண்டுதேவ
ரொல்லாருமுனித்தலையாவருமீந்தமேரு
வில்லாளர்கொடுத்தவிரிஞ்சனளித்தமெய்மை
யல்லாற்புரியாதனயாவையுமாய்ந்துகொண்டான். (௧௮)

நூறாயிரமாளியினேன்மைதெரிந்தசீயத்
தேறுமவையன்னவையாயிரம்பூண்டதென்ப
மாறாயொரிலங்கைநிகர்ப்பதுவானுளோருந்
தேறாததுமற்றவனேறியதெய்வமாத்தேர். (௧௯)

பொன்சென்றறியாவுவணத்தனிப்புள்ளினுக்கு
மின்சென்றறியாமழுவாளன்விடைக்குமேனாட்
பின்சென்றதல்லாலோர்பெருஞ்சிறப்புற்றபோது
முன்சென்றறியாததுமூன்றுலகத்தினுள்ளும். (௨௦)

ஏயாத்தனிப்போர்வலிகாட்டியவிந்திரன்றன்
சாயாப்பெருஞ்சாய்கெடத்தாம்புகளாற்றடந்தோள்
போயார்த்தவன்வந்தனன்வந்தனனென்றுபூசற்
பேயார்த்தெழுந்தாடுநெடுங்கொடிபெற்றதம்மா. (௨௧)

செதுகைப்பெருந்தானவருனெடுந்தேய்த்தநேமி
யதுகைத்திசையானையையோட்டியதென்னலாமே
மதுகைத்தடந்தோள்வலிகாட்டியவானவேந்தன்
முதுகைத்தழும்பாக்கியமொய்யொளிமொட்டதம்மா. (௨௨)

அத்தேரினையேறியதொப்பனவாயிரந்தே
ரொத்தேய்வனசேமமதாய்வரவுள்ளம்வெம்போர்ப்
பித்தேறினனென்னநடந்தனன்பின்பலான்மற்
றெத்தேவரையும்முகங்கண்டறியாதவீட்டான். (௨௩)

அன்னானொடுபோகியதானையறிந்துகூற
வென்னாலரிதேனுமியம்புவான்மீகனென்னு
நன்னான்மறையானதுநாற்பதுவெள்ளமென்னச்
சொன்னான்பிறரியாரஃதுணர்ந்துதொகுக்கவல்லார். (௨௪)

தூமக்கணரக்கனுந்தொல்லமர்யார்க்குந்தோலா
மாபக்கனுமங்நெடுந்தேர்மணியாழிகாக்கத்
தாமக்குடைமீதுயரப்பெருஞ்சங்கம்விம்ம
நாமக்கடற்பல்லியமார்ப்பநடந்மேலுமார்ப்ப. (௨௫)

தேராயிரமாயிரகோடிதன்மாடுசெல்லப்
போரானைபுரத்தினைவற்றிவிரட்டிபோதத்
தாரார்ப்புரவிக்கடல்பின்செலத்தானைவீரர்
போராழிமுகஞ்செலச்சென்றனன்பேர்ச்சியில்லான். (௨௬)

வேறு.

நின்றனவிலக்குவன்களத்தைநீங்கலன்
பொன்றினனிராவணன்புதல்வன்போர்க்கினி
யன்றவனல்லனேலமார்வேந்தனை
வென்றவன்வருமெனவிரும்புஞ்சிந்தையான். (௨௭)

யாரிவன்வருபவனியம்புவாயென
வீரவெந்தொழிலினன்விளம்பவீடணை
னாரியவிவனிகலமார்வேந்தனைப்
போர்கடந்தவனின்றுவலிதுபோவென்றான். (௨௮)

என்னினதுணர்த்துவதுளதொன்றெம்பிரான்
கன்னகன்பெரும்படைத்துணைவர்காத்திட
நன்னினதுவினையொடுபொருதனென்றிது
இன்னிதினுணர்தியாற்றெளியுஞ்சிந்தையாய். (௨௯)

மாருதிசாம்பவன்வானரேந்திரன்
முனைசெய்நீலனென்றினையதன்மையார்
வீரர்வந்துடனுறவிமலநெடும்
போர்செயத்தகுதியாற்புகழின்பூணினாய். (௩௦)

பல்பதினாயிரந்தேவர்பக்கமா
வெல்லையில்சேனைகொண்டெதிர்ந்தவிந்திர
னெல்லையிலுடைந்தனனுயிர்கொண்டுய்ந்துளான்
மல்லலந்தோளினாயமுதின்வன்மையால். (௩௧)

இனியவைமறையுமோவிந்திரன்புயப்
பனிவரையுளநெடும்பாசப்பஃறழும்
பனுமலைப்பிணித்தனனனைபோதவன்
றதுமறைவித்தகன்றடுக்கற்பாலதோ. (௩௨)

என்றவனிறைஞ்சலுமினையவள்ளலு
நன்றெனமொழிதலுநணுகினனரோ
வன்றிறன்மாருதியிலங்கைக்கோமகன்
சென்றனனிளவன்மேலென்னுஞ்சிந்தையான். (௩௩)

சுற்றமுங்கட்புலம்புதைப்பக்கோத்தெழு
தோற்றமுமிராவணிதுணிபுநோக்குறு
மேற்றிசைவாயிலைவிட்டுவெங்கடுங்
காற்றெனவனுமனுங்கடிதின்வந்தரோ. (௩௪)

அங்கதன்முன்னரோயாண்டையானையத்
துங்கவெண்கேழுவினொவருஞ்சுற்றினார்
செங்கதிரோன்மகன்முன்புசென்றனன்
சங்கிர்கடலெனத்தழீஇயதானையான். (௧௫)

இருதிணைப்பெருங்கடலிரண்டுதிக்கினும்
பொருதொழில்வேட்டுவந்தார்த்துப்பொங்கின
வருவனபோன்றன மனத்தினாற்சினந்
திருகினவெதிரெதிர்செல்லுஞ்சேனையே. (௧௬)

கண்ணினான்மனத்தினாற்கருத்தினாற்றெரிந்
தெண்ணினாற்பெறுபயனெய்துமின்றென
நண்ணினாரிமையவர்நங்கைமாரொடும்
விண்ணினாடுறைவிடம்வெறுமைகூரவே. (௧௭)

ஒத்திருதானையுமுடற்றவுற்றுழி
யத்தனைவீரருமார்த்தவார்கலி
நத்தொலிமுரசொலிநடுக்கலாற்றலை
பொத்தினர்செவிகளைப்புரந்தராதியர். (௧௮)

எற்றுமின்பற்றுமினெறிமினெய்மினென்
றுற்றனவுற்றனவுரைக்குமோதையு
முற்றுறுகடையுகத்திடியின்மும்மடி
பெற்றனபிறந்தனசிலையின்பேரொலி. (௧௯)

கற்படமரம்படக்காலவேல்பட
விற்படுகணைபடவீழும்வீரர்த
மெற்படுமுடல்படவிரண்டுசேனையும்
பிற்படநெடுநிலம்பிளந்துபேருமால். (௨0)

எழுத்துடர்மரங்களாலெற்றமுற்றிய
விழுத்தலைமுழுவதுஞ்சிதறிவீழ்ந்தன
வழுந்தியபெருஞ்சினத்தரக்கராக்கைகள்
கழுத்துளதலையிலகளத்தினாடுவ. (௨௧)

வெட்டியதலையினரம்புவீசமேல்
முட்டியகுருதியகுரங்கின்மொய்யுடல்
சுட்டியர்நெடுவனந்துலைந்தபின்னெடுங்
கட்டைகளெரிவனபோன்றுகாட்டுவ. (௨௨)

பிடித்தனநிருதரைப்பெரியதோள்பெயர்த்
தொடித்தனகால்விசைத்துதைத்தவுந்தின
கடித்தனகழுத்தரக்கைகளாலெடுத்
தடித்தனவரைத்தனவார்த்தவானரம். (௨௩)

வாள்களிற்கவிக்குலவீரர்வார்கழற்
றாள்களைத்துணித்தனர்தலையைத்தள்ளினர்
தோள்களைப்பிரித்தனருடலைத்துண்டவன்
போழ்களிற்புரட்டினர்நிருதர்பொங்கினார். (௪௪)

மரங்களிலரக்கரைமலைகள்போன்றுயர்
சிரங்களைச்சிதறினவுயிரைச்சிந்தின
கரங்களைக்கழல்களையொடியக்காதின
குரங்கெனப்பெயர்கொடுதிரியுங்கூற்றமே. (௪௫)

சுடர்த்தலைநெடும்பொறிசொரியுங்கண்ணன
வடற்றலைநெடுமரமற்றகையன
வுடற்றலைவயிரவேலுருவவுற்றவர்
மிடற்றினைக்கடித்துடன்விளிந்துபோயின. (௪௬)

அடர்ந்தனகிரிகளையசனியேறெனத்
துடர்ந்தனமழைபொழிதும்பிக்கும்பங்க
ளிடந்தனமூளைகளினிதுண்டன
கடந்தனபசிகளைக்காடிகாறுவ. (௪௭)

கொலைமதகரியனகுதிரைமேலன
வலர்மணித்தேரனவாளின்மேலன
சிலைகளின்குடுமியசிரத்தின்மேலன
மலைகளிற்பெரியனகுரங்குவாவுவ. (௪௮)

வேறு.

தண்டுகொண்டரக்கர்தாக்கச்சாய்ந்துகுநிலையசந்திற்
றுண்டங்களாகவாளிற்றுணிந்தபேருடலைத்தூவிக்
கொண்டெழுமலைகளோடுங்குரக்கினப்பிணத்தின்குப்பை
மண்டுவெங்குருதியாறம்மறிகடன்மடுத்தமாதோ. (௪௯)

பணிவென்றபதாகையென்றும்பல்லுளைப்பரிமாவென்றுந்
தனுவென்றும்வாளியென்றுந்தண்டென்றுந்தனிவேலென்றுஞ்
சினவென்றிமதமாவென்றுந்தேரென்றுந்தெரிந்ததில்லை
யனுமன்கைவயிரக்குன்றாலைப்புண்டவரக்கர்தானை. (௫௦)

பொங்குதேர்புரவியானைபொருகழனிருதரொன்றுஞ்
சங்கையுமில்லாவண்ணந்தன்னுளேதழுவக்கூற்ற
மெங்குளவுயிரொன்றெண்ணியிணைக்கைகழித்ததென்ப
வங்கதன்மரங்கொண்டெற்றவளறுபட்டழிந்ததானை. (௫௧)

தாக்கியதிசைகடோறுந்தலைத்தலைமயங்கித்தம்மி
னூக்கியகளிறுந்தேரும்புரவியுநூழில்செய்ய
வாக்கியசெருவைநோக்கியமரரோடசுரர்போரைத்
தூக்கினர்முனிவரொன்னாயிதற்கதுதோற்குமென்றார். (௫௨)

எடுத்ததுநிருதர்தானையிரிந்ததரக்கனிட்டந்
தடுத்தனர்முகங்கடோங்கித்தனித்தனிதலைவர்தள்ளிப்
படுத்தனராக்கர்வேலைபட்டதும்படவும்பாரார்
கடுத்தனர்கடுத்தபின்றுங்காத்தனர்கவியின்வீரர். (௫௩)

சூலமுமழுவுந்தாங்கித்தோளிருநான்குந்தோன்ற
மூலம்வந்துலகையுண்ணுமுருத்திரமூர்த்தியென்ன
நீலனின்றுழியேயின்றுனிரந்தரங்கணங்களோடுங்
காலனென்றொருவனியாண்டும்பிரிந்திலன்பாசக்கையான். (௫௪)

காற்றல்லன்புனலோவல்லன்கனலல்லனிரண்டுகையா
லாற்றலனூற்றுகின்றவருஞ்சமமிதுவேயாகி
லேற்றமென்பலவுஞ்சொல்லியென்பதமிழ்த்தேனென்னக்
கூற்றமுங்குலுங்கியஞ்சவெங்கதக்குமுதன்கொன்றான். (௫௫)

மறிகடல்புடைசூழ்வைப்பின்மானவன்வாளிபோன
செறிபணைமரமேயின்றமரங்களிற்றெரியச்செப்புங்
குறியுடைமலைகடம்மிற்குலவரைக்குலமேகொள்க
வெறிதலோடறைதல்வேட்டவிடவனன்றெடுத்திலாத. (௫௬)

வாம்பரிமதமாமான்றேர்வாளெயிற்றரக்கர்மாயப்
பாம்பினும்வெய்யோர்சாலப்படுகுவர்பயமின்றின்றே
தூம்புறழ்குருதிமண்டத்துடர்நெடுமரங்கள்சுற்றிச்
சாம்பவன்கொல்லச்சாம்புமென்றுரையமரர்தந்தார். (௫௭)

பொருங்குலப்புரவியானதிரைகளுங்கலம்பொற்றேரு
மிருங்களியானையானமகரமுமிரியல்போக
நெருங்கியபடைகளானமீன்குலமிரிந்துசிந்தக்
கருங்கடல்கலக்குமத்திற்பனசனுங்கலக்கிப்புக்கான். (௫௮)

மயிந்தனுமிளவனுமழைக்குலங்கிழித்துவானத்
துயர்ந்தெழுமெருவைவேந்தருடன்பிறந்தவனையொத்தார்
கயங்குடைந்தாடும்வீரக்களிறொத்தான்கவையன்காலிற்
பெயர்ந்திலனூற்றதல்லாற்கேசரிபெரும்போர்பெற்றான். (௫௯)

பெரும்படைத்தலைவரியாரும்பெயர்ந்திலர்பிணத்தின்குப்பை
வரம்பிலபரம்பியார்த்துமலைகின்றபொழுதின்வந்துற்
றிரிந்தனகவியுங்கூடியெடுத்தனவெடுத்தலோடுஞ்
சரிந்ததுநிருதர்தானைதாக்கினனரக்கன்றானே. (௬0)

வேறு.

பூணெறிந்தகுவடனையதோள்களிருபுடைபரந்துயரவடல்வலித்
தூணெறிந்தனையவிரல்கள்கோதையொடுசிலையெறிந்ததொருதொழில்படச்
சேணெறிந்துவிழிதிசைகளோடுமலைசெவிடெறிந்துடையமிடல்வலோ
னூணெறிந்துமுறைமுறைதொடர்ந்துகடலுலகமியாவையுநடுக்கினன். (௬௧)

சிங்கவேறுகடல்போன்முழங்கியிமிர்தேர்கடாய்நெடிதுசெல்கெனு
வங்கதாதியாருங்கவானவர்களஞ்சவெஞ்சினவனந்தன்மாச்
சங்கபாலருளிகாலியாலெயிறுதந்தநிவிடமுமிழ்ந்துசேர்
வெங்கணாகமெனவேகமாயுருமுமஞ்சவெங்கணைகள்சிந்தினன். (௬௨)

சுற்றும்வந்துகவிவீரர்வீசியசுடர்த்தடங்கல்வரைதொன்மா
மிற்றெரிந்துபொடியாயுதிர்ந்தனவெழுந்துசேணிடையிழிந்தபோல்
வெற்றிவெங்கணைபடப்பட்டதலைகள்விண்ணினூடுதிசைமீதுபோ
யற்றெழுந்தனவிழுந்துமண்ணிடையழுந்துகின்றனவனந்தமால். (௬௩)

சிலைத்தடம்பொழிவயக்கடும்பகழிசெல்லவொல்கினர்சினத்திரு
துலைத்தெரிந்திடவெடுத்தகுன்றுதொடுடற்பரங்கள்கொடொதுங்கினர்
நிலைத்துநின்றுபினமுந்துசெல்லவெதிர்சென்றுசென்றுறநெருக்கலான்
மலைத்தலங்களொடிரத்தலங்கழலலூடுசென்றபலவாளியே. (௬௪)

முழுத்தமொன்றிலொருவெள்ளவானரமுடிந்துமாள்வனதடிந்துபோய்க்
கழுத்தலையெயிமிர்காலவாலபலகண்டமானபடிகண்டுநே
ரெழுத்தடர்ந்தபடர்தோள்களாலெறியவெற்றவுற்றனவெழுந்துமேல்
விழுத்தபைந்தலையவேறுமால்வரைகள்விசிவிசியுடன்வீழுமால். (௬௫)

அற்றபைந்தலையரிந்துசென்றனவயிற்கடுங்கணைவெயிற்கள்போற்
புற்றடைந்தகொடுவெவ்வராவினெடுநாகலோகமதுபுக்கவால்
வெற்றவெள்ளிடைவிரிந்துபோவதொருமேடுபள்ளம்வெளியின்மையா
லுற்றசெங்குருதிவெள்ளமுள்ளதிரையோதவேலையொடுமொத்ததால்.

விழிக்குமேல்விழியவிற்கின்மார்பிடையமீளுமேன்முதுகைமேனியைக்
கழிக்குமேதுயரவோடுமேனெடியகால்கள்வீசியிமிர்கையவாய்த்
தெழிக்குமேலகவுராவுசிந்தையினவன்றுமேற்சிகரமியானையும்
பழிக்குமேனியருராக்கின்மேலவன்விடுங்கொடும்பகழிபாயவே. (௬௭)

மொய்யெடுத்தகணைமாரியாலிடைமுடிந்ததொன்றுமுறைகண்டிலா
ரெய்விடத்தெரியுநாணிரோசையலதியாதுமொன்றுசெவியுற்றிலார்
மெய்யெடுத்தகவிவெள்ளமியாவையும்விழுந்துபோனவெறும்விம்மலாற்
கையெடுத்தனருரங்கிறேடுமுறைகண்டுதேவர்கள்கலங்கினர். (௬௮)

கண்டவானரமநந்தகோடிமுறைகண்டமானபடிகண்டவக்
கண்டமாருருவரின்மைகண்டுகணைமாறினன்விடுதலின்மையாய்க்
கண்டகாலையில்விலங்கினனிரவிகாதல்காதுவதொர்காதலாற்
கண்டகார்சிலைதயமீதயர்ந்தொளிர்மராமரஞ்சலவுகையினன். (௬௯)

உடைக்குதன்படையுலைந்துசிந்தியுயிரொல்கவெல்செருவடற்றலாற்
கடைந்தவெள்ளமுதுகொள்ளும்வள்ளலெனமேனியிர்ந்ததொர்கருப்பினு
லிடைக்குசென்றவினையெய்தியெய்தரியகாவல்பெற்றிகலியற்றுவான்
மிடைக்குநின்றபடைவேலைகாறளாவீசினனிருதர்கூசினர். (௭௦)

சுற்றுநின்றபடைசிந்தியோடவோர்மாமரங்கொடுதுகைத்துளான்
வெற்றிகண்டுவலிநன்றுநன்றெனவியந்துவெங்கணைதெரிகுவா
னெற்றியின்றலையிரண்டுமார்பிடையொரைஞ்சுமைஞ்செனநிறுத்தவன்
பற்றிவந்தமராம்வேறுவேறுறநுறுக்கிநுண்பொடிபாப்பினான். (௭௧)

அக்கணத்தனுமனுலகாலமெனலாயதோர்வெகுளியாயினான்
புக்கனைத்துலகமுங்குலுங்கவிமிர்தோள்புடைத்துருமுபோலரு
விக்கணத்தவனிறக்குமென்பதொருகுன்றெடுத்துமிசையேவினா
னுக்கதக்கிரிசொரிந்தவாளிகளினூழிலாதசிறுபூழியாய். (௭௨)

நில்லடாசிறிதுநில்லடாவுனைநினைத்துவந்தனன்முனைக்குநான்
வில்லெடாமையினதாண்மைபேசியுயிரோடுநின்றுவினையாடினாய்
கல்லெடாநெடுமரங்களோவருகருத்தினேன்வலிகடக்கவோ
சொல்லடாவெனவியம்பினானிகலரக்கனையனிவைசொல்லினான். (௭௩)

வில்லெடுக்கவுரியார்களையசிலவீரரிங்குமுளர்மெல்லியோய்
கல்லெடுக்கவுரியானுநின்றனனதின்றுநாளையிடைகாணலா
மெல்லெடுத்தபடையிந்திராதியருனக்கிடைந்துயிர்கொடேகுவார்
புல்லெடுத்தவர்களல்லம்வேறுசிலபோரொடுத்தெதிர்புகுந்துளேம். (௭௪)

என்னொடேபொருதியோவதன்றெனிலக்குவப்பெயரினெம்பிரான்
றன்னொடேபொருதியோவுனுந்தைதலைதள்ளநின்றதனிவள்ளலா
மன்னொடேபொருதியோவுரைத்தருமறுக்கிலேமெனவழங்கினான்
பொன்னொடேபொருவினல்லதொன்றொடுபொருப்படாவுயர்புயத்தினான்.

எங்குநின்றனனிலக்குவப்பெயரவ்வேழையெம்பியதிகாயனாஞ்
சிங்கம்வந்தவனைவென்றுதன்னுயிரெனக்குவைத்ததொர்சிறப்பினா
னங்கவன்றனைமலைந்துகொன்றுமுனிவாறவந்தனனதன்றியு
முங்கடன்மையினடங்குமோவுலகொடுக்கும்வெங்கணைதொடுப்பினே (௭௬)

ஆருமென்படைஞரொய்தலின்றியயலேகயானுமிகல்வில்லுமோர்
தேரினின்றுமையடங்கலுந்திரள்சிரந்துணிப்பனிதுதிண்ணமால்
வாருமுங்களுடன்வானுளோர்களையுமண்ணுளோரையும்வரச்சொலும்
போருமின்றொருபகற்கணேபொருதுவெல்வனென்றலதுபோகிலேன்.

என்றுவெம்பகழியேழுநூறுமிருநூறும்வெஞ்சிலைகொடேவினான்
குன்றுநின்றனையவீரமாருதிதன்மேனிமேலவைகுழுக்களாய்ச்
சென்றுசென்றுருவலோடும்வாளெயிறுதின்றுசீறியொருசேமவன்
குன்றுநின்றதுபறித்தெடுத்தவனையெய்திநொய்திலிதுகூறினான். (௭௮)

தம்பியென்றுலகினுள்ளயாவையவ்வவையேவையுந்தொகுதிதள்ளுதாள்
வெம்புவெஞ்சினமடங்கலொன்றின்வலிதன்னைநின்றெளிதின்வெல்லுமோ
நம்பிதம்பியெனதெம்பிரான்வருதுணைத்தரிக்கிலைநலித்திடேய
லம்பின்முந்தியுனதாவியுண்ணுமிதுகாவடாசிலைவலாண்மையால். (௭௯)

செருப்பயிற்றியதடக்கையாளிசெலவிட்டருந்துதிசையானையின்
மருப்பையுற்றதிடபோனிராவணன்மகன்றன்மார்பிலுயர்வச்சிரப்
பொருப்பையுற்றதொர்பொருப்பெனக்கடிதொடிந்திடிந்துதிசைபோயதா
னெருப்பையுற்றதொரிரும்புகூடமுறநீறுபட்டதுமிகர்த்தவால். (௮௦)

விலங்கன்மேல்வரவிலங்கவீசியவிலங்கனீறுபடுவேலையிற்
சலங்கைமேவிபிரவெஞ்சினத்திருவெஞ்சன்மேனிகர்தருக்கினுல்
வலங்கொள்பேருலகமேருவோடெனமதிக்குமாருதிதன்வாசகா
றலங்கன்மார்பினெடுதோளினேறுருவவாயிரஞ்சரமழுத்தினுன். (௮௧)

ஒன்றுபோல்வனவொராயிரம்பகழியூடுபோயுருவவாடகக்
குன்றுகால்குடையமேலுயர்ந்திடைகுலுங்குகின்றனையகொள்கையான்
மன்றலுற்றதடமேனிமேலுதிரவாரிசோரவருமாருதி
நின்றதேறுமனவின்கண்வெங்கண்விழிநீலன்வந்திடைநெருக்கினுன். (௮௨)

நீலனின்றதொருநீலமால்வரைநெடுந்தடக்கையினிடந்துநேர்
மேலெழுந்தரிவிசும்புசெல்வதொருவெம்மையோடுவரவீசலுஞ்
சூலமந்தகனெடுந்தன்னதுணிந்துசிந்தவிடைசொல்லுறுங்
காலமொன்றுமறியாமலம்புகொடுகல்லினுனெடியவில்லினுன். (௮௩)

நாகமெங்குமுயிரோடுமின்றனவுமோடவானவர்களுள்ளமு
மோகமெங்குமனவாகமேருவினுமும்மடங்குவலிதிண்மைசா
லாகமெங்கும்வெளியாகவெங்குருதியாறுபாயவனலஞ்சுவாய்
நாகவெங்கணைகுவாளிபாய்தொறுநடுங்கினுன்மலைபிடுங்கினுன். (௮௪)

மேருமேருவெனவல்லவல்லவெனவேரிலேறுநெடுவெற்பெலா
மாரின்மேலுமுயர்தோளின்மேலும்வரவாலிகாதலன்வழங்கினுன்
சேருமேயவைதறுக்கைகிற்கவெதிர்செல்லுமேகடிதுசெல்லினும்
பேருமேகொடியவாளியான்முறிபெறுக்கலாவவைநுறுக்கினுன். (௮௫)

நெற்றிமேலுமுயர்தோளின்மேலுநெடுமார்பின்மேலுமிமிர்தாளினும்
புற்றினூடுநுழைநாகமன்னபுகைவேகவாளிகள்புகப்புகத்
தெற்றிவாளெயிறுதின்றுகைத்துணைபிசைந்துகண்களெரிதியுக
வற்றிலேறுதிரவாரிசோர்வுறமயங்கினுனிலைமுயங்கினுன். (௮௬)

மற்றைவீரர்கடமார்பின்மேலுமுயர்தோளின்மேலுமழைமாரிபோற்
கொற்றவெங்கணையுலக்கவெய்தவைகுளிப்பவின்றுடல்குலுங்கினு
ரிற்றவிந்ததுபெரும்பதாதியுயிருள்ளவெங்கணுமிரிந்தவப்
பெற்றிகண்டிலையவள்ளலொள்ளெரிபிறந்தகண்ணனிவைபேசினுன். (௮௭)

வேறு.

பிழைத்ததுகொள்கைதபோதப்பெரும்படைத்தலைவர்யாரு
முழைத்தனர்குருதிவெள்ளத்தலந்ததுமூலப்பிற்றன்றே
யழைத்தியன்றன்னையானேயாருயிர்கொளப்படாதே
பிழைத்தபழுதேயன்றேவீடணவென்னச்சொன்னுன். (௮௮)

அய்யவிதன்னதேயாலாயிரகோடிதேவ
ரெய்தினரெய்திருரோயிடுபட்டிரிந்ததல்லாற்
செய்திலரிவனையொன்றுமீயிருதிர்ப்பினல்லா
துய்திறலுண்டோவேதிவ்வுலகிறுக்குயிரோடென்றான். (௯)

என்பதுசொல்லக்கேட்டவிந்திரவில்லினோடும்
பொன்பொருமேகமொன்றுவருவதுபோல்கின்றானை
முன்பனைமுன்புநோக்கியிவன்கொலாம்பாதன்முன்றோன்
றன்பெருந்தம்பியென்றானுமெனச்சாரன்சொன்னான். (௧௦)

தீயவனிவனன்மேற்செல்வதன்முன்னஞ்செல்கென்
றேயினரொருவரின்றியிராக்கதத்தலைவரெங்க
ணாயகன்மகனைக்கொன்றாய்நண்ணினைநாய்கள்காணப்
போயினியுய்வதெங்கேயென்றெரிவிழித்துப்புக்கார். (௧௧)

கோடிநூறமைந்தகூட்டத்திராக்கதர்கொடித்திண்டேரு
மாடன்மாக்களிறுமாவுங்கடாவினரார்த்துமண்டி
மூடினார்முடினாமுறைமுறைதுணித்துவாகை
சூடினானிராமன்பாதஞ்சூடியதோன்றறம்பி. (௧௨)

அதிர்ந்தனவுலகமேழுமனற்பொறியசனியென்னப்
பிதிர்ந்தனமலையும்பாரும்பிளந்தனபிணத்தின்மேன்மே
லுதிர்ந்தனதலைகண்மண்டியோடினவுதிரநீத்தம்
விதிர்ந்தனவமரர்கைகள்விளைந்ததுகொடியவெம்போர். (௧௩)

விட்டனன்விசிகம்வேகம்விடாதனவீரன்மார்பிற்
பட்டனவுலகமெங்கும்பரந்தனபதாகைக்காட்டைச்
சுட்டனதுரகராசிதுணித்தனபணைக்கைமாவை
யட்டனகூற்றமென்னவடர்ந்தனவனந்தமம்மா. (௧௪)

உலக்குனருலக்கின்றாரையெண்ணுவானுற்றவிண்ணோர்
கலக்குறுகண்ணர்நோக்கிக்கடையுறக்காணலாற்றார்
விலக்கரும்பகழிமாரிவிளைக்கின்றவிளைவையுன்னி
யிலக்குவன்சிலைகொடேகொலெழுமழைபயின்றதென்றார். (௧௫)

மீளியொண்கணைகடோறுமூர்தியவேழமொற்றை
வாளியின்றலையபாரின்மறிவனமலையிற்சூழ்ந்த
வாளியின்றுப்பின்வீரர்பொருகளத்தார்த்தவாழித்
தூளியின்றொகையவள்ளல்சுடுகணைத்தொகையுமம்மா. (௧௬)

பிறவியிற்பெரியநோக்கிற்பிசிதமுண்டுழலும்பெற்றிச்
சிறையனவென்னநோக்கித்தேவருந்திகைக்கத்தேற்றித்
துறைதொறுந்தொடர்ந்துவானம்வெளியறத்துவன்றிவீழும்
பறைவையிற்பெரிதுப்பட்டார்பிணத்தின்மேற்படிவமாதோ. (௧௭)

திறந்தருகவியின்சேனைசெறிகழலிருதன்றே
விறந்தனகிடந்தவெள்ளமெழுபதிற்பாதிமேலும்
பறந்தலைமுழுதும்பட்டவஞ்சகர்படிவமூடி
மறைந்ததாருதியோடிமறிகடன்மடுத்திலாத. (௯௮)

கையற்றார்கால்களற்றார்கழுத்தற்றார்கவசமற்றார்
மெய்யற்றார்குடர்கள்சோரவிசையற்றார்விளிவுமற்றார்
மையற்றார்க்கரியுந்தேரும்வாசியுமற்றுமற்றா
ருய்யச்சாய்ந்தோடிச்சென்றுருயிருள்ளாராகியுள்ளார். (௯௯)

வற்றியகடலுமின்றமலையெனமருங்கின்யாருஞ்
சுற்றினரின்றித்தோன்றுந்தசமுகன்றேன்றதுள்ளித்
தெற்றினபுருவத்தோன்றன்மனமெனச்செல்லுந்தேரா
னுற்றனவிளையகோவையுருமனுமுடன்வந்துற்றான். (௧௦௦)

தோளின்மேலாழியையவென்றடிதொழுதுநின்று
றூளிபோன்மொய்ம்பினனுமேறினனமரரார்த்தார்
காளியையனையகாலன்கொலையனகனலின்வெய்ய
வாளிமேல்வாளிதூர்த்தார்மழையின்மேன்மழைவந்தன்னார். (௧௦௧)

இடித்தனசிலையினாண்களிரிந்தனதிசைகளிற்று
வெடித்தனமலைகள்விண்டுபிளந்தனவிசும்புமேன்மேற்
பொடித்தனவிவ்வுலகமெங்கும்பொழிந்தனபொறிகள்பொங்கிக்
கடித்தனகணைகளோடுங்கணைகடம்மயில்வாய்கவ்வி. (௧௦௨)

அம்பினோடம்பொன்றொன்றையறுக்கமற்றறுக்கிலாத
வெம்பொறிகதுவவிண்ணில்வெந்தனகரிந்துவீழ்ந்த
வம்பருமுணர்வுசிந்தவொடுங்கினருலகமியாவுங்
கம்பமுற்றுலைந்தவேலைக்கலமெனக்கலங்கிற்றண்டம். (௧௦௩)

அரியினம்பூண்டதேருமனுமனுமனந்தசாரி
புரிதலினிலங்கையூருந்திரிந்ததுபுலவரோயு
மெரிகணைப்படலமூடவிலருளொன்றுந்தன்மை
தெரிகிலர்செவிடுசெல்லக்கிழிந்தனதிசைகளெல்லாம். (௧௦௪)

நாண்பொருவரிவிற்செங்கைகாமநனவின்றகல்வி
மாண்பொருவகையிற்றன்றுவலிக்கிலையவதிவானஞ்
சேண்பெரிதென்றுசென்றதேவருமிருவர்செய்கை
காண்பரிதென்றுகாட்சிக்கையறவெய்திற்றன்றே. (௧௦௫)

என்செய்தாரென்செய்தாரென்றியம்புவாரினையதன்மை
முன்செய்தாரியாவரென்பார்முன்னேதுபின்னேதென்பார்
கொன்செய்தார்வீரரின்னதிசையினொன்றுங்கொள்ளார்
பொன்செய்தார்மவுலிவின்றோருணர்ந்திலர்புகுந்ததொன்றும். (௧௦௬)

ஆயிரகோடிபல்லமயிலெயிற்றரக்கனெய்தா
னாயிரகோடிபல்லத்தலைதுணித்தறுத்தானைய
னாயிரகோடிநாகக்கணைதொடுத்தரக்கனெய்தா
னாயிரகோடிநாகக்கணைகளாலறுத்தானண்ணல். (௧௦௭)

கோட்டியின்றலையகோடிகோடியம்பரக்கன்கோத்தான்
கோட்டியின்றலையகோடிகோடியாற்றுறைத்தான்கொண்டல்
மீட்டொருகோடிகோடிவெஞ்சினத்தரக்கன்விட்டான்
மீட்டொருகோடிகோடிகொண்டவைதடுத்தான்வீரன். (௧௦௮)

கங்கபத்திரமோர்கோடிகைவிசைத்தரக்கனெய்தான்
கங்கபத்திரமோர்கோடிகணைதொடுத்திளவல்காத்தான்
திங்களிற்பாதிகோடியிலக்குவன்றெரிந்துவிட்டான்
திங்களிற்பாதிகோடிதொடுத்தவையரக்கன்றீர்த்தான். (௧௦௯)

கோணையின்றலையகோடிகொடுங்கணையரக்கன்கோத்தான்
கோணையின்றலையகோடிதொடுத்தவையிளவல்கொன்றான்
பாணையின்றலையகோடிபரப்பினனிளவல்பல்காற்
பாணையின்றலையகோடியரக்கனும்பதைக்கவெய்தான். (௧௧௦)

தாமரைத்தலையவாளிதாமரைக்கணக்கிற்சார்ந்த
தாம்வரத்துரந்துமுந்தித்தசமுகன்றனையனார்த்தான்
தாமரைத்தலைய்வாளிதாமரைக்கணக்கிற்சார்ந்த
தாம்வரத்தடுத்துவீழ்த்தான்றாமரைக்கண்ணன்றம்பி. (௧௧௧)

வச்சிரப்பகழிகோடிவலையெயிற்றரக்கனெய்தான்
வச்சிரப்பகழிகோடிஅரந்தவையனகன்மாய்த்தான்
முச்சிரப்பகழிகோடியிலக்குவன்முடுகவிட்டான்
முச்சிரப்பகழிகோடிதொடுத்தவைதடுத்தான்முன்பன். (௧௧௨)

அஞ்சலிஅஞ்சுகோடிதொடுத்திகலரக்கனெய்தா
னஞ்சலியஞ்சுகோடிதொடுத்தவையறுத்தானையன்
குஞ்சரக்கன்னகோடியிலக்குவன்சிலையிற்கோத்தான்
குஞ்சரக்கன்னகோடிதொடுத்தவையரக்கன்காத்தான். (௧௧௩)

எய்யவுமெய்தவாளிவிலக்கவுமுலகமெல்லா
மொய்கணைக்கானமாகிமுடிந்ததுமுழங்குவேலை
பெய்கணைப்பொதிகளாலேவளர்ந்ததுபிறந்தகோபங்
கைமிகக்கனன்றதல்லாற்றளர்ந்திலர்காளைவீரர். (௧௧௪)

வீழியின்கனிபோன்மேனிகிழிபடவனுமன்வீரச்
சூழெழுவனையதோண்மேலாயிரம்பகழிதூவி
யூழியினிமிர்ந்தசெந்தீயுருமினையுமிழ்வதென்ன
வேழிருநூறுவாளியிலக்குவன்கவசத்தெய்தான். (௧௧௫)

முற்கொண்டானரக்கனென்றுமுனிவாண்முகங்கடேவர்
பிற்கொண்டாரிளையகோவைப்பியற்கொண்டான்பெருந்தோளின்றும்
கற்கொண்டார்கிரியினூழ்மருவிபோற்குருதிகண்டார்
விற்கொண்டானிவனேயென்றுவெருக்கொண்டார்முனிவர்மேலார். (ககசு)

ஏறுநூறெரிந்தசிந்தையிலக்குவன்சிலைக்கைவாளி
நூறுநூறேவிசெய்திறடக்குளிமடங்கன்மாவும்
வேறுகூறியற்றிவிரக்கொடியையுமறுத்துவீழ்த்தி
யாறுநூறம்புசெம்பொற்கவசம்புக்கழுந்தவெய்தான். (ககஎ)

காளமேகத்தைச்சார்ந்தகதிரவனென்னக்காந்தித்
தோளின்மேன்மார்பின்மேனுஞ்சுடர்விடுகவசச்சூழ
விளரின்பவளவல்லிகிளையொளிகிளர்வவென்ன
வாளிவாய்தோறும்வந்துபொடித்ததுகுருதிவாரி. (ககஅ)

பொன்றுறுதடந்தேர்பூண்டமடங்கன்மாப்புரண்டபோது
மின்றுறுபதாகையோடுசோரகிழ்ந்தபோதுந்
தன்விறற்றுருவவாளிதடுப்பிலசார்ந்தபோது
பின்னதென்றறியானன்றுவினையதோர்மாற்றஞ்சொன்னான். (கககூ)

அன்னானல்லனுகினானனையனல்லாற்
பின்னான்பிரமனென்பார்பேசகபிறந்துவாழு
மன்னர்தம்பதியின்வந்துவரிசிலைபிடித்தகல்வி
யின்னான்றன்னோடொப்பாரியாருளரினையதொன்றுன். (கஉ0)

வாயிடைநெருப்புக்காலவுடனெடுங்குருதிவாரத்
தீயிடைநெய்வார்த்தன்னவெகுளியானுயிர்தீர்ந்தானு
மோய்விடமில்லான்வல்லேயோரிமையொடுங்காமுன்ன
மாயிரம்புரவிபூண்டவாழியந்தேரினுன். (கஉக)

வேறு.

ஆசையெங்கணுமம்புகவெம்புபோ
ரோசைவிம்மவுருத்திரும்முடல்
கூசவாயிரகோடிகொலைக்கணை
வீசிவிண்ணைவெளியிலதாக்கினுன். (கஉஉ)

அத்திறத்திலனகனுமாயிரம்
பத்திப்பத்தியினெய்குவபல்கணை
சித்திரத்தினிற்சிந்தியராவணன்
புத்திரற்குமோராயிரம்போக்கினுன். (கஉங)

ஆயிரங்கணைபாய்ந்தனவாற்றருங்
காயெரிந்தலைநெய்யெனக்காந்துறுத்
தூயவன்சுடர்சூழொளிநெற்றியிற்
றீயவெங்கணைநூறுசெலுத்தினுன். (கஉச)

நெற்றிமேலொருநூறுநெடுங்கணை
உற்றபோதிலுமியாதுமொன்றுற்றிலன்
மற்றவன்றொழிலோன்மணிமார்பிடை
முற்றவெங்கணைநூறுமுடுக்கினான். (௧௨௫)

நூறுவெங்கணைமார்பினுழைதலி
னூறுசோரியொடுள்ளமுஞ்சோர்தரத்
தேறலாந்துணையுஞ்சிலையூன்றியே
யாறினின்றனனாற்றலிற்றோற்றிலான். (௧௨௬)

புதையுரன்மணிபொன்னுருளச்சொடுஞ்
சிதையவாயிரம்பாய்பரிசிந்திட
வதையின்மற்றொருகூற்றெனமாருதி
யுதையினாலவன்றேரையுருட்டினான். (௧௨௭)

பேயொராயிரம்பூண்டதுபெய்மணி
யேயதேரிமைப்பின்னிடையேறினான்
றூயவன்சுடர்த்தோளிணைமேற்சுடர்
தீயவெங்கணையைம்பதுசிந்தினான். (௧௨௮)

ஏறியேறியிழிந்ததல்லாலிகல்
வேறுசெய்திலன்வெய்யவன்வீரனு
மாறுகோடிபகழியிணையிரு
நூறுதேரொருநாழிகைநூறினான். (௧௨௯)

ஆசிகூறினரார்த்தனராய்மலர்
வீசிவீசிவணங்கினர்விண்ணவ
ரூசனீங்கினருத்தரிகத்தொடு
தூசுவீசினர்நன்னெறிதுன்னினார். (௧௩௦)

அக்கணத்தினோராயிரமாயிர
மிக்கவெங்கணராக்கர்வீரனோ
டொக்கவின்பமொருவழிபூணினார்
புக்குமுந்தினர்போரிடைப்பொன்றுவார். (௧௩௧)

தேரர்தேரினிவுளியர்செம்முகக்
காரர்காரினிடிப்பினர்கண்டையிற்
றாரர்தாரணியும்விசும்புந்தவழ்
பேரர்பேரிமுழக்கன்னபேச்சினார். (௧௩௨)

பார்த்தபார்த்ததிசைதொறும்பன்மழை
போர்த்தவானமெனவிடிபோர்த்தெழ
வார்த்தவோசையுமம்பொடுவெம்படை
தூர்த்தவோசையும்விண்ணினைத்தூர்த்தவால். (௧௩௩)

ஆளியார்த்தனவாளரியார்த்தன
கூளியார்த்தகுதிரையுமார்த்தன
வாளியார்த்தனதேரிவர்மண்டிலர்
அளியார்த்திலதாற்பினர் அன்னலால். (௧௩௪)

வந்தணைந்ததோர்வாளரிவாவுதே
ரிந்திரன்றனைவென்றவனேறினன்
சிந்தினன்சரமாரிதிசைதிசை
யந்திவண்ணனொராம்பினகற்றினன். (௧௩௫)

சுற்றும்வந்துபரந்துதொடர்ந்தவ
ரொற்றுகின்றனவெய்தவெறிந்தன
வற்றுதிர்ந்தனவாயிரம்வன்றலை
யொற்றைவெங்கணையோடுமுருண்டவால். (௧௩௬)

குடர்கிடந்தனபாம்பெனக்கோண்மதித்
திடர்கிடந்தனசிந்தினதேர்த்திரள்
படர்கிடந்தனபல்படைக்கையினர்
கடல்கிடந்தனபோன்றகளத்தினே. (௧௩௭)

குண்டலங்களுமாரமுங்கோவையுங்
கண்டநாணுங்கழலுங்கவசமுஞ்
சண்டமாருதம்வீசத்தலத்துறும்
விண்டலத்தினின்மீனெனவீழ்ந்தவால். (௧௩௮)

அரக்கன்மைந்தனையாரியனம்பினாற்
காக்கனூறியெதிர்பொருகண்டகர்
செக்கொடுங்குவைக்குன்றுதிரட்டினு
ளிரக்கமெய்திவெங்காலனுமெஞ்சவே. (௧௩௯)

சுற்றிவால்கொடுனுவுந்தலைக்கும்விட்
டெற்றும்வானினெடுத்தெறியும்மெதி
ரூற்றுமோதுமுதைக்குமுறுக்குமாற்
கொற்றவில்லியன்றேறியகூற்றமே. (௧௪0)

பார்க்குமஞ்சவுறுக்கும்பகட்டினாற்
றார்க்கும்வேலையைத்தோள்புடைகொட்டிநின்
றார்க்குமாயிரந்தேரடித்தங்கையா
லீர்க்குமையனன்றேறியயானையே. (௧௪௧)

மாவுமியானையும்வாளுடைத்தானையும்
பூவுநீரும்புனைதவிரும்மெனத்
அவுமன்னிப்பிசையுந்துலைக்குமாற்
சேவகன்றெரிந்தேறியசீயமே. (௧௪௨)

உரகம்பூண்டவுருளைபொருந்தின
விரதமாயிரமேயெனுமாத்திரை
சரதமாகத்தரைப்படச்சாடுமால்
வரதனன்றுவந்தேறியவாசியே. (கசங)

அவ்விடத்தினிலாய்மருந்தாலழல்
வெவ்விடத்தினையுண்டவர்மீண்டென
வெவ்விடத்தினும்வீழ்ந்தவிணைத்தலைத்
தெவ்வடக்கும்வலியவர்தேறினார். (கசச)

தேறினார்கணெருப்புகச்சீறினா
ருறினார்வந்திளவலையொன்றினார்
மாறுமாறுமலையுமரங்களும்
நூறுமாயிரமுங்கொடுநூறினார். (கசரு)

விகடமுற்றமரனொடுவெற்பினம்
புகடவுற்றபொறுத்தனபோவன
துகடவத்தொழில்செய்துறைக்கம்மியர்
சகடமொத்தனதாரணிதேரொலாம். (கசசு)

வாலிமைந்தனொர்மாமரம்வாங்கினான்
காலின்வந்தவரக்கனைக்காவிது
போலுமுன்னுயிருண்பதுபுக்கெனா
மேனிமிர்ந்துநெருப்புகவீசினான். (கசஎ)

ஏரழித்ததுசெய்தவனீண்டெழிற்
சீரழித்தவனுமெனத்தேவர்க
ளூரழித்தவுயர்வரைத்தோளவன்
றேரழித்ததிமைப்பினிற்சென்றவால். (கசஅ)

அந்தவேலையினார்த்தெழுந்தாடினார்
சிந்தைசீரினுயர்ந்தனர்தேவர்க
டந்தைதந்தைபண்டுற்றசழக்கெலா
மெந்தைதீர்த்தனனென்பதோரோம்பலால். (கசகூ)

அழிந்ததேரினின்றந்தரத்தக்கணத்
தெழுந்துமற்றொரிரதமுற்றேறினான்
கழிந்துபோகலைவில்லெனக்கைக்கணை
பொழிந்துசென்றனன்றீயெனப்பொங்கினான். (கருo)

இந்திரன்மகன்மைந்தனையின்னுயிர்
தந்துபோகெனச்சாரலுற்றான்றனை
வந்துமற்றையவானரவீரரு
முந்துபோர்க்குமுறைமுறைமுற்றினார். (கருக)

மாமுன்குன்றமடிந்தவரக்கர்தஞ்
சிரமுந்தேரும்புரவியுந்திண்கரிக்
காமுமானியும்வாரிக்கடியவன்
சாமுந்தாழ்தரவீசினர்தாங்கினார். (௧௫௨)

அனையகாலையிலாயிரமாயிரம்
வினையவெங்கணரக்கரைவின்னவர்
நினையுமாத்திரத்தாருயிர்நீக்கினான்
மனையும்வாழ்வுமுறக்கமுமாற்றினான். (௧௫௩)

ஆனையுந்தடந்தேருந்தன்னுருயிர்த்
தானையும்பரியும்பட்டதன்மையை
மானவெங்கணரக்கன்மனக்கொளாப்
போனவென்றியன்றியெனப்பொங்கினான். (௧௫௪)

சீர்த்தடம்பெருஞ்சில்லியந்தேரினர்
காத்துநின்றவிருவரைக்கண்டனன்
ஞார்த்ததம்பெருஞ்சேனைகொண்டண்டமே
வீர்த்தசோரிப்பரவையின்றீர்த்தலால். (௧௫௫)

நேர்செலாதிடைநின்றனர்நீணெடுங்
கார்செலாவிருள்கீறியகண்ணகன்
றேர்செலாதுவிசும்பிடைச்செல்வதோர்
போர்செலாதுபிணைத்தின்பிறக்கமே. (௧௫௬)

அன்றுதன்னயனின்றவரக்கரை
யொன்றுவான்முகநோக்கியொருவிலா
னன்றூரம்படைநாற்பதுவெள்ளமுங்
கொன்றுநின்றபடியெனக்கூறினான். (௧௫௭)

ஆயவீரருமையவமர்த்தலை
நீயுநாற்பதுவெள்ளநெடும்படை
மாயவெங்கணைமாரிவழங்கினை
யோய்வில்வெஞ்செருவொக்குமென்றோதினார். (௧௫௮)

வந்துநேர்ந்தனர்மாருதிமேல்வரு
மந்திவண்ணனுமாயிரமாயிரஞ்
சிந்தினான்கணைதேவரைவென்றவ
னுந்தநந்தமுறைமுறைநூறினான். (௧௫௯)

ஆறுமேழுமறுபதுமைம்பதும்
நூறுமாயிரமுங்கணைதூக்கிவந்
தேறினானையுணர்வுதொலைத்துயிர்
தேறினானெடுநிலஞ்சேர்த்தினான். (௧௬௦)

கதிரின்மைந்தன்முதலினோர்காவலா
ருதிரவெள்ளத்தினாழ்கியொடுங்கவு
மெதிரினின்றவிராவணியீடுற
வெதிரின்காட்டெரிபோற்சாம்வித்தினான். (௧௬௧)

உளைவுதோன்றவிராவணியொல்கினான்
கிளையினின்றவிருவர்களைத்தலு
மளவில்சேனையவிதரவாரியற்
கிளையவீரன்சுடுசரமேவினான். (௧௬௨)

வேறு.

தெரிகணைமாரிபெய்யத்தேர்களுஞ்சினக்கைமாவும்
பரிகளுந்தாமுமன்றுபட்டவர்கிடக்கக்கண்டா
ரிருவருநின்றார்மற்றங்கிராக்கதரொன்றும்பேரா
ரொருவருநின்றாரில்லையுள்ளவரோடிப்போனார். (௧௬௩)

ஓடினாரரக்கர்தண்ணீருண்ணசையுலந்தநாவர்
தேடினாரொதுங்குகையான்முகிலினைமுகந்துதேக்கிப்
பாடுறுபுண்கடோறும்பசும்புனல்பாயப்பாய
வீடினார்சிலவர்சில்லோர்பெற்றிலர்விளிந்துவீழ்ந்தார். (௧௬௪)

வெங்கணைதிறந்தமெய்யர்விளிந்திலர்விரைந்துசென்றார்
செங்குழற்கற்றைசோரத்தெரிவையராற்றத்தெய்வப்
பொங்கிரும்பள்ளிபுக்காரவருடல்பொருந்தப்புல்லி
யங்கவராவியோடுந்தம்முயிர்போக்கியற்றார். (௧௬௫)

பொறிக்கொடும்பகழிமார்பர்போயினரிடங்கள்புக்கார்
மறிக்கொளுஞ்சிறுவர்தம்மைமற்றுளசுற்றத்தாரைக்
குறிக்கொளுமென்றுகூறியவர்முகங்குழையநோக்கி
நெறிக்கொளுங்கூற்றைநோக்கியாருயிரொறுத்துநீத்தார். (௧௬௬)

தாமரைக்கண்ணன்றம்பிதன்மையீதாகின்மெய்மை
வேமரைக்கணத்தினிவ்வூரிராவணிவிளிதன்முன்ன
மாமரக்கானிற்குன்றின்மறைந்திருமறையவல்லை
போமெனத்தமரைச்சொல்லிச்சிலருடனுறந்துபோனார். (௧௬௭)

வரையுண்டமதுகைமேனிமருமத்துவள்ளல்வாளி
யிரையுண்டுதுயிலச்சென்றார்வாங்கிடினிறப்பமென்பார்
பிரையுண்டபாலினுள்ளம்பிறிதுறப்பிறர்முன்சொல்லா
வுரையுண்டநல்லோனொன்னவுயிர்த்துயிர்த்துழைப்பதானார். (௧௬௮)

தேரிடைச்செல்லார்மானப்புரவியிற்செல்லார்செங்கட்
காரிடைச்செல்லார்காலிற்காலெனச்செல்லார்காவ
லூரிடைச்செல்லார்நாணுவுயிரின்மேலுடையவன்பாற்
போரிடைத்திரியாநின்றடுங்கினர்புறத்தும்போகார். (௧௬௯)

நொய்தினிற்சென்றுகூடியிராவணியுளைவநோக்கி
வெய்தினிற்கொன்றுவிழ்ப்பனென்பதோர்வெகுளிவீங்கிப்
பெய்துழிப்பெய்யுமாரியனையவன்பிணக்குகூற்றின்
கையினிற்பெரியவம்பாற்கவசத்தைக்கிழித்துவிழ்த்தான். (௧௭0)

கவசத்தைக்கிழித்துவிழ்ப்பக்காப்புறுகடனின்றி
யவசத்தையடைந்தவீரனதிவுறுந்துணையின்வீரத்
துவசத்தின்புரவித்திண்டேர்கடிதறத்துண்டியாமித்
திவசத்தின்முடித்தும்வெம்போனைச்சினந்திருகிச்சென்றான். (௧௭௧)

மாருதிமேலுமையன்மார்பினுந்தோளின்மேலுந்
தேரினனிருவர்சென்றார்சிந்தினபகழிசிந்தி
யாரியன்வாகைவில்லுமச்சுடைத்தேருமற்றே
றூர்குவாறுயிருங்கொண்டான்புரவியினுயிருமுண்டான். (௧௭௨)

இருவருமிழந்தவில்லாரொழுமுளைவயிரத்தண்ட
ருருமெனக்கடிதினோடியனுமனையிமைப்பினுற்றார்
பொருகனற்பொறிகள்சிந்தப்புடைத்தனர்புடைத்தலோடும்
பருவலிக்கரத்தினாற்றண்டிரண்டையும்பறித்துக்கொண்டான். (௧௭௩)

தண்டவன்கையதானதன்மையைத்தருகணாளர்
கண்டனர்கண்டுசெய்யலாவதொன்றுங்காணார்
கொண்டனனெறிந்துநம்மைக்கொல்லுமென்றச்சங்கொண்டா
ருண்டசெஞ்சோறுநோக்காருயிருக்கேயுதவிசெய்தார். (௧௭௪)

காற்றுவந்தலைத்தலானுங்காலமல்லாமையானுங்
கூற்றுவந்தாவிகொள்ளுங்குறியின்மைகுறித்தலானுந்
தேற்றம்வந்தெய்தினின்றமயக்கமுநோவுந்தீர்ந்தா
ரேற்றமும்வலியும்பெற்றாரெழுந்தனர்வீரரெல்லாம். (௧௭௫)

அங்கதன்குமுதனீலன்சாம்பவனருக்கன்மைந்தன்
பங்கமின்மயிந்தன்றம்பிசதவலிபனசன்முன்னாச்
சிங்கவேறனையவீரர்யாவருஞ்சிகரமேந்தி
மங்கலம்வானோர்சொல்லமழையெனவார்த்துவந்தார். (௧௭௬)

அத்தனைவோருங்குன்றமளப்பிலாவசனியேற்றோ
டொத்தனநெருப்புவீசமுருமெனவொருங்கவுய்த்தா
ரித்தனைபோலுஞ்செய்யுமிகலெனாமுறுவலெய்திச்
சித்திரவில்வலோனுஞ்சின்னபின்னங்கள்செய்தான். (௧௭௭)

மரங்களுமலையுங்கல்லுமழையெனவழங்கிவந்து
நெருங்கினார்நெருங்கக்கண்டுமொருதனிநெஞ்சம்வில்லுஞ்
சரங்களுந்துணையாய்நின்றநிசாசரன்றனிமைநோக்கி
யிரங்கினனென்னமேல்பாற்குன்றுபுக்கருக்கனின்றான். (௧௭௮)

வாழியவேதநான்குமறுமுதல்வந்தநூலும்
வேழ்வியுமெய்யுந்தெய்வவேதியர்வினைவுமஃதே
யாழியங்கமலக்கையாருதியபரமனென்று
வேழையருள்ளமென்னவிருண்டனதிசைகளெல்லாம். (௧௭௯)

நாகமேயனையகம்பநாழிகையொன்றுநான்கு
பாகமேகாலமாகப்படுத்தியேற்பட்டானன்றேல்
வேகவாளரக்கர்காலம்விளைந்ததுவிசும்பின்மீதா
வேகுமேல்வெல்வனென்பதிராவணற்கிளவல்சொன்னான். (௧௮௦)

அத்தனைவீரர்மேலுமாண்டகையனுமன்மேலு
மெத்தனைகோடிவாளிமழையெனவெய்யாநின்ற
வித்தகவில்லினானைக்கொல்வதுவிரும்பிவீரன்
சித்திரத்தேரைத்தெய்வப்பகழியாற்சிதைத்துவீழ்த்தான். (௧௮௧)

அழித்ததேரழுந்தாமுன்னமம்பொடுகிடந்துவெம்பி
யுழைத்துயிர்விடுவதல்லாலுருசெருவென்றேமென்று
பிழைத்திவர்போவரல்லர்பாசத்தாற்பிணிப்பனென்னு
விழித்திமையாதமுன்னம்வில்லொடும்விசும்பிற்சென்றான். (௧௮௨)

பொன்குலாமேனிமைந்தன்றன்னொடும்புகழ்தற்கொத்த
வன்கலாமியற்றிநின்றான்மற்றொருமனத்தனாகி
மின்குலாங்கழற்கால்வீரன்விண்ணிடைவிரைந்ததன்மை
யென்கொலாமென்னவஞ்சிவானவரிரியல்போனார். (௧௮௩)

தாங்குவிற்கரத்தன்றானிதழுவியபுறத்தன்றன்னி
னோங்கியுற்றெரியாநின்றவெகுளியினுயிர்ப்பன்றீயன்
றீங்கிழைப்பவர்கட்கெல்லாஞ்சீரியன்மாயச்செல்வன்
வீங்கிருட்பிழம்பினும்பர்மேகத்தின்மீதினானான். (௧௮௪)

தணிவறப்பண்டுசெய்ததவத்தினுந்தருமத்தானும்
பிணியறுப்பவரிற்பெற்றவரத்தினும்பிறப்பினானு
மணிசிறத்தரக்கன்செய்தமாயமந்திரத்தினானு
மனுவெனச்சிறியதாங்கோராக்கையுமுடையனானான். (௧௮௫)

வாங்கினான்மலரின்மேலவானவன்வானக்கங்கை
தாங்கினானுலகந்தாங்குஞ்சக்கரத்தவனென்றாலும்
வீங்குவான்றோளைவீக்கிவீழ்த்தலான்மீள்கிலாத
வோங்குவாளரவினமத்தொருதனிப்படையையுன்னி. (௧௮௬)

ஆயினகாலத்தார்த்தாரமர்த்தொழிலஞ்சியப்பால்
போயினனென்பதுன்னிவானரவீரர்போல்வார்
நாயகற்கிளையகோவுமன்னதேநினைந்துநக்கான்
மாயையைத்தெரியவுன்னார்போர்த்தொழின்மாற்றிநின்றார். (௧௮௭)

அறாணைத்தனுமன்றோளின்றைய றுமிழ்ந்றுவெய்ய
கறவலிச்சிலையைவென்றியங்கதன்கையதாக்கி
முறைகுறச்சென்றுவின்றகணையெலாமுறையின்வாங்கி
விறவிறப்பாற்றலுற்றுன்வினையின்றறுணர்ந்திலாதான். (௧௮௮)

விட்டனனரக்கன்வெய்யபடையினைவிடுத்தலோடு
மெட்டிரேறுடிரண்டிதிக்குமிருடிரிந்திரியவோடிக்
கட்டினதென்பமன்றோகாருத்தற்கிளையகாளை
வட்டவான்வயிரத்திண்டோண்மலைகளையுளையவாங்கி. (௧௮௯)

இறுகுறப்பிணித்தலோடுமியாவையுமெதிர்ந்தபோது
மறுகுறக்கடவானல்லன்மாயமென்றுணரானல்ல
வுறுகுறைத்தன்பயில்லாறெருடுங்கினன்செய்வதோரா
னுறுகுறைக்களத்தைநோக்கியந்தரமதனைநோக்கும். (௧௯௦)

காலுடைச்சிறுவன்மாயக்கள்வனைக்கணத்தின்காலை
மேல்விசைத்தெழுந்தாடிப்பிடிப்பனென்றுறுக்கும்வேலை
யேல்புடைப்பாசமேனுளிராவணன்புயத்தைவாலி
வால்பிணித்தென்னச்சுற்றிப்பிணித்ததுவயிரத்தோளை. (௧௯௧)

மற்றையோர்தமையுமெல்லாம்வாளெயிற்றரவம்வந்து
சுற்றினவயிரத்தூணின்மலையினிற்பெரியதோள்க
ளிற்றனவிற்றவென்னவிறுக்கினவிளகாவுள்ளந்
தெற்றனவுடையவீரிருந்தனர்செய்வதோரார். (௧௯௨)

மலையெனவெழுவர்வீழ்வர்மண்ணிடைப்புரள்வர்வானிற்
றலைகளையெடுத்துநோக்கித்தழலெழவிழிப்பர்தாவி
யலைகிளர்வாலாற்பாரினடிப்பர்வாய்மடிப்பராண்மைச்
சிலையவற்கிளையகோவைநோக்குவருள்ளந்தேய்வர். (௧௯௩)

விடனன்முகத்தைநோக்கிவினையுண்டேயிதனுக்கென்பர்
முடிவனகன்றன்மாலையிருளினைமுனிவர்மொய்ம்பி
லிடிறத்தக்கபோலாநம்மெதிரொன்றுவேந்த
னுடைகத்தோளைநோக்கிநகைசெய்வர்விழுவரஞ்சார். (௧௯௪)

ஆரிதுதீர்க்கவல்லாரஞ்சனைபயந்தவள்ளல்
மாருதியிழைத்தான்கொல்லோவென்றனர்மறுகிநோக்கி
வீரனைக்கண்டிபட்டதிதுகொலாமென்றுவிம்மி
வார்கழற்றம்பிதன்மைகாணுமோவள்ளலென்பார். (௧௯௫)

என்சென்றதன்னசொல்லினெழும்வலியரக்கனெய்தான்
மின்சென்றதன்னவானத்தருமினம்வீழ்வவென்னப்
பொன்சென்றவடிம்பின்வாளிபுகையொடுபொறியுஞ்சிந்தி
முன்சென்றமுதுகிற்பாயப்பின்சென்றமார்பமுற்ற. (௧௯௬)

மலைத்தலைக்காலமாரிமறித்தெறிவாடைமோதத்
தலைத்தலைமயங்கிவீழுந்தன்மையிற்றலைகள்சிந்தக்
கொலைத்தலைவாளிபாயுங்குன்றனையுவவுத்தோளார்
நிலைத்திலர்குலைந்தசாய்ந்தார்நிமிர்ந்ததுகுருதிநீத்தம். (௧௯௭)

ஆயிரகோடிமேலுமம்புதன்றுகைத்தூடு
போயினபோதுமொன்றுந்துடித்திலன்பொடித்துமானத்
தீயெரிசிதறுஞ்செங்கணஞ்சனைசிங்கமேனி
நாயகன்றம்பிக்குற்றதுயர்சடைநடுங்குகின்றான். (௧௯௮)

வேறுளவீரரெல்லாம்வீழ்ந்தனருருமின்வெய்ய
நூறுமாயிரமும்வாளியுடலிடைநுழையச்சோரி
யாறுபோலொழுகவண்ணலங்கதனனந்தம்வாளி
யேறினமெய்யனேனுமிருந்தனனிடைந்திலாதான். (௧௯௯)

கதிரவன்காதன்மைந்தன்கழலிளம்பசுங்காயென்ன
வெதிரொதிர்பகழிதைத்தயாக்கையனெரியுங்கண்ணன்
வெதிர்நெடுங்கானமென்னவேகின்றமனத்தின்மெய்ய
னுதிரவெங்கடலுட்டாதையுகிக்கின்றான்றனையுமொத்தான். (௨௦௦)

வெப்பாரும்பாசம்வீக்கிவெங்கணைவளைக்குமெய்ய
னொப்பாருமில்லான்றம்பியுணர்ந்திருந்தின்னலுய்ப்பா
னிப்பாசமாய்க்குமாயமியான்வல்லனென்பதோர்ந்து
மப்பாசம்வீசவாற்றாதழிந்தநல்லறிவுபோன்றான். (௨௦௧)

அம்பெலாங்கதிர்களாகவழிந்தழிந்திழியுமாகச்
செம்புனல்வெயிலிற்றோன்றத்திசையிருளிரியத்தேய்ப்
பம்புபேரொளியநாகம்பற்றியபடிவத்தோடு
மும்பர்நாடிறந்துவீழ்ந்தவொளியவனேயுமொத்தான். (௨௦௨)

மயங்கினன்வள்ளறம்பிமற்றையோர்முற்றுமண்ணை
முயங்கினர்மேனியெல்லாமூடினனரக்கன்மூரித்
தயங்குபேராற்றலானுந்தன்னுடற்றைத்தவாளிக்
குயங்கினனெனுந்தான்வாயாலுதிரநீருமிழாநின்றான். (௨௦௩)

சொற்றதுமுடித்தேனுனையென்றுடற்சோர்வைநீக்கி
மற்றதுமுடிப்பனென்னுமெண்ணினன்மனிதன்வாட்கை
யிற்றதுகுரங்கின்றானையிறந்ததென்றிரண்டுபோலுங்
கொற்றமங்கலங்களார்ப்பவிராவணன்கோயில்புக்கான். (௨௦௪)

ஈர்க்கடைப்பகழிமாரியிலக்குவனென்னநின்ற
நீர்க்கடைமேகந்தன்னைநீக்கியுஞ்செருவினீங்கான்
வார்க்கடைமதுகைக்கொங்கைமணிக்குறுமுறுவன்மாதர்
போர்க்கடைக்கருங்கண்வாளிபுயந்தொறும்பொழியப்புக்கான். (௨௦௫)

றுவிருகோடிசெம்பொன்மணிவிளக்கங்கையேந்தி
மையறவானகாட்டுமோதருமற்றைநாட்டுப்
பையரவல்குலாரும்பலாண்டிசைபரவத்தங்க
டையலாறுருறுலிவாழ்த்தினர்தழுவச்சார்ந்தான். (௨௦௬)

தந்தையையெய்தியன்றுங்குற்றுளதன்மையெல்லாஞ்
சிந்தையினுணரக்கூறித்திருவிடர்நீயெந்தாய்
நொந்தனவியாக்கைநொய்திருத்திமேறுவல்வனென்றப்
புந்தியிலனுக்கந்தீர்ப்பான்றன்னுடைக்கோயில்புக்கான். (௨௦௭)

இந்தலையின்னனுற்றவிடணைவிழைப்பதோரான்
மத்துறுதயிரினுள்ளமறுகினன்மயங்குகின்று
அத்தலைக்கொடியனென்னையட்டிலனியத்தேனுன்
செத்திலன்வலியனின்றேனென்றுபோய்வையஞ்சேர்ந்தான். (௨௦௮)

பாசத்தாலனகன்றம்பிபிணிப்புண்டபடியேபட்ட
நேசந்தாரெல்லாம்வீழ்ந்தாரியாவொருதமியேனின்றேன்
றேசத்தாரென்னையென்னென்சிந்திப்பாரொன்றுதீயும்
வாசத்தார்மாலைமார்பன்வாய்திறந்தரற்றலுற்றான். (௨௦௯)

கொல்வித்தானுடனேநின்றனென்பரோகொண்டுபோனான்
வெல்வித்தான்மகனேயென்றுபகர்வரோவினைவிற்கெல்லாம்
நல்வித்தாய்நடந்தான்முன்னேயென்பரோநயந்தோர்தத்தம்
கல்வித்தாய்வார்த்தையென்றுகளைவித்தானுயிரைக்கண்போல். (௨௧௦)

போரவன்புரிந்தபோதேபொருவரும்வயிரத்தண்டாற்
றேரொடும்புரண்டுவீழச்சிந்தியென்சிந்தைசெப்பும்
வீரமுன்னெறிந்தேனல்லேன்விளிந்திலேன்மெலிந்தேனிய்ய
றுருறவாகத்தக்கேனவியத்தேனழுந்துகின்றேன். (௨௧௧)

ஒத்தலைத்தொக்கவிடியுய்விறுமுய்ந்தெனுள்ளங்
கைத்தலைநெல்லிபோலக்காட்டிலேன்கழிந்துமில்லே
னத்தலைக்கல்லேன்யானிண்டபயமென்றடைந்துநின்ற
வித்தலைக்கல்லேனல்லேனிருதலைக்கொள்ளியொப்பேன். (௨௧௨)

அனையனபலவும்பன்னியாகுலித்தரற்றுவானை
வினையுளபலவுஞ்செய்யத்தக்கனவிரங்கியு
நினைவிலார்போலநெஞ்சமிகழ்தியோநீயுமென்று
வினையல சொல்லித்தேற்றியனலன்மற்றிதுவுஞ்சொன்னான். (௨௧௩)

நீயினிதிருத்தியான்போய்நெடியவற்குரைப்பனென்றுப்
போயினனனலன்போயப்புண்ணியன்பொலன்கொள்பாத
மேயினன்வணங்கியுற்றவினையெலாமியம்பிநின்ற
னுயிரம்பெயரினுமருந்துயர்க்கடலுளாழ்ந்தான். (௨௧௪)

உரைத்திலனொன்றுந்தன்னையுணர்ந்திலனுயிருமோடக்
கரைத்திலன்கண்ணினீராக்கண்டிலனியாதுங்கண்ணு
லரைத்திலனுலகமெல்லாமங்கையாற்பொங்கிப்பொங்கி
யிரைத்திலனுளனென்றெண்ணியிருந்தனன்விம்மியேங்கி. (௨௧௫)

விம்மினன்வெதும்பிவெய்துற்றேங்கினனிருந்தவேந்த
னிம்முறையிருந்துசெய்வதியாவதுமில்லென்றெண்ணிப்
பொம்மலினெழுந்துநொய்திற்பொருக்கெனவிசையிற்போனான்
றெம்முறைதுறந்துவென்றசெங்களமருங்கிற்சேர்ந்தான். (௨௧௬)

இழிந்தெழுங்காளமேகமெறிகடலனையமற்று
மொழிந்தனநீலவண்ணமுள்ளனவெல்லாமொக்கப்
பிழிந்ததுகாலமாகக்காளிமப்பிழம்புபோதப்
பொழிந்ததுபோன்றதன்றேபொங்கிருட்கங்குற்போர்வை. (௨௧௭)

ஆரிருளன்னநாகவாயிராமத்தண்ணல்
சீரியவனலிதெய்வப்படைக்கலந்தெரிந்துவாங்கிப்
பாரியவிடுத்தலோடும்பகையிருளிரிந்துபாறச்
சூரியனுச்சியுற்றாலொத்ததவ்வுலகின்சூழல். (௨௧௮)

படையுறுபிணத்தின்பம்மற்பருப்பதந்துவன்றிப்பல்வே
றிடையுறுகுருதிவெள்ளத்தெறிகடலெழுநீர்தம்பி
யுடையுறுதலைக்கையண்ணலுயிரெலாமொருங்கியுண்ணுங்
கடையுறுகாலத்தாழியுலகன்னகளத்தைக்கண்டான். (௨௧௯)

பிணப்பெருங்குன்றினூடுங்குருதிநீர்பெயரப்பேரும்
பிணப்பெருஞ்சேற்றினூடும்படைக்கலநெருக்கினூடு
மணப்பெருங்களத்தின்மோடிமங்கலவாட்கைவைப்பிற்
கணத்தினும்பாதிப்போதிற்றம்பியைச்சென்றுகண்டான். (௨௨௦)

அய்யவனுக்கைத்தன்மேல்விழுந்துமார்பழுந்தப்புல்லி
யுய்யலனென்னவாவியுயிர்த்துயிர்த்துருகுகின்றான்
பெய்யிருதாரைக்கண்ணன்பெருந்துளிபிறங்கவானின்
வெய்யவன்றன்னைச்சேர்ந்தநீனிறமேகமொத்தான். (௨௨௧)

உழைக்கும்வெய்துயிர்க்குமாவியுருகும்போயுணர்வுசோரு
மிழைக்குவதறிதரேற்றானிலக்குவாவிலக்குவாவென்
றழைக்குந்தன்கையைவாயின்மூக்கின்வைத்தயர்க்குமையா
பிழைத்தியோவென்னுமெய்யேபிறந்தேயும்பிறந்திலாதான். (௨௨௨)

தாமரைக்கையாற்றானைத்தைவருங்குறங்கைத்தட்டுந்
தூமலர்க்கண்ணைநோக்குமார்பிடைத்துடிப்புண்டென்னு
வேமுறும்விசும்பைநோக்குமெடுக்குந்தன்மார்பினேற்றும்
பூமியின்வளர்த்துங்கள்வன்போயகன்றானோவென்னும். (௨௨௩)

வில்லினைநோக்கும்பாசவிசிப்பினைநோக்கும்வீயா
வல்லினைநோக்கும்வானத்தமரரைநோக்கும்பாரைக்
கல்லுவன்வேரோடென்றும்பவளவாய்கதிக்குங்கற்றோர்
சொல்லினைநோக்குந்தன்பொற்புயத்தினைநோக்குந்தோளான். (௨௨௪)

வீரனையெல்லாம்பார்க்கும்விதியினைப்பார்க்கும்வீரப்
பாரவெஞ்சிலையைப்பார்க்கும்பகழியைப்பார்க்கும்பாரின்
யாரிதுபட்டாரென்போலெளிவந்தவண்ணமென்றும்
நேரிதுபெரிதென்றெண்ணுமளவையினிமிரநின்றான். (௨௨௫)

எடுத்தபோரிலங்கைவேந்தன்மைந்தனோடிளையகோவுக்
கடுத்ததென்றென்னைவல்லையமைந்திலையமர்பாசத்
தொடுத்தகைதலையினோடுந்தணித்துயிர்துடைக்கவென்னைக்
கெடுத்தனைவீடணாநீயென்றனன்கேடிலாதான். (௨௨௬)

அவ்வுரையருளக்கேட்டானழிகின்றவரக்கன்றம்பி
யிவ்வழியிவன்வந்தேற்பதறிந்திலமெதிர்ந்தபோதும்
வெவ்வழியவனேதோற்குமென்பதுவிரும்பிநின்றேன்
றெய்வவன்பாசஞ்செய்தசெயலிற்றமாயச்செய்கை. (௨௨௭)

அற்றதிகாயனுக்கைதலையிலதாக்கியாண்ட
வெற்றியருவீரன்மீண்டிலனிலங்கைமேனாட்
பெற்றவனெய்துமென்னும்பெற்றியையுன்னிப்பிற்போ
யற்றனன்மைந்தன்றானைநாற்பதுவெள்ளத்தோடும். (௨௨௮)

ஈண்டுநஞ்சேனைவெள்ளமிருபதிற்றிரட்டிமாளத்
தண்டினன்பகழிமாரிதலைவர்கடுலைந்துசோர
மூண்டெழுபோரிற்பாரின்முறைமுறைமுடித்தான்பின்ன
ராண்டகையோடுமேற்றுறுவிரமடங்கற்றோரான். (௨௨௯)

அனுமன்மேனின்றவையனுயிரந்தேருமாயத்
தனுவலங்காட்டிப்பின்னைநாற்பதுவெள்ளத்தானை
பனியெனப்படுவித்தன்றன்பெலத்தையுந்தொலைத்துப்பட்டா
ரினியெனவயிரவாளியெண்ணிலதிறத்திலெய்தான். (௨௩௦)

ஏவுண்டபகுவாயோடுங்குருதிநீரிழியநின்றான்
றாவுண்டதானைமுற்றும்படவொருதமியன்சோர்வான்
போவுண்டதென்னினையபுணர்க்குமாமாயமென்று
பாவுண்டகீர்த்தியானுக்குணர்த்தினன்பருதிபட்டான். (௨௩௧)

மாயத்தாலிருண்டதாழியுலகெலாம்வஞ்சன்வாளிற்
போயத்தானுடையவஞ்சவரத்தினாலொளித்துப்போயிவ்
வாயத்தார்பாசமேவியயர்வித்தானம்பில்வெம்புங்
காயத்தானென்னச்சொல்லிவணங்கினான்கலுழிக்கண்ணான். (௨௩௨)

பின்னையுமெழுந்துபோர்க்கவணங்கியெம்பெருமயாரு
மின்றுயிர்தாங்காரில்லையிறுக்கியபாசமிற்றுத்
புன்றுளைப்பகழிக்கோயுகதாத்தரோபுலம்பியென்னை
யின்னலுற்றயரல்வெல்லாதருமத்தைப்பாவமென்றான். (உ௩௩)

யாரிதுகொடுத்ததேவரொன்னையிதனைத்திருங்
காரணமியாதுநின்றுணர்ந்ததுகழறிங்காணென்
றாரியன்வினவவண்ணல்வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ளபரிசெலாந்தெரியச்சொன்னான். (உ௩௪)

ஆழியஞ்செல்வபண்டிங்ககலிடமளித்தவண்ணல்
வேழ்வியிற்படைத்தநீசன்வேண்டினன்பெற்றுவெற்றி
தாழ்வறுசிந்தையோற்றுத்தவத்தினாலளித்ததானை
யூழியினிரிந்தகாலத்துருமினுமாற்றமீதால். (உ௩௫)

அன்னதனாற்றலன்றேயாயிரங்கண்ணினானைப்
பின்னுறவயிரத்திண்டோள்பிணித்ததுபெயர்த்தொன்றெண்ணி
யென்னினியனுமன்றனையிறுக்கியதிதனாலாண்டும்
பொன்னுலகாளுஞ்செல்வந்துறந்ததுபுலவரெல்லாம். (உ௩௬)

தான்விடில்விடுமிதொன்றேசதுமுகன்முதல்வராய
வான்விடில்விடாதுமற்றிம்மண்ணினையெண்ணியென்னே
யூன்விடவுயிர்போய்நீங்கநீங்கும்வேறுய்தியில்லைத்
தேன்விடுதளபத்தாராயிதுவிதன்செய்கையென்றான். (உ௩௭)

ஈந்துளதேவர்மேலேயெழுகெனோவுலகமியாவுந்
தீந்துகநூறியானுந்தீர்கெனோவிலங்கைசிந்தப்
பாய்ந்தவர்சுற்றமுற்றும்படுப்பனோவியன்றபண்போ
டேய்ந்ததுபகர்தியென்றானிமையவரிடுக்கண்டீர்ப்பான். (உ௩௮)

வரங்கொடுத்தினையபாசம்வழங்கினார்தாமேநேர்வந்
திரங்கிடத்தக்கதுண்டேலிகழ்கிலனில்லையென்னி
னுரங்கெடுத்துலகமூன்றுமொருவனோராம்பிற்சுட்ட
புரங்களிற்றீய்த்துக்காண்பன்பொடியொருகடிகைப்போழ்தின். (உ௩௯)

எம்பியேயிறக்குமென்னிலெனக்கினியிலங்கைவேந்தன்
றம்பியென்புகழ்தானென்னைபழியென்னையறந்தானென்னை
நம்பியேயென்னைச்சேர்ந்தநம்பரினல்லவாமே
லும்பருமுலகத்துள்ளவுயிர்களுமுதவிபார்த்தால். (உ௪௦)

என்றுகொண்டியம்பியீண்டிங்கொருவரிங்கிடுக்கண்செய்ய
வென்றருமுலகைமாய்த்தல்விதியன்றாலென்றுவிம்மு
நின்றுநின்றுன்னியுன்னிநெடிதுயிர்த்தலக்கணுற்றான்
றன்றுணைத்தம்பிமேலுந்துணைவர்மேற்றாழ்ந்தவன்பான். (உ௪௧)

மீட்டும்வந்திளையவீரன்வெற்பனைவிசையத்தோளைப்
பூட்டுறுபாசந்தன்னைப்பன்முறைபுரிந்துநோக்கி
வீட்டியதென்னிற்பின்னையிவனென்றெண்ணும்வேதத்
தோட்டியின்றுடக்கினிற்குந்துணைக்கைமாலியானையன்னான். (௨௪௨.)

பெரியதிருவடிதோத்திரம்.

பதவுரை.

இத்தன்மையெய்துமளவின்கணின்றவிமையோர்களஞ்சியிதுபோ
யெத்தன்மையெய்திமுடியுங்கொலென்றுகுலைகின்றவெல்லையிதன்வா
யத்தன்மைகண்டுபுடைநின்றவண்ணல்கலுழன்றனன்பின்மிசையாற்
சித்தங்கலங்குமிதுநீரமெள்ளவிருளூடுவந்துதெரிவான்.

(இதன்பதப்பொருள்.)

இத்தன்மை-இந்தப்பிரகாரம்—எய்துமளவின்கண் - நடக்குங்காலத்தில்—இமையோர்கள்-பிரமருத்திரேந்திராதிதேவர்கள்—அஞ்சி-பயந்து—இது-இந்தக்கோபமானது—போய்-மிகுந்து—எத்தன்மை - எந்தப்பிரகாரமாய்—எய்தி-நடந்து—முடியுங்கொலென - ஆறுமோவென்று—குலைகின்ற-நடுங்குகின்ற—எல்லை-சமயமாகிய—இதன்வாய் -இத்தருணத்தில்—அத்தன்மை-அந்தப்பிரகாரத்தை—கண்டு-பார்த்து—புடை-பக்கத்திலே—நின்ற-நில்லாநின்ற—அண்ணல்கலுழன்-பெருமாளுடைய பெரியதிருவடி—தன்-பெருமாளுடைய—அன்பின்மிசையால் - பிரியத்தின்மிகுதியால்—சித்தம்-மனது—கலங்கும்-வேறுபட்டிருக்கின்ற—இது - இந்தத்துயரம்—நீர-நீங்க—மெள்ள - மெய—இருளூடு - அந்தகாரத்திலுள்ளே—வந்துதெரிவான்-தோன்றிவிளங்குகின்றான்—என்றவாறு.

இதுமுதலெட்டுப்பாட்டும் - குளகம். இதன்கருத்து பெரியதிருவடிவருமாறும், பெருமானைக்கண்டுதொழுமாறுந் துதிக்குமாறுங் கூறுகின்றது. பதப்பொருள் மூன்றாந்தாங்குனாக்க காட்டு கோயில்தோறும் பெரியதிருவடியை புறப்பாட்டிற்சேவித்து நடத்தல்-நிற்றல் - கைகுவித்தல்-பணிதல்-மொழிதல்களைப் பாவித்துக்காண்க. இனி விடைகூறவே வினவும்விளங்குமாகலா னவ்விரண்டுமுள்ளுறுத்திக்கூறுகின்றும். மறைந்துவந்தயாமகனைத்தொடர்ந்தடிமைசெய்யக்கடவ நியாமியங்களுமறைந்து நின்றமையாற் புடைநின்றவண்ணல்கலுழனென்றார். (௨௪௩)

அசையாதசிந்தையரவாலனுங்கவழியாதவுள்ளமழிவான்
இசையாவிலங்கையரசோடுமண்ணலருளின்மைகண்டுநயவான்
விசையாலனுங்கவடமேருவையமொளியால்விளங்கவிமையாத்
திசையானைகண்கண்முகிழாவொடுங்கநிறைகால்வழங்குசிறையான்.

இ-ள். அசையாத-கலங்காத—சிந்தை-மனதானது—அரவால்-நாகபாசத்தாலே—அனுங்க-பெருமாள்கலங்க—(அதுகண்டு) அழியாத - நடுங்காத—உள்ளம்-மனசானது—அழிவான்- நடுக்குவானாய்—இசையா-சரணாக

திக்குடன்படாத—இலங்கையரசோடும்-இராவணன்முதலிய வெல்லார்வி ஷயத்திலும்—அண்ணல்-பெருமானானவர்—அருளின்மை - அருளின்றிக் கோபங்கொள்ளுதலை—கண்டும்-பார்த்தும்—நயவான்-விரும்பாதவனாய்— விசையால்-வேகத்தாலே—அனுங்கவடமேரு - மேருமலைகுலையவும்—வை யம்-உலகமெல்லாம்—ஒளியால் - காந்தியால்—விளங்க-பிரகாசிக்கவும்— இமையா-நிமையாத—திசையானை - திக்கானைகள்—கண்கள் - விழிகள்— முகிழா-மூடி—ஒடுங்க-பதுங்கவும்—நிறை-நிரம்பிய—கால் - காற்றை— வழங்கு-தருகின்ற—சிறையான்-இறகையுடையவனாய்—எ-று.

கலங்காததிருவுள்ளம் பெருமாள் கலங்கக்கண்டு இருவடி தானுங்கல ங்கினனென்றார். இசையாவிலங்கை யரசோடுமென்ற தெச்சவும்மையாக லான் எல்லார்விஷயத்திலுமென்றும். (௨௬௪)

காதங்கள்கோடி கடைசென்றுகாணுநயனங்கள்வாரிகலுழக்
கேதங்கள்கூரவயர்கின்றவள்ளறிருமேனிகண்டுகிளர்வான்
சீதங்கொள்வேலையலைசிந்தஞாலமிருள்சிந்தவந்தசிறையான்
வேதங்கள்பாடவுலகங்கள்யாவும்வினைசிந்தநாகமெலிய.

இ-ள். காதங்கள்கோடி-கோடி.காதத்தின்—கடைசென்று- எல்லையள வுஞ்சென்று—காணும்-அங்குள்ளனவற்றையுந்தெரியத்தக்க — நயனங்கள்- கண்களிலே—வாரி-ஊறிவருகிறநீர்—கலுழ-சிந்தவும்— கேதங்கள்கூர-துக் கமிகுதியாக—அயர்கின்ற-சோர்ந்துகிடக்கிற—வள்ளல்-பரமோதாராகிய பெருமாளுடைய—திருமேனி-திவ்வியமங்களவிக்கிரகத்தை—கண்டு-பார் த்து—கிளர்வான் - பூரித்தவனாய்—சீதங்கொள் - குளிர்ச்சையைக்கொண் ட—வேலை-சமுத்திரமானது—அலை - தரங்கங்களை—சிந்த - மிகுத்துவீசவு ம்—ஞாலம்-உலகத்தைமூடிய—இருள்-அந்தகாரம்—சிந்த-சிதறிவிலகவும்— வந்த-விளங்கிவருகிற—சிறையான்-இறகினாலே—வேதங்கள்-வேதகானங் களை—பாட-கோஷிக்கவும்—உலகங்கள்யாவும் - எல்லாவுலகங்களும்—வி னை-பாவங்களை—சிந்த-நீங்கவும்—நாகம்-பிடித்திருக்கிற நாகபாசம்—மெலி ய-தளரவும்—எ-று.

இருக்கெசுச்சாமவதருவச் சிறையாகலானச்சிறகொலியான் வேதங் கள்பாடவென்றார். (௨௬௫)

அல்லைச்சுருட்டிவெயிலைப்பரப்பியகலாசையெங்குமழியா
வில்லைச்செலுத்திநிலவைத்திரட்டிவிரிகின்றசோதிமிளிர
வெல்லைக்குயிற்றியெரிகின்றமோலியிடைநின்றமேருவெனுமத்
தொல்லைப்பொருப்பின்மிசையேவிளங்குசுடரோனின்மும்மைசுடர.

இ-ள். அல்லை-இருளை—சுருட்டி - இறகடிக்கொள்ளுதலாலே சுருளப் பண்ணியும்—வெயிலை-சூரியகிரணத்தை— பரப்பி-பொன்னொளியாலே விரி த்து—அகல்-அகன்ற—ஆசையெங்கும்-திக்குகளெல்லாம்—அழியா - சேதி யாத—வில்லை-மூக்கின்வளைவாகிறவில்லொளியை—செலுத்தி - ஒதுங்கப்ப

ண்ணியும்—நிலவை-சந்திரனை—இரட்டி-கண்டத்தொளியாலேயிரட்டிப்பண்ணியும்—விரிகின்ற-அச்சந்திரனிடமிருந்துவிகாசிக்கிற—சோதி-சந்திரிகையானது—மிளிர-விளங்கவும்—எல்லை-சூரியபிரகாசத்தை—குயிற்றி-சேரப்பண்ணி—எரிகின்ற-காந்துகின்ற—மௌலி-கிரீடமானது—இடையின்ற-உலகநடுவிலே நில்லாநிற்கிற—மேருவெனும்-வடமேருவென்கிற—அ-அந்த—தொல்லை-பழமையான—பொருப்பின்மிசையே-மலையின்மேலே—விளங்கு-பிரகாசியாநின்ற—சுடரோனின்-சூரியனைப்பார்க்கினும்—மும்மை-மும்மடங்கு—சுடர்-விளங்க—எ-று.

தோன்றிமறையும்வானவில்லைப்போலாது அழியாவில்லென்றது வேற்றுமையணி. விற்போல்வளைந்த முக்கைவில்லென்றதும் நிலவைப்போலுங்கண்டத்தொளியை நிலவென்றது முருவகவுயர்வு நவிற்சியணிகள்செறுத்தலும் இரட்டலும் அதனைதன்பிரதிபிம்பத்தை மௌலிசுடரோனின் மும்மைசுடாவென்ற தெதிர்நிலையணி பெரியதிருவடியை யிடைநின்றமேருவெனுமத் தொல்லைப்பொருப்பென்ற துருவகவுயர்வு நவிற்சியணி, ஆகவேவில்லுநிலவுஞ்சுடரோனு மொருகாலத்தின் மேருமிசைதொடரச்செய்தது தொடர்புயர்வுநவிற்சியணி. (௨௪௫)

நன்பால்விளங்குமணிகோடியோடுநளிர்போதுசெம்பொன்முதலாந்
தன்பாலியைந்தநிழல்கொண்டமைந்ததழுவாதுவந்துதழுவ
மின்பாலியைந்ததொருகுன்றம்வானின்வீழ்கின்றதென்னவெயிலோன்
றென்பாலெழுந்துவடபானிமிர்ந்துவருகின்றசெய்கைதெரிய.

இ-ள். நன்பால்-கண்டத்தொளியாகிய பரிசுத்தவெள்ளையில்—விளங்கும்-விளங்கநிற்கிற—மணிகோடியோடு-கோடி இரத்நக்கோவைமாலையோடு—நளிர்-பிரகாசியாநின்ற—போது-புட்பமாலையும்—செம்பொன்-சிவந்த*பொன்னரிமாலையும்—முதலா-ஆதியாகிய—தன்பால்-அம்மாலைகளிடத்து—இயைந்த-தனித்தனியேபொருந்திய—நிழல்கொண்டு-பிரபைகளைக்கொண்டு—அமைந்த-உண்டாகியவை—தழுவாது-மார்பிலேபொருந்தாமல்—வந்து-அம்மாலைகளாய்த்தோன்றி—தழுவ-பொருந்தவும்—மின்பால்-ஒளிவிடும்பகுதிகளெல்லாம்—இயைந்தது-கூடியதாகிய—ஒருகுன்றம்-ஒருநெடியமலை—வானின்-ஆகாசத்தினின்றும்—விழுகின்றதென்ன-இறங்குவதுபோல—வெயிலோன்-சூரியன்—தென்பால்-தென்றிசையில்—எழுந்து-உதயமாகி—வடபால்-வடதிசைநோக்கி—நிமிர்ந்து-மேலெழுந்து—வருகின்ற-வாராநிற்கிற—செய்கைதெரிய-நூதனவிசேஷமாய்த்தோன்றவும்.—

பால்போலுங்கண்டத் தொளியைப்பாலென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. மணியாலும்-பூவாலும்-பொன்னாலுமாகியமாலைகளைத் தழுவாதென்றது அதனைதன்பிரதிபிம்பத்தைத்தழுவவென்றது அம்மாலைகளை மின்பாலியைந்த தொருகுன்றமென்னவென்றது பண்புவமை, அம்மாலைகளது

* பொன்னரிமாலை-என்பது—பொன்வண்டுமாலை.

தொங்குதலை குன்றம் வானின்விழுகின்றதென்னவென்றது தொழிலுவமை. தகுதிபற்றி விழுகின்றதென்றற்கியையத்தொங்குதலைவருவிக்க. இப்பாட்டிலுரைத்தாமென்றவுத்தியான் மௌலியாகிய சூரியன் மின்பாலியைந்ததொருகுன்றமாகியவுதயகிரியிலே தென்றிசையிலுதித்து வடதிசைமேற்செல்வதாகச்செய்தது தொடர்புயர்வு நவிற்சி. உதயகிரியென்றது மின்பாலியைந்ததொருகுன்றமென்றதாம், மௌலியென்றது வெயிலோனென்றதாம் உருவகவுயர்வுநவிற்சி. மொழிந்தபொருளோடென்றவவ்வயின்மொழியாததனையு முட்டின்றுமுடித்தலென்னு முத்தியால் உதயகிரிக்குந்தென்றிசைக்கும் வெயிலோனுக்கு மியையப்பெரியதிருவடி தலையாகிய தேர்மேலென்றுகொள்வது முருவகவுயர்வு நவிற்சி. (௨௬௭)

பன்னாகர்சென்னிமணிகோடிகோடிபலகொண்டுசெய்தவகையான்
மின்னலியன்றதெனலாய்விளங்குமிளிர்பூண்வயங்கும்வெயில்கால்
பொன்னலியன்றநகையோடைபொங்கவனமாலைமார்புபுரளத்
தொன்னாள்பிரிந்ததுயர்தீரவண்ணல்திருமேனிகண்டுதொழுவான்.

இ-ள். பன்னாகர்-பலநாகங்களுக்குஞ் சிரேஷ்டர்களுடைய—சென்னிமணி-சிரோரத்தினங்களை—கோடிகோடி - உச்சியினின்றும் உச்சியினின்றும்—பல-அநேகமாக—கொண்டு-சித்தெடுத்து—செய்தவகையால்-இழைத்தவகுப்புகளாலே—மின்னல்-மின்னலைக்கொண்டு—இயன்றது-செய்தது—எனலாய்-என்றுசொல்லும்படியாய்—விளங்கும்-பிரகாசியாநின்ற—மிளிர்-காந்தியையுடைய—பூண்-ஆபரணங்களும்—வயங்கும் - பிரகாசியாநின்ற—வெயில் - சூரியப்பிரபையை—கால் - கக்குகின்ற—பொன்னல்-சுவர்ணத்தால்—இயன்ற-செய்த—நகை-விளங்குதலையுடைய—ஓடை-நெற்றிப்பட்டமும்—பொங்க-பிரகாசிக்கவும்—வனமாலை-துளசிமணிமாலை—மார்பு-மார்பின்கண்ணே—புரள-அசையவும்—தொன்னாள்-ஆதிகாலத்தில்—பிரிந்த-நீங்கலாகிய—துயர்-கிலேசம்—தீர-போக—அண்ணல்-பெருமானுடைய—திருமேனி-திவ்வியமங்களவிக்கிரகத்தை—கண்டு-பார்த்து—தொழுவான்-கைகுவிப்பானாய்—எ-று.

கோடிகோடியென்பவற்றிலைந்தனுருபுகடொக்கன இவ்வடுக்குமொழி பலவுச்சிகளைக்குறிப்பிக்கின்றது. பலகொண்டென்றமையால் பூண்-ஓடை-மாலை-என்பவற்றிலெண்ணும்மைகடொக்கன. (௨௬௮)

முடிமேனிமிர்ந்தமுகிழேறுகையன்முகின்மேனிமிர்ந்தவொளியா
னடிமேல்விழுந்துபணியாமனின்றநிலையுன்னியுன்னியழ்வான்
கொடிமேலிருந்துவுலகேழொடேழுதொழநின்றகோனுமிவனாய்ப்
படிமேலெழுந்துவருவான்விரைந்துபலகாலினைந்துபணிவான்.

இ-ள். முடிமேல்-உச்சிக்குமேலே—நிமிர்ந்த-உயர்ந்த—முகிழேறு-குவித்தலைக்கொண்ட—கையன்-கரங்களையுடையவனாய்—முகின்மேல்-மேகத்தைக்காட்டிலும்—நிமிர்ந்த-அதிகமான—ஒளியான்-சாமளவர்ணத்தையு

டைய பெருமானுடைய—அடிமேல்- திருவடியின்மேலே—விழுந்துபணியாமல்-சாஷ்டாங்கதெண்டஞ்சமர்ப்பியாமல்—நின்று-நின்றுகொண்டு—அந்நிலை-சோதித்துக்கிடக்கிறவந்தச்சுபாவத்தை—உன்னியுன்னி-நினைத்துநினைத்து—அழிவான்-தளர்வானாய்—கொடிமேல்-துவசத்தின்மேல்—இருந்து-வாசம்பண்ணி—இ-இந்த—உலகேழொடேழு-பதினாலுலகமும்—தொழ-வணங்குதல்செய்ய—நின்றகோளும்- நில்லாநின்றகொள்கையும்—இலனாய்-இல்லாதவனாய்—படிமேல்-பூமியின்கண்ணே—எழுந்து- எழுந்தருளி—வருவான்விரைந்து-விரைந்தடைப்பவனாய்—பலகால் - அநேகவிதமாய்—நினைந்து-எண்ணியெண்ணி—பணிவான்-வணங்குவானாய்—எ-று.

தெரிவான்முதற்றொழுவாவிறுதியாகிய முற்றுக்களெச்சமாய் முதிழேறுகையனாய்ப் பணியலாயினான் எனக்கூட்டுக. (உ௪௧)

வந்தான்மறைந்துபிரிவால்வருந்துமலர்மேலயன்றன்முதலோர்
தந்தாதைதாதையிறைவாமறைந்துவிளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்கள்களைவாய்தளர்ந்துதுயர்கூரலென்னசெயலோ
வெந்தாய்வருந்தலுடையாய்வருந்தலெனவின்னபன்னிமொழிவான்.

இ-ள். வந்தான்மறைந்து- மறைந்துவந்தாலென்றபடி—(இனிச்சொல்லாமல்வந்தால்) பிரிவால்-பிரிவாற்றாமையாலே—வருந்தும் - நோவையுடைவான்—(யாரென்றால்) மலர்மேல்-பூமேலிருக்கிற—அயன் - நான்முகன்—தன் - தனக்கு—முதலோர்-பூருவராகிய நித்தியசூரிகள்—தம்-தமக்கு—தாதை-காரணராகிய சேனையர்கோனுக்கு— தாதை-பிரதானராகிய—(திருவனந்தாழ்வான் மறைந்துவந்தால் வருந்துமென்றந்வயம்) இறைவா-பரமபுருஷனே—மறைந்து - எனக்குச்சொல்லாமல் — விளையாடுகின்ற-லீலைசெய்கின்ற—தனியோய்-ஒப்பற்றவனே—சிந்தாகுலங்கள்-மனக்கிலேசங்களை—களைவாய்-எல்லாருக்கும்போக்குகிறவனே—தளர்ந்து-மெலிந்து—துயர்கூரல்-துக்கத்தழுந்துதல்—என்னசெயலோ - யாதுகாரணமோ—எந்தாய்-என்சுவாமியே—வருந்தல்-நோவுபடாதே—உடையாய்-சர்வசுவாமியே—வருந்தல்-நோவுபடாதே—என-என்று— இன்ன-இவ்விதங்களாய்—பன்னி-பிரலாபித்து—மொழிவான்-துதிக்கத்தொடங்குவான்—எ-று.

தாதையென்றது மகனென்னுங்காரியம்பிறக்கக் காரணமாயினானை யாகலாலயனுக்குக்காரணமானோர் நித்தியசூரிகளாகவும், அவருக்குக்காரணஞ் சேனையர்கோனாகவும், அவருக்குக்காரணங் கருடனாகிய தாமாயிருக்கலாச்சியாருசந்தானத்தாற் றம்மைக்கூறுது திருவனந்தாழ்வானைக் கூறினென்றுகொள்க. அண்ணல்கலுழனென்று மெழுவாய், பணிவானாய் மொழிவானென்னும் பயனிலைகொண்டது. இனிவரும்பாட்டுகளுக்குக் கருத்துமுதலியவைத்தும் பொருள்விளக்கவேண்டியவாறே யெழுதுகின்றமையாலாங்காங்குணர்க. இருக்கெசுச்சாம வதருவச்சிறையென்றது சிறையையுடையனென்னுகுபெயராய்சிரஞ்சேதனமென்கிறசெய்யுளிற்காண்க.

தேவாதிதேவர்பலராலுமுந்துதிருநாமமோதுசெயலோய்
மூவாதநாளுமுலகேழொடேழுமரசாளுமேன்மைமுதல்வா
மேவாதவின்பமவைமேவிமேவநெடுவீடுகாட்டமுடியா
யாவாய்வருந்தியழிவாய்கொலாரிவ்வதிரோகமாயையறிவார்.

இதில்வீற்றிருந் தேழுலகுந்தனிக்கோல்செல்ல வீவில்சீராற்றல்மிக்கா
ளுமம்மானே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். தேவ-சேனையர்கோனே—ஆதி-முதலாகவுடைய—தேவர்-நித்
தியசூரிகள்—பலராலும்-அநேகராலும்—முந்து-ஆரம்பத்திலே— திருநாம
ம்-ஹரியென்கிறதிருநாமத்தைக்கொண்டு—ஓது-ஓதிக்கத்தக்க—செயலோய்
செய்கையையுடையவனே— மூவாது-தேவ மனித திரியக்குத்தாவரமாம்
யாவையுங்கெடாமல்—அந்நாளும்-உட்கொண்டஅக்காலத்திலும்—உலகு-
உலகங்கள்—ஏழொடேழும்-பதினாலும்—அரசு-தனிக்கோல்வழியே—ஆளு
ம்-செல்லநடாத்துகிற—மேன்மை-மேம்பாட்டையுடைய—முதல்வா-கார
ணபூதனே—மேவாத-மானிடராகவரலரிதாகிய—இன்பம்-ஆனந்தங்கள்—
அவை-அப்பதினொன்றும்—மேவி-அடைந்து—மேவ-பின்படையத்தக்க—
அந்நெடுவீடு-அவ்வின்பங்களினெடியவின்பத்தை— காட்டு - காட்டுதற்கிட
மான—அம்-அழகிய—முடியாய்-பதினாலுலகுக்குந்தலையானதிருநாட்டையு
டையவனே—ஆவாய் - இங்குநின்றநிலையினுமாகுமவன்—வருந்தி - இங்ங
னேநோவுபட்டு—அழிவாய்கொல்- கலங்குமவனோ—ஆர்-மயர்வறமதிநல
மருளப்பெறுதாரில்யாவர்—இவ் - கலங்காதவன்கலங்குதலாகியவித்த—
அதிரோகமாயை-மகாமாயையை—அறிவார்-அறியத்தக்கவர்—ஒருவருமறி
யாரொன்றபடி—எ-று.

நாளுமென்றவும்மையா லுட்கொள்ளாதகாலத்திலு மரசாளுகைதா
னேபோதரும் உருத்திரனுக் கந்தரியாமியாய்நின் றுயிர்வாழ்தற்கிடமாகிய
பூதவுடம்பைப்பிரித்தபோ தவ்வுடம்பழிதல்பற்றி அழித்தலுமோர் செய்
கையென்னும் பிறர்தம்மதமேற்கொண்டுகளைந்து 'தானுட்டித்தனது நிறுப்
பாலுண்டபோது முண்ணாதபோதும்அரசாளுகைதவிரானென்கிறார். இதுப
ற்றியன்றேகடவுள்வாழ்த்தில் உலகம்யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறு
த்தலு நீக்கலுமென்றது. மனிதன் மனிதகந்தருவன் றேவகந்தருவன்பிதிர்
கருமத்தேவன் றனுடன்ன சுரன் சுரனிந்திரனாசானும் பிரசாபதியானேனுங்க
னகன்விராட் டிரணியகர்ப்பன்முறைகருதுமிப் பதினொருபேர்கள்பினவான
ந்தங்களுளவாயாம் பிரளயவெள்ளக்கடல் பிரமானந்தம் என்றுமிப்பாட்டா
னே உயர்வறவுயர்நலமென்று கொள்க. மனிதவின்பந்தொடங்கி மலரோ
னின்பங்காறுமோவ்வொன்றாகவிட்டடையு மின்பத்தைவீடென்றதாகுபெ
யர். மேவ காட்ட வெனப்பெயரெச்சங்களாகவும், உயர்வறவுயர் நலத்தை
க்காட்டுகின்ற திருநாட்டை முடியாகவும், அதனிற்றயலெதிர்மறையாகார
மாகவுமயங்கக்கூறுதல் குற்றமன்றோவென்னிலன்று.தேவாதியென்றுதொ

டங்கெயிருமெழுவாயென்று நடத்துகிற மேலுநோக்கி எற்புழியறிந்திந த்திவ்வகையாமெனத்தரும் வகைசெலுத்துதற்றிரவத்தி யென்கிறபடி யெயுய்த்துணர்கவென்பார். ஆழமுடைத்தாதலாகிய வழகுதோன்றக் கூறி னுர். இன்னணங்கூறுகின்றவெல்லாங் கம்பருத்திரமென்பது நாடகவழக்கு நித்திரமெனவுங்கூறுப. (உருக)

எழுவாயெவர்க்குமுதலாகியீறுடிடையாகியெங்குமுளேயாய்
வழுவாதவர்க்கும்வரமீயவல்லேயவரால்வரங்கள்பெறுவாய்
தொழுவாயுணர்ச்சிதொடராததன்மையுருவாய்மறைந்துதுயரா
லழுவாயொருத்தனுளேபோலுமாரிவ்வதிரோகமாயையறிவார்.

இதுபரத்துவங்கூறி யிதிலே வியூகமும் அந்தரியாமித்துவமும் விபவ முங்கூறத்தொடங்கி ஏகமூர்த்தி-யிருமூர்த்தி-மூன்றுமூர்த்தி - பலமூர்த்தி யாகி யைந்துபூதமா யிரண்டுசுடராயருவாகி நாகமேறி நடுக்கடலுட்டுயி ன்ற நாராயணனே வருந்தாதேயென்கிறுர்.

இ-ள். எழுவாய்-பாற்கடலில் வாசுதேவனு யெழுந்தருளுவாய்—எவ ர்க்கும்-எவ்வகைமேம்பாட்டோருக்கும்—முதலாகி- ஆக்குங்காரணனாய்— ஈறுடு-நீக்குங்காரணனுதலோடு—இடையாகி-காக்குங்காரணனுமாயெழு வாயென்றங்யம்—எங்கும்-எந்தவிடத்தொறுமிடந்திகழ்பொருடோறும் —உளேயாய்-வியாபிக்குமவனுய்—வழுவாது-தப்பாமல்—அவர்க்கும்-அந்த மூவருக்கும்—வரம்-வேண்டுமவைகளே—ஈயவல்லே-கொடுக்கமாட்டுவை— அவரால்-அந்தமூவராலும்—வரங்கள்-வேண்டுமவைகளே—பெறுவாய்-பிர மா விஷ்ணு ருத்திரர்களாகிக்கொள்ளுவாய்—தொழுவாய்-இந்திராதிதேவ ர்களாய்வணங்குவாய்—உணர்ச்சி- மெய்யுணர்வை—தொடராது-பொருந் தாமல்பிரமாதிகளேத்தொழுவாயென்றங்யம்—அது-அந்தமெய்யுணர்வை— தன்மை-அல்லாதவையந்திரிபறியாமைகளேயுடைய—உருவாய்- மனிதவடி வாகி—மறைந்து-தெரியாதவனுய்—துயரால்-துன்பத்தாலே —அழுவாய்- அழுமவனுய்—ஒருத்தன்-இராமனென்றுமொப்பற்றவனுய்—உளே - உளனு கிருய்—போலும் - முன்னிலையசை—ஆர்-எவர்—இ-இந்த—அதிரோகம்-பெ ரிதாகிய—மாயை-மயக்கத்தை—அறிவார் - தெரிகிறவர்—இப்படிப்பட்ட மகாமாயையையறிவாரார்—எ-று.

ஆமோத-பிரமோத-சம்மோதமென்கிற மூன்றுலகங்களிலும் சங்கரு ஷ்ணப் பிரத்யும்னனிருத்தர்களா யெழுந்தருளியிருக்கிறுர்களென்பது சித் தாந்தமாகலாற் பிரமாதிமூவர்க்குரிய முத்தொழிற்குங்காரணராக வம்மூவ ரையுங்கூறினுராயிற்று. வரங்கள்பெறுவாயென்றதனுலே அம்மூவரதனுக்கி ரகத்தா லிம்மூவருமுத்தொழிற்குரிய ராயினுரென்றுமயிற்று. இப்பாட்டுமி கைபடக்கூறுது சுருங்கச்சொல்லலென்னு மழகு குன்றக்கூறலன்று மேல் விளக்கவைத்தலால். (உருஉ)

உன்றனொக்கவைத்தவிருவர்க்குமொத்தியொருவர்க்குமுண்மையுணாயாய்
முன்றனொக்கநிற்றியுலகொக்கவொத்திமுடிவொக்கினொன்றுமுடியாய்
என்றனொக்குமின்னசெயலோவிதென்னிலிருளொக்குமென்றுவிடியாய்
அந்நொப்பமேகொல்பிறிதேகொலாரிவ்வதிரோகமாயையறிவார்.

கீழே வைகுந்தத்திற் பரவாசுதேவனென்றேகமூர்த்தி பாற்கடலில் வாசுதேவனோ டிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்றாராயிதிலே மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்றதையறுவாதித் தைந்துபூதமா யிரண்டுசுடரா யருவானவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். உன்-விஷ்ணுவாகியவுன்றனோடு—ஒக்க- கூட்டியெண்ண—வைத்த-நிறுத்திய— இருவர்க்கும்-பிரம ருத்திரருக்கும்—ஒத்தி - வியாபகத்திலொத்திருக்கிறாய்—ஒருவர்க்கும்-இருவரிலொருவருக்காயினும்—உண்மை-(எல்லாநாராயணனேயென்கிற)மெய்யுணர்ச்சியை—உணாயாய்-தெரியப்படுத்தாய்—முன்-இம்மூவருக்குமுன்பே—ஒக்க-விஷ்ணுவவதரித்தானென்பதற்கியைய—நிற்றி-இராமனாய்நிற்கிறாய்—உலகு-ஐந்துபூதமிரண்டுசுடரொன்பதற்கு—ஒக்க-இயைய—ஒத்தி-வியாபகத்திலொத்திருக்கிறாய்—முடிவு-இந்த லீலாவிபூதியடங்கலும்—ஒக்கின்-இருமூர்த்தியு மேகமூர்த்தியேயென்றுகலக்குமிடத்தில்—ஒன்றும் - பொருந்துதற்கிடமான—முடியாய்-திருநாடாகிய நித்தியவிபூதிநாதனே—என் - யாதொன்று—ஒக்கும்-இப்படியெல்லாவற்றிலும்வியாபித்திருக்கும்—இன்ன-இப்படிப்பட்ட— செயலோ-செய்கைதானோ—இது-இந்தவியாபகவஸ்து — என்னில் - என்றாராயப்புக்கால்—இருள்-அந்தகாரத்தை—ஒக்கும்-ஒத்துவிளங்காதிருக்கும்—(இது இன்னசெயலோ என்றனொக்குமென்னிலிருளொக்குமென்றநயம்) என்று-சூரியன்போல—விடியாய்-விளக்கமாகாய்—(இரண்டுசுடரொன்பதில்லையேயெனில்-இருளென்பதில் மதிதோன்றியென்றிலடங்கினதற் கொண்சுடரிரவியிடத்தினிற் றிங்கடொறுமினிதுறவு செய்குவதேயென்பதனாற் காண்க.) அந்நொப்பமே - எங்குமுளையென்றங்குச்சொன்ன நொப்பமே—(மங்கியவருவாநொப்பமுநீயே)—பிறிதே-வேறொன்றோ அன்று—இரண்டுகொல்லு மசைநிலை. நொப்பத்தினேகாரந்தேற்றம், பிறிதினேகாரம்வினா,முடிவொக்கினென்பதில் ஏழனுருபைந்தனுருபாய்மயங்கிற்று—எ-று. (௨௫௩)

வானுளளித்திமுடியாமனிதவருநாளுநிற்றிமறையோய்
பேணுயுனக்கொர்பொருள்வேண்டுமென்றுபெறுவானருத்திபிழையா
பூணுயிர்க்குமுயிராகிநிற்றியுணர்வாயபெண்ணினுருவா
யாணுமிமற்றுமலியாகியாரிவ்வதிரோகமாயையறிவார்.

இதில் ஆயபதப்பொருளைக்கூறிக் கீழே எல்லாநாராயணனேயென்றதைத் திருஷ்டாந்தரத்தாற்கூறி வருந்தாதேயென்கிறார்.

இ-ள். வானுள்-உடம்போடுகூடிவாழுநாளை—அளித்தி-கொடுக்கிறாய்—
முடியாமல்-நீராமல்—(நீங்காத பந்தத்தைக்கொடுக்கிறாயென்றாயிற்று.)
நீதி - நியாயமவிரித்தவறநூலின்வழியே—வருநாளும்-அடையுங்காலத்தி
லும்—நிற்றி-வீட்டையுந்தந்துநிற்கிறாய்—மறையோய்-வேதவிளக்கே—பே
றாய்-அறம்பொருளின்பங்களை வேண்டினேரை விரும்பாய்—உனக்கு-ஒன்
றுமொன்றுகுறைவில்லாதவனுக்கு—ஓர்பொருள்வேண்டுமென்று - ஏதேனு
மொருபொருளையாயினுங்கருதிப்பேறுயென்றவ்வயம்—(அவர்கருதிய மூன்
றிலொன்றைத்தந்து பந்தத்தில்விடுகிறாயென்றுகருத்து.)பெறுவான்-கைங்
கரியமாகிற பரமபுருஷார்த்தத்தைவேண்டினேரைப்பெறுதற்கு—அருத்தி-
விரும்பிநிற்றலை—பிழையாய்-தவிராய்—(இவ்விரண்டடியாலும்உருவோபா
யபுருஷார்த்தங்களின்னபடியென்றும், அதற்குத்தகுதியாகத் தலைக்கட்டுகி
றான் அர்ச்சாவதாரமாயென்றுங் கூறினாராயிற்று. தமருகந்தெவ்வுருவம
வ்வுருவந் தானே தமருகந்ததெப்பேர் மற்றப்பேர் மாறாயிணைந்த தன்
பொன்னடியன்றி இவைகளாற்காண்க.) ஊனாய் - அன்னமயமாகிய வுட
ம்பாகியும்—உயிர்க்கும்-அவ்வுடம்பில்வாழுமான்மாவாகியு மவ்வான்மாவுக்
கும்—உயிராகி-பரமான்மாவாகி—நிற்றி-நிற்கிறாய் --- (அசித்தும்-சித்தும்-
ஈஸ்வரனுமாகிநிற்கிறாயென்றாயிற்று. ஆகவேஅசித்தும்-சித்தும்-சரீரமாகத்
தான் சரீரியாய்நிற்கிறானென்று கருத்து. எங்ஙனேயென்னில்) உணர்வாய்-
இம்மூன்றையுங்காட்டியளவையாலறிதற்காகிய—பெண்ணினுருவாய்-பிரகி
ருதியென்றறிதற்குப் பெண்வடிவாகியும்—ஆணாகி-அத்தாலேமயங்கிக்கிடக்
கிறபுருடனென்றறிதற்காண்வடிவாகியும்—மற்று-அசைநிலை—(இவ்விரண்
டுக்கும்வேறாகிய பிறிதெனப் பொருள்கூறவுமாம்.) அலியாகி - பெண்டன்
மையும் ஆண்டன்மையுமல்லாததுமாகி-ஊனாயுயிர்க்குமுயிராகி நிற்றியென்
றவ்வயம், மற்றின் எனும்மையை நடுநிலைச்சொற்றீவகமாக்கி யேனையிரண்டி
டத்துங்கூட்டுக. ஊனாயென்றபோதே யுயிராயென்பதுதானேபோதரவே
ண்டி யுயிர்க்குமென்றுடனேவிதந்தார் இவ்விடத்தும்மைகடொக்கன.

தானந்தமில்லைபலவென்றுமொன்றுதவியென்றுமொன்றுதவிரா
ஞானந்தொடர்ந்தசுடரொன்றுமொன்றுநயனந்தொடர்ந்தவொளியால்
வானந்தொடர்ந்தபதமென்றுமுன்னைமறைநாலின்வந்தமுறையால்
ஆனந்தமென்றுமயலென்றுமாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தைச்சொன்னாய் வேதவிளக்கென்றது நால்வ
கையென்றும் அவற்றினதுசார மிருவகையென்றும்கூறி வருந்தாதேயெ
ன்கிறார்.

இ-ள். தான்-வேதவிளக்காகியதுதான்—அந்தமில்லை - முடிவில்லையாக
லால்—பல - மனமும் வாசகமுஞ் செய்கையும் யானுநீதானே—என்னும்-
(ப்ரக்ஞாப்ரம்மம்)என்றுசொல்லும்—ஒன்று-இருக்கு—தனி - யானுந்தானா
யொழிந்தானே—என்னும்-(அஹம்ப்ராம்மாஸ்மி)என்றுசொல்லும்—ஒன்று-

ஏச—தவிராநீங்காத—ஞானம்-அறிவை—தொடர்ந்த-கூடிய—சுடர்-ஜோதி—அவனென்னாகியொழிந்தான்—என்றும்-(தத்வமஸி) என்றுசொல்லும்—ஒன்று-சாமம்—நயனம்-(எண்ணிற்கண்ணிலொன்றே என்கையால் அன்றிக்கே நயனம்) இரண்டுகண்களும்—தொடர்ந்த-(கூடலான்கண்ணாகிய சூரியமண்டலத்தை தொடர்ந்த)பற்றிச்செல்லுகிற—ஒளியால்-ஜோதியாலே—வானம்-பரமாகாசமாக—தொடர்ந்த-கூடப்பெற்ற—பதம்-இடம்—(யானேநீயாகி யென்னையாள்வானே)என்றும்-(அயமான்மாப்ரம்மம்)என்றுசொல்லும் சுருதிபற்றிவருவித்து—ஒன்று-அதர்வணம்—உன்னை-இராமனாகியவுன்னையே—மறைநாலின்-நான்குவேதத்தாலும்— வந்த-திரண்டுவந்த—முறையால்-கிரமமிதுவாகையாலே—ஆனந்தம்-முழுநலம்— என்றும்-என்றுசொல்லும்—அயல்-அவ்வானந்தத்துக்கிடமாகிய முழுவுணர்வு—என்னும்-என்றுசொல்லும்—ஆக ஞானானந்தமயனென்றது சாரம், உன்னையேயென்பதிற் றேற்றேகாரந்தொக்கது செய்யுளாகலான்—எ-று. (உ௫௫)

மீளாதவேதமுடிவின்கணின்னைமெய்யாகமெய்யினினையுங்
கேளாதவென்றுபிறவென்றுசொன்னகெடுவார்கள்சொன்னகடவான்
மாளாதநீதியிகழாமைநின்கணபிமானமில்லைவறியோ
ராளாயும்வாழ்தியரசாள்தியாரிவ்வதிரோகமாயையறிவார்.

வேதாந்தக்கருத்துணராத சூனியவாதிகளைக் கண்டித்து அடிமையும் ஆண்டானுமானவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். மீளாதவேதம்-அவ்வேதம்மீளாது(இதன்றிதன் றென்றுசென்ற வேதங்கள் மீட்சியின்றிக்கே)—முடிவின்கண்-அந்தங்களிலே—நின்னை-நாராயணனாகிய வுன்னை—மெய்யாக-ஞானானந்தமயனாக—மெய்யில்-சமதறிவின்கண்ணே—நினையும்-எண்ணும் இவற்றை—கேளாதவென்று-கேட்டறியாதனவென்றும்—பிறவென்று-கண்டறியாதனவென்றும்— சொன்ன-முதலிலேசொன்னவைக்கு—கெடுவார்கள்-அறிவுகெடுமவர்கள்—சொன்ன-அவாங்மனகோசரமென்றவற்றைத்தானேசொல்லிய—கடவால்-மறுமொழியினாலே—மாளாத-அழியாத—நீதி-வேதங்களதுசொல்லுகையை—இகழாமல்-தப்பாமல்—நின்-உன்னுடைய—கண்ணபிமானம்-கடாக்ஷவீக்ஷண்யம்—இல்லை-இல்லையாகி—வறியோர்-சூனியவாதிகளானார்கள்—(அவர்கள் வேதவிரோதிகளாகையாலே அவ்வேதவிளக்காகிய வுனக்கு விரோதிகளானார்களென்று கருத்து. ஊன்சுடர்மிகு சுருதியுளென்றதை யறியாரோ வறியார் நித்தியமாகலான் ஞானத்தைமெய்யென்றார்.) ஆளாயும்-நானென்கிறவடிமையாகியும்—வாழ்தி-கைங்கிரியமாகிற புருஷார்த்தத்தோடு வாழ்கிறாய்—அரசு-நாராயணனென்கிற ஆண்டானாகியும்— ஆள்தி-அக்கைங்கிரியத்தைக்கொள்ளுகிறாய்—எ-று. (உ௫௬)

சொல்லொன்றனாத்திபொருளாதிதூயமறையுந்துறந்ததிரிவாய்
வில்லொன்றெடுத்திசரமொன்றெடுத்திமிளிர்சங்கமங்கையுடையாய்

சொல்லென்றுரைத்திகொலையுண்டுநிற்றிகொடியாயுன்மாயையறியே
னல்லென்றுநிற்றிபகலாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இ-ம் திருமந்திரத்தை வெளியிட்டபடியைக்கூறி யிதிலே அநன்யசங் கேதமாகிய பிரணவத்தையு மதனது பொருளையுங்கூறி வேதவிளக்கென்ப தையறியாது ருவியரான ராவணாதிகளறிய வெளிவந்தவனே வருந்தாதே யென்கிறார்.

இ-ள். சொல்லொன்று-மூன்றெழுத்தாகியபதமொன்றை—உரைத்தி-உபதேசிக்கிறாய்— பொருள்-ஆண்டானுக்கே அடிமையென்கிற பொருளும்—ஆதி-சர்நாராயணவடிவாகிறாய் (மூன்று திருநாமமென்றதிலே ஹரிஎன்று இதிலே ஓமென்று இப்படித்தொடர்குவதாகிய)—தூய - பரிசுத்தத்தையுடைய—மறையும்-வேதத்தையும்—துறந்து-விட்டு—திரிவாய்- ஞானந்தமயனென்பதற்குவேறாய்—வில்லொன்று-வேறொருவில்லை— எடுத்தி-எடுக்கிறாய்—சரமொன்று-அவ்வில்லுக்கேற்றபாணமொன்றும்—எடுத்தி-எடுக்கிறாய்—மின்னிர்-பிரகாசியாநின்ற—சங்கம் - சங்குமுதலிய திவ்வியாயுதங்களை—அங்கை-அழகியகையிலே—உடையாய் - வேதத்திலேயுடையவனென்றுசொல்லப்படுகிறாய்—(சங்கென்றதில் மற்றையாயுதங்களையு முபலக்ஷணமாய்க்கூட்டுக.) கொல்லென்றுரைத்தி- தேவருக் கர்தரியாமியாய் வதையல்லென்கிறாய்—கொலையுண்டு-ராக்ஷதருக் கந்தரியாமியாய்வதைபட்டு—நிற்றி-நிற்கிறாய்—கொடியாய்-இப்படிக் கோணலாயிருக்கிறவனே—உன்மாயை-உனதுமயக்கச்செய்கையை—அறியேன்-வாகனமாகிய நானேயறியேன்—அல்லென்றும்-ஆவரணமாகவும்—நிற்றி-நிற்கிறாய்— பகல்-விக்ஷேபமும்—ஆதி-ஆகிறாய்—எ-று. (உ௬எ)

மறந்தாயுமொத்திமறவாயுமொத்திமயலாரும்யாருமறியேந்
துறந்தாயுமொத்திதுறவாயுமொத்தியொருதன்மைசொல்லவரியாய்
பிறந்தாயுமொத்திபிறவாயுமொத்திபிறவாமனல்குபெரியோ
யறந்தானிலர்க்கலரிதாகவாரிவ்வதிரேகமாயையறிவார்.

இ-ம் அந்தரியாமியாகையாலே ஆவரணசத்தியாலே யொருகால்மயக்கியும், விக்ஷேபசத்தியாலே யொருகால்விளக்கியும் நிற்கிறதேயன்றிச் சுருதியவாதிகளறிய விபவமாகி நிற்கிறநிலையிலும் அம்மயக்கவிளக்கங்களையுடையவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். மறந்தாயும்-முற்றுமுணர்தல் முடிவிலாற்றல்களை மறந்தாயென்றாலும்—ஒத்தி-அன்புமிகுந்துச்சித்தங்கலங்குதலாலே ஒத்திருக்கின்றாய்— மறவாயும்-அவற்றை மறவாயென்றாலும்—ஒத்தி - இலங்கையரசுமுதலானோரோடருளின்மையாலே யொத்திருக்கின்றாய்— மயல்-பிரகிருதிக்குள்ளாகிய—ஆரும்-எல்லாரும்—யாரும்-அநேகங்கியாலும்— அறியேம்-அறியாதிருக்கிறோம்—துறந்தாயும்-நி சங்கச்சிராதிஅனர்த்தருடாதிகளைவிட்டிருக்

கிறாயென்றாலும்—ஒத்தி-மறைந்தவராமையாலொத்திருக்கிறாய்—அறவா
யும்-அவைகளைவிடாதிருக்கின்றாயென்றாலும்—ஒத்தி-அவைகள் புடையேயி
ன்றமையாலொத்திருக்கிறாய்—ஒருதன்மை-(மறத்தல்அறத்தல்களையுடைய
ன் மறவாமைஅறவாமைகளையிலனென்)றொருபடியாக—சொல்ல-(மயலா
லே யவைகளையுடையனென்றும் என்றாலேயவைகளையிலனென்றுஞ்)சொ
ல்லுதற்கு—அரியாய்-அருமையானவனே (இருதிறத்தாருக்கு மிரண்டுபடி
யாகையா லொருபடியல்லையென்கிறார்.) இவையுரைத்தாமென்று முத்திக
ள். பிறந்தாயும்-(சக்கிரவர்த்தித்திருமகனா) யவதரித்தாயென்றாலும்— ஒத்
தி-வில்லொன்றுசரமொன்றெடுத்தமையா லொத்திருக்கிறாய்—பிறவாயும்-
நெடுவீடுகாட்டமுடியாயென்றாலும்—ஒத்தி-(பல்லாயிரத்தின் முடியாதபக்
கமலைவீசமேனிவடுத்திரவும், தன்னசங்கமுந் தானுமுழங்கிற்றாகவும், மே
லேவிக்கொள்ளுதலாலே) ஒத்திருக்கிறாய்— இவை உரைத்தமென்னுமுத்தி.
பிறவாமல்-(பிறவித்துன்பமென்றடைந்தாரைமீள)வப்பிறவியில்விடாமல்—
நல்கு-கடைக்கணிக்கின்ற—பெரியோய்-இயல்பாகவேபாசங்கணீங்கினோ
ய்—அறம்-தருமத்தை—தான்-தானானதன்மையொன்றையேகொண்டு—நி
றுத்தல்-நிலைநிற்கச்செய்தலில்—அரிதாகி-கூடாமையாயிரண்டுபடியுங்கொ
ண்டுநிற்கிறாயென்றவ்வம் என்றாலென்பது-சொல்லெச்சம்—எ-று.(௨௫௮)

வினைவர்க்கமுற்றுமுடனேபடைத்தியவையெய்தியென்றும்விளையா
நினைவர்க்குநெஞ்சினுறுகாமமுற்றியறியாமைநிற்றிமனமா
முனிவர்க்குமொத்தியமரர்க்குமொத்திமுழுமூடரொன்றிம்முதலோ
ரனைவர்க்குமொத்தியறியாமையாரிவ்வதிரோகமாயையறிவார்.

இதில் முக்காலங்களுமுணர்ந்த பெரியதிருவடி தாமாக இந்திரியங்க
ளின்மனமாகின்றேனும் யானேயென்னுங் கிஞ்சாபங்கிடதாசாரியனே வருந்
தாதேயென்கிறார்.

இ-ள். வினை-வினையைத்தருகையாலே வினையென்றதாகுபெயர்—வர்
க்கமுற்றும்-அவ்வினமுழுதும்—உடனே-ஏககாலத்திலே—படைத்தி-சிருட்
டிக்கிறாய்—அவை-அவ்வினங்களை—எய்தி-அடைந்து—என்றும்-(அவற்றின்
பயனைப்பொறுக்கமாட்டாம)லெக்காலத்திலும்—விளையா-மீளவுண்டாகா
மல்—நினைவர்க்கு-எண்ணுவோர்க்கு—நெஞ்சில்-சுழுத்திநிலையில்—உறு-எல்
லாவற்றிலு மிகுந்த—காமம்-காமத்தை—முற்றி-நிரம்பச்செய்து—அறியா
மல்-அவ்விளையாமையையெண்ணுவோரையறியவொட்டாமல்—நிற்றிமன
மா-மனமாகநிற்கிறாய்—முனிவர்க்கும்-முதல்வராகிய பிரமருத்திராதிகளு
க்கும்—ஒத்தி-ஒத்துநிற்கிறாய்—அமரர்க்கும்-இந்திராதிதேவர்களுக்கும்—
ஒத்தி-ஒத்துநிற்கிறாய்—முழுமூடர்-முழுதுமறிவினர்— என்று-என்றுசொல்
லப்படுகிற—இம்முதலோர்-இந்தராவணாதிகளோடு—அனைவர்க்கும்-எல்லா
ருக்கும்—ஒத்தி-(உருப்பசி-மோகினி-அகலிகை-சீதை-கைகேசி - முதலாயி
னோர்விஷயத்தில், பிரம-ருத்திர-னிந்திரன்-இராவணன் -சக்கிரவர்த்திமு

தலாயினோர் மிக்க காமங்கொண்டமையா)லொத்துநிற்கிறாய்—அறியாமல்-மதிமலமருளப்பெற்றறியாமல்—இவ்வதிரோகமாலையை யறிவாரார்-எல்லாவற்றிலுமிக்கது காமமென்பதை காதலகாதலறியாமையென்கிற திருவள்ளுவனார்க்காண்க—எ-று. (௨௫௧)

எறிந்தாருமேறுபடுவாருமின்னபொருள்கண்டிரங்குபவருஞ்
செறிந்தாரினுண்மையெனலாயதன்மைதெரிகின்றதுன்னிடையே
பிரிந்தார்பிரிந்தபொருளோடுபோதிபிரியாதுநிற்றிபெரியோ
யறிந்தாரறிந்தபொருளாதியாரிவ்வதிரோகமாலையையறிவார்.

இதில் அவ்விளைவர்க்க மித்துணைத்தென்று மத்துணையுமனமாகிய நின்னிடத்துந்தோன்றநிற்கிறவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். எறிந்தாரும்-நாகபாசத்தைவிசினோரும்—ஏறுபடுவாரும் - அவ்விசையேற்றுக்கிடக்கிறவரும்—இன்னபொருள்-வெற்றிதோல்வியென்கிற இருவகையானபொருளையும்—கண்டு-பார்த்து—இரங்குபவரும் - கலங்குபவருமாக—செறிந்தாரில் - கூடிநேரிட்டதே—உண்மையெனலாயதன்மை-அனுருபமானமனமென்று சொல்லலாகியபடி—தெரிகின்றது-விளங்குகின்றது—உன்னிடையே-உனதுவிஷயத்திலே—(எவ்வாறென்னில்) பிரிந்தார்-வெகுளியாற் பிரிந்தாராகிய ராவணாதிகள்விஷயத்தில் — பிரிந்தபொருளோடு-பிரிதற்கேதுவான வெகுளியென்கிறபொருளோடு—போதி-போகிறாய்—பிரியாது-(காமத்தாற்பிரியாராகிய இளையபெருமாளாதிகள் விஷயத்திற் காமத்தோடு) பிரியாமல்—நிற்றி-நிற்கிறாய்—பெரியோய் - வாம்பிலின்பத்தால் பெரியோனே—அறிந்தார்-இவ்விருதிறத்தையுங் கண்டறிந்தாராகிய விந்திராதிகள்விஷயத்தில்—அறிந்தபொருள்-(எத்தன்மையெய்திமுடியுங்கொலென்று)மயக்கமாகியபொருள்—ஆதி - காமித்தலும் கோபித்தலுமின்றி மயக்கமாகிநிற்கிறாய்,வாளுள்-மறந்தாய்-எறிந்தார் - இம்மூன்றுசெய்யுளு நிரனிறையணி. கண்டிருந்ததேவர்களை யென்செய்யலாமென்றெண்ணுகையான் மயக்கமாயிற்று. காமாதி-ஆறுவர்க்கமும், ராகாதி-பதின்மூன்றவர்க்கமுமடங்க காமம்-வெகுளி-மயக்க மிவைமூன்றென்ற திருவள்ளுவரினிவருமடக்கினமைகாண்க—எ-று. (௨௫௦)

பேராயிரங்களுடையாய்பிறந்தபொருடோறுநிற்றிபிரியாய்
நீராய்பிரிந்திரியாய்திறந்தொறவைதேறுமென்றுதெளியாய்
கூராழியங்கையுடையாய்நீண்டொருருவாகிகோடலரிபோ
லாராயினேதுமிலையாதியாரிவ்வதிரோகமாலையறிவார்.

இதிலே திரிபுடியாய்த் தேடுதற்கரியவனே வருந்தாதேயென்கிறார்.

இ-ள். பேராயிரங்களுடையாய்-ஆயிரநாமங்களை யுடையவனே—பிறந்த-உடம்போடுபிறந்த—பொருடோறும்-ஆன்மாக்களெல்லாம்—நிற்றி-நிற்கிறாய்—பிரியாய்-பிரியாதவனாய்—நீராய்-அப்படி ஒருபடியே நீங்காதவ

னாய்—பிரிந்து-மெய்வாய்கண்ணோடுமூக்குச்செவிவழியாலே—திரிவாய்-வேறுபடுவாய்—திறந்தோறு - தோறுமென்பதிலும்மைதொக்கது—(சுவையொளியூறோசைநாற்றங்களையுண்டு) அவை-அப்பொறிகளும்—தேறுமென்று-அறியுமென்று—தெளியாய்-தெளியப்படானாய்—கூர்-கூரிய—ஆழி-திருவாழியை—அங்கை-அழகியகையிலே—உடையாய்-உடையவனே—திரண்டு-திரிபுடியாகத்திரண்டு—ஒருருவாகி-ஒருவடிவாகினாய்—கோடல்-வெண்காந்தற்கிழங்கை—உரிபோல்-உரித்தாற்போல—ஆராயின்-உள்ளேயிருப்பதேதுவென்றாராயப்புக்கால்—எதுமிலையாகி-ஒன்றுமில்லையாகினாய்—"இன்பமுதலியபேற்றுக்கேதுவாயிந்திரியமனமாமஃதே-யின்பமலியான்மாத்தோறுமிருப்பதாலநந்தமெனவு நித்தத்-தின்பகுதியெனவு மணுருபமெனவுந் தலங்கவிலங்குமான்கண்-ணின்பருதிகவர்ந்து கெண்டையெனப்பிறழ்ந்து வண்டுறழ்நேத்திரந்தனுளே" என்பது நியாயவிவேகம். இம்மூன்றுபாட்டும் பிறர்மதத்திற்குடன்படல்—எ-று. (௨௪௧)

என்றின்னபன்னியழிவானெறிந்தவெறிசோதிகீறவிருள்போய்ப்
பொன்றுன்னியன்னவெயில்வீசுகின்றபொருள்கண்டுநின்றபுகழோ
னின்றுன்னியுன்னியிவன்யாவனென்றுநிமிர்கின்றவெல்லைநிமிரச்
சென்றுன்னிமுன்னருடனாயினானிவ்வுலகேழுமூடுசிறையான்.

இவ்வாறு திருவடிதெருட்டப் பெருமாள் சோகந்தெளிந்துகண்டமை கூறுகின்றது.

இ-ள். என்று-என்றுசொல்லி—இன்ன-இவ்விதமாக—பன்னி-பிரலாபித்து—அழிவான்-கலங்குகின்றதிருவடி—எறிந்த-வீசிய—எறிசோதி-காந்துகிறசூரியன்—கீற-கிழிக்க—இருள்-மயக்கவிருளானது—போய்-கழிந்து—பொன்-சுவர்ணப்பிரபை—துன்னியன்ன-நெருங்கினாற்போல— வெயில்-சூரியப்பிரபையை—வீசுகின்ற-தந்துநிற்கிற—பொருள் - தமதுபொருளாகிய திருவடியை—கண்டு-பார்த்து—நின்ற-நிலைபெற்ற— புகழோன்-வாத்ஸல்யாதிகல்யாணகுணங்களையுடைய பெருமாள்—நின்று - நிதானித்து—உன்னியுன்னி-எண்ணியெண்ணி—இவன்-இந்தமஹாபுருஷன்— யாவனென்று-எவ்வுலகத்தானென்று—நிமிர்கின்ற-தலைதூக்குகிற—எல்லை-சமையத்தில்—நிமிர-முழுதுந்தலைதூக்க—சென்று-போய்—உன்னிமுன்னர்-ஆலோசிக்கிற பெருமாளுக்குமுன்னே—உடனாயினான்-கூடலானான்— இவ்வுலகேழும்-இந்தவுலகேழையும்—மூடு-மறைக்கத்தக்க— சிறையான்-சிறகையுடையவன்.

எறிந்தவெறிசோதி-இருள் உருவகவுயர்வுநவிற்சி. பொன்றுன்னியன்ன வெயில் உவமையணி. வீசுகின்றபொருளென்பதமது வில்லியென்றாற்போல வுன்னியென்றது வினைமுதற்பொருண்மையுணர்த்து மிகரவிகுதி. (௨௪௨)

வாசங்கலந்தமரைநாளநூலின்வகையென்பதென்னைமழையென்
றாசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சராமன்வெண்ணெயனுகுந்

தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுரந்தவுரகம்.

இ-ள். வாசம்-பரிமளத்தோடு—கலந்த-கூடிப்பிறந்த—மரை-தாமரை யினது—நாளம்-தண்டிலுண்டாகிய—நூலின் - மெல்லியவிழையினது—வகை-விதமாயிற்று—என்பது-என்றுசொல்லுமது—என்னே - எப்படி—(தேசிர்க்கும் வடக்கயிறுபோலு நாகபாசத்தை மெல்லியதாமரைநூல்போலாயிற்றென்கிறது முழுதுங்கேயாமையாலவ்வுவமைகூடாதென்றபடி.) மழையென்று-கைம்மாறு கருதாது வழங்குமேகமென்று— ஆசங்கைகொண்ட-மயங்குதலைச்செய்துநிற்கிற—கொடை-கொடுத்தற்றொழிலிலே—மீளி-மீட்சியில்லாதவனுகையால்—அண்ணல்-அக்கொடைவீரரிற்றலைவனுகிய—சராமன்-இராகவன்—மறைவாணர்-வடநூன்முனிவரும்— செஞ்சொலறிவாளர்-தென்மொழிப்புலவரும்—என்று - என்றுசொல்லுகிற—இம்முதலோர்-இவர்முதலாயினேரை—பாசம்-கயிறுக—கலந்த-பிணிக்கப்பட்டிருக்கிற—பசிபோல்-உதராக்கினிபோல—அகன்ற-நீங்கின—பதகன் - இந்திரசித்தாகியவஞ்சகன்—துரந்த-பிரயோகித்த—உரகம்-நாகபாசம். இவ்வுவமை நாகபாசமுழுது மில்லையாயிற்றென்று துவனிக்கின்றதாகையாற் கூடுமவ்வுவமைகூடாதென்றூர் என்றதொழிப்பணி. சராமனென்ப தருவகவுயர்வுநவிற்சி. ஆசங்கித்தல்-மயங்குதல்-இன்னதல்லதிதுவென மொழிதலென்னுமுத்தி—எ-று. (௨௬௩)

பல்லாயிரத்தின்முடியாதபக்கமவைவீசவந்தபடர்கால்
செல்லாநிலத்தினிருளாதல்செல்லவுடனின்றவாளிசிதறுற்
றெல்லாவிதத்துமுணர்வோடுநன்னரிவனேபிழைக்குமெனவோர்
வல்லானொருத்தனிடையேபடுத்தவடுவானமேனிவடுவும்.

இவ்விரண்டுபாட்டும் நாகபாசநீங்கினமை கூறுகின்றன.

இ-ள். பல்-பல்லுக்குவமையானமுருந்து—(அதாவது இறகினடிக்குருத்து.) ஆயிரத்தின்-ஆயிரமென்கிறகணக்கினும்—முடியாத-அளவுபடாது மேவுகிற—பக்கம்-சிறகுகளாகிய—அவை - அவ்விரண்டாலும்—வீச-வெயிலையெறிய—வந்து-நாசிவழியேவந்து—படர்-பாதிகழிந்து பாதிமீண்டுமவ்வழியேசெல்லுகிற—கால்-பிராணவாயு—செல்லாத-போகக்கூடாத—நிலத்தின்-சுவாதிட்டானநிலையிலுள்ள—இருள்-மயக்கமாகியவிருள்—ஆதல்-ஆகியிருந்தது—செல்ல-கழியுமளவில்—உடல்-அவரவருடம்புகளிலே—நின்ற-தைத்திருந்த—வாளி-பாணங்களும்—சிதைவுற்று-அழிவுபட்டு—எல்லாவிதத்தும்-சகலவிஷயங்களிலும்—உணர்வோடு-சோர்வுறுத வுணர்வோடு—நன்னரி-நடக்கப்பெற்று—இவனே-இத்தன்மையவனு— பிழைக்கும்-சோர்வையடைவான்—என-என்றுசொல்லலாக—ஓர்-ஒப்பற்ற அல்லதனைருமவனை—வல்லானொருத்தன்-உலர்வால்வல்லவொருவன்—இடையே-அவ்

வுணர்வோடு நண்ணியநடுவிலே—படுத்த - பூர்வகர்மத்தாலடையலான—வடு-சோர்வாகியகுற்றத்தை—ஆன-ஒப்பாயின—மேனி - அவருடம்பிலுள்ள—வடுவும்-பாணத்தாலாகியதழும்புகளும்—உடலிற் றழும்புகூட வில்லையென்றாயிற்று—எ-று.

·இசையுமெனினுமிசையாதெனினும் வசைதிரவென்னுவர்சான்றோராகலான் இடையேபடுத்தவடுவிசையினரி மாவுளங்கிழித்தவம்பினிற்றீதோவரிமாப்பிழைப்பெய்தகோல்தீதன்றாகையாலே இடையேபடுத்தவடுகுற்றமன்றென்றார். இதுவேற்றுப்பொருள்வைப்பணி இதற்குவமையணியங்கம். முருந்தைப்பல்லென்றது எதிர்நிலையையங்கமாகக்கொண்ட வுருவகவுயர்வுநவிற்சி. மயக்கத்தை யிருளென்றது முருவகவுயர்வுநவிற்சி. (௨௯௪)

தருமத்தினொன்றுமொழுகாதசெய்கைதழுவிப்புணர்ந்ததகையா
லுருமொத்தவெங்கண்வினைதீயவஞ்சருடலுய்த்ததில்லையுலகின்
கருமத்தினின்றகவிசேனைவெள்ளமலர்மேலவ்வள்ளல்கடைநா
ணிருமித்தவென்னவுயிரோடெழுந்துநிலைநின்றதெய்வநெறியால்.

இ-ள். தருமத்தின்-அறத்தின்வழியே—ஒன்றும் - ஒருவிதத்திலும்—ஒழுகாத-நடவாத—செய்கை-செய்யுந்தன்மையை—தழுவி-அநுசரித்து—புணர்ந்த-அச்செய்யுந்தன்மையானபாபத்தோடுகூடிய—தகையால்-பண்பினாலே—உரும்-இடியை—ஒத்த-ஒப்பான—வெங்கண்-கொடுமையான—வினை-பாபமானது—தீய-நசிக்கும்படி—வஞ்சர்-பாதகருடைய— உடல்-தேகங்களிலே—உய்த்ததில்லை-அப்பகத்தொளிசென்றதில்லை—உலகின் - உயர்ந்தோர்களுடைய—கருமத்தின்-காரியத்தின்கண்ணே—நின்ற-உத்தியோகித்துநின்ற—கவிசேனை-வானரசேனையாகிய—வெள்ளம்-எழுபதுவெள்ளமும்—மலர்மேல்-பூமேலிருந்து—அவ்வள்ளல்-முன்னேசிருட்டித்த அந்தப்பிரமன்—கடைநாள்-அவ்வெள்ளமுடிவாகியபிற்காலத்திலும்—நிருமித்ததென்ன-மீளவுஞ்சிருட்டித்தாற்போல—உயிரோடெழுந்து-உயிருடனேயெழுந்து—நிலைநின்ற-பெருமாளருகேநின்றன—தெய்வநெறியால் - ஈஸ்வரசங்கல்பத்தாலே. கடைநாணிருமித்ததென்னவென்பதில் பொருளுவமை. உலகினென்பதிலாறனுருபைந்தனுருபாய்மயங்கிற்று. வெவ்வியகண்போறலிற்கொடுமையைவெங்கணென்றார்—எ-று. (௨௯௫)

இளையானெழுந்துதொழுவானையன்பினிணையாரமார்பினணையா
விளையாததன்பம்விளைவித்ததெய்வம்வெளிவந்ததென்னவியவாக்
கிளையாரினின்னதுணையோரையாவிகெழுவாவெழுந்ததழுவா
முளையாததிங்களுகிரான்முன்வந்துமுறைநின்றவீரன்மொழிவான்.

இ-ள். இளையான்-சலியாதவனாய்— எழுந்து - வீரத்தோடெழுந்து—தொழுவானை -வணங்குகிறவிளையபெருமாளை—அன்போடு-பிரீதியோடே—இணை-தம்மோடொத்தசன்மை—ஆர-தோன்ற—மார்பின்-திருமார்பிலே—

அணையா-அணைத்து—விளையாத-வரத்தகாத—அன்பம்-துக்கத்தை—விளைவித்த-வரப்பண்ணின—தெய்வம்-காட்சியாகாத தெய்வந்தானே—வெளிவந்தது-காணவந்தது—என்ன-என்கிறதாக—வியவா-அதிசயித்து—கிளையாரின் - மீண்டுமுய்யாதவர்போல—இன்ன - இத்தன்மையான—துணையோரை-அளவாவிநேருளா—ஆவி-தமதுபிராணன்—கெழுவா-அப்போதுபொருந்தியதாக—எழுந்து-அத்துணையோரின்முன்னேயெழுந்து—தழுவா-தழுவிக்கொண்டு—முளையாத-ஆகாயத்தின்முளைத்து மறையாத—திங்கள்-பாதிச்சந்திரனைப்போலும்—உகிரான்முன்-நகத்தையுடைய பெரியதிருவடிக்கு முன்னே—முறைநின்று-தெய்வசன்னிதானத்தின் முறையேநின்று—அவ்வீரன்-அந்தரகுவீரனாகியபெருமாள்—மொழிவான்-சொல்லத்தொடங்கினான்.

வேறு.

ஐயநீயாரோவெங்களருந்தவப்பயத்தினன்வந்
தெய்தினையுயிரும்வாழ்வுமீந்தனையெம்மனோராற்
கையுறைகோடற்கொத்தகாட்சியையல்லை*மீட்சி
செய்திறமில்லையாலென்றுன்றேயர்க்குந்தெரிக்கிலாதான். (௨௬௭)

பொருளினியுணரவேறுபுறத்துமொன்றுண்டோபுந்தித்
தெருளினையுடையராலிற்செயலருங்கருணைச்செல்வ
மருளினைவரவின்வந்தவாழ்க்கையீதாகின்வாவா
லருளினையென்னினெய்தவரியனவுளவோவைய. (௨௬௮)

கண்டிலைமுன்புசொல்லக்கேட்டிலைகடனென்றெம்பாற்
கொண்டிலைகொடுப்பதல்லாற்குறையிலையுனின்கொள்கை
யுண்டிலையென்னநின்றவுயிர்தந்தவுதவியோனே
பண்டிலைநண்புநாங்கள்செய்வதென்பகர்தியென்றான். (௨௬௯)

பறவையின்குலங்கள்காக்கும்பாவகன்பழையனின்றோ
டுறவுளதன்மையெல்லாமுணர்த்துவனரக்கனோடம்
மறவினைமுடித்தபின்னர்வருவனின்னுழையன்மாயப்
பிறவியின்பகைஞநல்குவிடையெனப்பெயர்ந்துபோனான். (௨௭௦)

ஆரியனவனைநோக்கியாருயிருதவியாதுங்
காரியமில்லான்போனான்கருணையோர்கடமையீதாற்
பேரியலாளர்செய்கையூதியம்பிடித்துமென்னார்
மாரியைநோக்கிக்கைமாறியற்றுமோவையமென்றான். (௨௭௧)

இறந்தனவிளவலென்றுவிறைவியுமிடுக்கணெய்து
மறந்தனருறங்குகின்றவஞ்சருமறுகிமீளப்
பிறந்தனரொன்றுகொண்டோர்பெரும்பயம்பிடிப்பான்றே
யறந்தருசிந்தையன்பவார்த்துமென்றநுமன்சொன்னான். (௨௭௨)

* மீட்சி - பிரதியுபகாரம்.

அழகிதென்றண்ணல்கூறவார்த்தனர்கடல்களஞ்சிக்
குழைவுறவனந்தருச்சிக்குன்றநின்றண்டகோள
மெழுமிசையுலகமேன்மேலெங்கிடவிரிந்துசிந்தி
மழைவிழமலைகள்றேமாதிரம்பிளக்கமாதோ. (௨௭௩)

பழிப்பருஞ்சிந்தையாள்பாற்சிந்தனைபடரக்கல்கள்
விழிப்பிலன்மேனிசாலவெதும்பினனீசனாலுங்
குழிப்பரிதாயமார்பைமன்மதன்கொற்றவாளி
கிழிப்புறவுயிர்ப்புநீங்கிக்கிடந்தவாளரக்கன்கேட்டான். (௨௭௪)

சாதைசொற்றலைமேற்கொண்டதாபதன்றருமமூர்த்தி
யீதைகடீர்க்குநாமத்திராமனையெண்ணியெங்குஞ்
சீதையுமவனையுன்னிச்சிந்தனைதீர்ந்துதீராப்
பேதையுமன்றியவ்வூரியாருளர்துயில்பெறாதார். (௨௭௫)

சிங்கவேறசனியேறுகேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன்பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்றவார்த்தையேவலியதென்னா
வங்கையோடங்கைகொட்டியலங்கரேள்குலுங்கநக்கான். (௨௭௬)

இடிக்கின்றதசனியென்னாவிளைக்கின்றதிராமன்போர்வில்
வெடிக்கின்றதண்டமென்னப்படுவதுதம்பிவின்னா
ணடிக்கின்றதென்னவந்துசெவிதொறுமனுமனார்ப்புப்
பிடிக்கின்றதுலகமெங்கும்பருதிசேயார்ப்பின்பெற்றி. (௨௭௭)

அங்கதனவனோவார்த்தானந்தரமார்க்கின்றாரும்
வெங்கதநீலன்மற்றைவீரரும்வேறுவேறு
பொங்கினரார்த்தவோசையண்டத்தும்புறத்தும்போன
சங்கையொன்றின்றித்தீர்ந்தார்பாசத்தைத்தருமநல்க. (௨௭௮)

என்பதுசொல்லிப்பள்ளிச்சேக்கைநின்றிழிந்துவேந்த
னென்பதுகோடிவாட்கையரக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடிபூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயினின்றுமகன்றனிக்கோயில்சார்ந்தான். (௨௭௯)

தாங்கியதுகிலார்மெள்ளச்சரிந்துவீழ்குழலார்தாங்கி
வீங்கியவுயிர்ப்பார்விண்ணைவிழுங்கியமுலையார்மெல்லத்
தூங்கியவிழியார்தள்ளித்துளங்கியநடையார்வல்லி
வாங்கியமருங்குன்மாதரனந்தரான்மயங்கிவந்தார். (௨௮௦)

பானமுந்துயிலுங்கண்டகனவும்பண்கனிந்தபண்ணைக்
கானமுந்தள்ளத்தள்ளிக்களியொடுங்கள்ளங்கற்ற
மீனினும்பெரியவாட்கண்விழிப்பதுமுடிப்பதாக
வானவர்மகளிர்போனார்மழலையஞ்சதங்கைமாழ்க. (௨௮௧)

மழையினீரிலாட்டிவாசமும்புனையுமாட்டி
யுழையுழையாட்டிமென்பூருவித்திடைக்கிடைபூசெறன்றாப்
பிழையுடைவிதியார்செய்தபெருங்கயல்கருங்கட்செவ்வா
யிழையணிமகளிர்சூழ்ந்தாரனந்தராலிடங்கடோறும். (உ௮உ)

தேனிடைக்கரும்பிற்பாலிலமுதினிற்கனிதேடி
மாவிடைக்கயலில்வாளில்மலரிடைநயனம்வாங்கி
மேனடையனையமற்றும்நல்வழிநல்கவேண்டி
வானுடையண்ணல்செய்தமங்கையர்மருங்குசென்றார். (உ௮௩)

அடங்கியவார்ப்பினோசைசெவிப்புலனடர்தலோடு
மிடங்கரின்வயப்போத்தன்னவெறும்வலியரக்கரியாரு
மடங்கலின்முழக்கங்கேட்டவான்கரியொத்தார்மாத
ரடங்கலுமசனிகேட்டவளையுறையரவமொத்தார். (உ௮௪)

அரக்கனுமைந்தன்வைகுமாடகத்தமைந்தமாடம்
பொருக்கெனச்சென்றுபுக்கான்புண்ணினிற்குமிழிபொங்கத்
தரிக்கிலன்மடங்கலேற்றாற்றலைப்புண்டுசாய்ந்துபோன
கருக்கிளர்மேகமன்னகளிறனையானைக்கண்டான். (உ௮௫)

எழுந்தடிவணங்கலாற்றாவிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானைநோக்கித்துணுக்குற்றமனத்தனென்ற
வழுங்கினைவந்ததென்னையடுத்ததென்றடுத்துச்சொன்னான்
புழுங்கியபுண்ணினூறுமிழையனபுலனுற்றான். (உ௮௬)

இந்திரன்விடையன்பாசனெனும்வலிக்கலுழனேனுந்
சந்திரனருக்கனென்றித்தொடக்கத்தார்தொடர்ந்தபோரி
னொன்றிலவினையதொன்றுமவன்றிலன்மனிதனேன்மை
மந்தரமனையதோளாய்வரம்புடைத்தன்றுமன்றே. (உ௮௭)

இளையவன்றன்மையீதாலிராமனதாற்றலெண்ணிற்
றளையவிழலங்கன்மார்பாம்வயிற்றங்கிற்றன்றால்
விளைவுகண்டுணர்வதல்லால்வென்றிமேல்விளையுமென்ற
அளவதன்றென்னச்சொன்னானுற்றனதுணர்கிலாதான். (உ௮௮)

வென்றதுபாசத்தாலுமாயையின்வினைவினாலும்
கொன்றதுகுரக்குவீரர்தம்மொடக்கொற்றத்தோனை
நின்றனனிராமனின்றுநிகழ்ந்தவாநிகழுமேன்மே
லென்றனனென்னக்கேட்டவிராவணனிதனைச்சொன்னான். (உ௮௯)

வார்கழற்காலமற்றவிலக்குவன்வயிரவில்லின்
பேரொலியரவம்விண்ணைப்பிளந்திடக்குரங்குபோர்த
தார்கலிமடங்கலேகம்பித்தகளத்தினார்த்த
போரொலியொன்றுமைபவர்திங்கிலைபோலுமென்றான். (உ௯௦)

ஐயவெம்பாசந்தன்னாலார்ப்புண்டாரசனியென்னப்
பெய்யும்வெஞ்சரத்தான்மேனிபிளப்புண்டாருணர்வுபேர்ந்தா
ருய்யுமாறுணர்ந்துபோந்ததுண்மையோவொழிக்கவொன்றே
செய்யுமென்றெண்ணத்தெய்வச்செயலொன்றுந்தெரியினென்றான். (௨௧௧)

ஈதுனைநிகழும்வேலையெய்தியதறியப்போன
தூதுவர்வினாவின்வந்தார்புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்னவிராவணனியம்பவீதின்
றோதியகல்வியாளர்புகுந்துளதுரைக்கலுற்றார். (௨௧௨)

பாசத்தாற்பிணிப்புண்டாரைப்பகழியாற்களப்பட்டாரைத்
தேசத்தாரீசன்மைந்தனிடையிருள்சேர்ந்துநோக்கி
வேசத்தானிரங்கியேங்கியுலகெலாம்வீய்ப்பனென்றான்
வாசத்தார்மாலைமார்பவாறுறைகலுழன்வந்தான். (௨௧௩)

அன்னவன்வரவுகாணுவயிலெயிற்றரவமெல்லாஞ்
சின்னபின்னங்களானபுண்ணொடுமயக்கந்தீர்ந்தார்
முன்னையின்வலியராகிமொய்களநெருங்கிமொய்த்தா
ரின்னதுநிகழ்ந்ததென்றோரரக்கனீதெடுத்துச்சொன்னான். (௨௧௪)

ஏத்தருந்தடந்தோளாற்றலென்மகனெய்தபாசங்
காத்திடைகழித்துத்தீர்த்தான்கலுழனுங்காண்மின்காண்மின்
வார்த்தையீதாயினன்றுமிராவணன்வாழ்ந்தவாழ்க்கை
மூத்ததுகொள்கைபோலாமென்னுடைமுயற்சியெல்லாம். (௨௧௫)

உண்டுலகேழுமேழுமிழ்ந்தவனென்றுமுற்றங்
கொண்டவனென்னோடேற்றசெருவினின்மறுக்கங்கொண்டான்
மண்டலந்திரிந்தபோதுமறிகடன்மறிந்தபோதுங்
கண்டிலன்போலுஞ்சொற்றகலுழனன்றென்னைக்கண்ணால். (௨௧௬)

கரங்களினேமிசங்கந்தாங்கியகரியோன்காக்கும்
புரங்களுமழியப்போனபொழுதிலென்சிலையிற்பொங்கி
யுரங்களின்முதுகிற்றோளினுறையுறுசிறையினுற்ற
சரங்களுதிர்க்கவேகொல்வந்ததவ்வருணன்றம்பி. (௨௧௭)

ஈண்டதுகிடக்கமேன்மேலிசைந்தவாதிசைகவெஞ்சி
மீண்டவர்தம்மைக்கொல்லும்வேட்கையைவேண்டுமன்றே
யாண்டகைநீயேயின்னுமாற்றுதியருமைப்போர்கள்
காண்டலுநாணுமென்றனன்மைந்தனுங்கருத்தைச்சொன்னான். (௨௧௮)

இன்னொருபொழுதுதாழ்க்கெதளிகற்பெருஞ்சிரமநீங்கிச்
சென்றொருகணத்தினான்முகன்படைத்ததெய்வ
வென்றிவெம்படையினுன்மனத்துயர்மீட்பனென்று
னன்றெனவரக்கன்போய்த்தனன்மலர்க்கோயில்புக்கான். (௨௧௧)

நாகபாசப்படலம் - முற்றிற்று.

ஆ படலம் - ௯-க்குத் திருவிருத்தம் - ௨௨௪௩.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

யுத்தகாண்டம்

முதற்புத்தகம்

முற்றிற்று.

உ

புத்தகவிளம்பரம்.

பதிப்பித்தபுத்தகங்கள்.

பெரியபுராணம்-௧-இ	புத்தகம் -	௨
திருக்கழுக்குன்றதலபுராணம்உரை	,,	௧
திருவிரிஞ்சைதலபுராணம்உரை	,,	௧
ஷை முருகன்பிள்ளைத்தமிழ்	,,	௧
பழனிக்குமரன் அந்தாதி	,,	௧
கம்பராமாயணமூலம்-பாலகாண்டமுதல் யுத்தகாண்டம்வரைக்கும்காண்டம்௬-இ	,,	௭

பதிப்பித்துக்கொண்டுவரும்புத்தகங்கள்.

பதார்த்தகுணசிந்தாமணி உரையுடன்	,,	௧
நன்னூல்விருத்தியுரை	,,	௧
பழனித்தலபுராணம் உரையுடன்	,,	௧

பதிப்பிக்கப்படும்புத்தகங்கள்.

கம்பராமாயணத்தில்-உத்திரகாண்டமூலம்
பெரியபுராணவசனம்
திருவிளையாடற்புராணவசனம்
பெரியபுராணம்உரையுடன்
திருவிளையாடற்புராணம்உரையுடன்
பாகவதமூலம்-௧000-பாடல்
கந்தபுராணவசனம்
பாரதவசனம்-௧௮-பர்வமும்
சிதம்பரதலபுராணம்உரையுடன்
திருக்காளத்திதலபுராணமுரையுடன்
ஞானவாசிஷ்டம்
கோயிற்புராணம்உரையுடன்
விருத்தாசலபுராணம்உரையுடன்
திருவாய்மொழிக்குப்பிரதிபதம்
ஸ்ரீரங்கதலபுராணம்உரையுடன்
தொல்காப்பியமூலம்
சதுரகராதி
கல்லாடம்
தொல்காப்பியம் - சேனாவரையர் உரையுடன்
சிந்தாமணி-நச்சினார்க்கினியார்உரையுடன்